உ

கணபதி துணை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணக் கீர்த்தனை.

முதற்பாகம்.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த
புவனேக வீரபாண்டியபுரமென்ற பிரதி நாமம் வகித்த
மழவராபுரியில்

மகா-௱-௱-ஸ்ரீ

சிதம்பர பாரதிகளென்ற சின்னஸாமி பாரதிகளாலும்
ஷையாரின் குமாரர்களான

(1) அஷ்டாவதானம் சுந்தரமய்யர்,
(2) சுப்பராமய்யரென்ற இராமசாமி அய்யராலும்

இயற்றப்பெற்று

ஷை சுப்பராமய்யரென்ற இராமஸ்வாமி அய்யரால்

காரைக்குடி:
ஊழியன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

1929.

இதன் விலை ரூ. 2-0-0.

COPY RIGHT RESERVED



இந்நூலாசிரியர்,
ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராசகாசாரியரான
சிதம்பரஸ்வாமிகள்.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

ஸ்ரீமதகண்ட பரிபூர்ண ஸச்சிதானந்த, நிராகார, நிர்க்குண நிராமய நிருபம ஜோதிர்மய ரூபமுள்ள, ஸுந்தரேசப் பெருமான் மீனாட்சி ஸமேதராக ராஜ்ய பரிபாலனத்தைச் செய்துவரும் பாண்டிய மகாதேசத்தின் ராஜதானியாக விளங்கும், துவாத சாந்த க்ஷேத்திரமென்னும் மதுரைமாநகருக்குக் கீழ்புரம் 12-மைல் தூரத்திலுள்ள புஷ்பவன காசி யென்றும் விளங்கும் திருப்பூவணத்திற்குத் தென்கிழக்காக வுள்ளதும், சிவகங்கைச் சீர்மையைச் சார்ந்ததுமான, புவனேகவீர பாண்டியபுரமென்றும், மழவாபுரியென்றும் பன்னாமங்களால் விளங்கப்பெற்றதும், தெக்ஷிணவாகினியாகச் செல்லும் வைகைமாநதிக்கு மேல்கரையில் உள்ளதுமான, மழவராயனேந்தல் என்ற ஓர் நகர், தமிழ் ஸமஸ்கிருத ஸங்கீத ஸாஹித்யம் நிறைந்த கல்விகளால் தொன்றுதொட்டுச் சிறந்து விளங்கும் கல்விமான்கள் நிறைந்துவரும் க்யாதியோடு கூடியுள்ளது. ஷை நகரில், மறையவர் குலத்தில், ராஜகெம்பீர பிரகஜ் ஜனர்களுக்குள், வாதூல கோத்ரோத்பவரான ஸுப்ரமண்ய தீட்சதர் என்ற ஒரு மகானுடைய உதரத்தில் ஜனித்தவர்கள் நான்கு குமாரர்கள். அவர்களுக்குள் ஜேஷ்டகுமாரர் சுப்பராமைய ரென்ற திருநாமம் வகித்தவர். அவர் தமிழ்க்கல்வி முற்றும் கற்றுணர்ந்தவராக, ஸஹஸ்ராவதானமும் நிரூடியாகச்செய்து வந்தனர். அம்மகான் புதுக்கோட்டை H. H. மகாராஜா இராமச்சந்த்ரத் தொண்டமான் பகதூர் அவர்கள் முன்பாக ஷை ஸஹஸ்ராவதானத்தையும் செய்து, அவ்வரசரால் அளிக்கப்பெற்ற தோடா, வீரசங்கிலி, சால்வை, பல்லக்கு முதலிய பரிசுகளடைந்தவராக மிகுந்த க்யாதியற்று விளங்கினர். அவர்க்கநுஜரான சிதம்பர பாரதிகளென்ற சின்னஸாமி பாரதிகள் என்னைப்பெற்ற தந்தையாவர். அவர் தமிழ்க்கல்வியில் இயலிசை நாடகமென்னும் முத்தமிழ்களையும் இலக்கண விலக்கியங்களுடன் கற்றுணர்ந்து, ஸங்கீத ஸாஹித்யங்களிற் சிறந்தவராகவும், இசைத்தமிழில் மிக்க விருப்பமுற்றவராகவுமிருந்து அடியில் கண்டிருக்கும் அநேக க்ரந்தங்களை வரைந்திருக்கின்றனர். ஷை கல்வித்திறமையால் சிவகங்கை, இராமநாதபுரம் புதுக்கோட்டை ஸமஸ்தானங்களுக்கும், மற்றுமிடங்களுக்கும் சென்று தக்க ஸம்மானங்களையும் பெற்றுவந்தனர். அவர் இல்லறவாழ்க்கையைச் சிறப்புற நடாத்தி, ஆத்மார்த்தமான மார்க்கத்தை விரும்பினவராகப், பெரிய புராணத்தையும், (உருக்மணி கல்யாணம், துருவ சரித்திரம், குசேலசரித்திரம், அம்பரீஷ) சரித்திரங்களென்னும், விஷ்ணு சரித்திரங்களையும், சுதாகால க்ஷேமங்களுக்குரிய, ஸாகீ, தெண்டி, ஆர்யா, அபங்கு, கேகாவளி முதலிய, மகாராஷ்ட்ர தாடிகளடங்கிய, வர்ணமெட்டு

களும் புராதனக் கீர்த்தனங்கள் போன்ற கீர்த்தனங்களும் வெண்பா கலித்துறை விருத்த முதலான பாக்களுடனடங்கப் பெற்றுவரும் சரித்திரங்களாகத் தமிழ்ப் பாஷையில் செய்திருக்கின்றனர். அப்பனுவல்களில் திரிபு, எமகம், சிலேடை, சந்தம், விசேஷக் கற்பனைகளும் தோன்றுவன. ஷை பெரிய புராணத்தில் முக்யமாக வேண்டிய சில சரித்திரங்களைப் பொறுக்கியெடுத்து சுமார் அரைவாசிக்குமேல் பூர்த்திசெய்து, ஆபத் ஸந்நியாஸம் பெற்றவராக, ஹேவிளம்பிவருஷம் ஆடிமாதம் கிருஷ்ணபட்சம்பஞ்சமியில் ஸித்தியடைந்தனர். அவருக்கு ஜனித்தவர்களான நான்கு குமாரர்களுக்குள், ஜேஷ்ட குமாரரான சுப்ரமண்யய்யரென்ற சுப்பய்யர், தமிழ் ஸங்கீத ஸாஹித்ய வித்தைகளில் சிறந்தவராக நல்லிசையுடன் கூடின கானத்தோடு, ஷையாருக்கு அநுஜராகும் தமிழ் சங்கீத சாஹித்ய அஷ்டாவதான வித்தைகளிலும் சிறந்த அஷ்டாவதான ஸுந்தரமய்யருடைய பிரஸங்கத்துடன் ஷை சரித்திரங்களை கதா ரூபமாகப் பிரசுரம் செய்துவந்தார். அதற்கப்பால் யானும் மேற்கண்ட விதம் நல்ல ஜமாக்களுடன் அவ்விதமே பிரசுரமும் செய்து வருகிறேன். ஷை பெரிய புராணம் பூர்த்தியாகாமல் அறைகுறையாக முடிந்திருந்தமையால் எனக்கு ஜேஷ்ட சகோதரரான அஷ்டாவதான ஸுந்தரமய்யரும் அவர்க்கநுஜனை யானும் ஷை புராணத்தில் மீதமாக நின்ற சரித்திரங்களை எங்கள் பிதா அவர்களின் மார்க்கத்தை யநுசரித்து ஸாஹித்யஞ் செய்து புராணத்தைப் பூர்த்தியும் செய்திருக்கிறோம். ஷை சரித்திரங்களில் இன்ன யின்ன சரித்திரங்கள் இன்ன யின்னவரால் பாடப்பெற்றதென்பதைக் காட்டக்கூடிய சில அடையாளங்களை அடியில் வரைந்திருக்கிறேன். அதுமூலம் தெரிந்துகொள்ள வேண்டியது. ஷை பெரிய புராணத்தை அச்சியற்றி வெளியில் பிரஸித்தி செய்யும் விருப்புற்றவனைச் சில கனவான்களின் உதவிகளால் காரைக்காலம்மை சரித்திரம் வரையில் அச்சிட்டிருக்கிறேன். முற்றிலும் அச்சிடத் தற்காலம் பொருளுதவி யில்லாமையால், அதுவரையிலுள்ளதை முதற் பாகமாகக் கண்டிருக்கிறேன். மற்றவைகளை யிரண்டாம் பாகமாகவும் அச்சிட்டு வெளியேற்றவும் முயற்சி செய்கிறேன். அதற்கும் ஆநந்த நடராஜர் கருபை செய்வாராக. ஷை விஷ்ணு சரித்ரங்கள் நான்கும் அடங்கப்பெற்ற ஒரு புஸ்தகமாக அச்சிட்டாகிவிட்டது. ஷை யென் பிதா அவர்களால் இயற்றப்பெற்ற கிரந்தங்களாவன. (1) பெரியபுராணக் கீர்த்தனம், (2) மேலே கூறப்பெற்ற விஷ்ணு சரித்திரங்கள், (3) க்ஞானநந்தப் பேரின்பக் கீர்த்தனம் (4) மதுரை மீனாட்சியம்மையின் மீது பலசந்தக்கும்மி (5) திருக்கோகர்ணம் பிரதம்பாள்மீது பலசந்தக்கும்மி (6) குன்றக்குடி ஷண்முகநாதன் மீது மயூரகிரிநாதர் வண்ணம் இவைகளச்சிடப் பெற்றிருக்கின்றன.

(1) * என் பிதா அவர்களின் ஸாஹித்யத்தைக் காட்டக்கூடிய அடையாளம்.

(2) ‡ என் ஜேஷ்டப் பிராதா அஷ்டாவதானம் ஸுந்தரமய்யரின் ஸாஹித்ய அடையாளம்.

(3) † என்னுடைய ஸாஹித்யத்தின் அடையாளம்.

இங்ஙனம்,
சுப்பாமய்யரென்ற
இராமசுவாமி அய்யர்.

கணபதி துணை.

சிவமயம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	10	யி	வி
8	1	ஊம்	ஊ
12	4	பென்ன	பல்ல
ஷெ	5	கென்ன	கல்ல
ஷெ	7	பகலினேரமென	பகலில் காண்பதற்கு
17	1		†
26	10	மல	லம்
28	7	குமி	கி
ஷெ	27	குமாரூற்	குமா-ரூற்
33	6	ஸிர்ய	ஸியர்
ஷெ	7	ரில	ரில்
36	21	பெறும	பெறும்
62	23	சாப்பு	மிசிரசாப்பு
66	15	கினிடை	கிடை
76	15	பொருக்காற்	பொருக்கார்
ஷெ	24	வன்ன	வண்ண
77	14	மனக்	மனக்கம்
ஷெ	ஷெ	கிற்ற	கிரை
ஷெ	15	மனக்	மனக்கம்
86	12	கைக்	கைநந்
89	11	திரு	த்ரு
90	11	நிர்ம்ப	நிர்ப்ப
ஷெ	16	கற்பன்	கற்பின்
92	21	பற்பு	வற்பு
94	10	வோடு	லோடு
95	16	நாம	நாடி
96	18	மெய்ய	பெய்ய
97	2	————	கணபதி துணை
103	4	யுனம்	யுளம்
ஷெ	7	செய்சீ	செய்தீ
111	5	ரூபப	ரூபவ
ஷெ	7	உள்ள	உள்ளு
112	2	————	கணபதி துணை
114	10	தனம்	தனப்
116	8	லத்தானே	லந்தானே
ஷெ	10	சால	சாலி

118	6	வரு	வறு
120	18	சரித்திரங்கள்	சரித்திரங்கள் 5-க்கு
121	1	————	கணபதி துணை
123	15	சுடல்	அடல்
ஷை	24	தளை	தனை
126	11	கவி	கலி
131	14	சோர்	சேரர்
134	7	பொன்ளி	பொன்னி
146	15	————	2-வது தில்லைவாழந் தணர் சருக்கம் முற் றுப் பெற்றது.
ஷை	19	————	3-வது இலைமலிந்த சருக்கம்
147	13	னும்பி	னுமபி
151	16	தரித	தெத
201	21	ருர	ரரு
265	13	சில	சிவ
282	23	யெழி	யெழு
284	11	————	3-வது இலைமலிந்த சருக்கம் முற்றுப் பெற்றது
ஷை	15	————	4-வது திருநின்ற சருக்கம்
286	19	யாருககு	யாருக்கு
288	14	மேயயா	மையோ
290	2	————	(3)
293	14	தாங்ரூ	தாங்கு
296	2	நமடி	நமதடி
ஷை	6	கெள்ளை	கௌளை
298	16	முரிக	முரிக்
337	15	மும	மும்
339	17	பாவு	பரவு
340	4	கன்	கண்
ஷை	11	மா	மர
341	27	செனறு	சென்று
ஷை	33	தவ	தவர்
343	11	மாற்ற	மாற்றப்
344	6	நாடி	நாடு

உ
கணபதி துணை
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணக் கீர்த்தனை.

கடவுள் வாழ்த்து.

விநாயகர் துதி.

காப்பு.

(வெண்பா)

ஓங்குதிருத் தொண்டர்க் குரியபுரா ணத்தையிசை
தேங்கயிவண் கீர்த்தனமாச் செப்புதற்குப்—பாங்கினுற
வந்தருளுஞ் சங்கரியின் மைந்தனெனு மைங்கரனுந்
தந்திமுகன் றண்கமலத் தாள்.

பெரியபுராணத் திருவிருத்தம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

விநாயகர் துதி·

இராகம்—தன்யாசி. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

க. கஜவதன கருணாகர மூர்த்தே நிஜவர பக்தஸம் ரட்சண [கீர்த்தே
உ. பாசாங் குசதர பங்கஜ ஹஸ்த ஈசாத்மஜஜக தீசப்பிர ஸித்த

௩. சோமகலாத்ர ஸுந்தர வர்ண ஸாமகானப்ரிய சாமர கர்ண
௪. சிவகதாஸுமதிம் மேருகுரு சீல கவிநுத ஜகதா சிருதபரி பால

சுப்ரமண்யர் துதி.

கலித்துறை.

சுத்தியில் வெள்ளியும் ரஜ்ஜுவிற் சர்ப்பமுந் தோன்றுதலை
மித்தையென் றெண்ணி நிஜந்தேர்ந்தின் பம்பெரு வெள்ளமதிற்
பத்தியின் மூழ்கிய தொண்டர் விலாஸம் பகரவருள்
சத்தி தராகரு ணாகர ஸர்வ தயாபரனே.

பதம். இராகம்—சென்ஸ்ஜுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

கிருபை செய்குவாய் குகனே (கிருபை)

அநுபல்லவி.

பிரபல பக்த சரி தஞ்சொல நீயே—கிருபை

சரணங்கள்.

க. சந்ததம் உன்தனை வந்தனை செய்யுமெ
னந்த ரங்க மதில் வந்திருந் தினிய (கிருபை)

௨. நித்யஸு மித்ரப வித்ர பக்தச
ரித்ரவி சித்ரம கத்வமு ரைத்திடக் (கிருபை)

௩. மதனஜ னகன்மகிழ் மருக முருக சர
வணபவ ஸுந் தரவர மிக வுதவிக் (கிருபை)

௪. சுராதி பர்கள்பணி வரா ஸுமுகஸுந்
தரா கமல கரா சிரகு ருபரா (கிருபை)

ஸாம்பசிவ ஸ்துதி.

பதம். இராகம்—கல்யாணி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஸாம்பசிவ கைலாஸவாஸ சங்கரமாம் பாஹிபாஹி (ஸாம்ப)

அநுபல்லவி.

ஜாம்பூநத சிகர மேரு தநுகர சுப்ர மிருகதர (ஸாம்ப)

சரணங்கள்.

க. பஞ்சவதன பாப பஞ்சன பக்தஸம்ரஜன மனோ ரஞ்சன
[மஞ்சுளநட னம்புரிந்திடும்
வனஜசரண அருணகிரண மகுடபரண உரகதரண (ஸாம்ப)

உ. காமிதார்த்த பலதாபக ஸ்வாமின் மூர ஹரி ஸாயக கோமள
[பார்வதிநாயக
குஞ்சரனைக் குருபரனைக்கொஞ்சியணைக்குங்கருணை (ஸாம்ப)

௩. முநிமாநஸ ராஜ ஹம்ஸ முகுர ஹிருதய பரம ஹம்ஸ
[விநுத புஷ்ப பாண ஹிம்ஸ
விநோத ரஸ நடனப்ரிய மனோஹரவ லயவிக்ரய (ஸாம்ப)

ஸரஸ்வதி ஸ்துதி.

பதம். இராகம்--முகாரி. தாளம்—ஆதி.

பல்லவி.

நாவில்வந் தருள் செய்குவாய் கமல வாணி (நாவில்)

அநுபல்லவி.

பாவினு யர்ந்தசிவ பரகதையைச் செய்வதற்
காவலு டனே பணிந்தேன் மிகத் துணிந்தேன் (நாவில்)

சரணம்.

க. பங்கஜன் மகிழ் மின்னே பாரோர்து திக்கும் பொன்னே
நின்கரு ணைபெறற்சொன் னேன் கலையை யின்னே (நாவில்)

நடராஜ ஸ்துதி.

பதம், இராகம்—கானடா. தாளம்—ஆதி.

பல்லவி.

சிதம்பர நடேச சிவகாமி நேச (சிதம்பர)

அநுபல்லவி.

முதம் பெருகும் தொண்டர் சரிதந் தனைப்புகல
முதல்வனே இதமொடுந் ததியிதி லருள்வாய் (சிதம்)

சரணங்கள்.

க: அன்பர்கள் கொண்டாட அண்டர்களும் நாடத்
தும்புரு நாரதர் துதித்துக் கீதம்பாட
அம்புஜ மலரடி யணிகொள் நடன மாட இலங்கும் (சிதம்)

உ. ஸாம கான லோல ஸாது ஜன பால
காமத கனகர திருதவர மிருகசூல கால கால
கரு ணுநப னவிசால (சிதம்)

சிவகாமசுந்தரி ஸ்துதி.

பதம். இராகம்—சங்கராபரணம். தாளம்—ரூபகம்.

பல்லவி.

கருணைபு ரிந்து ரட்சி யம்மா சிவ காமஸு ந் தரியபி
ராமஸு ந்தரி (கருணை)

அநுபல்லவி.

தருண மிதுதொண் டர்கள் சரிதந் தனைப்பகரத்
தாயே யருள்புரி குவாயே திருஜகன் மாயே (கருணை)

சரணங்கள்.

க. அம்பலத் தினில்நட னம்புரிந் திடும்பாதர்
அகமகிழும்சர்வாணி அன்பர்கட் கின்ப மளிக்கும பயபாணி
வம்பவிழ் மலர் செறிந் தும்பிரவை யுறும் வேணி
வரதே நித்ய கல்யாணி வந்தருள் செய்புராணி (கருணை)

உ. ஸாம கான ப்ரியே சதுரே திரிபுரே வரே
ஸகல ஜகதா தாரி எனக்கு வரந் தந்தருள் கிருபாவாரி
ஸோமவ தனே தொழுந் தொண்டர்கட் குபகாரி
சுத்தநிர் மலமான ஜோதி ஹார சிருங்காரி (கருணை)

கடவுள் வாழ்த்து.

குரு வணக்கம். சங்கராசாரியர் துதி.

பதம். இராகம்—பியாகு. தாளம்—ரூபகம்.

பல்லவி.

லோக குருவே சங்கர நாமதருவே

அநுபல்லவி.

அநேக ப்ரபஞ்ச வுயிர்க் கருவே பவ ஸாகர
தரண மெய்யுருவே உரு அருவே ஞானத் திருவே (லோக)

சரணங்கள்.

க. ஸச்சிதா னந்தவி க்ரகமே சதுஷ்
ஷஷ்டிக லைநிறைந்த கிரகமே விஷயநி க்ரகமே
ஸர்வஸங் கிரகமே (லோக)

உ. ஷண்மதஸ் தாபன பதியே பக்த ஸம்ரக்ஷணகருணாநிதியே
போத மதியே நீயே கதியே (லோக)

ங. பக்த சரிதஞ்சொலி வணமே யெனப்
பகரவந் தருள்வாய்ஸத் குணமே மறைமலர் மணமே
ஒளியின் குணமே (லோக)

நால்வர் துதி.

விருத்தம்.

சீருலவு தோணிநகர் தனிலுற்ற வமையுமை
திருமுலைப் பாலயின்ற
செல்வமலி சம்பந்த ரமணார்தூர்ச் செய்கையிற்
றீயவிட முண்டு பின்பு
காருலவு கடலிடைக் கற்றோணி மீதில்வரு
கருணையார் தொண்ட ரப்பர்
கண்ணியம் பொலிதிருத் தொண்டத்தொ கைக்குமுற்
காரண ரெனச் சிறந்த

பேருலவு மாலால ஸுந்தரர் பெருந்துறைப்
    பின்ஞகற் கடிமை யுற்றுப்
பிட்டுக்கு மண்சுமந் திடவரனையுஞ்செய்
    பிரஸித்த மணி வாசகருமாம்
நேருலவு மித்தொண்டர் கருணையுற் றிடுமிவ
    ணிகழ்த்திடத் தொண்டர் சரிதம்
நிறையு மிசை பரவயிசை யமரவுயர் கீதங்கள்
    நீணிலத் திலக மாதோ.

மற்றத் தொண்டர்கள் துதி.

விருத்தம்.

அரனடி மலரின் பக்தி யன்புயர் குருவின் பக்தி
உரியதொண் டர்களின் பக்தி யுண்மையிற் செய்ததொண்டர்
அரியதாஞ் சரிதந் தன்னை யமையுங்கீர்த் தனங்க ளாகப்
பாவிடச் சங்கரன்றண் பதமல ரருள்க மாதோ.

புராணப் பயன்.

பதம். இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

பல்லவி.

தொண்டர்ச ரித்திர மிது பெரிதே யதன்மகிமை
சொல்ல யெவர்க்கு மரிதே. (தொண்டர்)

அநுபல்லவி.

அண்டர் புகழும் நீல கண்ட ரடி யிணையை
யநு தினம் பரவிடு மனமுய ரினியநற் (றொண்டர்)

சரணங்கள்

க. படிப்ப வருக்கு மிதைப் படித்துக் கேட்ப வர்க்கும்
பலன்கள் மிகவே சேரும்—இந்தப்
படிக்கு ளிகத்திற் புத்திர மித்ர களத்திரங் களும்
பலிக்கச் செல்வங்க ளாரும்

அடுத்தடுத் தும‌னேபீஷ் டங்களும் நிறைவேறு
மனவா தமுமன தன்புமி குந்துகூறும் (தொண்டர்)

௨. பக்திவ ழியில்மனம் பதிந்தா னைப்பணிந்து
பாவநல் வழி காட்டும்—வெகு
மித்தை யுலகிற் கெட்ட வழியில் திரிபவர்துர்
வினைகளி னையே யோட்டும்
எத்தினங் களுந்துன்ப மிணையும் நெறியில் வாட்டு
மிகமும்ப வம்விலக்கி யினியமுக் தியில்நாட்டும் (தொண்)

புராணக் கீர்த்தன வரலாறு.

விருத்தம்.

சுந்தரர்செய் திருத்தொண்டத் தொகையைக் கொண்டு
தம்பிமுகன் ரெண்டர்நம்பி யாண்டார் நம்பி
யுந்தரமா யுரைத்தவந்தா தியினைப்போல
வுலகமகிழ் சேக்கிழா ரிதிற் செய்த
சுந்தரமாம் பெரியபுரா ணத்தைக் கொண்டு
சுதியிசையை முன்னிடுங்கீர்த் தனங்களாக
இந்துதரன் கருணையொடு மிபம்பப் பெற்ற
விச்சரிதந் தனக்கரன்முன் னிருக்க மாதோ.

அவையடக்கம்.

ஸவாய். இராகம்—குறிஞ்சி. தாளம்—அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

க. பக்தச ரித்ரவி சித்ரமகத்துவ முரைத்திடு முத்தம ஸத்
[குணர் நீரே
நித்திய ஸுகப்பெரு மைப்பொருள் பெற்றவர் புத்தியி லெற்
[றொரு புத்திசொல் வீரோ

௨. ஈசரி சைசொல்ல வாசைகொண் டேன்பரி காசமென்
[றெண்ணுமே லேசிறி யேனை

வாஸ மிருமுங்கள் நேசப லத்தினு லேசொல்கி றே
[னிரண் டுங்குறி யேனே.

௩. தங்கள்செ விக்கிந்தப் புன்கவி மெல்லத் தழுவில துவும்பெ
[ருங்கவி யாமே
பங்கமு துஞ்ஜல தாரைத்தூர் நீரும்செ லுங்கதி யாலது
[வும்நதி யாமே.

௪. அண்டர்பு கழ்நீல கண்டர்தம் நாமமாங் கண்டுச ரித்திரத்தி
[லுண்டதும் நீரே
தண்டுல த்தாலுமி நன்றென வுங்கொள்வ துண்டது
[போலென் சொற் கொண்டருள் வீரே.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

வெண்பா க. விருத்தங்கள் ச.
கண்ணிகள் க. கலித்துறை க.
பதம் எ. லவாய் க.

ஆக கரு.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருநாட்டுச் சிறப்பு.

ஸாகீ.

க. பாட்டியற் றமிழுரை பயின்ற வெல்லையுட்
கோட்டுப் பனிவரைக் குன்றின்மேலே
சூட்டிய வளர்புலிச் சோழர் பொன்னி
நாடென்றுந் துலங்குமுயர்வி னாலே.

உ. குறுமுநி தருநீர் கமண்டலத் தினிற்பொழி
கோலக் காவிரியி னூறே
திருவுயர் புலிமடந் தையின்மார் பினில்நித்
திலத்தா மமென் பாரே.

ரு. சைய மால்வரை தோன்றித் தரணிமகள்
தனக்குச் செவிலியென வாரும்
வையகம் பல்லுயிர் வளர்த்துநா டொறுமுய்ய
மகிழ்ந்தளித் தூட்டுநீர் சேரும்.

ச. * மாலி னுந்திச்சுழி மலர்தன் மேல்வரும்
வகையிற் பல்லுயிர் தராலே
கோலநற் குண்டிகை தாங்கநான் முகனெனக்
குலவும் பொன்னிநதி மேன்மேலே.

---

* பிரமனுக்கும் காவிரிக்கும் சிலேடை:—பிரமனைக் குறிக்குங் கால், திருமாலினது உந்திச் சுழிமலர்மேல் தோன்றி வருகின்ற தன்மையாலும், பலவுயிர்களையும்படைத்தலாலும், அழகிய கமண்டலத்தைத்தாங்குதலாலும் என்றும்; காவிரியைக் குறிக்குங்கால், பெருமையால் அகில் பொன் மணி முதலியவற்றை வீசி யெறிந்து, நீர்ச்சுழிகளும் மலர்களும் தன்மேல் பரவிவருகிறதன்மையாலும், நீர்வாழ்கின்ற வுயிர்களைக்கொடுத்தலாலும், அகத்தியரது கமண்டலத்தால் தாங்கப்படுதலாலும், என்றும் பொருள்கொள்க.

ரு. திங்கள் சூடிய முடிச்சிகரத் துச்சியிற்
செழிக்கும் வெண்டலை நரையேய
எங்கெணும் செனும் பொனிநதி யான்முடி
யிழியுங் கங்கையென வேபாய.

சு. வண்ண நீள்வரை தரப்பெ றறங்களை
வளர்த்திடு மீகையி னுலே
அண்ணல் பாகத்துடை யம்பிகை கருணைபோ
லமர்ந்தது மேன்மேலே.

விருத்தம்.

† வம்புலா மலர்கள் தாங்கி வழிபடு நீராற் றுய்ய
செம்பொன் வார் கரையி லெண்ணிற் சிவாலயத் தெம்பி ரானை
யின்பமா யரா இத்து மிலங்கிடப் பொன்னி யாறு
உம்பர்நா யகர்பா லன்பை யுற்றவர் போன்ற தம்மா.

காவடிச்சிந்து செந்தில் மாநக-ரந்தனை மேவிய என்பது போல.

கண்ணிகள்.

க. வாசநீர் குடை மங்கையர் கொங்கையில்
மன்னிடுங் குங்குமச் சேறும்சாந்த
மும்நறுந் தோயத்தி லாரும்-நீர்
தேசுடைத் தெனினு மது மிக்க
தெளிவில்லை தென்றசொற் சாரும்.

உ. மாவிரைத் தெழுந் தார்ப்ப வரைதரு
மாமலர் மாமதுப் பொங்கும்வாவி
தாம்நிறை நாடு விளங்கும்-படி
மன்னுங் கால்வழிக் காவிரிநீரு மருவிச்
சருவி யிணங்கும்.

௩. ஒண்டுறை த்தலை மாமத கின்வழி
யுற்றிடும் நீர்வய லாரும்—மெதி

‡ காவிரிக்கும் ஈசான்பருக்கும் சிலேடை.

றுற்றம லர்குழைத் தேறச்—செய்யு
மோசை யண்டர்க ளொத்திடும் வானத்தி
லுள்ளவர் காதினிற் சேரும்.

ச. மாதர் நாற்றுப்ப றிப்பவர் மாட்சியும்
மஞ்சுள மாமுடி யாவும்—சேர்க்கு
மாட்சிமை யுமங்கு கூவும்-உழு
மாந்தர்கூட்டத் தொழுக்கமு ஞ்சேர்ந்து
மலிந்தன வின்பமு மேவும்.

ரு. உழுத சான்மிக வூறித்தெ ளிந்தசே
றுற்றுவ ளமிகும்பாங்கி—லும்பணை
யும்பரா சினிற் காங்கு-பூசை
யோடுநாறு நடுவர் தொகுதி யுடன்
பொன்னி நாடெங்கு மோங்கும்.

இராகம் மாஞ்சி தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

க. பழனங்க ளினிற்சாலிப் பயிர்ச்சுருள் விரிய
பதங்கண் டுழவரவை களைச்சியர்க் கறிய
விழைவுடன் செயக்களை மிகவெடுத் தெறிவார்
மினுமுத்தஞ் சொரிசங்கத் திடறியே வருவார்.

உ. அத்தகி யிடைதளர்ந்தங் கசைந்தங்க மருவார்
அளிகுழ லலைந்திட வரம்பணைந் துறுவார்
கொத்துமல ர்க்குழற்செங் குவளையு மணிவார்
குழன்மேற் சிறைவண்டைக்கை கொண்டுகைத்
[திணைவார்.

ங. கைம்மலர் களாலயற் கருவண்டு மழைப்பார்
கமலம துவாயுறக் களித்தவர் தழைப்பார்
செய்முறு வலிற்றள வரும்பவுந் தெரிவார்
திங்கணு தல்வெயர் வரும்பவுந் திரிவார்.

காவடிச்சிந்து இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.

கண்ணிகள்.

க. கரும்பென்னச் செந்நெல்வளர்ந் தோங்கும் வளர்
கமுகென்னக்.கரும்புகளும் நெருங்கிவரும் பாங்கும்
சுரும்பல்லி குடைநீலத் தாது அல்ல
சொலும்பகலி னோடெனத் துலங்கிடுமெய்ப் போதும்.

உ. அரும்பல்ல முலையென்ன மருவும் திக்கு
மமுதல்ல மொழியென்ன வாருமின்பஞ் சருவும்
வரும்பல்லா யிரங்கடைசி மாதர் நிறைந்து
வயலெல்லாம் பரவியுயர்ந் திடுவரின்ப மாதர்.

விருத்தம்.

எண்ணமிலாக் கயல்பாயும் தடநந்தூன் கழிந்து
திகழ்ந் திடு மடாக்க
ணுண்ணிறைய வகன்றவெண்வ ளைத்தரள
மலர்வேரி யுலைப்பெய் தங்கு
மண்ணுமய லாமையடுப் பேற்றியாக்
காம்பல்நெருப் பதனை யூதும்
வண்ணமுறும் வயல்மாதர் சிறுமகளிர்
விளையாட்டு வரப்பி லெல்லாம்.

சேக்கிழார் திருவிருத்தம்.

கும்மிப்'பாட்டுப்போல இராகம் ஆநந்தபைரவி. தாளம் ஆதி.

க. காடெல்லாங் கழைக்கரும்பு
காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை
வயலெல்லாம் நெருங்கு வளை
கோடெல்லா மடவன்னம
குளமெல்லாங் கடலன்ன

நாடெல்லாம் நீர்நாடு
தனையொவ்வா நலமெல்லாம்.

இதுவும் கும்மிப்பாட்டுப்போலப் பாடத்தக்கது. சந்தம் வேறு.
இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி.

க. ஆலை பாய்பவ ரார்ப்புறு மோலம்
அலர்மலர்ச் சோலையின் வண்டிரையும்
ஓல நான்மறை யோதையும் வேலையி
னோசையின் மிக்க வுயர்ந் தறையும்.

உ. அன்ன மாடு மகன்றுறைப் பொய்கையி
லார்ந்துறு மேதி துதைந்து வரும்
கன்னி வாளை கமுகினிற் பாய்வன
கனக வில்லினை யொத்தி வரும்.

ந. காவி னிற்பயில் வண்டினம் வாவி
கதிக்கு மலர்மது வுண்டு யரும்
மேவி யத்தட மீதெழுப் பாய்கயல்
மின்பொழி லின்கனி யண்டிவரும்.

தொண்டிச்சிந்து நந்தனர் சரித்திரத்தில் ஐயேவொரு சேதிகேளு
மென்பது போல.

கண்ணிகள்.

க. பண்ணைக ளினிற்சாலி யோங்கிப் படர்ந்து
கருவமர்ந்* திவரும்; † சூலி
யண்ண லன்பரின் மனமே போல
வளர்ந்து வந்தன கதிர் களி னினமே.

உ. சங்கரரின் தொண்டர் கணம் அவர்
தலைவணங் குதலெனச் சாலி யவணம்
எங்குமுதிர் தலைவணங்கிச் சாலி யியங்கும்
வித்தகரென விளைந்து மிணங்கி.

* செறியும். † சூலியண்ணல் சூலத்தைத் தாங்கும் அண்ணல் அதாவது பரமசிவன்.

௩. அரிதரு செந்நெற் சூட்டி னுழவ
ரடுக்கிய வடுக்கலை மைத்து நாட்டிப்
பரிவுறத் தடிந்த மீனத் தொகுதி
படர்நெடுங் குன்றெனப் பணித் துயர்வான.

௪. வளைசொரிந் திடுமுத்தின் சுடர் வரைசில
விட்ங்களை மர்த்தி யுயர்த்திக்
களைமலர்க் கற்றைவேரி பொழிந்திழி கதிக்கும்
வெற்பமைத் திடக் காண்பர் நேரில்.

ஆசிரிய விருத்தம்.

சாலியின் றெருகுதிட வரைமுகடு சாய்த்தங்கு
சார்ந்திடும் பகடு போக்கும்
தகைமைபெரு குப்பரீண்டி வீட்டமா லார்முகில்
‡ தண்வரைச் சிமய மோங்கும்
மேலுறுஞ் சாரல்மேல் வலமுற்றி டச்சூழும்
மிக்கவுயர் காட்சி யொருபால்
விளைமள்ளர் வைக்கோல் வில்க்கி மழை
பெய்வதெனை விரைவில்நெல் தூற்றிட வரும்
சாலவுயர் பொற் குன்று வேழும
ணிக்குன்று தானென்ன மென் கரக்கத்
தக்கநெற் குன்றினுல் மருதங் குறிச்சிபோற்
சருவியுயர் காட்சி யொருபால்
கோலமுறு பதிசனினி லரசுகொள் கடன்களைக்
குறைவறவு மாற்றி மிகுதி
கொண்டறம் பேணிடக் கடவுளைப் போற்றிடக்
குணமொடுத மைப்பர் மாதோ.

---

‡ சிமயமோங்கும் தண்வரை யென்றும் வரையின் மேலுற்ற சாரலென்றும் மாற்றிப் பொருள்கொள்க.

வெண்பா.

ஓங்குங் குறவ ருயருங் கிளைவிருந்து
தாங்குங் குடிகள் தழைத்துவரும்—பாங்கின்
வரைபுரை மாடங்கள் நீடி மலர்ந்தி
வரும்பதிக ளோங்குறுபர் வாய்.

இராகம் மோசனம். தாளம் ஐம்பை.

கண்ணிகள்.

க. அமுதின்கரும் படுங்களம ராலைநறும் புகையோ
அணிமாத ரகிலொலிட் டமர் தூப மிகையோ

உ. அமைவேள்விச் சாலைதொறு மார்புகையோ வானோர்
அருமுகிலோ சூழ்வமா டங்காவுந் தானோ.

பதம் இராகம் நாதநாமகிரியை. தாளம் ஆதி.

பல்லவி.

நாட்டின் வளங்கள் சொல்லப்
போமோ யினுஞ் செம்பொனின் (நாட்டின்)

அநு பல்லவி.

தாட்டிகன் குறுமுநி தனிக்கர மின்னித்
தரையிற் கவிழ்க்கவரும் நிறைபிற் பெருகும் பொன்னி
(நாட்டின்)

சரணங்கள்.

க. நாளிகேரம் நயமான செருந்தி நறுமலர்
நரந்த மங்கு பொருந்திக்

கோளி சால முயர் வானத பாலம்
குளிர்மரக் குரவ மெங்கும் வி சாலம்

தாளிரும் போந்து தரமுயர் சந்து
தண்மலர் நாகங் களொடு முசந்து.

நீளிலை வாஞ்சி கஞ்சியு முலாவும்
நிறைமலர் கோங்கம ரங்களு மேவும் (நாட்டின்)

உ. சூத பாடலம் வழைகளு மெங்கும்
சூழும் ஞாழலின் மரங்களி லங்கும்
சாதி மாலதிகள் வானுற வாவும்
தண்டளிர் நரவமு மங்கு மளாவும்
மாதவி சாளம ரங்களின் வகையும்
வகுள சண்பகங் களினுறு நிகையும்
போதவிழ் கைதையின் வகைபல சேரும்
பூகபுன் னைகத் தொகுதியு மாரும். (நாட்டின்)

ங. வாகை முல்லைமல் லிகையொடு சண்பை
வகுள ஜாதிமலர் மணியுபர் தும்பை
கோகனத பாரி ஜாதப னீரும்
குலவு கேதனம னந்தமும் நேரும்
மட்டுயர் ஜவந்தி மலருமந் தாரம்
வாஸமு றுங்குழு தங்கள பாரம்
மட்டி லாதரோ ஜாயிரு வாட்சி
மகிழ மலர்புன்னை மருவிடுங் காட்சி
அநிச்ச மாமல ராதிகூ விளம்
ஆத்தி கொன்றை யொடு மல்லிகை மாவளம்
இனித்த மதுதரு மாதுளை வாஸ
மிலங்கு நந்தன வனமுயர் பிரகாசம். (நாட்டின்)

ச. வாழையின் கனிகள் வகைபல மாவும்
மதுமிக வொழுகிவி ளங்குப லாவும்
சூழு மாதுளங் கனிகள் கொய்யாவும்
தோன்று முந்திரி கொழுஞ்சியு மேவும்
பருக வழுதொழுகு பப்பளி மாசு
பலவகை யாக வருந்தும ஞசு
நிறமுயர் விருசக பித்தமற் றும் நறு
நிறையமு தொழுகிடு கனிகள் மற்றுமுறும். (நா)

நோட்டுப்போலே பாடுக. இராகம் சங்கராபரணம். தாளம் ஆதி.

கண்ணிகள்.

க. மங்கல வினையின * யங்களுமே
மாமண மேசெ † யியங்களுமே
பங்கஜ வதனமு முந்தலமே
பண்களின் மழலைக ளின்குலமே

உ. பொங்கிவி ளங்கிடு பொன்னணியே
போது பந்தர்களின் மின்னணியே
செங்கய லார்பழ னங்களுமே
திருமக ளெங்கெணும் நிறைகொளுமே.

ந. மேகநாகமு மொருங்குறுமே
வேதந் ‡ கிடையிலு முந்தரமே
யாகஞ் சடங்கி லங்கிடுமே
இன்பம் மகிழ்வு துலங்கிடுமே.

ச. யோகந் தவமுப ருந்தரமே வூசலுமறுகு மொருங்
குறுமே போகம் பொலிவு துளங்கிடுமே
புண்ணிய முனிவர்கள் விளங்கிடமே.

ரு. பண்டரு * விபஞ்சி யின்னிசையே ‡
பாதசெம் பஞ்சி யுறுமிசையே
வண்டறை குழல்கள்மின் னிடமே
வளரிசைக் குழல்க ளின்றிடமே.

சு. தொண்டர்த o மிருக்கை யெங்கெணுமே
சொல்லுவ § திருக்கை யின்குணமே
தண்டலை || பலவுமு முந்தடமே
தாதகி / பலவும மர்ந்திடுமே.

---

* நயங்கள். † வாத்தியங்கள். ‡ மறைபயிலிடம்.
* வீணை. ‡ செம்பஞ்சுக்கள். o இருக்குந் தன்மை.
§ வேதம். || பலவிதமான. / பலாமரங்கள்.

௭. மாடு ‡ போதகங் களினிறையே
வண்டு / போதகங்களின் முறையே
பாடு மம்மனைகள் தொறுமவரே
பயிலு மம்மனைகளு முறுவரே.

௮. நீடு § கேதனங் களினணியே
நிதி* நிகேதனங்களின் மணியே
தோடுயர் மாலைநி றைந்திடுமே
துணைவர்கள் மாலையு றைந்திடுமே

பெரியபுராணத் திருவிருத்தங்கள்.

இராகம் எதுகுல காம்போதி—தாளம் திருபுடை.

௧. வீதிகள் விழவி னார்ப்பும் விரும்பினர் விருந்தி னார்ப்பும்
சாதிக ணெறியிற் றப்பா தநயரு மனையிற் றப்பா
நீதிய புள்ளு மாவும் நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய || வெழுத்தா மஞ்சு முறுபிணி வரத்தா ○ மஞ்சும்.

௨. நற்றமிழ் வரைப்பி னோங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவ னனபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ.

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

லாவணி	௧.	நொண்டிச்சிந்து	௧.
விருத்தங்கள்	௩.	வெண்பா	௧.
காவடிச்சிந்துகள்	௨.	பதம்	௧.
கண்ணிகள்	௩.	நோட்டு	௧.
கும்மி	௨.	ஆக மொத்தம்	௧௫.

ஆக கடவுள் வாழ்த்து உள்பட ௩௦.

---

‡ யானைகள். / புஷ்பங்களின் நடுவிடம்.
§ கொடிகள். * வீடுகள். || பஞ்சாக்ஷரம். ○ பயப்படும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ச் சிறப்பு.

காவடிச்சிந்து சந்தவரை வந்தருகநாதா என்பது போல.

கண்ணிகள்.

க. பொன்னிநதி மின்னிவந்து பாயும் நாட்டிற்
பொருந்துந் தொந் நகரென பேயும்—தினம்
பூமகள் மனமகிழ்ந் தேமரு விக்களித்துப் பொருந்து மின்
[பந் திருந்தும்

உ. வன்னிநதி மாமதியின் சடையார் தொண்டர்
மகிழ வுதவு மருட் சொடையார்—நித்தம்
மருவிச் சுந்தரர்க் கின்பஞ் சருவவும் வரந்தரு வாரூர்
[திருவாரூர்

ந. மறைகளி னோசை வீணையோசை ஜோதி
வானவர் தினந் தினமுமேசெய்—ஓசை
மாதராடன் மணி யோது மாமுழ வின் மருவும் ஒலியுஞ்
[சருவும்

ச. நிறை யுயர் பல்லியங்க ளார்க்கும் வீதி
நெடுகலுந் தேரொலியு மேற்கும்—மிக
நெருங்கிக் களிற்றினொலி உரங்கொளு மாவொலி நேரும்
[பதியென் றுரும்.

பதம். இராகம் பூரிகல்யாணி. தாளம் சாப்பு.

பல்லவி.

ஆரூர் மகிமையினு மளவிறந்த தாமென்று
லறைய லாகுமோ நேரே அன்பி னமர் பெரியோரே. (ஆரூர்)

அநுபல்லவி.

நேரூர் மாடமா ளிகை சூளிகை மண் டபம் பின்னும்
நெருங்குஞ் சாலைகள் கோபு ரங்கள் தெற்றிகள் மன்னும்(ஆரூர்)

சரணங்கள்.

க. நீடு சாளரம் நீடரங் கெங்கெணும்
ஆடன் மாத ரணிசிலம் பொலிநணும்
மாட மாவரை விலியை மனத்து ளெணும்
நாடும் ஸாகரி கையின் மாளிகை யுமணும். (ஆரூர்)

உ. அன்ன மேனமுந் தேடற் கரும்பொருள்
மின்னும் நம்பி விளங்க மகிழ்ந்துறும்
தன்னி கரினிற் றாது சென்றே நறுந்
தாண்மலர் மணக் குந்தனி யாந்தெரு. (ஆரூர்)

ங. செங்கண் மாதர் தெருவிற் றெளித்திடும்
குங்கு மத்தின் குழம்பைக் குழற்படும்
பொங்கு மாலையிற் பூந்துகள் வீழ்ந் துடன்
அங்கண் மேவி யளாறு புலர்த்திடும். (ஆரூர்)

ச. உள்ளமா ருருகாதவ ரூர்விடை
வள்ளலார் திருவாரூர் மருங்கிடை
தெள்ளு மோசைத் திருப்பதிகத் தொடை
கிள்ளைபாடிடக் கேட்கும் பூவைப்படை. (ஆரூர்)

விருத்தம்.

* விளக்கமிகு கலன்க ளெங்கும் விரவிடப்பே
ரொலிபரவ மினும் பண்டங்கள்
கொளக்கிடைக்குந் தன்மையினற் பலவகையா
மணிக ளெங்குங் குலவப் பெற்று
வளத்தையுறு மாறமரு முதலையனே
கங்கனைன வளர்த்தல் செய்யும்
அளக்கரெனத் தோன்றிடுமா வணவீதி
யலங்கிருதவா ரூரின் மாதோ

---

* கடைவீதிக்கும் சமுத்திரத்திற்கும் சிலேடை.

ஸாகீ.

க. ஆரணங் களே யல்ல மறுகி னிடை
யமர்வா ரண மார்க்கும்
ஆரு மமர்க ளல்ல தோ ரணங்களில்
அணிதர மழு மேற்கும்

உ. தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
தனிமுனி மறை யோரும்
வீழ்ந்த யின்பத்துறை விரவுவரங்கர்
விளங்கிடு மிடஞ் சேரும்

ங. நிலமகட் கழகார் திருநீ ணுதற்றிலக
நேர்வது செம்பியர் பதியே
மலர்மகட்கு வண்டா மரைபோல் மலர்ந்தலகில்
வளம்பெறு மாரூர்ப் பதியே.

வெண்பா.

அந்நகரிற் செங்கதிரோ னொரு மரபுதித்த
மன்னனைன பாயன் மரபினிலே—துன்னிவரும்
வேந்தா மநுவிமலன் மேதினியில் நீதியின்ப
மார்ந்து புவியளித்த னன்.

பதம். இராகம்—பியாக். தாளம்—ஆதி.

பல்லவி.

செங்கோல் செலுத்தி வந்தான் மநு வேந்தன்
திக்கெங்கெ ணுமிசைவி ளக்கப்பு வியின்மிசை (செங்)

அநுபல்லவி.

அங்கண மார்திரு வாரூரி லிருந்தும்
எங்கு மொற்றைக் குடைக்கீ ழிலங்கிடப் பொருந்தும் (செங்)

சரணங்கள்.

க. மண்ணினில் வாழ்தரு மன்னுயிர்க் காவி
கண்ணுமாம் பெருங்காவ லாமென்ன மேவி
விண்ணுள வர்மகிழ்வெய் திட வேள்வி தாவில்
எண்ணிலா தன மாண வியற்றி மேதாவி (செங்)

உ. கொற்ற வாழிகுவ லயஞ்சூழ்ந் திடப்பற்றும்
சுற்று மன்னர்திரைக் கடைசூழ்ந் தி—முற்றும்
செற்றம் நீக்கிய செம்மையில்மறு வியற்றும்
பெற்ற நீதியுந் தன் பெயராக் கிடவுற்றும் (செங்)

ங. அருமறைக் கரியபுற் றிடங்கொண் டவனினும்
அகிலங்க ளாயிருந்தவன்வர னான்முறு
உருகிநின் றுகம வுண்மை நூல் களிற்பனு
மோங்கும் பூசைவி திகட் குரிய நிபந்த முனும் (செங்)

விருத்தம்.

செய்யவறம் பொருளின்ப மானவற நெறிவழுவாச்
செயலி லோங்கி

வையகத்தை யரசுபுரிந் திடுநாளி லவன் செய்தவ
மகிமை யாலே

தையலரிற் றகைமைபெறு மவன்றேவி திருவயிற்றிற்
றரணி யோங்கத்

துய்யமக வரிக்குருளை யெனவுதித்த தந்நகரம்
துலங்க மாதோ

ஸவாய்.

க. மெய்த்தவ மோங்கிடப் பெற்றதன் மைந்தன்
வினாரந்துசி வத்தை விளக்கி டுமேலா
வொத்த கலைபல வோதிப்பு ரவி
யுறமுங் கயந்தேர் படைத்தொழில் சால

உ. கற்றும தன்பின் பலகலை தேர்ந்திடுங்
கண்ணியன் பாலக் கதிரினைப் போல
வுற்றவி ளவர சரமென மைந்தனு
மோங்கிடு நாளினிலார் நாளநு கூல

பதம். இராகம்—கல்யாணி. தாளம்—சாப்பு.

பல்லவி.

மைந்தன்ப வனிவந் தானே சதுரங்கமும்
முந்தம னமு வந்தானே—யிளவரச (மைந்தன்)

அநுபல்லவி.

சுந்தர மநு வேந்தன் துங்க நற்குண சாந்த (மைந்தன்)

சரணங்கள்.

க. திங்கள் வெண் கவிகை சிறந்து வந்து நிழற்றத்
திருக்கோயி னின்றெ ழுந்து தினகர னொளி பெற்ற
சங்கந் திகழ் கண்ணன்றன் றன்னரு ளினை யுற்ற
தன்மைய மர்ந்தவனி தழைக்க வரசு பெற்ற (மைந்தன்)

உ. சங்கமு ரசொடுபல் லியங்க ளத்ததி யுறத்
தாழ்ந்த கொங்கலர் மாலை தனிக் குங்குமம் தோள்பெறப்
பொங்கிய தானைசூழப் பொலியுந் தேர்மிசை வரப்
பொருந்து மங்குல்தோய் மாடப் புனித வீதி யமர (மைந்)

ங. பரசு வந்தியர் சூதர் பலரு மாகதர் நேரே
பணியுங் காவலர்களும் பக்கமுற் றமர் வாரே.
விரைநறுங் குழலியர் வெள்வளை சிதறு வாரே
வெண்சாம ரைகள் பக்கம் வீசிட நின்று நேரே (மைந்)

விருத்தம்.

தானைமனன் மனத்தினைச்சோ தித்திடத்தா
னோதருமந் தயையின் றித்தா
னைநிமிர்ந்த தெனநல்லான் புனிற்றிளங்கன் றெனத்துள்ளி
நிகழு மாந்தர்

தாநினைந்து பார்த்தும்வரு வழிதெரியா
விதம்வந்து தனித்தேர்க் காலின்
மேனிமிர்ந்த விசையினிற் சென்
றவ்விடத்தின் மேலுலகம் மேவிற் றன்றே.

அபங்க.

க. இந்தவி தங்கன்று மேவக் கண்ட
விளங்கன்றின் றாய்மன தாவ—லொடு
சிந்துறுங் கணிநீர் வார—நின்று
தியங்கி மயங்கி மனஞ் சோர

உ. அலமந் தோடிவெம்பி வாடி—மிக
வலறிச் சேர்ந்து திகைத்து நாடித்
தலமதில் மெய்ந்நடுக்க மேவி—மனந்
தளர்ந்து விழுந்ததங்கு கூவி

வெண்பா.

மைந்தனது கண்டிடவும் வந்ததிங்க பாயமெனச்
சிந்தைமயங் கித்தியங்கித் திக்பிரமைகொண்—டெந்தவிதம்
செய்வதென வொன்றுந் தெரியா தறிவழிந்து
மெய்ம்மறந்து மேபுலம்ப வே.

பதம். இராகம்—செஞ்ஜுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

ஈசனே யென்செய்வே னெவ்விதம் நானுய்வேன் (ஜகதீச)

அநுபல்லவி.

மோசமாயான் கன்றும் போச்சே முற்பழிச்சொற்
கிடமாச்சே (ஈசனே)

சரணங்கள்.

க. நீதிதவ றாது நிகிலலோக மீது
ஆதரவுற் றுமிப்போது அழிக்கவந்த தேதீது. (ஈசனே)

உ. மன்னவனின் னேரம் வரையில் நீதி ஸாரம்
தன்னு டன்பு வியின் பாரம் சார்ந்தும் வந்த தப சாரம் ()

௩. எத்த னேயோ ஜன்மத் தினிற்செய் திடுங் கன்மம்
ஒத்ததோ யிந்தவ தன்மத் தூறுந் துறைக்கென் மேலென்
[வன்மம் (ஈசனே)

விருத்தம்.

இந்தவிதம் புலம்பிடுமைந் தனுமிந்தப் பழிவிலக யிடமே தென்று
சிந்தையுற வந்தணர்கள் விதிக்குமுறை யறமென்றூற் றிகழு
மெந்தைக்
குந்தெரியு முனமியற்று வேனெனவு மொழிந்துமறைக் குலத்
தோர் முன்னம்
வந்துநின்று னக்கன்றின் றுய்செயலை முற்றுமிங்கு வழுத்து
[வேனே.

பஞ்ச சாமரம்.

க. ஆவின் கன்று மிறக்க வாவின்
அக்கன் றுக்களை கண்டதே
பூவில் விழுந்து கதறிக் கண்ணீர்
புரண் டிடத் துன்பம் கொண்டதே

உ. மன்னு யிர்களைக் காக்குஞ் செங்கோல்
மறுவின் கோயிலைச் சேர்ந்திடும்
பொன்ன ணிமணி தன்னைக் கோட்டாற்
புடைத்துத் துன்பமுற் றூர்ந்திடும்.

இராகம் சங்கராபரணம். தாளம்—ஆதி.

கண்ணிகள்.

க. பழிப்பறை தனி னொலியோ ஆர்க்கும்
மாவத்தி னொலி வலியோ வேந்தன்
வழித்திரு மைந்தனி னுவி கொள்ளவரு
மறலியூர் தியின் கலியோர்

உ. கழுத்தணி மணித் தொனியோ வெனத்தன்
கடைமுன் கேட்டுத் தனியோர்மிகத்
தெழித்தெழு மோசை மனன்செவிப் புலம்தித்
சேர்ந்திடப் பய முனி *யோ.

விருத்தம்-

செகமெச்சு மரியணையின் றெழுந்து வேந்தன்
திருவாயி லண்ணிடக்கா வலர்கள் போற்றி
தகையாரோர் பசுவந்திங் கெய்தி வாயில்
தனிமலரு மணியைக்கோட் டாலசைக்க
வகையொன்றுந் தெரியோமென் றிறைஞ்சிச் சொன்ன
மாற்றமதை மநுவேந்தன் கேட்டுத் தூக்க
மிகவெய்தி யாவைப்பார்த் திதற்கென் னுற்ற தெனவிளம்ப
வமைச்சரிந்த விதஞ்சொல் வாரே.

கலித்துறை.

வேந்தே நினது புதல்வ னிரதம் விடுத்திடமுன்
நேர்ந்தே பெரும்பல்லி யந்தானை சூழ நிருபர்தெருச்
சார்ந்தே வரயிர தக்கால் பிசையித் தலத்தூறுமா
வீந்தேவருங் கன்று வீழ்ந்திறக் கக்கண் டிசைந்ததுவே.

வெண்பா.

இந்தவித மந்திரிசொ லேந்தலி ரு காதிலுறத்
தந்தலையில் வெவ்விடமே சார்ந்ததெனச்—சிந்தையிலா
வுற்ற துயர முறநினைந்து வேதனையால்
மற்றவனு மேபுலம்பு வான்

இராகம் காம்போதி தாளம் ஆதி.

கண்ணிகள்.

க. ஈசனே யெனக்கிந்த விடுக்கண்வந் திடமுந்தை
பிறவிற்செயும் வினை தானோ

*ஒ = அசை.

தேசத்திற் குமெனக்குந் தீங்கிது வந்திடிலென்
செய்குவே னித்தச்சிப் பேறே

உ. விட்டிற்ற னியிருக்க வினைவந்து சூழ்ந்த தையோ
வெம்பழிக் காளாகி னேனே
நாட்டிலுள் ளோர்ந கைக்க நட்டாற்றி லெனை விட்டால்
நலமெவ்வி தத்திற் பெறுவேனே

௩. திண்ணையி லுள்ள வெண்ணைத் ‡ தெருவி லிழுத்
தலைக்கத் தேசமெங்குஞ் சிரிக்க லாச்சே
பண்ணினேர் மொழியுமை பங்கவென் செங்கோல் நீதியஞ்சு
பஞ்சாப் பறந்து போச்சே

௪. பொதுநீக்கி வையகம் புரந்த நெறிநன் றாயிப்
போது மெந்தவிதத்தி லாரு
மிதுவோ சோதனை யெந்தை யீசனே மயங்கினே
னெந்தவி தமிப்பழி தீரும்.

விருத்தம்.

இந்தவித மரசன்மயங் கித்தியங்கி யிரங்கிடப்பி
னேங்கித் || தேங்கிப்
பந்தவினை சூழ்ந்தென்செங் கோலுமின்று தாழ்ந்த
தெனப் பரிதவித்துச்
சொந்தமுறுங் கன்றிழந்த வாவுறுந்துன் பமுநினைந்து
துயரங் கொண்ட
சுந்தரமா மநுவேந்தை யமைச்சர்கண்டு வணங்கியிதைச்
சொற்றார் மன்னே.

---

‡ தெருவிலிழுத் தலைக்கவும் தேசமெங்கும் சிரிக்கவும் என்று சேர்த்துப்பொருள் கொள்க || அச்சமுற்று.

மகாராஷ்டிர பதம் இராகம் நாதநாமகிரியை. தாளம் ஆதி.

கண்ணிகள்.

க. சிந்தைத்த ளர்வ கற்றும் தீரும்வ ழியைப் பற்றும்
மைந்தனைக் கோவதைசெய் வார்க்கந்த ணரியற்றும்
எந்தவ ழியோவுற்று மிசைந்திடச் செய்து முற்றும்
இணங்குவ துநலமென்று ராசனதற்கு மிணங்கில
[மெனப் புகன்றான்.

உ. வகையான வழக் கீது வழுத்தினீ ரிப்போது
தகையார்கன் றையிழந்த தாய்க்கு மருந்தோ வோதும்
*பகையார்ம கவிழக்கும் படிவரு மென்றோ தீது
பகர்ந்தீ ரதைநான் மருவி வந்திடி லறம் நகர்ந்தே
[விடுமென் றறிவீர்.

ங. சழக்குரைத் தாலிப் போதோர்—தருமந்தான் சலியாதோ
குழக்கன்றி ழந்தலறுங் கோவதை புவி மீதோ
கிழக்குமுத லெண்டிசைக் கேநின்று பர வாதோ
கேவலச் செயற் கானேன் நான் பெற்றுவந்த
[கெண்மயி ழந்து போனேன்.

இராகம்—நீலாம்பரி. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

க. மானிலங் காக்கு மன்னன் மன்னுயிர் காக்குங் காலை
தானதற் கிடை யூறு தன்னாலே
ஊனமி குபகையாற் பரிசனத் தாற்கள் வரா
உயிர் தமாற் பய மைந்து முறின் மேலே

உ. தீர்த்தறங் காப்ப துவே செய்ய நெறியே யிது
தெரியாது நீருரைக்கிற் றீதா மே
சீர்த்தியா யென்கு மாறுற் செய்யுமிப் பழிக் குநேர்
செய்தவத் தாலெனது மனம் நோமே.

---

* இப்போது பகையாகப் பொருந்திய.

இராகம் ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

க. அன்னிய னோருயிர் கொன்றா லவனைக்கொல்வே
னவே னென்றறிந்து முன்பார்
தொன்மநு நூற்றொடை மநுவாற் றுடைப்புண் டது
தொல்லுல கினிலு மென்பார்.

உ. வார்த்தைக்கி டமா யுரைத்தீர் இதுநல்ல
வழக்காம் நீதியும் வெறுத்தீர்
பார்த்தவ ரவர்களும் நகைக்கவி டங்கொண்டுரை
பகர்ந்தீ ரின்பத்தைக் கரைத்தீர்

ங. என்றும ரசன் கூற மதிமந்திரி
யெதிர்நின் றுரைப்பர் தேற
நின்ற நெறி யுலகின் கண்ணிது
போல்முனம் நிகழ்ந்த மநுகேம்பீர

ச. மரபொழித் திடும் வினையே யிலை மறைசொலும்
அறந் தனையே தழுவி
மருவித் தொன்றுதொடு வருதல் நெறியெனவே
வழுத்தும மைச்ச ரினையே

ரு. பார்த்துச் சினந்து சிரித்து மரசன்
பகர்ந்தன னதை விரித்து
ஏற்ற விடரிற் பெற்றம் கதறி
மணியசைத் தெமக்கு நிகழ்ந்த குறித்து

விருத்தம்.

அயன்முதலா னவர்போற்று மாரூரி
னரனறிய வாவின் கன்றைத்
தயவின்றிக் கொன்றவனே துணிவினனு
மவற்கொன்றாற் சரியாஞ் சிட்சை

துயருறுகன் றிழந்திடுமா பொறுக்காத
துயரமெனத் தோன்று மைந்த
னையுமிழத்த விடரெனினுந் தாங்குவதே
தருமமென நவின்றான் மன்னே

வெண்பா.

இந்த விதமரச னேற்ற மொழிடகா
மந்திரிகள் கேட்டு மனந்தளர—மந்திரியி
லுற்ற வொருவனைத்தே ரூர்ந்துமக னைக்கொலென
மற்றவனு மங்கிதுசெய் வான்

ஆர்யா.

௧. மந்திரி யிதுசெய நேரா மனமதை
யுறவது செயாது மனமார
வுந்த னுயிரதுவு மாப வுற்றன
னதுசெய லரசறி யவும் நேய

௨. மைந்தன் றனையவ னேரே மறுகிடை
கொணர்ந்து நடுங்கி டட்பாரே
தன்றே ரிற்கா லுறவே சருவச்
செய்வன் றரணியி லிசைபெறவே.

பதம், இராகம்—ஆகிரி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

தேர்க்கா லூறவும் விடுத்தான் மைந்தனைப் பழி
ஜகந்தெரி யவே கொடுத்தான் மநுவரசன் (தேர்க்)

அநுபல்லவி.

பார்க்கு மெவர்க்கு மனம் பதறவே யறமொன்றை
யேற்க விச் செயல்செய்வ தெவரெனக் கதறவே (தேர்க்)

சரணங்கள்.

௧. ஒருமைந்தன் குலத்துக்குள் ளானென வுமேசரா
னுாுந்தன்மத் தின்வழியி லுறுதலே மிகுநேரா
யருமைச்செ யலென்றவ னறிந்துமைந் தன்றன்சீரார்
மருமந்த னைத்தோராழி மருவச்செய் துமே பாரார் (தேர்க்)

௨. தண்ணளி யுறும்வேந்தன் செயல்கண்டு தரியாது
தரணியு ளோர்கண்மழை சரிந்திடப் புவிமீது
விண்ணவர் மலர்மழை பொழியவி டையிலப் போது
வீதிவி டங்கப்பெரு மான்விளங் கிடச்சாது (தேர்க்)

பதம். இராகம்—பிலகரி. தாளம்—ஆதி.

பல்லவி.

விடைமீதெ ழுந்தருளி னார் தயை பொருந்தி
வீதிவி டங்கப்பெரு மான் பெரு மான்மநுமுன் (விடை)

அநுபல்லவி.

சடைமேலி வருங்கொன்றைத் தொடையமர வுநின்றவ (விடை)

சரணங்கள்.

௧. கங்கைகதிச் சடையார் கருணைவி ழிக்கடையார்
சங்கரி யுமையொரு பங்கர்ப ழுப்படையார் (விடை)

௨. வேந்தன்செ யலைமிக்க விமலன்கண் டேபிரமிக்கச்
சார்ந்தபூ தகணங்கள் தம்புடை னெருமிக்க (விடை)

விருத்தம்.

வீதிவிடங் கப்பெருமான் மநுவேந்தன் முனம்வந்து
விடைமேல் தோன்றி
நீதிதவ றாநினது பேரன்பு கண்டுவந்தோம்
நிமல வென்ற

றுதிசொலி யரசன்மகன் மந்திரியு மான்கன்றும்
நகரோர் காண
வீதியினி லுயிர்பெற்று மெழுந்தருள்செய் திடங்கண்டு
வியந்தார் மன்னே.

கும்மிப் பாட்டுப்போல இராகம் ஆநந்தபைரவி. தாளம் சாப்பு.

சேக்கிழார் திருவிருத்தம்.

அந்நிலையே யுயிர்பிரிந்தவ் வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானென் றறிந்திலன் வேந்தனும் யார்க்கும்
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ.

ஆரியா.

இந்தவி தம்ஜக தீச னினிதா யருள்செய்
திடமநு மக ராஜன்
சந்தப் பணிவிடை யாரைத் தானே துதித்
தினிதா யவர்வ னேமே.

பதம் இராகம் மோகனம். தாளம் ஆதி.

பல்லவி.

எனையொரு பொருளென வெண்ணிக் கிருபை புரிந்த
தெந்தவி தமென் னையனே ஜக தீச்வரி யுறு மெய்யனே
(எனை)

அநுபல்லவி.

அனை யுமை யொடுந் திரு வாரூ ரதி லமரும்
ஆரனே யன்பர்க் கருளும் வரனே மனோ கரனே (எனை)

சரணங்கள்.

க. அன்பர்கள் செயுங் குற்ற மனைத்தும் பொறுத் தவரை
யாதரிப் பவனீயென் றோதும்

பின்ப வுரைநிஜமென் றெவரு மறிந் துணையே
யேற்றிட மைந்தன செய்த தீதுப.
வபபும விலக்கிவைத்து வசுதெங்கள் முன்னு இத்து
இன்பபயதம கதிதது மேற்கத் தந்து மதித்து (எனை)

(௨) மெய்த்தப ஸிர்யமுனி வோர்கள் துதித்து நிறை
வீது யாரூரில வளர் வீது
விடங்கப பெருமா னென்று திடங்கொள பெயருற்
விளங்கி வந்துடும ஜோதி [றெங்கும்
உத்தம குண சீல வுயபர்கட் கநு கூல
பகத் வற்நுதப மேலால பரமத யாலவால (எனை)

விருத்தம்.

இந்தவிதந் துதிததவா சனும்பிறக
வவரடியை யிறைஞ்சி மைந்தன்
வந்தணைய வாகமுற வெடுதத ணைத்துத்
துயரகற்றி யகிழ்வுற ரா
வுநதனது மடிசரநது பொழிதிம்பாற
றனதுகனறு முணவு மீநது
வந்திடுமா பருவமலமுற றிலுப நீங்கி
யின்பமுறு மகிழ்நத தனமேற

வெண்பா.

வீதிவிடங் கப்பெருமான் வென்றிமநு வேந்தனுக்கு
வீதியினி லெயருளு மேன்மைதெரிந்—தாதிபரன்
தனனடியார்க ளனறுமெளி தாகினனென் றேழுலகோர்
டன்னியங்கு தோததிரஞ்செய் வார்.

ஆர்யாச.

(௩) இத்தகை யாயடி யாருக் கெண்ணில்
கிருபைபுரி யரன்மகி மையையாரும்
மெதத்வு ரைக்கத் தரமா வெனிலெனி
யவன்யா னுமுரைத் திடவுறுமா

பெரிய புராணக் கீர்த்தனை.

(௨) அத்தகை யாமணி யாரூர்க் கமல
நாயனைப் பரைமதி யுயர் காரூர்
பத்தர்ச் சடைமுடி யாரே வளர்கோ
யிலொளித் தெளிவுற வறிவீரே

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ச் சிறப்பு முற்றிற்று.

காவடிச்சிந்து	௧	அபங்கு	௧
பதம்	௭	பஞ்சசாமரம்	௧
விருத்தம்	௪	கண்ணிகள்	௫
ஸாகி	௬	கலித்துறை	௧
வெண்பா	௫	ஆர்யா	௩
[illegible]	௧		

ஆக உருப்படிகள் ௩௫

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

† திருக்கூட்டச் சிறப்பு.

வெண்பா.

புற்றிடங்கொண் டார்மருவும் பூங்கோயில் வாயின்மு
னுற்றமணிச் சோதி யுயர்ந்தபெரும்—நற்றவரார்
தேவா சிரியமண்ட பத்தின் சிறப்புமிக
மேவிவரு மின்பமுற வே.

ஸவாய்.

தொண்டர் திருமேனி மேவிடும் நீற்றொளி
தூய்மையி னுஞ் சக்கரத் தாலே
மண்டு முழக்கத்தி னுமோ ராயிர
மாமணிப் பாற்கட லொத்தது மேலே.

ஆர்யா.

இத்தகை மேவுறு தேவா சிரியனெனு
மண்டபத்தி லினிது மேவும்
அத்த ரடியவர்கள் பெருமை யாவலொடு
முரைசெய் குவேன் மிகவு மருமை.

பதம் இராகம் கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

தொண்டர்ச ரித்திரத்தின் பெருமையினை யறிந்து
சொல்லவும் என்னு லாகுமோ (தொண்டர்)

அநுபல்லவி.

எண்டிசையுறும் ஜீவர்தமை யாட்கொண்ட பரனூர்
ஏகவத்துவென் றெண்ணி யேற்றியுயர் திறனூர்(தொண்டர்)

சரணங்கள்.

மிக வொளிரு முருத்தி ராக்க மணிந்ததிரு
மேனி நீறும்போல் மண்மொத்திடுவார்
திகழ்வுறுந் தமதுளந் தெளிவுற வுலகைத்தந்
தேசுறு விளக்கி வைத்திடுவார்
வகையிலா தைம்பூதங்கள் மாறிக் கலங்கினாலும்
மங்கையோர் பாகமவைப்பார் மலரடியை மேன்மேலும்
மகிமை யொடுதுதிக்கு வழியுற்றிடு மெக்காலும்
மருவுங் குணக்குன் றெனமதிக்கப்பெருமையேலும் (தொ)

ஆக்கமும நாசமும் அலைத் திருவடைந்தும்
அவணுற செம்பொனை யோடோடு போலவே
நோக்கியும் கூம்பிட லைறிவீடு விரும்பா
றுண்மைறி மவாடுறுவர் சாலவே
வாய்மொழுங் கடைப்பிடிக்கையே மருவுமாரமதாக
மன்னுங் கந்தையே யாடையாக யணிவேகர்
தீரகமா யீசாடணி சிறகரும பாரமாகவே
சிந்தையை யாயவனை மேலவுந் திருமே யோசர் (தொண்)

தொண்டா.

சிற்றம் பலத்தரைச் சேவித்து நந்தையர்
வெற்றிபெறும் வேடமேயாம வேண்டியவா — றுற்றிடுவார்
நிலைத்துயரு தொண்டரிசை யேனை யறியாதன
றென்றுவந்த மங்குசொல்லு மேன.

திருக்கூட்டச் சிறப்பு முற்றிற்று.

வெண்பா	௨	பதம்	௧
லைவாய்	௧	ஆர்யா	௧

ஆக ௫

கடவுள் வாழ்த்து முதல் இதுவரையில் வந்த
உருப்படிகள் [illegible]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலைச் சிறப்பு.

தடுத்தாட்கொண்ட புராணமாகிய

❀ சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்.

லாவணி—இராகம் இந்துஸ்தானி காபி. தாளம்-ஆதி

ஸங்கீபாகவும் பாடலாம்.

க. திருவுயர் கயிலைமூவ் வுலகும்நான் மறைகளும்
(*) செயுந்தவத் திரள்போலும்
மருவுபல் தலங்கள்செந் தளிரென வுலகினும்
வல்லிமென் மலர்போலும்

உ. (§) விளங்கும் வேதகீ தங்களுங் கந்தருவர்
வீணையி சைகளும்
துளங்கிய காசெதிர் (+) தானமாக் களொலிதுந்
தூபியின்வி நோதங்களும்

௩. வணங்கிடு மமரர்கள் முடிகள்மா லைகள்மந்
தாரநன் மாலை களும்
கணங்கொள்மு னிவர்களஞ் சலிமா லைகளும்பொற்
கற்பகச் சோலை களும்

௪. புகழுந் தேவர்நிலை வேண்டிடி லைம்பெரும்
பூதங்க ளையும்நாட் டும்
நிகழுமம் மலைப்பெரும் (‡) பூதங்கள் பாடியின்
னிமிர்ந்துயர் சதிகாட் டும்

---

* தவங்களாலாகிய புண்ணியத்திரள் § நாதங்களும், விநோதங்களும், மாலைகளும், சோலைகளும், அம்மலையின்கண் விளங்குமெனப் பொருள்கொள்க † மதம் பிடித்த யானைகள் ‡ பூதங்கள், நாட்டும், காட்டுமென்று முடித்துக்கொள்க

௫. அரம்பைய ராடலு முழவுட னெதிரெதி
ரருவியின் முழக்கங்க ளும்
நிரந்தரம் பூமல ரேந்திச்சோ பானவழி
நிர்ஜரர் பழக்கங்க ளும்

௬. துலங்கிடும் நாரதர் தும்புரு வீணையிற்
றுண்ணெனும் நாதங்க ளும்
இலங்கிடு முரகர்கின் னரர்ஸித்தர் கேசரர்
ஏனைய மோதங்க ளும்

௭. கற்பகத் தருவால் வாலங்கட் காயக
கங்கைய ருவிபா யும்
பற்பல விண்ணவர் மாதரு டலமதிற் (௦)
படிந்துப டிந்துதோ யும்

௮. வேதன்மு தலாயவிண் ணவர்முந்தற் கோபுரம்
விளங்குவா யிற்றடை யார்
ஆதி (||) யாயநந்தி தேவர்வேத் திரப்படை
யாரனபர்க கருட்கொடை யார

௯. சாதியி லுயர்தேவ சாதியர் நந்திதேவர்
சாதிகண் டுவெருவு வார்
பாதிம திசசடைமுக கண்ணொரு நான்குபுயர்
பககங்க ளிடமருவு வார

௧௦. வெள்ளிவ ரையிற்றூவர் மரகதக் கொடியென
விளங்குஞ்சி வமுஞ்சிவை யும்
ஒளிய ரதநகைப் டத்துவி ருந்தருளா
லுதவியண டங்களெவை யும

௧௧. காக்குங் கருணைவிழி நோக்குமு நிவர
ரஹரவெனு மோசைக ளும
ஆகக்குநகை லபலை யதன்னபெ ருமைசொல்
லரவர வாசைகொ ளும

---

௦ அக்கங்கையில் || நந்தி தேவருள்ளார். என முடித்துக்கொள்க

விருத்தம்.

இக்கயிலை மருங்கிருக்கு மிருடிகளப் பாற
றிடுமுபமன் னியரிருக்க
மிக்கபதி னுயிரஞ்சூ ரியர்போலோர்
கதிர்தோன்ற விளங்குநம்பி
தெக்கிணத்திற் புகுதலறிந் திறைஞ்சிமுநி
யத்திசைபார்த் தெழுதனோக்கி
(/) யக்கரடி யலதுபணி யீரிதென்னென
றிடுமுனிவர்க் கறைகு வாரே

இராகம்—தோடி. தாளம்-சாப்பு பஞ்சசாமரமாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

௧. எந்தையடிமலர்க் கன்புபொருந்தும் லைந்தரர் செங்கின்
றுரென்றுர் சுந்தரர்க் கிந்த மகிமை
வந்த தெந்தவிதமிங் கறைகென் றுர்

௨. வெள்ளி மலையில் ரத்னபீட மேவி
யரனு மிலங்கி னுர் ஒள்ளியவெண்
ணீறு மாலை யோடு சுந்தரர் துலங்கினுர்

௩. அலகில் புகழ்ச்சுந் தரரு போர்நா
ளாலோடு மிலகும்
மலர்கள் கொய்யச் சென்ற போதில்
மன்னு மெந்த வுலகும்

௪. பெற்ற ருள்ஜக தம்பி கைக்கன்பு
பெருகி டுந்தொண்டி னுலே
நற்றவவநிந் திகை மலினி நங்கை யருமுன் னுலே

௫. நந்த வனத்திற் புக்கு மலர்கள்
நயமொடு மவர் கொய்ய
சுந்தர ரந்த நங்கைய ரெதிரில் தோன்றி நோக்கினர் பைய

/ சிவபெருமான்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

௬. தென்றிசைமிகு பாக்கியம்பெறத்
திருத்தொண்டத்தொகை பாட
அன்று ஸுந்தரமூர்த்தி யன்பரசமுமவர்பால் நாட

௭. அறிவு தடுக்க வவரு மப்படி யாகி
யவர்முன் சார்ந்தனர்
நறுமலருடனரன்லங் நிதிமுன் நண்ணிச்
சுந்தரர் சேர்ந்தனர்

௮ ஈசனறிந்துலீலை போல யிலங்கும் ஸுந்தர மருளினால்
ஆசை மாகர் பால்விடுத்தனை யதனாற்
றென்றிசைக் கருளினால்

௯. சென்று மாதரைத் தோய்ந்தின் பம்பெற
திடுமென வீசன் புகன்றிட
அன்று ஸுந்தரர் மயங்கி வணங்கி
அரனே பவம்விட்டகன்றிடச்

௧௦. செய்து தடுத்தாட் கொண்டருளெனச்
செப்ப வரனு மிணங்கியே
செய்து வமர்ந்த விதமெனவன்பர் சென்றனர்
மிகவணங்கியே

விருத்தம்.

* திருக்கைபிலை நிகர்த்தவர்பாற் செலவிடுக்கா
வகத்தர்வசித் திருக்குந் தூய்ய
திருக்கையிலை யரனருளால் முனைப்பாடி
நாட்டில்மிகக் கித்திக் கும்மா
திருக்கையிலைச் சிறைக்கிளைசொற் றிருநாவ
லூரிலரன் சொன்னகான் பூசித்
திருக்கையிலை யமிரா சிறைகைமனைக்
குலக்கினில்வந் தாதிக்காரன்றே

---

* முதலடியில் திருக்த அயிலை என்றும் 2வது அடியில் திருக்கைலை என்றும் 3வது அடியில் ஆதிரிக்கை இலை யென்றும் 4வது அடியில் பூசித்திருக்கையில் ஐயமில் ஆதி யென்றும் பிரித்துக் கொள்க.

பதம். இராகம்—தோடி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

சுந்தரரவ தார மேநேரே வந்ததைக் கேட்பீர் முனிவோரே.
(சுந்தரர்)

அநுபல்லவி.

சந்திர சூடர் கருணைசலத் தழைக்கவன்பு விளைக்கு மாலால
(சுந்தரர்)

சரணங்கள்.

க. செந்திரு மகள் தினமும் வளருஞ்
செழுந் திரு முனைப் பாடி-நாட்டில்
திருமா மறையா கமங்களாற்சிவ பெருமா
னைத்துதித்துப் பாடி-வாழும்
அந்தண ரெல்லாஞ் சிந்தைமகிழ வந்துதிதமும் நாடி-மிகும்
ஆவ லூரிட மேவி யேதொழ யாவ
ருப்புகழ் நாவ லூரினில் (சுந்தரர்)

உ. மங்கை யுமையாள் பங்கற் குவழி
வழியாய்த் தொண்டு புரியத்
துங்க மிகுமந் தணர்கு லத்தினிற்
றுலங்கு மெய்ப்புகழ் விரியத்
தங்குஞ் சடைய ஞர்க்கன் புசெயத் தன்ம
னத்ததி பிரிய-மோடு
தழைக்கும் நாளிற் றிளைக்கு நற்றவச் சசிநேர்முக விசை
ஞாநியர் வயின் மேவிநன் னயமாகவே (சுந்தரர்)

௩. வைதிகஞ் சைவ நெறியும் விளங்க
வன் கலி பறந் தோட—யிந்த
வையகத்து மன்னுயிர்கள் சிறக்க
வானவர்கள் கொண் டாட

செய்ய வடியர் சிவபெ ருமான்றன்
　திருவரு ளென்ன நாட—யாருஞ்
சிந்தை மகிழுச் சந்த்ர பிம்பமபோல்
　தேகப்பிரபை மிகவு மொளிர
மாகத் தவர் மனசு குளிரச் (சுந்தரர்)

ஸவாய். இராகம்—குறிஞ்சி. தாளம்—அடதாளசாப்பு.

௧. வெம்புமப யிர்க்கொரு மேகம்பொ ழிந்தென
　நம்புஞ்ச டையனார் துன்பத்தை மாற்றி
எம்பிரான் றண்ணளி யென்னவ ருஞ்சேய்க்கு
　நம்பியா ரூராரம் நாமமுஞ் சாற்றி

௨. நீடிய கற்சுட்டி நெற்றியி லாட
　நிறைமணி சூழுபப்ர பையெங்கும் நாட
ஆடிக்குள தோன்றிய தென்னக்கு ழைகளென்
　னையாக போலப்ர பைக்குள்நி னாட

௩. ஐம்படை மார்பிற்ற தும்பிடச் செம்பொன்
　னரைஞா ணிடையின மிளிர்ந்திடப் பூட்டிச்
செம்பொறச தங்கைக ளீரெனத் தாள்கள்
　சிறந்திட மாட்டியின சொற்கள்பா ராட்டி

௪. பூழிபெ றந்திரு மேனிதி கழ்சிறு
　புத்ரர்க ளோடும றுகிடை போடி
ஆழிபெ றுஞ்சிறு தேருருட் டிவிளை
　யாடிக்கொண் டாடியங் நாளினிற்கூடி

இராகம். சென்ஸ்ஜுட்டி. தாளம்—ரூபகசாப்பு.

பஞ்ச சாமரமாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

௧. நாளுமர்தநா டாளும் வேந்தரோர் நாள்மறுகினிலே
யாளுஞ் சிறிய டவனி வருப்போ தலித்தங் கருகிலே-விளை

௨. யாடும்பிள்ளைக ளோடு மையராங் கார்ந்த நிலைகண்டார்
தேடும் நிதியம் போலக் காதலாற் சிந்தை மிகக்கொண்டார்

௩. நரசிங்கமுனை யாரெ னுமந்த ராஜர் நாடினார்—அணிக்
கரசிங் கமர்ந்த தெனச்ச டையனார் அருகிற் கூடினார்—மெத்த

௪. வேண்டி யிரந்து மதலை யைக்கொடு மிளிர்மனைக்குட் சென்றார்—அந்த
ஆண்ட கைகிடைத் தலின்பே ரின்பக்க டலின்மு ழுகிநின் றார்—அர

௫. அரிமைக் குமரர் போல வளர்க்கப் பெருமை சாலவே
அருமறையோர் குலத்திற் கொத்த வுரிமை யேலவே-மிக

௬. நலஞ்செய் பல்கலை பயிலச் செய்துப நயனம் புரிவித் தார்—முதற்
குலந்த னக்கிசை மறைப்ப யிற்சியுங் கூடத் தெரிவித் தார்

௭. கற்று ணர்ந்திட மணப்ப ருவமுங் காண நோக்கினார்
முற்றும் பிரியங் கனிந்து பேரின்ப முதிரத் தேக்கினார்

௮. சடைய னார்மர பினுக்கொத் தபுத்தூர்ச் சடங்க விமறை யோர்
உடைய சுதையைப் பெரியோ ராற்கேட்பித் தொப்ப வுமிறையோர்

௯. மகிழ்ந்தி டச்சடை யவருங் கேட்டு வந்து மனநேர்ப்ப
புகழ்ந்து மணத்தி னோலை விடுப்பப் பொருந்தும் பந்தர் மொய்ப்பப்

௧௦. பந்தர் யாவரும் வந்து நன்முளைப் பாலி கைதெளிக்க
தந்தை மகிழ்ந்து மணத்திற் கிசைந்த தைச்செய் துகளிக்க

ஸவாய். இராகம்—குறிஞ்சி. தாளம்—அடதாளசாப்பு.

க. நம்பியா ரூராருக் கின்பம்பெ ருகந லங்கொள்மன்
றல்முதல் நாளினி லிங்கே
செம்பொன்ம ணிக்கங்க ணங்கையிற் பூட்டிவாத்
தியங்கள்மு ழங்கமு றைப்படி யங்கே

உ. செய்வன செய்திர வும்விடிந் தபின்பு
செய்யம றையவர் யாவருங் கூடி
யுய்வன வெண்ணிவை யர்திரு மேனிதொட்
டுப்ரிய மாய்மகி ழ்ப்பணி நாடி

௩. துய்யம ணியாத னத்திலி ருத்தித் துகளற்ப
ரிமள மஞ்சன மாட்டி
மெய்யிற்க னகத்து கிலினைச் சாத்திமி
குபணி னீர்கர்ப்பூ ரவிரை சேர்த்தி

௪. நறுஞ்சந்தம் பூசிச்சவ் வாதிட்டுய் யர்கைவி
ரற்கணை யாழியிட் டுக்கனி வாக
வுறுங்கதி ராபர ணங்களைப் பூட்டி யுவந்தனர்
மேனிபு ளகிதராக

விருத்தம்.

திருமணக்கோ லஞ்செய்து தங்களின்வை
திகத்திருவு மன்னவர்கள் திருவுமேவ
வரியவா கனங்கள்மிசைப் பல்பேர்செல்ல
வுற்றிடுமங் களவாத்யங் களுமுழங்கத்
தெரியமட வார்வாழ்த்தத் திருநீறிட்டுச்
சிவபெருமான் றனையுன்னிப் பரிமீதேறிப்
பெரியபுத்தூர் செலநகரோ ரெதிர்கண்டேத்திப்
பெண்களவ ரணிநோக்கிப் பேசுவாரே

இராகம்—கல்யாணி. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

க. குதிரைமீ தேறிவருஞ் சதுரன்ப வனிகாணக்
குதித்துக்கொண் டோடிவந்தார் சிலமாதர்
எதிரிலாத விவ னணிமது வுண்ணவிழி யிரண்*டளிபோ
துமோவென்டார் சிலமாதர்

உ. அச்சிற் பதித்ததென வவயவத் தொன்றுமன
மதுதிரும் பவில்லையென்பார் சிலமாதர்
மெய்ச்சும வயவங்கள் பார்க்க வனந் தன்மனமும்
விழிகளும் வேணுமெனடார் சிலமாதர்

௩. பெண்ணுரு வமெடுத்தாற் சடங்கவி பெற்றபெண் போற்
பெருந்தவம் வேணுமென்டார் சிலமாதர்
கண்ணிணை படைத்ததற் கிவன்டவ னியின்றிருக்
காட்சியே பலனெனடார் சிலமாதர்

௪. §அணிக்கணி யாகவெண்ணி யணிகளை யெல்லாமேனிக்
கணியச்செய் தனனென்பார் சிலமாதர்
கணிக்கவ சமோசடங் கவிசுதை பெருமையைக்
கண்டுகொண்டு பார்ப்போமென்பார் சிலமாதர்

௫. உருவிலி யெனுங்குறை தீர்க்கத்த வத்திற்பெற்ற
‡வுரஸிஜ னிவனெனன்பார் சிலமாதர்
மருவு லாவுமிந்த வையகம் பெற்றபெரு
வாழ்விவ னேயென்பார் சிலமாதர்

௬. அய்யன ருளிரேக்கின் வெள்ளத்தின் மூழ்கித்திரிந்
தலைந்தோமென பார்சில மின்னார்கள்
செய்யப ரியுடபபாற் பரிவுடன மெல்லமெல்லச்
செல்லுமெனச சொல்வர்சில மின்னார்கள்

---

*கண்களாகியவண்டுகள், §ஆபரணங்களுக்கு அழகாகும்படி, ‡மன்மதன்

௭. ஆடியினை மைந்தவுரு வோவிவன் மேனிக்குண
மமையவந் தோணுதென்பார் சிலமாதர்
போடியிவன் தேவன்சாப காரணத்தா லிவ்வுருவாய்ப்
போந்தனன்போற் காணுதென்பார் சிலமாதர்

௮. பேரழ காலுயருஞ் சடங்கவி பெண்மேலிவர்
பிரியமென் பார்சில மடவியர்கள்
பேரார்ம ணந்தபுத்தூர்க் கென்றிவ்வூர்க் கிட்டவனைப்
பிரியம் பிரியமென்றார் மடவியர்கள்.

விருத்தம்.

வருபாத ரிவையுரைக்க மறையோ ராசீர்
வதிக்கப்பா லிகையேந்திப் பலபேர் பாடத்
தருமாம லர்கள்வீச வியங்க ளார்ப்பச்
சடங்கவிதம் மனையிலெழுந் தருளிப் புக்கத்
திருமாது குலவுமணப் பந்தருக்குட் செயுங்கலியா
ணச்சடங்கைத் தொடங்கும் போதங்
கொருமாதோர் பங்கினர்வே தியராய்வந்த தோதுவே
னிருவினையைக் காது வேனே

பதம். இராகம்—சங்கராபரணம். தாளம்—திருபுடை.

பல்லவி.

ஈசரெ ழுந்தருளி னார் வே தியர்போல்முதிர்
வடிவாய் மகிழ்ஜக தீசர்

அநுபல்லவி.

நேசரி டத்துக்கயி லாசத்து ரைத்தபடி
நித்தியா நுக்கிரகவாரிமலர்த டித்
தாளக் கிழவுரு வொடுமகிழ்ந் தீசர்

சரணங்கள்

௧. நயனமறைத்தொளிர் லலாடமதிற் றிருநீ
றுயர்மதி யொளிவீச
நிலவுசரிந்தென நறைமுடிவிழமிகு-நயமார்குழைகள் மூச
வியனார்கண் டிகைதொங்கி விளங்குமு சல்போலாட
வீட்சித்தருள் பெருகிடமணியுருத் திராட்சப்பணி
யிலகிட விரைவொடும் (ஈசர்)

௨. நீளவசைந்திடுமுந் நாலூரத் திலசையத்
தோளுருத்தரியமாடச்—சிர
மணிவார்கர மதிமேலொருகுடை—வாளுற்று வெயில் மூட
ஆளுற்ற வண்டங்களை அளித்தார் பண்டிசரிய
வணியார்பழ மறைகோவணமென வதன்மேல்நழு
வுடைசூழ் தரவர (ஈசர்)

௩. வெண்டுகி லுடன்குசை கொண்டுமு டிந்தவேணு
தண்டமொ ருகையிலங்கத்—தளர்
நடையால்வழி கடுமாறிடவரக்
கண்டோர் கள்*கிலங்க
அண்டுபேரணி முதிர்ந்த தோவம்மு திர்ச்சிப்படி
வந்தானோ வைதிகம் அருள்முதல்
வன்றானோ வந்தானெனச்சொல (ஈசர்)

விருத்தம்.

பந்தரிடை வந்தமறை யோர்மணச்ச பைக்குட்சென்
றிந்தமொழி பகரக் கேண்மின்
சுந்தரனோ டொருவழக்குண் டென்னவெங்கள்
தொன்றுள்ளோர் தவம் பழுத்து வந்தாற்போலும்
வந்தமுது மறையவரே யுரைப்பீர்கேட்டு வகையுரைத்துப்
பின்புமண மியற்றுவேனென்
றந்தவிடத் துரைக்கவன்ப ருருகுநெஞ்சக் கச்சன்றா
ரிந்தவழக் கைச்சொன் னாரே

---

* விலக

பதம். இராகம்—செஞ்ஜுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

அடியா னென்றார் ‡அணிவிழி யென்றாரப் (அடியானென்றார்)

அநுபல்லவி.

கடிமணத் தினிலங் காரச்சுந் தரன்நம் (அடியானென்றார்).

சரணங்கள்.

க. பூந்தவ ளையும்பொற்பூ வாழ்தேவ னையும்பத
மீதேவ ணங்கச்செய்யும் மாதேவர் வந்துநம (அடியானென்றார்).

உ. சைவம்பெ ருகிப்போகப் பொய்வன்ம தங்களேங்கத்
தெய்வசி றப்பும்பாங்காய்ச் சிறக்கக்க லியேங்கத்தம் (அடியானென்றார்)

ங. நேரூர்மூன் று*மடர்த்த கூரார்வி ழியுடைய
ஓரூர்பெ ருமானிந்த வாரூர னுனுநமக் (கடியானென்றார்)

ச. ○ வேதனைவ யின்சிக்காமல் வேதனைவ யின் மிக்காமல்
வாதனையெ னைமூசாமல் வந்தருளி றைகூசாமல் (அடியான்

ரு. இறையள வும்பொய்யில்லை யினிதாய்நம் புமெய்சொல்லை
மறையவ ரேவீண்கல்லை வாராமற் செய்யுந்தொல்லை (யடியானென்றார்)

ஸவாய்.

க. வேதிய ரிவ்வண்ண மோதிய சேதியைக்
காதினில் யாதுங்கொள ளாதிவர் நேரே

---

‡சூரியனை யழகிய விழியாகக் கொண்டார்

* நேராக வெதிர்த்த திரிபுர மூன்றையும்.

○ வேதனை × அனை × வயின் சிக்காமல் = துன்பம் பொருந்திய தாயின் கர்ப்பத்தில் சிக்காமல், வேதனை = துன்பமானது வயின் மிக்காமல் = தன்னிடத்தில் மிகாமல்

யாதுக ருதியிப் போதிது சேதிந டக்கமின்
றிச்சொல்து டுக்கனென் பாரே

௨. சிலர்மருண் டார்கள் சிலர்வெருண் டார்கள்
சிலர்வெருண் டார்கள் சிலர்பகைத் தாரே
உலருஞ்சென் னுவின ராகிச்சி லர்வசை
யோதிட வாரூர ரும்நகைத தாரே

ஆர்யா.

அய்யர்சி ரித்திட் நண்ணி
யாட்கொள் வான்வந்தவே தியருமெண்ணி
துய்யவர் வெகுளுற நேரே
சோதித்திடவந் தமாத வர்சொல்வாரே.

ஸவாய்.

௧. வாளாயு தம்போல்மூன் னுளினுன் பாட்டன்நல்
§காளோலை யீதுபா ராரூர னே
காளாய றிந்திலை யேனுமிங் குசிரிக்
கத்தகு மோநம்பி யாரூர னே

௨. வேதிய னுக்கொரு வேதிய னுட்புகும்
விந்தைகண் டதில்லை வேதியனே
ஒதிய சேதிநன் றீதுசொன் னைப்பித்த
னேகுறி யாக்கிழ வேதியனே

௩. என்னைநீ பித்தனென் றும்பெரும் பேயனென்
றும்பழிக் கின்றனை யாரூரனே
பன்னும்வ ழக்கில்வெட் கம்வரு மோசொற்
பனத்தும்வி டேனம்பி யாரூரனே

௪. இத்தனைக் குமென்னைச் சற்றும றிந்திலை
யேனும்பெ ருந்தகை யாரூரனே

§ ஆளோலை. அடிமைச் சீட்டு.

மெத்தப்பே சவேண்டா முனையேவல் கொள்ளாமல்
விடுவதில் லைநம்பி யாரூரனே

௬ எந்தவு லகினுலு மில்லாவ ழக்கஞ்சொல்லி
யேபரி கஸித்தனை வேதியனே
அந்தப்ப டிக்குலல் லாதா வுளதெனி
லறைத்து லக்கலாங்கிழ வேதியனே

௭. ஆதா வைப்பார்க்க நீசத்த ஞெசபை
யதனுள்ளோர் பார்க்கத் தென் ஞூரனே
வாதில்லா மலுமிப் போதேநமக்கடி
மைநிச்ச யமாநம்பி யாரூரனே.

விருத்தம்.

பித்தர்வடி வினையாராய்ந் துணரும் போதென்
பினையுருக்கு மெனினுமவர் கடுஞ்சொற் கண்டு
மெத்தவும்வெ குளிகிளைக்க நம்பிவந்த
வேதியரைத் தொடர்ந்துமுறி கிழிக்கச் செல்லத்
தத்திமெல மெலவோட விரைந்துபற்றித்
தாழாதோ லையைப்பறித்துக் கிழிக்க வெங்கள்
அத்தரெனு மறையவர்கூக் குரலை யிட்டங்
காவென்பா ரிதுவுமுறை யோவென்பாரே.

பதம். இராகம்—சென்ஸுருட்டி தாளம்—ஆதி.

பல்லவி.

முறையோ வெனப்பெருங் கூக்குர லிட்டார்
வேத முறையிட்டார் முறை (முறை)

அநுபல்லவி.

மறையோர் சபைக்குட் சிவனே யென்று வந்த
வெனைமணச் சுந்தரன் செய்தது (முறை)

சரணங்கள்.

௩. கூட்டத்தின் வந்தவென்மேற் சேட்டித்த னிவன் றன்
பாட்டனெ மூதடிமைச் சீட்டைக்கி ழித்தனவும் (மூறை)

௨. ஆதர வைக்கிழித்த பாதர வைச்சகிக்க
வேதர§ மோவிது வோதர௯ மோவென்று (முறைபோ)

௩. துடித்துக்கொண் டுவந்தென்னை யடித்துக்கி ழித்தா னென்'
னக்
கடுத்துச்சுந் தரர்கையைப் பிடித்துக்கொண் டினுநல்ல
(முறைபோ)

௪. *எருத்தப்ப ருவமையில் விருத்தப்ப ருவங்கண்டும்
வருத்தப்ப டுத்துநம்பி கருத்திப்ப டித்தானல் (முறைபோ)

விருத்தம்.

அடுத்தவரெல் லாங்கலகத் தினைத்த டுத்தந்
கையரைப்பார்த் துப்பொருந்தா வழக்கைச் சொன்னீர்
தொடுத்துமது ரெவ்வூர்சொன் னீரென வந்த
தொன்மறையோர் வெண்ணெய்நல்லூரெனவு மென்கைப்
படுத்தவடி மைக்குறிப்பைக் கிழித்த தாலிப்
படியடிமை யெனப்பழமன் றுடிபோவென்
றெடுத்துநம்பி யிதனையுன்னூர்க் குரைப்பா யென்ன
வேகினர் கடுங்கோப மாகினரே

பதம். இராகம்—சகானா தாளம்—ஆதி.

பல்லவி.

வெண்ணெய் நல்லூர்க் கேகினர் ० தொண்டர்
கண்ணன் பாகினர்-திரு (வெண்)

---

§ தரம்—உயர்வு. ௯ தரம்—வீரம். * எருத்து அப்பர்-இடபத்தை யுடைய சிவபிரான். ० தொண்டர்களிடத்து அன்பானர்.

அநுபல்லவி.

அண்ண லெனும்நம்பி யாரூ ரரைத்தடுத்
தாட்கொள வெண்ணிமன் றல் நாள்தின நண்ணித்திரு
[வெண்ணெய்

சரணங்கள்.

க. சிந்தை கறுத்துமிகச் செல்கின்றாய் மிகநன் று
என்தன்ம னத்தின்படி யேமுடிக் கிறேனென் று
(வெண்ணெய்)

உ. ○ அங்கோ லத்தின்வித்த தன்மரத் தண்ணலென
நன்கோ லத்துநம்பி நாடித்தொ டர்ந்துவர (வெண்ணெய்

௩. எப்படிக் காமிதனைப் பார்ப்போமென் || றுற்றார்
ஒப்பிப்பின் செலத்தடி யூன்றி யன்பருக்குற்றார் (வெண்

விருத்தம்.

அதிவிரைவிற் சென்றவ்வூர்ச் சபையினுட்புக்
காங்குநடந் ததைநாத ரூரைக்க மண்ணில்
விதிநடக்கா வழக்குரைத்தீ ரெனஹுஞ் சங்க
மெச்சுவழக் கொடுமதித்து வந்தோ முன்போர்
ததியிலிந்த நம்பியின்மூ தாதையாற்றந்
தவழியடி மைச்சீட்டைக் கிழித்தா னிந்த
மதிமுறையோ வெனமன்றல் புரியவந்த
வரைப்பார்த்திங் கிந்தமொழி யுரைப்பார் தாமே.

அபங்து.

க. காட்டு முறிகிழிக்கப் போமோ—வதில்
நாட்டும் ஜயமுமக்குண் டாமோ—வெனக்

○ அங்கோலம்-எறழிஞ்சி விருட்சம், அதன் விதை ஷை மரத்தில் தானகப்பற்றிக் கொள்ளுதல் இயல்பு. || உறவினர்.

கேட்டிடு மறையவர் நேரே—நன்றாய்க்
விளத்தல்செய் வார்நம்பி யாரே

உ. தலைமுறை தலைமுறையாக—வாதி
சைவ ரென்னமுன் பாக
நிலைபெறத் தெரிந்தவர் நீரே—நன்
னீதியொடும் விசாரிப்பீரே-என்று

ந. நம்பி யாருமுரை செய்ய—வந்த
ணரைப்பார்த் தவையுளோர் பைய
நம்புமத் தாட்சியும் மாலே—காட்டி
நம்பிக் குரைத்திடுவோ மேலே

ச. ஓலை காட்டிலின்னங் கிழிப்பான்—அறிந்
துஞ்செய்தி டில்நம்மைப் பழிப்பான்-பின்பு
மூலசா ஸனம்வேறு முண்டு—காட்டில்
முரணுட னேதிண்டு மிண்டு

ரு. செய்யாதி ருக்கச்செய் வீரா—வெனச்
செப்பவு மிசைந்திட நேராய்
ஐயர் வைக்கச்சபையோ ரெடுத்துக்—கர்ணன்
அஸ்தம தனிலொப்பிக் கொடுத்து

சு. படிப்பா யெனவவன் வணங்கி—வாங்கிப்
பக்தி யுடனேமிக விணங்கி
* வடிப்ப மாகவா சிப்பான்—சபையோர்
மனமுங் கூர்ந்துயோ சிப்பார்

எ. நாவலூ ராதிசைவ னாரூரன்—வெண்ணெய்
நல்லூர்ப் பித்தற்கு † நான்மகன் பேரன்—தாங்கள்
ஏவியப டிக்குவழி வழியாய்த்—தொண்
டியற்றுவோ மென்றுமுறையின் வழியாய்—இந்த

* அழகு. † நான், மகன், பேரன் முதலானவர்கள்

௮. முறியென் ஸ்வஹஸ்தலி கிதமென—பாரு
மறியவா சிக்கமிகு கவன-மொடு

செறியுடன் மேலெழுத் திட்டார்—பார்க்கில்
நிசமா யுளதென் றுரை யிட்டார்

௯. பெருஞ்சபை யோர்நம்பி யாரைப்—பார்த்துப்
பேரெழுத்தோ சொல்வீர் நேரே-யென

வருந்தீரர் சொல்வர்ஸுந் தானே—சீட்டை
வாங்கிப் பார்த்திடவுந் தானே

௧௦. நீங்கள்பார்த் துரைப்பீ ரென்றார்—முன்
னெழுத்துடன் தோதிடுவீர் நன்றாய்-என்ன

ஆங்கவர் தோதிட்டுப் பார்த்தார்—நிச
மாயிருந் திடநடுத் தீர்த்தார்

௧௧. தோல்விய டைந்தீர்நம்பி யாரே—ஐயர்
சொன்ன ஏவல்கேட் பீரே-யென்று

மேவுஞ்ச பையோர் சொல்லக் கேட்டார்—முன்னம்
விதித்தறி துவென்றெண்ணிப் போட்டார்

௧௨. ஆறி வன்னமுறி போராய்த்—தடுத்தாட்
கொள்வோ ரைநோக்கி நேராய்

ஓதுவர் பெருஞ்சபை யோரே—மன
முருகும் வெண் ணையனை யாரே.

விருத்தம்.

வேதியரே யெமதுமுன்பும் மாலே காட்டும்
வியன்சிட்டிவ் வூருமக்கென் றதிற்காட் டிற்றென்

றோதுமனை நிலமெங்கே யெனதுமெம்மை
யொருவருநீ ரறியீரேல் வாலா மென்றப்

போதுமறை யவரோடுநம் பியும்பின்போதப்
பொருந்துமருட் டுறைக்கோயிற் புகுந்தா ரையர்
எதிடஞ்சென் றுரெனவே திகைத்தா ரப்போ
தெம்பிரா னருள்செய்தார் நம்பி யார்க்கே.

பதம். இராகம்—கல்யாணி. தாளம்—ஏகம்.

பல்லவி.

அருள்செய் தனர்நம்பி யாரூர ருக்கு நம்பி. (அருள்)

அநுபல்லவி.

தெருளும் வேதியர் கோயிற் புகுந்தவர்க் காணேமென்று
திகைத்தவரைத் தனியே அழைத் துமையொடு
[விடைமேனின் (றருள்)

சரணங்கள்.

க. நமக்குநீ தொண்டன் முன்பு நங்கையர் மோகத்தாலே
யிமைக்குமுன் மண்ணிற்பிறந் திடேனுநம் மேவலாலே
அமைத்திடு முனைத்தடுத் தாட்கொள்வோ மென்றன்பாலே
சமைத்தப டிக்குமுன்பாலே—வந்தாண்டோமென்று
மறைபோலே (அருள்)

உ. ஈசரருளுந்திரு வாக்கிரு செவியேற
ஈன்றப சுக்குரற்கேட் டிடுங்கன்றெ னவன்பூற
ஆசைதி கழம்பலத் ததிபரே யின்பமீற
அன்பர்ம கிமைபேற—மனத் தாவலெலாம் நிறைவேற (அ)

ந. வானிற்பஞ் சதுந்துபி மகிழ்ந்தெங்கும் கோஷிக்க
மலர்மழை பொழிந்தண்டர் மனங்கள்ஸந் தோஷிக்க
மாநிலத் தினிலுந்தம் முடனேஸம் பாஷிக்க
வருமன்பர் தமையங்குபோ—லிங்கு மகிழ்ந்து போஷிக்க
[மிக (அருள்)

○ திருவெண்ணெய் நல்லூர்க் கோயில் கர்ப்பக் கிரகம்.

௪. நம்மையும் வன்மைபேசி யதனுல்வன் றெண்டனென்று
நாமமுற் றுநமக்கு நேமவர்ச் சனையென்று
செம்மைபெ றுந்தமிழாற் பாடித்து திப்பாய்நன்று
செயும்பே ரின்பமொன்று—நற்கதி யருள்வோ மென
[முன்னின் (றருள்)

விருத்தம்.

கருணைமழை பொழிந்துநம்பர் நமைப்பாடித்
துதியெனலுங் கமலம் பூத்த
வருணமணி யிணையடிக ளினிற்றாழ்ந்து
வணங்கியெழுந் தத்த னேநின்
பெருமையனந் தகுணகெணங் களையுபநி
டதங்களுஞ்செப் பிடவொண் ணாதேற்
றருமவுரு வேயறியே னெவணமுரைப்
பனென நம்பர் சாற்றுவாரே.

ஸவாய்.

௧. ஆதியி லேநமைப் பித்தனென் றுயுத
ஞற்பித்தனென்றடிச் சீரில மைத்தே
ஓதுவை யென்னப்பித் தாபிறை சூடயென்
றுற்றபதிகமி சையோ டிசைத்தே

௨. அன்புடன் பாடிடும் பக்தரை நோக்கியின்
னம்பல்வகையினம் பாடிட நன்றாய்
இன்பம்பெ றுதியெ னவுரைத் துநம
தின்புகழ்;பாட்டினி லேதுதி யென்றார்.

விருத்தம்.

வில்லாரும் பொன்மலையா ரருள்புரியப்
பணிந்துநம்பி விடைமே லுற்ற
நல்லார்மே வருட்டுறையார் திருவெண்ணெய்
நல்லூரின் ஞவ லூர்க்கு

நெல்லாரும் பெரும்பணைசூழ் திருத்துறையூர்க்
குஞ்சென்று நெறியிற் பாடி
மல்லாரும் பலதலங்கள் பணிந்துபுலி
யூர்க்கேக மதித்தா ரன்றே.

ஒவி. இராகம். சென்ஸ்ஜுருட்டி. தாளம்—ஆதி.

க. எண்ணிவழி கூடி யின்பமனம் நாடிப்
பெண்ணைநதி கடந்திடப் பேரிரவி யோடி

உ. மேற்கடலே மேவ வித்தகரு மாவல்
மேற்கொளக் கடிலநதி மேவதிகைத் தேவர்

ங. நன்னகர்ப்பு ரத்தி னுவலூரர் பக்தி
மன்னிய நாவரசுமூ வாரப்படை நத்தி

ச. கைத்தொண்டியல் கொள்ளுநங் கடிநகரென் றுள்ள
பக்தியொடு கால்படப்ப டாதெனவே விள்ளும்

ரு. சித்தர்வட மடமே பக்தர்சென்றவ் விடமே
நித்திரை செய்யநிமலர் நீடுமனத் திடமே

சு. பூண்டகிழ மறையோர் போலவெங்க ளிறையோர்
ஆண்டகை தலைமேற்றாள் வைக்கக் கண்டின்பத்
[துறைவோர்

எ. ஐயரே நும் பாதம் அடியேன்சிர மீதும்
எய்தியதென மூப்பினு லென்றிடவப் போதும்

அ. வேறிடத்தை நாடி வித்தகர்கண் மூடிக்
கூறுந்துயில் கொள்ளமறை கோடியி னந்தேடிக்

கூ. காணுப்பதந் தன்னைக் கட்டழகர் சென்னி
யூணவைத் திடநாவலூர்ப் புனிதரு மென்னை

கo. அடிக்கடிமி திக்கும் ஐயனைம திக்கும்
படிக்குநீர்யார் சொல்லீரெனப் பண்பொடுது திக்கும்

கக. ஐயருமீ யின்ன மறிந்திலையோ வென்னத் துய்யர்மறைந்
திட்டக்கண்டு துணுக்கிட்டிங் கென்ன.

கலித்துறை.

செய்தே னெனத்தெளிந் தன்பர்கண் ணுனந்தத் தெள்ள [முதம்
பெய்தேமெய் யெங்குரு ரோமம் புளகித்தன் பின்பெரு [மைக்
கெய்தேனே யெய்தவைத் தாட்கொண்ட மூர்த்தியி ளுற்ப [வத்தைக்
கொய்தேன்கொய் தேனெனக் கொண்டாடி யேதுதி கூறி [னரே.

பதம். இராகம்—பூரிகல்யாணி. தாளம்—ஆதி.

காலனமனபஸகாலீரேனுவெனு மிந்துஸ்தானி வர்ணமெட்டைப்போல.

பல்லவி.

துதித்தார் மன முருகியெம்பரனைத் (துதித்தார்)

அநு பல்லவி.

மதித்தா ரணி சிவபெரு மானைத் (துதித்தார்)

சரணங்கள்.

௧. தம்மானை யறியாத சாதியாருள ரேயெனப்
பெம்மானைக் குப்பதிகம் பாடித் (துதித்தார்)

௨. தட்சணகங் கையெனச்சொல் உச்சிதக டிலநதி
யிற்சைவம றையோர்மகிழ்ந் தாடித் (துதித்தார்)

௩. நேசமுடனேமனத்தி லாசைமிக வெங்கள்வீரட்
டேசரிரு தாளிணையைப் போற்றித் (துதித்தார்)

ஸவாய்.

௧. துங்கவ திகையி னங்கணரைப் போற்றிப்
பொங்குங்கெ டிலத்திற் றென்கரை நாடி

மங்குல் நிகர்மா வலிபால்மண் யாசித்தி
லங்கிய மால்பணிந் தங்குகொண் டாடி

௨. வழிபட்டி டுந்திரு மாணிகு ழியின்
வரனைப்ப ணிந்துமன மகிழ்ந்தேகிச்
செழிமலர்ச் சோலைத் திருத்தினை நகரிற்
சென்றர னைப்பணிந் தேகிருவாகி

௩. செந்தமி ழாலுய ரும்நீறு தாங்கிய
திருநுத லானையெ னும்பதிகந் தா
னுந்துதித் தேற்றி யுவந்தினின் றோர்கள்க
ளைந்தொழுந் தில்லைம ருங்கணைந் தாற்றார்.

இராகம்—எதுகுலகாம்போதி. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

௧. இனிய பத்தருரம் பூழிப டத்தில்லை
யெல்லையை வணங்கினார்
கனியமு தனையப தவல்நா ஆறிடச்சொல்லுங்
கருத்து மிணங்கினார்

௨. நாகவ குளநாளி கேரம் சலாள
நளிர்முகில் போற்கூடிப்
போகபூ மியிலும் விளங்கும் புறம்பணையிற்
போந்துக டந்துநாடி

௩. வன்னி கொன்றை செருந்தி செண்பகம்
வகுளம் மந்தாரங் கன்னி காரம்
மன்னு ஜாதி முல்லை மல்லிகை சூழ்நந்தா
வனத்தைப் பணிந்திந் நேரம்

௪. தனிநா யகிமகிழ் மறைச்சிலம் பொலியைத்
தாம்பணி மறைநகரைப்-பணிந்
தினிதுபெ றக்கடல் சூழ்ந்தெனு மிஞ்சி
யிடத்தக ழிகண்டாரே

ரு. நடனம் புரிநகை யால்மறைச் சுரும்பறை
நகரகழ் மலர்வண்டே
இடம்வளர் கேதகைச் சுணம்படிந் தன்பர்போ
லிசைக்கும் வண்டுகள் கண்டே

சூ. *மணிநா விசையால் வெண்கொடி யால்நான்
மறைசேர்நான் முகங்களால்
அணிசேர் போதன்போல் விளங்கிய நகருந்
தரவா யில்கண்டனா ரால்.

வெண்பா.

அன்பினடி யார்கணமோ வாரூரி னம்பியரோ
முன்பணிந்தார் யாரோ முறைவணக்கோ—டின்புற்றுக்
‡ கும்பிடுகைத் தொண்டரரு குற்றுவரக் கோயில்கண்டு
† கும்பிடுகைக் கொண்டாரரங் கு.

பதம். இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

வாயிலைக்கண் டுவணங்கி னாரே மறை
வாயிலங்கு மாரூர்நம்பி யாரே-கோபுர (வாயிலை)

அநுபல்லவி.

தாயும்தந்தை யும்போல்ரட்சித் தாயும்ஜக நீசர்நிஜ
தாசரெல்லாம் போற்றும் நடராஜர்வளர் திருக்கோயில் ()

சரணங்கள்.

க ஆரணச்சா லையுமத வாரணச்சா லையுமணித்
தோரணச்சா லகளையுந் தாண்டி—மறை
யந்தணர்மேவ் விச்சாலையு மீண்டிச்-சிற்
றம்பலத்த ரசைத்தொழ வேண்டிச்-சினகர (வாயிலை)

---

* பிரமனுக்கும் சிதம்பரத்திற்கும் சிலேடை. ‡ கூட்டமுள்ள தொண்டர்கள். † கும்பிடுந் தன்மை.

௨. எண்டிசையி லுள்ளவரெல்லாந்திரண் டொன்றாய்வந்த
தென்னவணி சேர்மறுகை நாடிக்—கடந்து
தொண்டர்கள் சூழ்தர வுறவாடி—யெங்க ளண்டர்பிரான்
றிருவடி தேடி-விரைவிலோடி (வாயிலை)

௩. தேவர்களி றைகளும்பின் பூவுலகி லுள்ளசித்தர்
மேவியவன் பர்களெல்லாஞ் சேர்ந்து-செல
வேபிரம்பி னடிகளைத் தோய்ந்து—புகுந்
கோயில்வலம் வந்துகளி கூர்ந்து-திரு (வாயிலை)

விருத்தம்.

பணிந்தெழுந்து சிரமீது குவித்தகைய ராய்ப்பேரம் பலத்தின்
மேவும்
* தணிந்திரவி வலம்புரிமே ருவைமுறையே பிரதக்ஷிணித்துத்.
தான்வணங்கித்
o திணிந்தமறை யாதிமத்தியாந் தத்தன்ப ரகத்தலர்தே
சிலங்கவைக்கண்
டணிந்ததொண்டர் பணிந்துநடே சரைக்கண்டார் தேவாரத்
துரைகண்டாரே

பதம். இராகம்.—ஸ்ரீ. தாளம்.—ரூபகம்.

பல்லவி.

நடரா ஜரைக்கண்டு வந்தித்தார்,ஸ்வரூபா நந்தவொ
ளியைக்கண்டு சிந்தித்தார்-குஞ்சித பாத (நட).

அநுபல்லவி.

திருடபக்தி யில்மிகுந்த சீர்த்தியார் கல்விக் கடலைப்ப
ருகிடும் சுந்தர மூர்த்தியார்-தில்லைத்திரு (நட)

* தணிந்திரவி—தண்-இந்து-இரவி யெனப்பிரித்துக் கொள்க
o நெருங்கிய வேதங்களின்—ஆதி-மத்தி-அந்தங்களிலும் அன்பர்
களுடைய அகங்களிலும் பிரகாசிக்கும் ஒளி விளங்கும் சபையின்
தண் என்று பொருள் கொள்க.

சரணங்கள்.

௧ ஐயறி வுங்கண்களே கொள்ளக்-கர
ணங்கள் நான்குமனசா யுள்ள
மெய்யறி வுறும்ஸத்துவ மாகமுக் குணங்களும்
மேதகு நடனப் பேரின்பம் பெருகிட
நவ நீதமென மனமுநெக்குருகிட (நட)

௨ அமிருத கிரணசந்திர சூடர்—விண்ணோர்
சமுகத்தி ருநடனம் நாடப்—பெற்றுச்
சமையுமிப் பிறவியே வாலிதென் றுநீட
அமையுநான்மறை களுந்துதிகள் பாட
அன் பாவலுடனே மிகவேகொண்டாட (நட)

௩ இதயக மலவிதழ் விரியத் தம
திருகண்கள் பாஷ்பங்கள் சொரிய
மதுநிகர் மடித்தாடு மடிமைக்களன் றியேயென்
றதிகமாகவே மனத்தில்மிகு பிரிய மாகவின்பமு
றநின்று தெரிய (நட)

விருத்தம்.

தடுத்தாட் கொண்ட பெருமான்மேற் சாற்றுந் திருப்பதிகம்பாடி
யெடுத்துத் தொழுது துதித்துநிற்க வினிது மகிழ்ந்து நடராஜர்
தொடுத்த வருளா லாரூரிற் றுலங்கும் நம்பால் வருகவென
வடுத்து வானி லொலிகேட்ட வளவிற் பணிந்தங் கெழுந்தாரே.

இராகம்—சகனா. தாளம்—சாப்பு.

கண்ணிகள்.

௧ ஆநந்த நர்த்தன வரசரு ணாடினார்
மேனிக முப்பணி விடைசிரஞ் சூடினார்

௨ அம்பலஞ் சுற்றிப்பே ரன்பர்வ ணங்கினார்
பின்புமுன் பாய்நடந் தின்பத் திணங்கினார்

௮ பொன்மலை பரம்கோபுர வாயில் கடந்திட்டார்
பன்னிலைச் சிகரியைப் பணிந்து நடந்திட்டார்

௯ வீதியுந் தில்லைமா வெல்லையும் வந்தித்தார்
ஏதமி லீசிரி னையடி சிந்தித்தார்

௰ கொள்ளிடந் தாண்டினார் உள்ளுமன் பீண்டினார்
விள்ளும்பே ரின்பத்தை மிக்கவே வேண்டினார்.

விருத்தம்.

அன்னைதிரு முலைஞானப் பாலயின்றார்
பிறந்தபெற்றி யதனைப் பெற்ற
தென்னமுற்று லகிற்சிறந்த கழுமலமா
நகராருகி லெய்தி முன்னம்
துன்னியசீர்த் திருஞானப் பிள்ளையா
ருதித்தபுரத் துள்தாள் வைத்து
மன்னிடவெண் ணுதெல்லை வலமுற்றுப்
பணியவிறை மகிழ்ந்தா ரன்றே.

ஆர்யா.

இறைமகிழ் வாய்விடை மீதே
யினிதாமெதிர்காட் சிமேவ வருபோதே
நிறைபே ரழகினர் கண்டார்
கரைகா ணுதமயலார்பி றவிவிண்டார்.

பதம். இராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

பல்லவி.

நச ரடிபோற்றினார் மகிழ்ந்தேற்றினார் * ஏற்றினார்(நசரடி)

அநுபல்லவி.

மாசிலா வுமைமாது வாமபா கமருவத்
தேசின்வி டைமேற்பருவ கதிர்கோடிபோ ருவவரும் (நச)

---

* விடையையுடையவர்.

சரணம்.

க. ‡ புகலியா ரெனநம்பு புகலியா ரிடத்தன்பு
மிகவேவைத் தருள்விளம்பு மிசைப்பதி கத்தால்விரும்பு ()
உ. கழுமல வளநகர் கண்டுகொண் டேனேயென்று
வழுவில்ப திகம்பாடியே வன்றொண்ட ரிறைஞ்சிமுன்னின்
(ஸ்ரீசரடி)

வெண்பா.

எழுந்தகையோ டன்ப ரிறைஞ்சக் கருணைக்
கொழுந்தெதிரே காட்சி கொடுத்தங்—கெழுந்தருள
நம்பியாரூர் மேவ நாடுவிருப் பெய்தவெல்லை
கும்பிட்டுச் சென்றாராங் கு.

இராகம்—முகாரி. தாளம்—மிச்ர சாப்பு.

கண்ணிகள்.

க. சாலப்புறவப் பதிபோற்றினார்—திருக்
கோலக்காவைப் பணிந்தேற் றினார்
பைந்-தமிழ்ச்செந்தே னெனக்கூறித்
திருப்புன்கூர் செலத்தேறி

உ. நம்பரிணைய டிவணங்கினார்—பே—ரின்பத்தமிழ்
சொல்லி யிணங்கினார்—பல
நற்றலங்கள் பணிந்து○காவிரி யொத்திலங்கு
தடங்கொள் ||காவிரி

ங. நதிமருங்கணைந் தின்ப மாகினார்—படிந்ததிப்ரி
யங்கொள வன்பரேகினார்—புகழ்
நாடுதிருமயி லாடுதுறைபணிந் தாடவர்கள்தகை
நாடிமனமகிழ்ந்

‡ புகல் யாரென-புகல்யாரென்று. புகலியார்-புகலியர்.
○ கா விரி-சோலைகள் விரிவாக.
|| காவிரி-காவிரிநதி

௬. இன்பம்பெறமா காளஞ் சென்றிட்டார்—எங்கள்
நம்பரைத் துதித் தெதிர்நின்றிட்டார்—அப்பா-
லேகிப்புக லூரீசரை யேகற்றவர் நாவாரவே.

கலித்துறை.

துதித்தார்நம் பீசர் திருவரு ளடித் தலங்குமன
மதித்தார்பொன் னுருத் தாயமுன் னூலணி மார்பரின்பங்
கதித்தார் புகழ்த்திரு நன்னுவ லூரார் கனிந்தசொற்குட்
டிதித்தாரு நாமர்தென் னாரூர்க்குச் சென்றனர் செவ்வி
[யரே.

பதம். இராகம்—கானடா. தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஆரூர்க்குச்சென் றார்ஸுந்தரர் ஐம்பகையும்
வென்றார் நன்றார் திரு (வாரூர்)

அநுபல்லவி.

காரூருந்தண் டலைசூழ் தண்டலை
கமலா லயஞ்சே ரமல மார்ந்திடு (மாரூர்)

சரணங்கள்.

௧. அந்நகரில்வாழ் பவர்க்கு நம்மன்பன்
ஆரூரனை நா மழைத்திட வின்பம்
மனனிவ ருகிறா னெதிர்சென்று
வம்மினழையு மெனவிறைவாய் நன்மொழிபெறு
[வார்விரைவாய் (ஆரூர்)

௨. எங்குங் கொடிகள் நிறைந்த மேடைகள்
தங்கமு றுந்தோ ரணங்கொள் வாடைகள்
பொங்குங்கதலி கமுகு கள்மிடைந்
தங்கங்கணி யாகமிளிர வுங்கண்களி கூரவொளிரு (மாரூர்)

௫

௩. பூரண கும்பந் தீபம் கதம்பப்
பொடிக ணிறைந்த மருங்கும் விதம்பெற்
றுரும் வேதிகை பொறிபொற் சுண்ண
மழகியமணி பரப்புந் தொடை
யிலகுநறிய வனட்பந்தர்கொள் (ஆரூர்)

௪. நாக சுரமே ளங்கள்கோஷிக்க
மோககீதந டம்வி சேஷிக்க
பாகமுறுந்தொண் டர்களைப் போஷிக்கப்
பருமானணி காவாசிவ பெருமான்மன சுஸந்தோஷிக்க ()

விருத்தம்.

தொண்டரெலாஞ் சிவநாமகோஷஞ் செய்து
 துன்னுமெயிற்புறத்துவந்து சூழ்ந்து போந்து
கண்டுவன்றொண் டரைவணங்க வவருந்தொண்டர்
 களைவணங்கி மறுகினிடைச்செல் போதுசிந்தித்
தெண்டருந்தொண் டரைநோக்கித் திருவாரூரர்
 எம்மையுமாள் வரோவெனவே பதிகம்பாடி
யண்டர்பிரான் திருக்கோயில் வாயில்முன்சென்
 றணிந்தாரைப் புனைந்தவரைப் பணிந்தார் தாமே.

ஸவாய்.

பணிந்தங்கெ ழுந்துதே வாசிரி யமண்ட
 பத்தைவ ணங்கிக்கு வித்தகை யோடுந்
தணிந்தி டாததிருட பக்தியோ டுமூலத்
 தானத்தைப்போற்றிவ ணங்கியன் போடும்

பதம். இராகம்—தஞ்சரி, தாளம்—ஆதி,

பல்லவி.

○ ஏற்றிஞரை யேற்றிஞர் எழும்பிறவி மாற்றிஞர் (ஏற்றி)

○ ஏற்றிஞரை—இடபத்தையுடையவரை.

அநுபல்லவி.

மாற்றிலு யர்பொன்போல மைந்தசுந்த ரருஞ்சால (ஏற்)

சரணங்கள்.

௧. மூலஸ்தான வாஸரைச் சீலத்தொண்டர்நேசரை
வாலைப் பற்றிடங் கொண்டாரைக் கோலப்புற்றிடங்
[கொண்டிடும் (ஏற்றி)

௨. அங்கம்புள கங்கொள வன்புநிறைந் தின்புள (ஏற்றி)
பங்கயத்தாள் வந்தர்ச்சிக்குங் கங்காதர
[ரைக்கர்ச்சிக்கும்

௩. நெக்குருகிப் பாடியே மிக்கபாஷ்ப மோடியே
†யக்கரையக் கரையார்ச்சாஷ் டாங்கஞ்செய்தன்
[புகூடியே (ஏற்றி)

விருத்தம்.

அன்பினுக் குருகி யெம்மா னாரூரர் மகிழ நம்மை
யின்பமா ருனக்குத் தோழ னெனத்தந் தோம் வேள்விக் கெய்தி
முன்புனைத் தொண்டு கொண்ட முயற்றில்நீ கொண்ட கோலத்
துன்பெறும் வேட்கை தீரென் றுயர்வான்வாக் கெழுந்த தன்றே.

வெண்பா.

மருவாய்க்குங் கொன்றை மலர்ச்சடைய ராற்செய்
திருவாக்கைப் போற்றியன்பர் செங்கை—*பொருவாக்கும்
மாலைக் கமல மதைப்பொருவ வேமுகிழ்த்துச்
சாலவே தோத்திரஞ்செய் தார்.

பதம். இராகம்—காம்போதி. தாளம்.—ரூபகம்.

பல்லவி.

துதித்தா ராரூர்வா ழீசரைத் தியா கேசரை நேரே (துதித்தா)

---

† அக்கரை—உருத்திராட்சமாலையணிந்தவரை.
* பொருவு—ஆக்கும்—துற்றத்தைச் செய்யும்

அநுபல்லவி.

கதித்தார க்த்தினேசரைத்—தியா கேசரைப் பணிந்து (துதி)

சரணங்கள்.

௧ வாள்விழி மங்கைபங்கரை—வரதவுத் துங்கரை
யாட்கொண்டதுங் கருணைநேரே—
அதன் பெருமையைச்சொல யாரே—யெனத் (துதி)

௨ எய்தாப் பெருமையை—யெய்தச்செ யருமையைச்
செய்தவும் மகிமையைச் சொல்ல—யாரோ
தேடு மன்பர்மனக் கமலத்தேனோவென்று (துதித்தார்)

௩ ஈசர்தோழ ரென்னமன்னவே—யிசைதொண்டர் பன்னவே
மாசிலன்பர்கள் மகிழ்வுதன்னவே
மறை களறியா முதலே யென்னவே (துதித்தார்)

விருத்தம்.

இவ்வாறு துதித்தெழுந்து வீதிவிடங்
கரைப்போற்றி யிறைஞ்சித் தாழ்ந்து
செவ்வாறு பெருந்தொண்டர் தம்பிரான்
றோழரெனச் செப்பி டச்சென்
றவ்வாறு மகிழ்சைவ முத்திரைப்ப
ணிகளொடுமா லையுஞ்சாந் தங்கொண்
டெவ்வாறுஞ் சிவகருணை யாளுமென
வானந்தத் திருந்தார் தாமே.

கலித்துறை.

நிற்றலும் புற்றிடங் கொண்டாரைப் பாடிநன் னேயருறப்
பற்றிகழ்ந் தோர்வள ருங்கையி லேக்குட் பரமரிடம்
உற்றவ ளுக்குப் புரிதொழிற் சேடிய ருட்சிறந்த
நற்ற கமலினி யாரூரிற் றோன்றினர் காரணத்தே.

பஞ்சசாமரம்.

க. ஆரூரில்ருத்திர கணிகை யர்குலத் தார்தெள் ளமுதமே—வந்து
நேருறவவ தரித்த பெண்கொடி யார்விண் ணிதியமே—யெனப்

உ. பொங்கு மின்ப வுருவுக்கு நாம மின்கொள் பரவையா—ரென்
றெங்கும் புகழ யிசைத் தனர்கள்பல் வியங்கொ டினிமையார்

ங. காப்பு மிட்டுத் திங்கள் முதிரக் களிப்பிற் றலங்கினார்—மூன்
o கூப்பிட் டயின்றார் மகிழ்ம லர்மங்கை குணம்போ லிலங்கினார்.

ச. தளரும் நடையுங் குழறு மொழியுந் தந்தத்தின் முளையுமே—
வளரும் குழலுஞ் சரிவுற அணி மல்கி விளையுமே. [சற்று

வெண்பா.

சுட்டி நுதலிற் றொருத்துச் சிறுபணிகள்
மட்டி லணிவய வத்தணிந்து—பொட்டிட்
டயினிநீர் சுற்றி யனைமார் கிளைபோற்
பயிலவளர்த் தார்மிகவன் பாய்.

இராகம்—ஆனந்தபைரவி தாளம்—ஆதி.

கண்ணிகள்.

க. மானி னிளம் பிணையோ—முகை
வாய்விள்மதன் கணையோ—வாசத்
தேனி னிள குமிளம் பகமோ—வமுதாற்
செய்மித் திடுபணையோ

உ. துவரி னிளங் கொடியோ—மதிக்குச்
சுடருத வுங்குடி யோ—†காமன்
நிவரும் பருவங் கற்கும் பருவம்
நிகழ்தரு விள்பிடியோ

o பூமியைப்பிட்டெனா நினைத்துண்டவர். அவர் மகாவிஷ்ணு.
† மன்மதன் வளரும் பருவத்திற்கமைந்த கணுக்கள் பொருந்திய கரும்பின் வில்லோ பெண்ணோ யோ.

௩. வளர்கலை யெனவோங் கும்—பொற்பும்
வயதும் வரவேதாங் கும்—கழங்கோ
டிளகிய பந்தம் மனையா டலபயில
வேயிடை தளர்ந்தோங் கும்

௪. ஊசலின் மீதிருப்பும்—அம்பிகை
பாடலின் மேல்விருப்பின்—குறிப்புந்
தோன்றிடப் பிள்ளைப் பருவமும பேதைப்
பருவஞ்சென றிடுங்குறிப் பும்

௫. காம ராஜனீட்டுங—குவைத்தனங்கள்
காட்டுந்தனங்கள் நீட்டுட—கோங்
கருமையை யவமதிக்க ○ முன்குறிப் புணர்த்தவே
கவின்மிகப் பாராட்டும்.

விருத்தம்.

இத்தகை யணங்கனூர்புற் றிடங்கொளெம் மானைப் போற்றி
டத் * தகை யின்றிப் பாஙகி யருடன்கோ யிலுக்குட் சென்று
வித்தகை யாரைக்கண்ட மேத்தகை யாரூர் நம்பி
குத்தகை யாகநெஞ்சைக் கொளுமவர் யாரோ வென்ன

பத்தியம். இராகம்—ஆனந்தபைரவி.

கற்பகக் கொம்பரோ—காமன்ம லரம்பரோ
காமனூர் பெருவாழ்வோ—கதிர்மதிய மோ
பொற்புலவு புண்யஞ் செய்—புண்யமோ மரைகுவளை
பொற்காந்தள் பவளமணி—பூத்தலதையோ
நற்கமலை யுருவமிதை யொக்குமோ யீசர்தண்
ணளியோ விண் ணொளியோ—பிராணவளி யோ
அற்புதஞ் சேர்சுவைப் பதுமையோ புதுமையோ
அயனு லமைத்த ரத்தின தீபமோ.

○ தாய் ஆதியில் உமாதேவியாருககுத் தோழியாயிருந்த தன்மையைச் குறிப்பால் யாவருக்கும் உணர்த்தலால அவ்வழகு பாராட்டப்படும்.
* தடையின்றி.

சிற்பரா லெழுதாத நவ:சித் திரமோ
திண்மனமு ருக்குகரு விசித்ரமோ,
எற்பொருட் டுதயமோ வெனநாடியே
யெண்ணமுற் றனர்நமபி யுளம்வாடியே.

விருத்தம்.

தண்டாளம் படிகருத்தி ராக்கபணி வடம்புனைந்த சாமி நேரே
கண்டிடவு§மதன்மலரைக் கண்டிடவு மனத்துள்ளடங் காமயக்கங்
கொண்டிவர்கின் றிடப்பண்டை விதிகூட்டக் கமலமிசை குலவி
கெண்டைநிகர் கட்கடையார் நோக்கிச்சென் றூர் [வாழ்நற்,
[பெண்ணங் காசுமாதோ.

வெண்பா.

* பரவையார் நோக்கிற்சப்—பந்திக்க‡மேனி
பரவையார் பார்வையெதிர் பாயும்—விரைவையார்
கூறற்பாற் றின்றுண் கொளுமடமச் சம்பயிர்ப்பை
மீறற்பாற் றுயுமன மே.

பதம். இராகம்—காம்போதி. தாளம்—சாப்பு.

பல்லவி.

யாவரோ யிவர் யாவரோ (யாவரோ)

அநுபல்லவி.

தேவரிலொருவ ரோ—வரமுனிவ ரோ—வருகினர ரோ
வனமிருப்ர ஸித்தரோ-நவ ஸித்தரோ. (யாவரோ)

சரணங்கள்.

க. மூவரில்முதல்வ ரோ-செழியசுடர் மூன்றிலொருசுட
ரோ-குணமவையில் மூன்றில்முதன்மைய தோ-யிவையி
லெதை முன்னுவேனெ ன்று பன்னுவேன் (யாவரோ)

---

§ மன்மதன்ஸமயம் பார்த்துப் புஷ்பபாணங்களைப்போடவும்.
* பரவையார்—பரவைநாச்சியார். ‡ மேனி, பரவு, ஐயார்—மேனி யில் பரவும் அழகுடன் கூடினவர்.

௨. இவர்தங்ககருதி யணியையமதனணி வெலுமோமுகமதி
யினையுநிறைமதிவெல்லுமோயிடஞ்செல்லுமோ(யாவரோ)

௩. உடையும்விடைநிகர் நடையுங்கருணைக்கட் கடையுந்

துதிக்கையின் றுடையும்பிடிக்கடங் கிடையும்பார்த்தக
மிடையுமே (யாவரோ)

௪. புண்யமோ அதி கண்யமேவுலா வண்யமோகரு ரண்யமோ
சாத் குண்யமோ சுப்ர மண்யமோ (யாவரோ)

விருத்தம்.

குறிபட்ட மான்பிணைபோல் பெருங்காத
லானுன் குணத்தின் வேலி
பறிபட்ட தெனமனத்தை வலிதாக்கிக்
கொடுபுகு கொம் பனைமார்சூழ
நெறிபட்ட வெம்மருங்கு மதன்கணைதூர்த்
துத்தடுப்ப நிறைவிதானஞ்
செறிபட்ட திருக்கோயிற் குட்புகவா
ரூரர்மெல்லச் செப்புவாரே.

ஆர்யா

அறுகார் தொண்டரை நோக்கி
யணியா ரிவர்யா ரெனமுன் மகிழ்வுதேக்கித்
தருமா கர்க்கறி யாரே
தருமா னனையவ ருமால்ப ரவையாரே.

ஸவாய்.

௧. என்னப்ப ரவைபர் நாடிச்சென் றுபுற்
றிடத்தவ ரைப்பணிந் தோர்வழி செல்ல
§யென்னப்ப ரவையு ணராதி றையரு
ளின்வகை யால்முன்ரு டர்மயல் புல்ல.

---

§ என், அப்பர், அவையுணராது—எனது சுந்தரமூர்த்தி அச்சங்கதி களை யறியாது.

௨. தொடக்குண் டெனையாளு மீசரிடத்தினில்
துன்னுவ னென்றுள மும்மகிழ்வாகி
நடக்கும்வி டையனை யநம்பி கோயிலுள்
நண்ணிப்பு கக்கல்வி யின்னிரு வாகி

௩. மாதைக்கா ணுமன்ம னத்தினிற் கொண்டா
வப்புனை ந தாரடி போற்றியா ரூரர்
சீதப் பிறைநுத லாருயி ரெங்ஙனஞ்
சென்றதெ னத்தேட லாயின *ரேரர்.

இராகம். பியாகடை தாளம்—ஜம்பை.

கண்ணிகள்.

௧. பாசவினைப் பற்றறுக்கும் பாணர்மே லாசையினு
மாசையுளத் திடமீச ரருளெங்குசென் றதுவே

௨. அண்டர்நா யகன்சரண மலதுமற்று நினைபேனை
யண்டிமால் தருமீச ரருளெவண்சென் றதுவே

௩. பந்தம்வீ டருள்பரமன் பாதமல ருன்னேனைச்
சிந்தைகவ ரிறைதண் ணளி சென்றவிட மெவணே

௪. என்றுபல முறையியம்பி யின்னுயிரைத் தேடுவான்
நன்றருள்தே வாசிரிய மண்டபநண் ணினரே

௫. காவியங்கண் ணியைத்தேடிக் கசிந்துருகி மனம்வாடி
ஓவியத்தை யுதவிலுயி ருதவுமிறை யென்றார்

௬. நாட்டமிசை நாவலூரர் நாவலவ ரினம்வருந்தப்
பூட்டுமேழ் பரியிரதன் புணரிபுகுந் தனனே

விருத்தம்.

பகலெல்லாம் பெடைகளொடு மிரையருந்திப் புள்ளினங்கள்
பறந்து சேக்கை

* ஏரர்—அழகையுடையவர்.

புகமாலை தமியோர்கள் பணிப்புறமுன் வரமயலைப் பெற்றுந்து மின்னார்
அகமெனவும் மிருவஞ்ச மாக்களின்வல் வினையெனவு மைந்தெழுத்தைப்
பகராத நாவுடைய வறிவிலர்நெஞ் செனவுமிருள் பரந்ததன்றே.

வெண்பா.

வண்ணமுறுந் தொண்டருமிவ் வாறுமின்னார் மாமயற்கு
ளெண்ணமுறு மன்புற் றிருக்குமேற்—றண்ணுலகில்
யார்மயங்கா ரென்றுகங்கு லின்முன் முறுவலித்த
சீரொனநி லாவுதித்த தே.

இராகம்—சுருட்டி. தாளம்—சாப்பு.

கண்ணிகள்.

க. அன்பஞ்செய் வோர்கவொல்கி யின்பஞ்செய் திடுங்காந்தன்
துணைக்கரம் பெற்றுமகிழ் மகளிர்போற் சேர்ந்த
அன்புறுங் கைரவ மலர்வெண் ணிலவை
யணிதரு மாலீற்றி னொளிசேரும் நிலவே

உ. விரவப்ப ரவையெனு மெல்லியர் தருங்காதல்
இரவிலா ருயிர்த்துணை செய்தவே போதர்
ஒருவ ராகநாவ லூரருற் றிடவே
பொருவம தனெனிந்து பொருந்திட வடைவே

ங. கண்ணழ லினிற்பட்ட காமன்முன் புறவே
அண்ணல்தண் ணளியினா வாயதின் புறவே
எண்ணரன் சடைக்கங்கை யிடம்வளர் மதியே
யண்ணுநீ யலைகொழித் தமுறும்வெண் மதியே

ச. ஆழியீ சர்க்குநஞ்சை யகங்கொடு பெய்தாய்
ஏழையாந் தனியாமென் னிடத்திலென் செய்வாய்
தாழ்வில ரன்மலயந் தனிலுதித் தாயே
வாழ்வார்நீர் நாட்டினில் மருவியுங் கொதித் தாயே

விருத்தம்.

இவ்வண்ண மீசர் தோழ ரிசைமனம் வருந்த மெய்தச்
செவ்வண்ணப் பரவையாரிச் செல்வர்மேற் கூர்வேற் செங்கட்
*பவ்விய நோக்கங்கூடப் படர்ந்துமுன் வினையுஞ்சேர
வொவ்விய மால்கொண் டுள்ளத் துற்றவா றினிது சொல்வாம்.

கலித்துறை.

* மாதனத் தார்நடை காட்டிச்சி லம்பொலி மன்னவென்னம்
‡ மாதனத் தாற்பொறை தாங்கா திடையிறும் வம்மின்செல்லீர்
|| மாதனத் தாடை நெகிழாது தாங்கியம் மாதர்சென்றம்
o மாதனத் தாலுயர் பூமணிச் சேக்கைக்குள் வைத்தனரே.

வெண்பா.

a கைக்கிளையும் பூவை களையும்வெறுத் தோட்டினார்
b கைக்கிளைபா லும்வெதுப்பங் காட்டினார்—கைக்கிளையார் c
பரவை யனைய பரவையார் மேவுதுன்ப
மியாவருரைப் பார்களறிந் தே.

இராகம்—காம்போதி. தாளம்—ஜம்பை.

கண்ணிகள்.

க. செழுநிலா மணியிழைத்துத் திகழ்தருமுன் றிலினடுத்தம்
வழிநிலா மனத்தையொரு வழிப்படுத்தி யுரைப்பார்
பொழிநிலா முழுமதியைப் பொருவதன வழகர்நெஞ்சை
விழிமீட்ட லாலுருகும் வெண்ணெயெனக் கரைப்பார்

---

* பவ்விய நோக்கம்—அடக்கமுள்ள பார்வை.

* மாது அனத்து ஆர் நடை—அழகிய அன்னத்தை யொத்த நடை. ‡ அம்மா—விளி. || மாதனத்து—ஆடை—பெருமை பொருந்திய பீதாம்பரம். தனம், இங்கு பொன்னை யுணர்த்திற்று. o அம்மாது—அப்பரவையாரை. அனத்தாலுயர்—அன்னத்தின் சிறகுகளாலுயர்ந்த a கைக்கிளை—கையின்கண்ணுள்ள கிளி. b கை—வெறுப்பினால் கிளைபால்—சுற்றத்தார் பால். வெதுப்பம் காட்டினார்—கோபத்தைக் காட்டினார். c கைக்கிளையார்—ஒருதலைக்காமம் பொருந்திய.

உ. அருகிலமர்ந் திடுஞ்சேடி யரைநோக்கி யாரூரர்
அண்டர்பிரான் கோயினின்ற வழகரெவ ரென்றார்
இருவராற் றேடரிய வொருவரா d ரணிச்சடைய
ரெம்பிரான் றோழரவர் நம்பியா ரென்றார்

ங. எனவுரைக்க வெம்பிரான் றமர்கொலோ வெனுமுன்னும்
எழிலார்மேற் கொள்காதல் மிகக்கிளைத்துப் பொங்க
நினைவுமறந் துறைநாணம் நிறைமடங்கள் நீங்கியுயிர்
தனைமட்டுந் தாங்கியணை யினிற்சாய்ந்து தங்க

ச. ஆரநறுஞ் சேறாட்டி யரும்பனிநீர் வீசித்தளி
ரதிற்பரப்பிக் குளிரவிட்டும வைமுற்றுந் தாமே
நேரழலிற் சொரிநெய் போ லாகவதி விடுஞ்சமிதை
நேராக மதன்கணைகள் நிறையுமென்சொல் வோமே

ரு. சீரமளிக் குடல்பொறுக்கார் சிறுதென்றற் கிடைபொறுக்கார்
நேருநில வழல்பொறுக்கார் நிறைபாரம் பொறுக்கார்
காராரு மயிற்றோகை களைநிகர்த்த குழல்சரிமுன்
கைவலிக்க விதழ்விடுத்துக் கழறுதற்கும்பொறுக்கார்

வெண்பா.

e பாங்கியரைத் தண்மதியைப் பாய்தென்ற லைவெறுப்பா
யேங்கியுரைக் குந்திகைக்கு மின்னனையிற்—பாங்கிற்
படுக்கு மெழுந்திருக்கும் பாயுங்கண் ணீரை
பொடுக்கியடக் கும்பினைக்குக் கும்.

ஸவாய்.

க. வன்னக்க ருங்குழ லீர்குறி யாது
மதிசுட்ட புண்ணிற்சந் தத்தழல் பெய்தே
தண்ணிட்டி டும்பனி நீரென நெய்பெய்த
லைத்தவி ரீர்தவி ரீர்மிக வெய்தே

---

d ஆர்—ஆத்திமாலை. e இவ்வெண்பாவில் உள்ள வினைமுற்றுக்களுக்கேற்ப வாய், மனம், உடல், கண், முதலானவற்றை எழுவாய்களாக அமைத்துக்கொள்க.

உ. இம்மதி சம்மதி யோமதி யேமதி
யேனைய வமதித் தாய்மதி யாமல்
துன்மதி யாய்க்குருத் துரோகிய ரவின்வாய்
தூக்கிக்கவ் வியுமி ழும்கூழைய ரோகி

௩. × தென்றலை யார்வருந் தென்றலை* நீசமன்
றேடிவி டுக்குஞ்ச மனோவு யிர்க்கால்
நன்றென வுண்ணும ரவோவி னதென்று
நானறி யப்பட வில்லைபொ ருக்கால்

௪. புள்ளினாற் புள்ளைப் படுப்பது போல்யமன்
போந்துயிர் பற்றுங்க ருவியென் பேனோ
எள்ளள வுந்நெஞ்சி லீரமி லாதெனை
யேசுடு கின்றதென் னூழ்வினை தானோ

௫. o காமனக் புக்கிறை யாயதை வஞ்சம்புக்
காமனக் புக்கிறை யும்மறி வாரோ
/ சோமனம் புக்கிட மாஞ்சடை யார்க்கன்பின்
றொண்டர்க்கி தனையெ வருரைப்பாரோ

௬. சந்தனத் திற்பூசுஞ் சந்தன முமென
தாவல்ம னமும் புலர்வது நன்றோ
சிந்தனைக் குட்பட வந்தவி ரவுந்
திமிர்ந்தது சென்றுபு லர்வது மென்றோ

விருத்தம்.

மின்னவிரும் பெருந்தேரும் கொடிகளுஞ்சூழ்
மேவுதிரு வாரூரில் விளங்க வைக்கும்
பொன்னடிக ளடியேன்றன் றுயரநீக்கப்
பொருந்துமுமை யன்றியெவ ரென்ன மங்கை

× தென்றலை—தெற்குப் பக்கம் * நீசமன் தேடிவிடுக்கும் சமனோ—நீ இயமன், தனக்கு ஒப்பெனத் தேடிவிடுக்கப்பட்ட மற்றோர் யமனோ. o காமன்—அம்புகரு இறையாயதை வஞ்சம் புக்கா மனம் புக்கு இறையுமெனப் பிரித்துக்கொள்க. / சோமன் அம் புக்கு இடமாம்—சந்திரனுக்கும் கங்கைக்கும் இடமாகிய.

யின்னனபல் விதந்துயராற் புலம்பிவைக
வினிதுமகிழ்ந் தாரூரர் மனங்களிக்க
வெந்நிலமும் புகழடி களடியார்க் கங்கங்
கியம்பினர் புற்றிடங்கொள் சுயம்பினரே

பதம். இராகம்—நவரோசு. தாளம்—சாப்பு.

பல்லவி.

தொண்டர்கட் கிதுரைத்தார் ஆரூர்வாழீசர் (தொண்டர்)

அநுபல்லவி.

வண்டமிழ் நாவலூரன் மனங்களி கூர்ந்திட
மணஞ்செய்விப் பீரென மனமகிழ் வாய்ந்திடத் (தொ)

சரணங்கள்.

க. பரவைமா தைத்தந் தோமாரூ ரன்மகிழ
விரைவில்ம ணமுடிப்பு மென்னவி றைமகிழத் (தொண்டர்)

உ. நமதுசுந் தரனபி ராமன்மி கவுநன்று
அமையும்ப ரவைமா தணியதற் கிசைவென்று (தொ)

௩. சீருல கினிற்சுபம் சீக்ரமென் பதுபோலச்
சேரு மணம்நாளையே செய்விப்பீ ரென்றுசாலத் (தொ)

விருத்தம்.

இப்படிக்கி றையுங்கூற வெழிலார்தம் மணத்தை நோக்க
விப்படி யிருளும் போக்க வெழும்படிக திருதிக்க
*மைப்படி கூந்த லார்க்கு மையர்க்கு முலகோ ரொற்று
மைப்படி மணஞ்செய் விக்க மாதொடங் களித்தார் தாமே

* மைப்படி கூந்தலார்க்கு—கருநிறம் பொருந்திய கூந்தலையுடைய வருக்கு

பதம். இராகம்—சங்கராபரணம். தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஆடல் புரிந்து கோயிற் கேகினார்
பாவை மாதொடும்விளை (ஆடல் புரி)

அநுபல்லவி.

பாடல்புரிந்தா ரூரில் வாழுந்தற்—பரனு ளருள்
பெற்றிடும்ஸௌந் தரனு ரதி வானாரென (ஆடல்)

சரணங்கள்.

௧. மாதுடன் கூடி மகிழ்ந்து மாளிகை
மருங்கா விக்கரை நெருங்கு செய்குன்றில்
சீதளப் பந்தர் நீழலிற் பேடை
செஞ்சேவலெ னவுநாடியி தஞ்சேரமரு வியேபல (ஆடல்)

௨. நம்பி யீசரைக் கும்பிடவினைந்
தின்ப சுகந்த தைலத் திலநனைந்
தெண்பெறு பல மணிகள் கூடி
யிலங்கணிகள்வி ளங்கவே புனைந் (தாடல்)

௩. கையிற் பொற்கோலுங் காதினிற் றோடு
மெய்ந்நூ லுநெற்றி விளங்கு நீறோடு
மைய ரழகுக் கழகி தாமெனத்
தையலர்மூகி மூச்சாலச் சைவமுத்திரை யுறுகோலத்(தாடல்)

௪. நடையினிற் றவக் களிறேயென்று
மடல்சேர் விடையற் கன்பனே யென்றும்
படரு மறையோர் தலைவ னேயென்றும்
பக்கத்தன்பர்கள் போற்றிவரக்கட்ட முகார் தோற்றியும்(ஆ)

விருத்தம்.

வேந்தர்விரு துஞ்சைவ விருதுமோங்க
மின்னனையார் மயல்மருவ மிடைந்த வீதி

போந்துநடந் திடவாகு வலையந்துன்னப்
புகழுமறை யோர்சூழக் கோயிற் புக்குச்
சேர்ந்திடுந்தே வாசிரிய மண்டபத்துட்
டிகழடியார்க் கண்டிவருக் கடியேனாக
வார்ந்திடுநா ளென்றோளென் றகம்வைத்தங்க
டவிற்சென்று ராரடிய ரவிச்சென்றோ.

வெண்பா.

அன்பரடி யார்க்கடியே னாவே னெனக்கரங்கள்
இன்பமுட னேகுவித்தங் கேகுங்கால்—நம்பர்திருக்
கோலத்தார் காட்சி கொடுக்கப் பதவிணையைச்
சாலப்ப ணிந்துதித் தார.

பதம். இராகம்.—உசேனி. தாளம்.—ரூபகம்.

பல்லவி.

பாதங்கள் கதியே யண்டங்களின்
பூதங்கள் பதியே—உன்றன் மலர்ப் (பாதங்கள்)

அநுபல்லவி.

வேதங்க ளின மோதற் கரிய
மேலவாந்திரு மாலு மறியாப் (பாதங்கள்)

சரணங்கள்.

க. இன்பமறைய ளிகள்சேரு மினிதானந்தத் தேனூறும்
என்பொருட்டுமு தயஞ்சேரு நிறை
யன்பரிதயத் தலர் செந் தாமரைப் (பாதங்கள்)

உ. உலக முயர்ந்திட நடித்து மதிக்குங் கலகயமனையுமிதிக்கு
நல மிகுமன்பர் துதிக்க வுவகக்கும்
மலைமகள் செங்கை வருடச் சிவக்கும் (பாதங்கள்)

ங. மாதவர் சிந்தை யதனிற் புல்கும் மாதவர்க் கொளி நல்கும்
வேதங்களலங் கிருதமாய் மிதிக்கும்
பாதுகையாக விருந்து துதிக்கும் (பாதங்கள்)

(௪) மறைவாரண மீதி லிருக்கும் நிறையுமின்பங்கள் பெருக்கும்
குறைசெய் திடுமென் பிழையைப் பொறுக்கும்
குற்றங்கள் பொறுக்கு மரைப் (பாதங்கள்)

ஆரியா.

(௧) இவ்வித மேதுதி யன்பர்க்
கிதய மகிழ்ந்திரு தாளு முதவநம்பர்
செவ்வியர் தம்முகம் நோக்கிச்
சீரார் தொண்டர் மகிமாவை வலிதாக்கிப்

(௨) பெருமையி னுல்நமை யொப்பார்
பேணு வினுலெம் மையே யடைந்துய்ப்பார்
அருமையி னுல்நிலை நிற்பார்
இருமையி னீங்கின வர்மீதி லிசைசெப்பார்

ஸ்வாய்.

(௧) என்றித ருள்செய்ய வானந்த நீர்கண்க
ளிற்பெரு கவழித் தொண்டரின் சீரே
நன்றிது தீதின தென்றறி யாதவன்
நானுரை செய்யவ லியனே நேரே

(௨) சொல்லவு னதருள் நண்ணுமே லாமெனத்
தூயரு ரைசெயத் தாயினு மன்பாய்த்
தில்லைவா ழந்தணர் தம்மடி யார்க்கும
டியேனெ னச்செப் பெனவிறை நண்பாய்

(௩) உரைக்குமு றையைச் சிரமீது கொண்டுதம்
முள்ளம கிழ்ந்துபு ளகிதராகி
விரைக்கம லக்கழ லிற்சிரங் கண்கள்
மிலேந்து குழைய வணங்கி யன்பாகி

(ச) மேவுந் திருவருள் மேற்கொண்டு நிற்க
விமலரொ ழுந்தரு ளப்பணிந் தன்பாய்
நாவலூர் நாவல வர்தொண்டர் தங்குழா
நண்ணநெ டுந்தூரத் தேபணிந் தின்பாய்.

விருத்தம்.

($) திருக்கூட்டந் தனைப்பன்முறை வணங்கியே தொழுதேத்
திச்சென்றுமெய்த்தன்
(§) பருக்கூட்டஞ் செவிக்குதவப் பொழியமுதத் தாரை
யொத்தின் பம்பரலிக்கக்
(‡) கருக்கூட்ட முகிலினைப்போற் சிவபெருமா னருள்செய்
மொழிக்கரும்பை முன்வைத்
(†) துருக்கூட்ட நவமணிபோற் றனித்தனித் தொண்ட ரைப்
பாடி யுவந்தாரமே

வெண்பா.

தொண்டர் மகிழ் செய்திருத் தொண்டத் தொகைப்பதிகம்
விண்டுபணிந் தார்பவத்தை விண்டிடுவன்—றொண்டர்மொழி
யீசர் திருவடிக்கா ளெய்தவைக்கு மென்றுரைத்த
பாசுரத்தை மெச்சியுரைப் பார்.

விருத்தம் பவசுருதி.

குன்றவில் லினர்தடுத்தாட் கொண்டவன் றொண்டர்காதை
யொன்றிய மனத்தாராகி யுறுசெவிக் குய்ப்போர் தங்கள்

($) திருக்கூட்டம்—அழகுபொருந்திய தொண்டர்களின்
கூட்டம்
(§) மெய்த்து அன்பருக்கு ஊட்டம் செவிக்கு—மெய்மையாக
அன்பர்களுக்கு ஊட்டத்தைச் செவிகளுக்கு
(‡) கருக்கூட்ட—கருமைநிறம் பொருந்திய கூட்டமான
(†) உருக்கூட்ட நவமணி—நிறம்பொருந்திய கூட்டமான நவ
ரத்தினம்

கன்றிய மனத்தா லெய்துங் கடும்பவ மகன்றிகத்தில்
நன்றிசே ராயுள்மைந்தர் *நளினியும் பெறுவர்மாதோ.

திருச்சிற்றம்பலம்

திருமலைச்சிறப்பு தடுத்தாட்கொண்ட புராணமாகிய சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம் முற்றிற்று.

ஆகப் பதங்கள்	17	வெண்பாக்கள்	9
விருத்தங்கள்	26	கலித்துறைகள்	4
ஆர்யா	4	கண்ணிகள்	9
அபங்கு	1	பத்தியம்	1
ஓவி	1	ஸவாய்கள்	9
லாவணி	2	ஆக உருப்படிகள்	83

முதற்கண்டத்தின் முதலாவது திருமலைச் சருக்கம் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

௨-வது தில்லைவாழந்தணர் சருக்கம்.

2. † தில்லைவாழந்தணர் சரித்திரம்.

பதம். இராகம்—மோகனம்—தாளம்—ஜம்பை.

பல்லவி.

மாவளர்ந் திடுந்தில்லை வாழுமந் தணரே
மகிதலத்தில் மேலான மகிமை பொருந்தினரே   (மாவளர்)

---

* இலக்குமி.

அநுபல்லவி.

தேவர்கள் யாவரும் வணங்கும் சிற்சபே சனைமதித்துச்
சிறப்பொடுபூ சனைபுரிந்து செழிப்புடனே மிகத்துதித்து (மா)

சரணங்கள்.

(க) நீற்றினார் கோலமுற்ற நிருத்தனடித் தொண்டு
நியமமுட னனுதினமும் நிகழ்மறைகள் விண்டு
சாற்றினா ராயினர்கள் தருமநெறிகொண்டு
தழைக்கு மின்பம் திளைக்குமுத்தி தனையடைய நினைவு
கொண்டு (மாவளர்)

(உ) முத்தழலை யோம்பிவரும் முதிர்தவமுஞ் சிறந்து
முதிர்தத்துவ நெறிமறையின் மொழியங்கமும் நிறைந்து
நிர்த்தமிடுத் தமரினித்தி யமுயர்பணி விரைந்து
நிதிலகல மதுவெனவும் நினைவொடுயர் துதிபகர்ந்து (மா)

(௩) உயர்மரபில் ஜனித்துமறு தொழிலாட்சி யாலே
ஓங்குந்திரு நீற்றின்செல்வத் துயர்ந்திட மேன்மேலே
சுயமுறுமெய்ஞ் ஞானமுறச் சோதிசிவன்பாலே
துலங்குமன்பு மிலங்கிடநல் லலங்கிருதங்கள் பெறுவதாலே
(மாவளர்)

(ச) செம்மையாற் றணிந்தசிந்தை தெய்வமறை யவராய்த்
திருமூவா யிரத்தொகையர் ஜகத்தினிறை யவராய்
மெய்ம்மையார் திருத்தொண்டத் தொகைமுதலி லறைய
வரும்
மேதகுவன் றொண்டர்க்கரன் மொழியவவ ருரையிவரும்
(மாவளர்)

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர் [illegible]ம் முற்றிற்று.

ஆக பதம் 1.
ஆக சரித்திரங்கள் 2 க்கு உருப்படிகள் 84.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

3. ‡திருநீலகண்ட நாயனார் சரித்திரம்.

ஆரியா.

திருவளர் காவிரி நதியார்
ஜயமிகு பொனிநாட் டினிலுயர் சிவபதியாம்
மருவளர் மதிபுனை நிதியாம்
மவிபுலி யூரெப்பதியிலு மிதுகதியாம்

லாவணி இராகம் இந்துஸ்தானி காபிதாளம் ஆதி ஸாகியாகவும் பாடலாம்.

(க) மாதவா நறையொரு புரமத் துவிதவ சனமொரு புரமொளி ரும்
வேதம தோதுவி னோதமெந் நாளும் விளங்கி யதுவும் மிளிரும்

(உ) § முனிவர்கள் தனிநிலை யுணர்வுற நிதநித மோவிய மென வினைவர்
கனிவொடு சிவனடி யவர்களை மகிழ்வொடு கண்டெவர் களுமணைவர்

(ங) உப்பசரித் தன்னவஸ் திர்முதல் யாவையு முதவி யெவரு மகிழ்வார்

§யோகநிலையில் நிற்கும் முனிவர்கள் அசையாமல் நிற்கும் உடல்களினால் சித்திரம்போல் காணப்படுவார்.

சுபசரி தத்தையுற் றேசிவத் தியானத் துடனித முந்திகழ்
வார்

(ச) நன்றிது தீதிது வென்றுசொல் வேதம் நவின்று பொருந்
திடுவார்
ஒன்றுடன் மூவாயிரமறை யவர்களும் ஓங்கி யிருந்திடுவார்

(ரு) சித்ரவி சித்ரமி குத்திடும் வீதியிற் செறிந்திடு மாளிகையும்
பித்திகி றைத்தமு தக்குடம் வைத்த பெருமைபெறு சூளி
கையும்

(சூ) ஓங்கிய வாவண வீதிகணிகையர்க ளுறும்வீ திகள்பலவும்
பாங்குறு சோலைத டாகமும் வாவிகள் பண்புட னேகுலவும்

(எ) முல்லை சிவந்திமல் லிகைந் தனவன மும்மட மும்பொருந்தும்
தில்லைநன் னகரினில் வேட்கோ வரின்குலத் தினிலுதித்
தேதிருந்தும்

(அ) அய்யன் திருநா மந்திரு நீலகண் டப்பெயர் புனைவுற்றோர்
மெய்யன் புடையோ ரினில்மிக் கோர்சிவ மேபொரு
ளெனக்கற்றோர்

பதம்-இராகம்-கேதாரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சந்த தந்திரு நீல கண்டர்செய் †சங்கதிகள் மிகுமின்ப மேதரு
(சந்த)

அநுபல்லவி.

இந்தை கனிந்து புகழ்ந்து வியந்து ஜலங்கொள ளன்றனை
என்றும் நினைந்து (சந்த

†சங்கதி-வரலாறு.

சரணங்கள்.

(க) வஞ்ச மேனியார் நடனபதத்க் கஞ்ச மேனிவார்க்
குரியபணி
வாக்குயர் மனக்கா யத்தால் நேசித்து
வந்தனை கள்செய் தேமிகப் பூசித்துச் (சந்ததம்)

(உ) இன்ப வோடுசெய் தே மட்கலன்களை யன்பி
னேடு பெய்தே—சிவபக்தருக்
கீதுப யோகம தாமென வேசொல்லி
யிருபத மலர்மன மகிழ்வொடு மேபுல்லிச் (சந்ததம்)

(ந) தாமனை யறமுற் றே ரின்பத்துறையில் தாமினி வது
பெற்றோர் மிகுமழகு
தங்கு துங்கமும் நெருங்கிய யிங்கிதர்
சங்கரர் திருநா மங்களி * னங்கிதர் (சந்ததம்)

வெண்பா.

திருநீல கண்டர் தெரிசனையே செய்யத்
திருநீல கண்டர் செலவே—தெருவூடே
வீசுமழைக் காற்றுது வெட்கியயற் பக்கமுறுந்
‡தாசிகிர கத்தினுழைந் தார்

ஸவாய்.

(க) அங்கொரு திண்ணையின் முன்புற மெய்தி யமர்ந்தன ரிங்கித
மும்பெறு லோலர்
சங்கரி பங்கினு றைந்தவர் தஞ்சரி தஞ்சொலி விண்டு
கொண்டின்புறு சீலர்

* அங்கிதர்-அடையாளத்தை யடையவர்.
‡இங்கு வேசையைக் குறிக்கும்.

(உ) ஆதிய ஞதிசித் ஜோதிய பேதிய ராவணி யீசரி நாமமே சாற்றி
யோதிய சேதிபொன் மாதிரு காதிலு றக்கனி வாயவர் தம்மையே போற்றி.

பதம்-இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொண்டன என்பு திருநீல கண்டர்த முன்பு மிகக் (கொண்ட)

அநுபல்லவி.

மண்டல மெண்டிசை யும்புகழ் சாது
வந்தனை யேபுரி தொண்டர்த மீது (கொண்டனன்பு)

சரணங்கள்

(க) அன்புட னவரிரு கைகளைப் பிடித்து
மின்புடன் மனைவியினுள் ளேவா நடித்துக் (கொண்டனள்)

(உ) அங்கவர் மனைவியினுள் ளேவாச் செய்து
அடிமலர் தனக்கவள் கடிமலர் பெய்து (கொண்டனள்)

(ந) வந்தவர் முடியிற்பூச் சூட்டிக்கொண் டாடிச்
சந்தம் பூசியுற வாடியே பாடிக் (கொண்டனள்)

(ச) மங்கள மேவிய மலருறு மெத்தை
தங்கும்ப டிக்குச்செய் வித்தனள் தத்தை (கொண்டனள்)

(ரு) மந்தர மெனுந்தன மங்கையுஞ் சருவ
அந்த ரங்கமுட னேயவர் வெருவக் (கொண்டனள்)

இராகம் ஹமீர் கல்யாணி தாளம் ரூபக சாப்பு பஞ்சசாமரமாக வும் பாடலாம்.

கண்ணிகள்

(க) மாது செய்த சூதை யோது வார்க ளியாவர் நேர்மையால்
போது மென்றவ் வில்லை விட்டுப் போயி னார்தம் நேர்மை
யால்

(உ) வீதி வந்தவ் வேசி செய்த வேட மோடு கூடியே
யாதி நர்த்த னஞ்செய் யீச ரால யத்தை நாடியே

(ங) அன்பி னோடு மங்கு சென்று மால யத்து ணோர்ந்தனர்
யின்ப மாக வீசரைக்கண் டேக ளிப்பி லார்ந்தனர்

(ச) சங்க ராபு ராந்த காச தாசி வாக பாலியே
மங்க ளா கராவி னோத மஞ்சு ளாதிரு சூலியே

(ரு) நர்த்த னஞ்செய் பாத மூக்க ணாத வென்று சாற்றியே
வர்த்த னத்தி னோடு கோயில் வாயில் வந்து போற்றியே

(சா) தன்ன கத்தை நோக்கு மூது தன்ன கத்தை நோக்கவே
மின்ன கத்தில் வேறு பட்டு வெம்மை யோடு பார்க்கவே

பதம்-இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

ஈ தேது வேட மெவர்செய்வி சேடம் (ஈ தேது)

அநுபல்லவி.

சாதுவென் றதும் போச்சே தக்கோர் நகைக்க லாச்சே
(யீதேது)

சரணங்கள்.

(க) மண்குழைப் பவர்க் கிந்தச் சந்தண மேது
வனஜம லர்மு கத்தி லிருக்கே ஐவ்வாது

தண்கொள்பெ ரியோர்க் கிந்த ஜாலமாகாது
தங்கள் பெருமை நன்றாய்த் தெரிந்த திப்போது (யீதேது)

(உ) ஈசர டியா ரையிவ் விதங்கண்டி- தில்லை
யெவரிடத் திலிருந்து வந்ததோ தொல்லைத்
தாசரொன் றுங்களைக் கொண்டாரே தில்லைத்
தக்கோர் நகைத்தா லென் சொல்வேன் வெகுகல்லை
(யீதேது)

(௩) பாத்தைய ருறவைக் கொண்டீ ரோரீர் சொந்தம்
பற்றிவந் தாலிங்கே யிருக்கோ சம்பந்தம்
சரித்திரங் கண்டன் றாகத் தெரிந்து நிர்ம்பந்தம்
சம்பாதித் தீருமக்குண் டோவநு பந்தம் (யீதேது)

விருத்தம்.

வந்ததிரு நீலகண்டர் தம்மோ டிந்த வசனங்கள் பலவுரைத்தார்
வாணிமேலாஞ்
சந்தவருந் ததிக்கற்பன் மிக்கார் தாமுஞ் சந்ததமு மனைத்
தொழில்க ளெல்லாஞ் செய்தார்
அந்தமுடன் மனைவியரைத் தழுவப் போனா ரவரிசையா தென
மொழியப் புலவிதீர்க்கச்
சொந்தமுட னணையவெம்மைத் தொடுவீராகிற் சுடர்நீல கண்ட
மெனச் சொன்னார்தாமே

பதம் இராகம் நாதநாம கிரியை தாளம் ஆதி.

மாதே யெப்போதுந் தொட மாட்டேனே யென்றன் (மாதே)

அநுபல்லவி.

சாதுவென் றேமதியா தாற்றுனே யென்றன் (மாதே)

சரணங்கள்.

(௧) என்னிட மேகபட மிருக்குதென் றவகடஞ்
சொன்னாய் நிஜமென் சடந் தொலையள வுமுன்னிட
(மாதே)

(௨) எம்மை என் றுரைத்தாயே யென்றுமெல் லோரும்தாயே
வெம்மையைத் தவிர்ப்பாயே விதனம்விட் டிருப்பாயே
(மாதே)

(௩) ஈசர டியார்தன்னை யிழிவுபொ ருந்தத்சொன்னை
மாசடை யாதபொன்னே மருவேனு சையா லுன்னை
(மாதே)

கலித்துறை.

கற்பினி லோங்கிய மாதருந் தங்கள் கணவருக்குப்
பொற்புற மெய்யனு காதவர்க்கானது போற்றல்செய்தே
யிற்புற நீங்கா திருவரு மோரிடத் தேயிருந்து
மற்புறு நற்புணர்ச் சித்தொழி லொன்றில தாகினரே.

வெண்பா.

இவ்வணநா ளோறு மிருந்திள மையாலுயருஞ்
செவ்வணம்போய் மூப்புவந்து சேர்ந்ததே—யவ்வணத்தை
யாருமறியாதா லதைத்துலக்கி வைத்ததிந்தச்
சீருலவு தில்லையா சே.

ஆர்யா.

சங்கா ராகிய ஜோதி—தன்னடிப ணிபவருடநல பிரக்யாதி
யெங்கும்வி ளங்கவும் வீதி—யிடம்யோ கிவடிவ் மெனவந் தனாதி

பதம் இராகம் பூரி கல்யாணி தாளம் ஆதி.

வந்தனர் யோகி வடிவமே யாகி (வந்தனர்)

அநுபல்லவி.

சந்தம றையோன் போகி தான்வணங் குநிர் வாகி (வந்தனர்)

சரணங்கள்.

(க) மார்பினி டமுன்னூலும் வயங்க வொருகை மேலுஞ்
சார்புற வேழுக் கோலுந் தா னெடுப்பவர்போலும்
(வந்தனர்)

(உ) கோவண மும்வி சேடக் குளிர்நீ ரொளிர்ல லாட
மேவிப்பம் பையு மாட விண் ணவருங்கொண்டாட
(வந்தனர்)

(ங) பலிகொளுந் திருவோடும் பற்கிர ணமுநீடும்
நலமாமா லயன் றேடு நாதன் கருணையி னோடும் (வந்தனர்)

(ச) கனமிகுக் திருநீல கண்டர்தம் மனைசால
வினவிச்சென் றனர் கோலம் விளங்குங் கதிரினைப் போல
(வந்தனர்)

ஸவாய்.

(க) வந்திடும் யோகியை யின்புற நாடி மகிழ்ந்தனர் சங்கர ன்ப
ரென் றெண்ணி
கந்தம லர்பொரு வும்பதந் தன்னிற் கனிந்து பணிந்தனர்
தொண்டரு நண்ணி

(உ) வித்தக ஸித்தித ரத்தகு முத்தம விற்பன பற்புத முற்றவர்
நீரே
யித்தரு ணத்திலுங் கட்கின தைச்செயெ
னத்திக மூப்புக மூச்சொல்லு வீரே

(ங) என்றனர் தொண்டரு மின்புட னன்பரு மித்திரு வோடுன்
பால் வைத்துவை ப்பாயே

நன்றிபெ றும்பரி சுந்தரு மென்னிதி நாடினு மேதரு மன்
புருவாயே

(ச) இவ்விதஞ் சொல்லியு மீந்தன ரீங்குபின் னேவரு
வேனென்னி டந்தரு வாயே
செவ்விபெ றுந்திரு வோடது மேன்மை சிறந்தபொ ருளது
கொண்டுவை நீயே

(ரு) வந்தவர் தன்னைவ ணங்கிப்பின் வாங்கி
வழுத்தினர் தொண்டர்மி கக்கனி வோடே
சொந்தமு டன்முனம் வாங்கும் பொருளைச்
சுபாவ மென் றேகற்பில் வைத்தனர் வீடே

(சு) வைத்தவர் முன்னம்வ ரக்கனி வுற்றிட
மாமறை யாளரு மேகமுன் னின்றே
உத்தம வென்றுவி டைப்பொருள் கொண்டன
ரோங்கின ரம்பலத் தைக்கனிந் தன்றே

வெண்பா.

கொஞ்சநாட் சென்றபின்முன் கோலமுட னேநடனர்
மிஞ்சவேட் கோவர் விளங்கவெண்ணி—வஞ்சமுடன்
வந்தா ரெதிர்ந்து வழிபடவோ டன்றிமெத்தத்
தந்தாய்வந் தாய்கொணர்ந்து தா

கலித்துறை.

என்றவர் கேழ்க்க விருந்தவர் வாய்புதைத் தேகியுள்ளே
சென்றவ ராகிமுன் வைத்ததைப் பார்க்கத் திகைத்த வராய்
நன்றிது கண்டில மென்றய்யர் தாளிணை நாடியுய்வ
தன்றிமற் றிங்கிருக் குஞ்செயல் யாது மறிந்திலரே

இராகம் தனுசரி தாளம் ஆதி.

கண்ணிகள்.

(க) அய்யனே சீரார் துய்யனே—யென்ற
னன்புரு வேயரு ளின்குரு வே திருவே யருவே (அய்ய)

(உ) எத்தனே கல்நோர் சித்தனே—யிது
யாது வோ டேதுகொ டாது மடாது நின் ருய் நன்ருய்
(எத்தனே)

(ங) அத்தனே யோக முத்தனே—முன
மாவெட்டி வோடுகொ ளோடுமென் வீடுவைத் தேன்
மெய்த்தேன் (அத்தனே)

(ச) காலமே செல்லும் ஜாலமே யென்முன்
காட்டிநல் லோட்டினை வீட்டினுட் பூட்டிவைத் தாய்
கைத்தாய் (காலமே)

(ரு) தேடினேன் காணேன் வாடினேன்—என்ன
செய்குவே னய்யனு னுய்வகை செய்குவீ ரே நீரே (தேடி)

(சு) வஞ்சனே கொடிய நெஞ்சனே—வோடு
வைத்தெ னிடத்தில பத்தமு ரைத்துவிட் டாய் கெட்டாய்

(எ) அண்ணலே யார்க்கு மண்ணலே —ஓட
தேநிகர் மேனம ரானது நானளிப் பேன் களிப்பீர் (அண்)

விருத்தம்.

மெய்யடியா ரிந்தவித மொழிய யோக
வேடமே புனைந் திலகு மெய்யர் தாமும்
பொய்யடியா யான் கொடுத்த மண்ணோ டன்றிப்
பொன்னினுற் றருவையெனும் வேண்டே மன்று

செய்யபொரு ளீவதென்று முன்னஞ் சொன்ன
செய்தி தவறாமெனவே நினைந்தோம் பின்னால்

வெய்யகொடுந் தழலெனவே வெகுண்டோ டைத்தா
வென் றிட்டார் புலன்களையே வென்றிட்டாரே

இராகம்-தோடி-தாளம்-சாப்பு-பஞ்சசாமரமாகவும் பாடலாம.

கண்ணிகள்.

(க) அண்டர் நாதனான யோக மண்ட லீகர் நாடவே
பண்டு மந்த வோட தேநீ கொண்டு வாவென் றாடவே

(உ) அய்ய யோக நாத வோட தேநி னைக்கி லில்லையே
செய்ய தாயீ வேனென் றேன்சி னந்து விட்டீர்
சொல்லையே

(ங) உன்னி டத்த டைக்க லத்தொ டேக ரத்தல் நீதியா
மன்னி டத்துன் மைந்த னோடும் வாவி மூழ்கிச் சாதியாய்

(ச) என்று ரைத்தி ரய்ய செல்வ னில்லை யேயா னென்செய்
வேன்
நன்று பாரி தன்கை சேர்த்து நாமமூழ்கி லஞ்செய்வேன்

(ரு) ஈசர் சொல்ல நீல கண்ட ரென்று ணைக்கை பற்றவே
கூசு மாணை யுண்டென் றார்வேட் கோவ ரும்மெய் முற்றவே

(சு) என்று சொல்ல வோடெ டுக்க வெத்த னித்த பாவியே
நன்று நன்று வாஸ பைக்கு நான்வி டேனுன் னாவியே

(எ) சென்று தில்லை யந்த ணாளர் செய்ச பைக்கு ணோ வே
முன்றி கழ்ந்த வாறெல் லாமொளித்தி டாது கூறவே

(அ) அந்த ணாளர் யோகி சொல்வ தான தேநீ செய்குவாய்
முந்த வேசெய் திடினு முன்றன் மொழியி னானு முய்குவாய்

வெண்பா.

என்றுரைக்க வீட்டினிட மேகிமனை யாருடனு
நன்றுபெறு வேனுதண்ட நாடிக்கை—யொன்றினராய்
வந்தெமது யோகி மகிழுவமைக் கையினராய்
தந்திரமாய் மூழ்கியெழுந் தார்.

ஆர்யா.

வாவியில் மூழ்கி யெழுந்தார்
மதன்ரதி யென்வே யுருவா மகிழ்வார்ந்தார்
தேவி யுடன்விடை மீதே
திருநீ லகண்டர் மகிழ்வுற வப்போதே

பதம் இராகம் பரசு தாளம் சாப்பு.

பல்லவி.

காட்சி கொடுத்தாரே யெவர்க்கு நல்ல (காட்சி)

அநுபல்லவி.

ஆட்சி யான பொரு ளாமென வேசொல்லக் (காட்சி)

சரணங்கள்.

அண்டர்கள் கூடியங் கலர்ந்தபூ மாரிபெய்யத்
தொண்டர்கள் கண்டர கராவெனு ந்துய்யக் (காட்சி)

திருச்சிற்றம்பலம்.

திருநீலகண்ட நாயனார் சரித்திரம்

முற்றிற்று.

ஆர்யா	3	ஸவாய்	2	கண்ணிகள்	1
பதம்	6	பஞ்சசாமரம்	1	ஆ	22
விருத்தம்	2	வெண்பா	4		
வாணி	1	கலித்துறை	2		

ஆ சரித்திரங்கள் 3-க்கு உருப்படிகள் 106.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

4. *இயற்பகை நாயனூர் சரித்திரம்.

இராகம் மாஞ்சிதாளம் ரூபகம்.

கண்ணிகள்.

(க) செழுஞ்சென்னி நாட்டினி லனபாய சோழன்
றிருக்குலம் பெருக்கிய புகழென நாளும்
கொழுங்கன்னல் கதலிசெந் நெலும்விளை வாக்கும்
குலவுமருதநீரா னுலவியே தேக்கும்

(உ) பொன்னிந திசெழித்துப் புணரியிற் பாய்ந்து
புனிதமாயபுண்ய தீர்த்தமும் வாய்ந்து
நன்னயம் பெருகுபு காரெனு நகரம்
நாளும்வ ணிகர்குலத் தினுக்கொரு சிகரம்

(௩) என்னத்த னைத்துமறை ச்சிலம்படி யாருக்
கினியவ டியார்வேண்டு மவையவை கூறு
முன்னமே யளித்தறம் வளர்த்திடுந் தகையார்
முற்றுநந்த வத்தோர்புக ழுலகியற் பகையார்

(ச) ஆறுசூ டியவய்யர் பேரருளாலே
நீறுபூ சடியவர் நினைத்ததின் மேலே
மாறில்லா மல்வேண்டு மவையெல்லா மளிக்கும்
பேறெல்லா மிவனெனுங் பெற்றியிற் களிக்கும்

(ரு) ஏவல்செய் திடககாக்கு மில்லறம் புரிந்து
மேவு நாளிலதை மிக்கவே தெரிந்தும்
பூவுல கினில்வாழும் யாவரும் நாடப்
புனித முறும்விண்ணுல கவருங்கொண் டாட

ஆர்யா.

நுண்பொரு ளாகியும் வெளியே
யம்பல மேவிந டமேசெய் பேரொளியே
தண்பெறு புகாரி னாரே
தாளு டிடமுன் னினார் புனிதர் நேரே

பதம்-இராகம்-செஞ்ஜுருட்டி தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்தன ரம்பல நாதர் மறையோ டரிதே டியபாதர் (வந்தனம்)

அநுபல்லவி.

விந்தைபொ ருந்துபுகார் வீதிம ருங்கிலேகிச்
சந்தம றையோன்போல வாகித் தனிநீ றிலகவே யுமைபாகி (வந்தனர்)

சரணங்கள்.

(க) உம்பர்நா யகியம்மை துணரவோ பிரியாத
அம்பிகை யறியாமற் றேனு யறியோம்
அடியவ ருக்கன்பானோர் (வந்தனர்)

(உ) பலபல யிலமோடிப் பக்தரெங் கெனத்தேடி
ஜலஜம லர்முகமும் வாடித்
தனிநா மெனவே தனியாய் நாடி (வந்தனர்)

(௩) தூர்த்தவே டத்திற் §புகார்ச் சொல்லென்றெண் ணமற் *புகார்ச்
சீர்த்தந கரிற்சென்றார் நேரே
ஜகவஞ்ச கர்நெஞ்ச கம் ¶ புகாரே (வந்தனர்)

ஆரியா.

வந்திடும் வேதியர் தானே
மலியற்பகையா ரில்மேவ மதிமானே
எந்தைபி ரானடி யாரே
யிலமேவி னரென் பதாக மகிழ்வாரே

பதம் இராகம் மாஞ்சி தாளம் ரூபகம்.

பல்லவி.

மகிழ்ந்தெதிர் வணங்கினர் தகையாரே கைம்
மாறில்லா தருளியற் பகையாரே நேரே (மகிழ்ந்தெதிர்)

அநுபல்லவி.

புகழ்பொங்கர்க் கியபாத்யமுன் கொடுத்தாரே—மலராற்
பூசித்திருவினையை விடுத்தாரே மன (மகிழ்ந்)

சரணங்கள்.

(௧) எங்கள்கு லத்தோர்செய்த பெருந்தவமே—பழுத்திங்
கெய்திய தெனக்கண்ணீர் பெய்தினி யசொல்லின்மெய் (மகிழ்ந்)

(௨) நல்விருந் தாகவந்த நாயகமே—பெருஞ்
செல்வம ளிக்குமுத்தி தாயகமே—யென (மகிழ்ந்)

---

§புகார்-அபவாதம். *புகார்-புகாரென்று பேர்விளங்கிய
¶புகார்-புகமாட்டார். அதாவது செல்லமாட்டார்

(௩) நன்னிதி யம்போலக் கண்டேனே—யினி
யென்னாற் செயும்வினை யினையும்வின் டேனென மெய் (மகிழ்ந்)

ஸ்வாய்.

(க) என்றிது கூறி வணங்கி யெழுந்தெதிர் நின்றவ ணிகரை நோக்கினர் நேரே
சென்றவக் கைதவ வேதியர் நெஞ்சத் திறத்துட னோக்கி யிதுபுகல் வாரே

(உ) கொன்றைம திச்சடை யாரடி யார்கள் குறித்தவை யாவும் முதருள் வீரே
யென்றிது கேட்டுவந் தோமும்மி டத்திலொன் றிச்சித்தோ மெங்க ளியற்கை யாரே

வெண்பா.

நீரிசைவீ ராகில் நிகழ்த்துவோ மென்னலுமே
சீரிசையோங் கன்பருந்தன் சிந்தைகொடு—நேரிசையா
தென்ன தடியே னிடத்திலுள தேலதனுக்
கென்னலா மென்றுரைத்தாரே

பதம் இராகம் இந்துஸ்தானி காபி தாளம் அடதாள சாப்பு

பல்லவி.

வேண்டுவதை யென்னிடத்தினில் வே தியரே சொல்லுமய்யா (வேண்டு)

அநுபல்லவி.

ஈண்டுபெரி யோர்தமக்குநா னேவல்செய் வேனுமக்கு (வேண்டு)

சரணங்கள்.

(க) இப்பொரு ளெல்லா நம்பர்க் கற்புத மானவன்ப
ரொப்பும்பொரு ளேமனத் துண்மையெ னிபேனை நம்பி
(வேண்டுவதை)

(உ) மெய்ப்பொருளி னடியாரே யிப்பொருளை யவர்நேரே
செப்புமுனமே நா னெப்பிவிக்குங் காலவன்மேல் (வேண்டு)

(௩) நெஞ்சினில்வஞ் சகமில்லேன் றுஞ்சவரி னும்பொய்
சொல்லேன்
கொஞ்சர்முன்னில்லேன் மனச் சஞ்சலமெவ் வளவுமில்
லேன் (வேண்டு)

வெண்பா.

தொண்டரிவையுரைக்கச் சொற்பிசகா தன்பரெண்ணங்
கண்டுதவுங் கைகளெனுங் கற்பகத்திர்—அண்டுமியற்
சாயைபோல் வாழ்ந்திடுமுன் றன்மனைவி யாரைமகிழ்ந்
தேயருள்வீ ரென்றுரைத்தா ரே.

பதம் இராகம் பூரி கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி.

மனைவியைத் தாரு மனங்களி கூரும் (மனைவியை)

அநுபல்லவி.

வினையரே தவமெய்த விதிவத்தாய் மணஞ்செய்த (மனை)

சரணங்கள்,

(க) விருந்ததி கம்வந்தாலும் பொருந்துப சாரம்மேனு
மருந்ததி யிற்செய் கற்பாலு—மருந்ததியினைப்போலு (மனை)

(௨) மாதவ ருக்குநண்ணும பாதபூ சனைபண்ணு
மாதர வுடனே யண்ணு—நாதனைத்தெய்வமென் றெண்ணு
(மனை)

(௩) பந்தர்கள்வந் துமூசாமல் வந்தாலும வரேசாமல்
முந்தவே காத்துப் பேசாமல்—சிந்தை கனிந்துகூசாமல்
(மனை)

விருத்தம்.

¶இயற்பகையா ரிந்தவுரை கேட்டலுமே யெமதிடத்தி லியைந்த யாவு
§மையற்பகையாம் பாசிவத்தி னடியார்தம் முடைமையென வைத்தேனிந்தத்
‡தையற்பகைம்பூ தங்களுறும் சாட்சியா யுமதெனவே தந்தே னென்று
‖மெய்ப்பகையே லெனமுனிலும் மகிழ்ந்துதொண்டர் தமைப் பணிந்து விளம்புவாரே

ஸ்வரம்.

(க) முன்னமெனக்குள தெம்பிரா னல்கு முதியபே றென்ன விரைவினிற் சென்றே
நன்னயமேவுதன் வாழ்க்கைக்குரிய-நலமிகு கற்பின் மனை யின்முன் னின்றே

¶இயற்பகை-இயற்பகை யென்னும் நாமம் வகித்த தொண்டர்.
§மையற்பகை-மையலிற்கு அதாவது பெண்ணாசைக்குப் பகை.
‡தையற் பகைம் பூதங்கள்-தையல், பகு, ஐம்பூதங்கள் பெண்ணை பகுக்கத்தக்க ஐந்து பூதங்கள்.
‖மெயப் பகையேல்-மெய்யை யுடைய அப்பனே கைக்காதே யெனக் கருத்து.

(உ) சொன்னவி திப்படி மன்றல்புரிந்திடு தோகையே வந்தவிம்
மேய்த்தவர்க் கென்றே
யுன்னையு தவின னென்னக்க லங்கி-யுனங்கனிந் திம்மொழி
கூறினரின்றே

கேகாவளி.

(க) இதாவுரைசெய்சீ ரெதா கிலுமனத் ததா லோசனைக்
கதாகு மியல்பென் னதா மெனவுமுன் பதாய் நின்றனள்

(உ) துணிந்து சொலிமுன் பணிந்தெ ழுதலுங் கனிந் தன்பரும்
பணிந்தெ திர்வணங் கியும்பொன் னனையா ருடன் சென்ற
னர்

வெண்பா.

சென்று வணங் கிப்பணியச் சேயிழையா ருந்தியங்கி
நின்றிடவு மன்பருந்தன் னெஞ்சமகிழ்ந்—தின்றடியேன்
செய்யும் பணியெதெனக் செப்ப மறையவரு
மய்யமற வீதுரைப்ப ரால்

பதம் இராகம் கானடா தாளம் ஆதி.

பல்லவி.

தனிவழி போகலா மா மாதுடனுன் (தனி)

அநுபல்லவி.

கனிவு— னீரளித்த காரிகையுடன்சென்று
மனமது திடுக்கிட மார்க்கம தனிலின்று (தனி)

சரணங்கள்.

(க) தோட்டக் காரன் கொடுக்க—விசைந்திடினும்
பூட்டை பிடுங்கி கெடுக்க—வருவது போல்
நாட்டி லுள்ளோர்தடுக்க நமது துடைநடுக்கத் (தனி)

(உ) பந்து ஜனங்கள் வருவார்— போலிருக்குது
வந்திடி லெதிர் பெறுவார்—பொருதில்தனி
வந்திடும் பார்ப்பானு மாச்சு வெறுங்கை யாச்சுத் (தனி)

(ந) கொடுத்துப் பலனு மில்லையே—யோசிக்கும்வரை
யடுத்திடும் வெகு தொல்லையே—யுலகிலுள்ளோர்
சடுத்தம் பேசிக்கல்லை படிப்பார் வலுவோ வில்லைத் (தனி)

வெண்பா.

மன்னுமுறவோ ரையுமிம்-மாநகரை யுந்தாண்டப்
பின்னுடனே வாருமெனப் பேசிடவே—தன்னிகரில்
அய்யருரை கூறு மதுவரைக்குந் தாழ்ந்தபிழை
செய்யவைகி னேனெனநொந் தே

ஆரியா.

அடல்வாள் பலகையு மார்ந்து மடவா ரொடுநா தரேகு துணை சார்ந்து
நடவீரெனமுன் பிட்டுப் படையார் செலவுற வினோர்க ளெதிரிட்டு

பதம் இராகம் சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

உற்றாெ திரில்வனைத் தாரே மறை கற்றா ரெதிரியென நேரே (தமதுற்று)

அநுபல்லவி.

சற்று கிலும்பய மில்லாமல் வேதியன் றய்யலைக் கொடுபோகத் —துணை
யற்றார்போல் நாமிருப்ப தன்யாய மெனச்சொல்லி அய்யோ மனதுமிக நோகத்—தம (தமற்றார்)

சரணங்கள்.

(க) ஆளவில்லாக் கொடுமை யால்மானம் பாதிக்க அவமதிப்
புளங்கொதிக்க
இளகல் மனப்பயித்திய வியற்பகை கொடுக்கினும்
யாம்விடோ மென்றெல்லோரு மங்கதிக்கத்—தம(துற்றார்)

(உ) வாய்கூசா மலுன்றன் பெண்டடைத் தாவென்று மறை
யோன் கேழ்க்கலாச்சே—பெற்ற
தாயினு மன்புடைய சேயிழை யையுதவத் தகுமோ வுல
கில்மிக யேச்சே—யென (வுற்றார்)

(ங) உயிரைவிட் டாலுமிந்தக் கைாவ வாய்க்கனியை
யூர்கடக்க விடுவதில்லை— மனத்
தைரியத தையுமறி வோமெனப் படைகளைத் தாங்கியு
மானமுற்றோ மில்லை— யென (வுற்றார்

விருத்தம்.

சீலமிலாய் நில்லடா வெனவுரைக்க வனகனுமஞ் சினன்போல்
மாதைச்
சாலவே பார்க்கவவ ளியற்பகைவென் றிடுமஞ்ச வேண்டா
மென்ன
ஏலவன்பர் கேட்டடியே னிருக்கின்றேன் றளரீரென் றியம்பக்
கேட்டு
வாளுளவை யெனக்குநித்தி வரைவிட்டுப் பிழையுமெனவதிற்
சொல்வாரே.

பதம் இராகம் மணிரங்கு தாளம் ஆதி.

பல்லவி.

ஜாதியைக் கெடுப்பாரோ வேதியன்பின் தையலை விடுப்பாரோ
யெவருந்தங்கள் (ஜாதியை)

அநுபல்லவி.

கோதிலாத பிரக் யாதிலம்பா தித்துக் கூறியன் போலவெகு
வீரியம் பேசிநல்ல (ஜாதியை)

சரணங்கள்

(௧) இரண்டுகார் யமுங்தெரியா தென்ன கர்ம
மீ தென்னதர்மம்-மீ தென்ன வர்ம மிந்தச் (ஜாதியை)

(௨) பகைவர் நகைப்பரென்று சற்றுமோராமல்
இகல்செய்ய வும்வந்தாயே யெவர்க்குமே றுமல் (ஜாதியை)

(௩) வெட்கம் துக்கம்விட்டு மாதை முன்னிட்டு
முக்கியமெ னவந்தாயே-மூதல் பந்துக் கட்டு (ஜாதியை)

(௪) எல்லோரு மேபழிக்க வியல்வெடுத் தாயே
வல்லவித் தூர்த்தனுக்கும் வழிவிடுத்தாயே (ஜாதியை)

(௫) உயிரைவிட் டாலும்விடு வோமிந்த மாதை
யொருக்காலும் விடமாட்டோம்-பொறுக்குதில் லையிப்போ
தே (ஜாதியை)

(௬) மானம்போ யுயிர்காவ லோ சொல்லுவாயே
தானமி துவோமெத்தத் தாவிக்கு திக்கிறுயே (ஜாதியை)

விருத்தம்.

இனத்தாரு மிவையுரைக்க-வெதிருரைப்பார் வெகுண்டென்முன்
னெதிர்த்தீராகிற்
இனத்தாரும் வாட்கிறையிட் டுங்களைவா னிலும்வரும்வேதியர்
பின் மாதை
மனத்தாரு மகிழ்ச்சியொடு சேர்ப்பமென்ன வுறவோர்கள்
மனங்கொள்ளாமல்

வனத்தாரு நிமலர்முன்பு வளைத்தார் போன்பர் சமர் விளைத்தார்
தாமே

பதம்-இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பகையா யெதிர்த்த வருடன்போ ராடினூர்-இயற் பகையார்
பெருந்தகையார் (பகையாய்)

அநுபல்லவி.

வகையாய் நிமலனை வளையுற வோரை—மதித்தி டாமல் முன்பு
குதித்துநின் ரேரைத்—தகையார்ந் திடச்சொரிந்திடுமரக்த
தாரை
தங்கும்ப டிவாள்கொடு-பொங்கியெ திர்த்துநேரே (பகை)

சரணங்கள்.

(க) விழிவழி கனல் சொரிந் திட-வெதி ரோடிப்—பழிவரு மென
வஞ்சி டாமலே நாடிப்—பொழிமுகி விடியென வெதி
ருரையாடி
யொழிதரச் சாரிகையொ டுஞ்சுழ லாடித்
தழிவரும் வாள்கொடு கைகளும் வீழவே—சரித்துப்பனம்
பழநிகர் வார்தலை யுதிர்தர மாளவே—யடித்துடலங்
கிழிதர வாள்கொடு சிலர்களை மீளவே—பிளந்துகால்கை
வழுவிய தசையொடு தொங்கிட நீளவே—மூளுங்
கோபத்தோ
டழிதா நிலைதெரி யாவனு மேவி
யடிக்குளுசூ ரைமா ருதம் போனுலாவிப்
பிழைமீர்ந்நீ ரமரில்வல் லவரெனக் கூவிப்
பெருநகை புரியுமே தாவியுந் தாவிப் (பகையாய்)

(உ) கடலொலி யெனச்சிலர் கூட்டங்கள் கூடிக்
காயுங்க டுங்கணைகள் விடுத்தெதி ராடிப்
படபடத்துவா வருவீரொ ன்றோடிப்
பாயும்பு லிபோலியற் பகைவரு நாடித்
தடமந் தரமெனக் கலக்கியே மாட்டுவார்—ஒளிந்துதனித்
தனிவந் தவரையுங் கணியாமல் வீட்டுவார்—மிகுந்தவடத்
துடனெண் டிசையிலு மிவராய்க் காட்டுவார்—சூறைக்
காற்றினி
லுழல்சரு கெனமரு வலரையும் வாட்டுவார்—வலியவந்
தோர்
குடர்கள் சரிந்துவரச் சுரிகையாற் கீறி
யுடலைவெ டித்தபலாப் பழம்போல நூறி
வடவரை யெனத்தலை களைக்குவித் தாறி
மதிமயங் காமற்றொண்டர் களுக்கென்று முபகாரி
(பகையாய்.)

(ங) தாகமி குந்திரத்தங் களையள்ளிக் குடிப்பார்
தனிவேறி முற்றிய வ ரவர்களிற் றுடிப்பார்
வேகமா யேன் வந்தோ மெனக்கண்ணீர் வடிப்பார்
வெட்டுண்ட வுடல்க ளொடுஞ்சிலர் கடிப்பார்
சோக மொடுந்தலை சுற்றியே யாடுவார்—ரத்தப்பெரும்பிர
வாக மூழ்கிமிதப் பாகியே யோடுவார்—உயிர்நசையா
லேகளே பரங்களை யெடுத்துமேன் மூடுவார்—அமரில்நிரு
வாகஞ்செய்திடமுடியா மலே வாடுவார்—பெருங்கழுகு
காகமொ டுபருந்து களும் பந்தற் போடக்
காயுங் கடியசினப் பேய்கள் நின்றாட
வேக சூ ரரெனவேவிளையாட
வியற்பகை வல்லமையை யெவருங் கொண்டாடப்
(பகையாய்.)

விருத்தம்.

செவ்வாறு பெருகவமர்க் களத்திலெதிர்த் தவரையெல்லாஞ் சிங்கம் போல
விவ்வாறு முடித்துநின்ற முனிவரரை நோக்கியஞ்சா தினிது செல்லத்
தெவ்வாரு மிலையெனினுஞ் சாயார ணியங்கடத்திச் செல்வ னென்ன
அவ்வாறே யியங்கடத்திச் சென்மினென வரப்பினுமங் கழைப்பார்தாமே

பதம்-இராகம்-ஆநந்தபயிரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா வென வோதினு ரிட மாதினர் (வாவா)

அநுபல்லவி.

தேவாதி தேவன் மறை செப்பிய றியா யிறை (வா வா)

சரணங்கள்.

(க) அன்பரைச் சிவமென்று-நம்பிய வர்முன்னின்று
கும்பிட்டெண் ணமென் னென்று-கொடுப்போய்யென் றங்குநின்று (வா வா)

(உ) உரியவ ரையுமீறி யரியசங் கதிபாரில்
தெரியச்செய் திடுமனத் தீரனே யிங்கு நேரில் (வா வா)

(ங) பந்தரெ னுவெண்ணுமல்-பதைத்திட வேபடிக்குள்
முந்தவ டர்த்தனி-முனிவா னேகொடிக்குள் (வா வா)

(ச) வேதன்விண் ணினும்பொன்னி-நாதன்மண் ணினுந் தேடிச்
சீதச்சி ரந்தாள்காணுச்-சிவபெரு மானேயோடி (வா வா)

விருத்தம்.

ஓலமிடல் கேட்டடியேன் வந்தேன் வந்தேன்
உயிர்பிழைத்தா ரொளித்துவரில் வாளால்வீட்டிச்
சாலவடர்ப் பேனெனவந் திடவுமய்யர்
தமைக்காணார் மங்கையருந் தனித்து நிற்கக்
கோலமுறும் நடராஜர் கணங்களோடுங்
கோதில்விடை மீதிலெழுந் தருளநோக்கிச்
சீலமுறுந் தொண்டருமா நந்தக்கண்ணீர்
சிதறினா ரிருவினையை யுதறினாரே.

பதம்-இராகம-சகானா-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணிற் கண்டாரே-யீசரைக் (கண்ணில்)

அநுபல்லவி.

எண்ணரும் பிறவியை மாற்றின தகையா-ரீகையா லுயர்ந் திடு
மியற் பகையார் (கண்ணில்)

சரணங்கள்

(க) அண்டர்கள் நறுமலர் மாரிகள் பொழிய
மண்டு முனிவர்துதி-மறைகளால்மொழியத்
தண்டு வெள்ளிமலைமேற் பொன்மலை தழிய
தனவலை யொடுமாநந் தம்பொங்கி யேவழியக் (கண்ணில்)

(உ) யாதுரை பகர்வே னெனக்களி தேக்கி
யின்பக்க டலளித்தா யென்குறை நீக்கி
கோதிற் றொண்டுகொண் டும் முற வாக்கி
கொடுத்தந டனத்திரு வடிபோற்றி யெனநோக்கிக் (கண்)

(௫) பணிந்துப ணிந்தெழுந்து கலையெனத் துள்ளிப்
பரவச மொடுநினைந் துலகினை யெள்ளித்
துணிந்து தொடர்ந்தபாவங் களையெல்லா ந்தள்ளி
ஸ்வரூபப ணியமுதை நிமைகளா லள்ளிக் (கண்ணில்)

விருத்தம்.

உள்ளுருகி நெக்குடைந்தா நந்தத்தாரை
யொழுகநின்ற வியற்பகையை யுன்பேரன்பைக்
கொள்ளுநம தகத்துவந்துன் மனைவியோடுங்
கோதில்சிவ லோகமுறக் கொடுத்தே மென்று
கள்ளவிழுஞ் செழுங்கொன்றைத் தாரார் மன்றுட்
கலந்திடத்தம் மனைவியொடு மானமோங்கித்
தெள்ளியவெண் கயிலைபுக்க வுறவினோர்விண்
சென்றுபுக்கப் பேரின்பந்திளைத்தார் தாமே

சதந் விருத்தம். பல சுருதி

இச்சரி தந்தனை மெச்சி யகந்தனி விதமாக
வைச்சும கிழ்ந்துது தித்தவ ரின்புற மனைசேய்க
ளுச்சித சம்பத மிச்சமு டன்பெறு குணர்வோடு
நிச்சய நன்பத முற்றும்வி ளங்குவர் நிதமாதோ

திருச்சிற்றம்பலம்.

இயற்கை நாயனார் சரித்திரம்

முற்றிற்று.

ஆர்யா	3	கேகாவளி	1
பதம்	10	வெண்பாக்கள்	4
விருத்தம்	7	கண்ணிகள்	1
ஸவாய்	2	ஆகூ	28

ஆகூ சரித்திரங்கள் ௬-க்கு உருப்படிகள் 134

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

5. *இளையான்குடிமாற நாயனார் சரித்திரம்.

லாவணி-இராகம்-மாயாமாளவகௌளை-தாளம்-ஆதி

(௧) சீர்பொருந் தியமன்றுட் டிருநட ராஜர் செழிக்குங்குஞ்
சிதத்தாளில் நேசர்
ஏர்பொருந் துந்தப்பிரா னடிமையின் றிறத்தினு லிசை
பெறும் விசுவாசர்
அடியவர்கட் குதவிசெய் பிரகாசர்

(௨) வாய்மைபொருந்தியவே ளாளர்செ யுந்தவத்தால் வந்துதித்
தகம்பீரர்
ஏயுந் தொண் டில்செலுத்தும் மனமுடை யார்வளஞ்சேர்
இளையாங் குடிமாறர் மதியிற்சுற்றுங் களையா மனத்தீரர்

(௩) மேழிச்செல் வமெக்கா லுங் கோழைபடாதெனவே
விளம்புநல் லுரைபோலும்
தாழ்வி லாதசாலி நிறைந்தபாக்ய சாலி தழைக்குங்கு
பேரன்புபோலும்
அறங்களினுல் கொழிக்குநி திமேன்மேலும்

அநுபல்லவி.

சந்தத மில்லற மேவித்—தழைவார் நல்லற முமேசெய் மேதாவிச்
சிந்தைக ளிந்துமை நேசர்—தினமே மகிழ்தொண் டர்தாசர்
மகாராஜர்

பதம்—இராகம்—மாயாமாளவகௌளை—தாளம் ஏகம்.

நாராயணஹரி யென்ற இந்துஸ்தானி போல

பல்லவி.

தொண்டு செய்தார் பெரும்பிறவி யெய்தார்
தூயனார் யார்க்குந் தாயனார் சிவ—நேயனார் மாற நாயனார் தினம் (தொண்டு)

அநுபல்லவி.

சிவச்சின்னம் பொருந்திடில் யாவ ரேனுமெதிர்
சென்றுவ ணங்கிப்ப ணிந்து—கனிந்து (தொண்டு)

சரணங்கள்.

(க) முன்னோர்செ யுந்தவத்தால் இந்நேரங் காணப்பெற்றேன்
என்னக்கை குவித்து நின்று—முன்னின்று (தொண்டு)

(உ) கைலாகு கொடிலத்தி லழைத்தாத னத்திருத்திக்
கால்களை நீரால்நனைத்து—அர்ச்சித்துத் (தொண்டு)

(ங) தூபதீ பமொடுப சரித்துநால் வகையறு
சுவையொட முதையூட்டிச்—சீராட்டித் (தொண்டு)

ஸ்வரம்.

(க) இவ்வண்ணந் தொண்டர்க்குச் செய்வண்ணங் கண்டன்ப
ரியாவருங் கூடியி யைந்தமு துண்ணுஞ்
செவ்வண்ணத் தாரள கேசன்போ ஞடோறுஞ்
சீர்சிறந் தோங்கிந வநிதி நண்ணும்

(உ) பெற்றிபெற் றோங்குமந் நாளிற் சிறுமைப்
பெருக்கம்வந் தாலுந்தொண் டின்றிறங் காட்ட

நிற்றலு மெல்லவ ளங்குறை யப்பர னேசெய முன்போ
லன் பர்க்கமு தூட்ட.

பதம்—இராகம்—வஸந்தா தாளம்—ஆதி.

பல்லவி.

முன்னம்போல் பக்திபுரிந் தார் நன்னய வறந்தெரிந் தார் (முன்)

அநுபல்லவி.

பொன்னம்பலப் பேராசை யுன்னியேத ரணிமிசை (முன்)

சரணங்கள்.

(க) தனம்பெருக் கங்குறைய மனக்கனி வுநிறைய
தினப்பிடிக் கனங்கொடுத்து—நினைத்தவண் ணமுமுடித்து
(முன்)

(உ) பொன்செய்பணி களைப்பற்றும் நஞ்சைபுன்செய் களைவிற்றுந்
தன்செய்கை குறைவுறாமல்—சஞ்சலம னதுறாமல் (முன்)

(ங) செம்மையகத் துள்ளயாவுந் தினந்தோறும் விற்றுமேவும்
தம்மைவிற்குங் கடன் மேலுமே—தான்வந்திட வுமெக்
காலுமே (முன்)

அபங்கு.

(க) இவ்வித நாடொறுந் தொண்ட—ர ற—மேசெய் திடநீல
கண்டர்

ஒவ்விய *தந்தவ ளவிடை—பின்னை யொப்பிடுந்—
‡தந்தவ ளவிடை

---

*தம்தவள விடை—தம்முடைய வெளுமையான இடபம்.

‡தந்தவள விடை—நூலின் அவ்வளவு அளவுள்ள, இடை.

(உ) மாது மின்றித்தனியாகி—பாஞ் ஜோதி யருந்தவர்போ லேகிப்
பாதி மதியணிந்த †சடையார்—அன்—பருக்கருள் செய மனஞ் ||சடையார்

(ந) மாரி காலத்திரு ளுடி—பெய்—மழையால் நனைந்திடத் தேடி—வரச்
சீரினர் கதவை மூடி—யிருந்—திடுமேல் வையில் மன்றுளாடித்

(ச) §திருக்குரற் கேட்டெதிர் சென்று—வந்தார்தந்—¶திருக்குறத் "திருக்கறப் பணிந்தார்
மருக்குல வுமெய்யீரந் துடைத்தார்—மிக்க—மாசுறும் பவங்களைத் துடைத்தார்

(௫) குளிரா விடத்தினில்வீற் றிருக்கச் செய்து—மினிருந் தவர்க்குமன முருக்க—மொடு
மனியோ டமுதிட வேண்டி—மனை—யாருடன் யோசித்தனரீண்டி.

கலித்துறை.

மின்னே யருந்தவர் மேவி நடுநிசி வேளையிலே
கன்னேரு நெஞ்சருங் காண்கிற் றமதகக் கட்டுகள்விட்
டன்னோ மேயங் கனல்மெழு காவா திர்ஷ்டவசத்
தின்னேரம் வந்தவர் தம்பசி தீருத் தியைச்சொல்வையே.

பதம்-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம் (மன)ஜாலகளித என்ற இந்துஸ்தானி போல

பல்லவி.

வந்தவர்பசி தடுத்திடவொரு வகைசொல் வாய்மானே—மண மிகு செழுந் தேனே—தேடி (வந்தவர்)

---

†சடையார்—ஜடையையுடையவர்.
||சடையார்—சலிக்காதவர்.
§திருக்குரல்—அழகிய குரல்.
¶திருக்குற—நேத்திரம் பொருந்த.
"குற்றம் நீங்க.

அநுபல்லவி.

இந்தத் தவராற் பசிதீரொன்-றென வெனைத் தானே-கேட்கநல்ல
தெனவும் வந்தேனே—யிவ்வேளையில் (வந்தவர்)

சரணங்கள்.

(க) இந்தவேளை யகமதிலொன்று மிலையென் செய்வேனே
—யிறையிரு
ளினில்மதிமானே யடியவர்வந்ததுாக லத்தானே—யிந்த
வேளை (வந்தவர்)

(உ) சந்தப் பணையில்வி ளைத்தசாலமுளை தனைவி னைவோடுங்
—கொணரில
தனை யடைவோடுங்—திருவமு துணவிக் கக்கூடும்
—யாணிந்தவேளை (வந்தவர்)

வெண்பா.

இந்தவுரை கேட்டவுட னேமெய் புளகரும்ப
முந்த விழுந்த முதல்வந்த—டைந்தவர்போற்
சென்றூர்பொன் னம்பலத்தின் றேவை மனத்திலுன்னி
யன்றுவ லோடுகொணர்ந் தார்.

பதம்-இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

சாலி முளையைகுண சாலியன் போடுங்கூடை
தனில்நிறை யவாரிக்கொண் டுவந்தாரே (சாலி)

அநுபல்லவி.

காலின்றி னைவால்மெல்லக் கோலிவ ழிதடவிக் கங்குல்மைக்
குழம்பின் சீராகக்
கட்டுவிட் டுருகல்போல் மழைமா ரிபொழியக் கவின்முகத்
திலிறைக்க நேராகச் (சாலி)

சரணங்கள்.

(க) அருந்தவர் பசியினால் வருந்துவ தொன்றுதுக்க
மதனாலவதிசற்றுந் தோணாமலே
அன்பர்முன் வாலணையாற் கம்பமில் லாமற்சென்றங்
கயலிலொ ருவரையுங் காணாமலே (சாலி)

(உ) பகலில்வி ளைத்தவித்து வாய்க்கால்வ ழியினீராற்
பரப்பிவ ருவதைக்கண் டகமகிழ்ந்து
பருத்தகூ டையைத் தாழ்த்தி வாரிவாரிநிறைத்தும்
பண்பார் மனைவிமதி தனைப்புகழ்ந்து (சாலி)

கேசாவளி.

தவாத தவருமு பவாஸ மொடுமில் லில்வாஸஞ் செய யிவாறு
நி னைவார வியலும்மெ னைவா ரன்பிலா (பிழையை
யெனப்ப சியதால் நினைக்கு மெனமா மனத் தின்விரை
வினிற்செ லவெதிர்ந் தினித்த மனைசெல் முளைக்கூ டையை

வெண்பா.

தாங்கினார் *பங்கமிலார் தண்முளையின் §பங்கமிலா
தாங்குநீ ராற்கழுவி யாசகலத்—தேங்கமழும்
வாக்கினார் வந்தவரு மாதவர்க்கன் பாகவுரை
வாக்கினார் மிக்கமகிழ் வாய்.

பதம்-இராகம்தோடி-தாளம்-ஆதி

பல்லவி.

செம்மையமு தாக்கினார் நன்மையுறும் வாக்கினார் (செம்மை)

அநுபல்லவி.

மும்மையுந்தெ ரிந்தபெரு முதறிவி னோக்கினார் (செம்மை)

---

*பங்கம்-முறிவு.
§பங்கம்-சேர்.

சரணங்கள்.

(க) கலக்க மிலார்விறகைக் காணேனென வீட்டின்
அலக்கைமு றித்துக்கொ டுக்க அடுப்பின்மாட் டித்தீ
மூட்டிச் (செம்மை)

(உ) வெய்யபவ முளைதனை யையவருத் தல்போல்முனை
செய்யினெல்மு ளையதனை யுய்யவறுத் தன்புபுனை(செம்மை)

(௩) கறிக்கென்ன செய்வேனென்று கழறக்கொல்
லைக்குட்சென்று
குறிப்புடனி ளங்கீரை கொணர்ந்து சமைத்து நேரே
(செம்மை)

ஆரியா.

(க) விண்ணு ரமுதமு நாண— மின்னுர் வேணி யாளுர் மகிழ்வு
பூண—எண்ணப் படியமு தாக்கி— யிசையார் கணவரி டமே
சொலினர்தேக்கி

(உ) *அருந்தவர் பசியால் வாடி—யாயா சமொடுது யில்வா
னிருகண்மூடி
0 யிருந்தவ ருக்க||றி வித்தார்— இனிதா நடரா ஜர்தாளை
[] யறிவித்தார்.—

பதம். இராகம்—கமாசு. தாளம்—அடதாள சாப்பு.
பூலோங்கி யென்ற இந்துஸ்தானி போல

பல்லவி.

எழுந்தருள்வீர் அமுதுண்ணஎழுந்தருள்வீர் கருணைசெய் (தெழு)

---

* அருந்தவர்—அரிய தவத்தையுடையவர்.
0 இருந்தவர்—இருந்தவர்
|| அறிவித்தார்—தெரிவித்தார்.
[] அறிவித்தார்—அறிவதற்கு மூலாதாரமுள்ளவர்.

அநுபல்லவி.

அழுந்தும மழையால்முடிச் செழுங்கதிர் மேனிவாடி
யாயாச முற்றீரேயென் மேல்நேசம் வைத்தன்புடன் (எழுந்)

சரணங்கள்.

(க) யாம்பயில் தவமேலே தாம்பழுத் ததுபோலே— யென்
னிலந்தேடி வந்தீரேவந் தனங்கோடி— செய்தேனுவந்
(தெழு)

(உ) ஏழைமுக த்தைநோக்கிக் கூழையு மமுதாக்கி
யினிதுண்பீர் அடியேன்மேற் கனநண்பீர்— ஆதரவோ
(டெழுந்)

சந்த நோட்டு. இராகம்—ஹமீர்கல்யாணி. தாளம்—ஏகம்.

தொண்டர் கூற வண்டர் நாதர் மண்டு ஜோதி யாயுறக்
கண்டு மாரர் பெண்டி ரொன்றும் விண்டி டாம லேங்கிடப்
பண்டை வேத விடையி னீல கண்டர் சைவ மாதொடும்
விண்டு வாதி தேவ ரோடு மேவி முன்ப தாகினர்.

பதம். இராகம்—பியாகு. தாளம்—ஆதி.

பல்லவி.

ஈச ரெழுந்தருளி ஞர் விடைமேல் ஜக (தீசர்)

அநுபல்லவி.

மாசின் மனத்தெருளினர் முன்பாக ஜக (தீசர்)

சரணங்கள்.

(க) மந்தரா மவர்களை யிந்திராதி யர்பொழிய
முந்தத் தொண்டர் கண்களில் முதிரும் பாஷ்யம் வழிய
(யீசர்)

(௨) அன்பவுங் களைச்சோதித் தகத்தில் மகிழ்ந்தி ட்டோரன்
றின்பம் பெறவுங் களுக் கீந்தோ ரம துலகென் (ஸ்ரீசர்)

(௩) ‡ தனதனுங் கட்குநாளுந் † தனதனு கிப்பணி
தினமும்பு ரியவைத்தோம் செழிப்பீரென் றுமணி (ஸ்ரீசர்)

விருத்தம்.

ஈச ரருளித் தமதுலக மெய்த விளையாங் குடிமாறர்
மாசில் மனையோ டியர்கையிலை மருவுங் காதை தனைக்கேட்போர்
வாச முறுமில் லறத்திருந்து மகிழ்வுற் றோங்கிப் பின்பாரூர்
நேச வுலகம் புக்குயென்றும் நிலைபெற் றின்ப மூழ்குவரே.

இளையான்குடிமாற நாயனார் சரித்திரம்

முற்றிற்று.

ஆபதம்	5.	அபங்கு	1	சந்த நோட்டு	1.
விருத்தம்	1.	கேகாவளி	1		
ஆர்யா	2.	ஸவாய்	1	ஆக உருப்படிகள்	18.
வெண்பா	2.	கண்ணிகள்	2		
லாவணி	1.	கலித்துறை	1		

ஆக சரித்திரங்கள் உருப்படிகள் 152.

---

‡ தனதன்—குபேரன். † தனதன்—சொந்தமுள்ளவன்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

6 †மெய்ப்பொருளையனார் சரித்திரம்.

லாவணி-இராகம்-மாஞ்சி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

(க) சீர்பொருந் தியசேதி நாட்டினிற் சிறந்த
திருக்கோவ லூர்தனைத் திடவந்து பிறந்த
கார்பொருந் துமலைம ||லாடரின் கோமான்
கலைவேத நெறிவாய்மை யறிந்திடும் சீமான்

(உ) அரசியல் நெறிவந்த வறநெறி புரிந்தங்
கரிகளை வெலுந்திண்ண வரைப்புயந் திருந்தப்
பெருமையாய்த் தரித்தவர் பிறைமதி சூடும்
பெம்மான்மெய்ப் பொருளென்ற பெருமையை நாடும்

(ங) தற்பர சிவனென்ற தன்மையாற் போற்றும்
மெய்ப் பொருளிவனென்று விரிவுல கேற்றும்
அற்புத ரெந்தையாற் கருந்தொண்டு புரிய
அகமதில் நினைத்தன ரவர்புகழ் விரிய

பதம்-இராகம்-காபிதாளம்-அடதாளசாப்பு.

எந்தநின்னுவகடுதூரா என்ற ஜாவளிலோல

பல்லவி.

தொண்டுசெய் தார்-மெய்ப்பொருளையனார் ஈசர் (தொண்டு)

||மலாடர்—மலையாளர்.

அநுபல்லவி.

மண்டுப வத்தைப்போக்கித் தொண்டர்மீ தன்புதேக்கித் (தொண்டு)

சரணங்கள்.

(க) மாடுமு தற்செல்வங்கள் நீடும டியவர்கள்
நாடும்பொ ருள்களென்று தேடிக்கொ டுத்துநின்று (தொண்டு)

(உ) தொண்டரெங் கெனத்தேடிக் கண்டவு டன்கொண்டாடி
யண்டவர் பதம்நாடி யடிகள்தம் முடிசூடித் (தொண்டு)

(ங) அஞ்சக்க ரங்களோதி யக்கும ணிவிபூதி
மஞ்சுடன்த ரித்துக்கியாதி மருவயென் றும்விநோதி (தொண்டு)

(ச) ஈசர்கோ யிற்பிரதிஷ்டை-யெங்குஞ்செய் துவிசிஷ்ட
மாசகல ரற்குநிஷ்டை மருவப் பூசித்துமிஷ்டர் (தொண்டு)

வெண்பா.

இத்தகையாய் மெய்ப்பொருளா ரீசர்மகிழ்ந் தோங்கிநிற்க
மெய்த்தவவே டத்துடனே மேவுதொண்டின்—சுத்தரொன்றென்
ளுருமறி யாமுத்த நாதனன்ப ரோடுசமர்
வாளொடுகா லாளுறச் செய் வான்.

பதம்-இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

அடல் புரிந் தானே அரசர்முன் றனே நின் (றடல்)

அநுபல்லவி.

புடவிகி டுகிடென நடுங்கப்பிர மாதப்
போரினில் ரணபேரிசாற்றிட ¶ முத்தநாதனின் றடல்.

¶ அவன் பெயரன்று ஆனால் மூடர்களுக்கரசனெனப் பொ ருள்கொள்க.

சரணங்கள்.

(க) அணியணி யாக்கா லாட்களை வருத்தங்
கரியயி ரதகஜ துரகமுந் தொகுத்துத்
துணிவுட னுயிரபி மானமுஞ் செகுத்துத்
துலங்குமெய்ப் பொருண்முன்னின் றிணங்குமா
னமுகுத்தங் (கடல்)

(உ) தொண்டர் மகிமைசற்றுந் தெரியாத பாவி
சுகிர்தரைச் சுலபமா யெண்ணியே தாவிச்
சண்டைசெய் திடமத கரியெனப் பூவிற்
சண்டமா ருதமெனக் கண்டவர்ந டுங்கக்கூவி (அடல்)

(௩) அய்ய ரானருளைப் பெற்றமெய்ப் பொருளா
ரடித்துத்து ரத்தச்சேனை யகிலமு முருளக்
கைதவ முற்றமுத்த நாதன்மெய் மருளக்
காந்து தனையுலக மிகழ்ந்துசொ லும்பொருளாய் (சுடல்)

விருத்தம்-

இந்தவித மிகழ்ந்தோட முத்தநாத னிறையவர் மெய்ப் பொருளை
வெல்ல வினியமார்க்க
மெந்தவித மெனநினைந்து மிலங்குபூதி யெழில்திகழ்மெய் யணிந்
துசிவ வேடம் தன்னை
சொந்தமுடன் றரிப்பினல்லாற் சோதியீசன் றுணைகொள்ளு
மவரைவெல்லோ மென்றுநாடிச்
சிந்தையினிற் கபடமொடுஞ் சிவவேடத்தைச் சேர்ந்திட்டா
னவமதனைச் சார்ந்திட டானே

இராகம்-சென்ஜுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(க) கைதவன்சி வவேடங்கொண் டெழுந்தான்—என்று
மெய்தவந் தனிற்சற்று மெய்தவந் தழுந்தான்

(உ) மெய்யெங்குந் திருநீறு பூசி—நாவால்
பொய்யாயஞ் சக்கரத்தைப் புரிதல்போற் பேசி

(௩) கையினிற்ப டைகரந்த பையைப் புத்தகக்
கவளிபோல் மறைத்திடக் காட்டியே பொய்யன்

(௪) கோவலூ ரீனைத்தேடி வந்தான்—மெய்ப்பொருள்வெல்லு
மாவலூ ரிடத்தொண்ட ரகஞ்சார்ந்தங் குவந்தான்

(௫) காவலா ளவரினைக் கண்டு—சிவவேடங்
கைக்கொண்டா ரெனப்போற்றிக் கனிவுரை கொண்டு

(௬) உள்ளெங் துருளுவீ ரென்ன—வுரைத்திடு
மூரியமொழி கள்செவி புகுதவே மன்னர்

(௭) வள்ளலி ருக்குமிட நாடத்— தத்தனென்ற
வாயிற்காவ லன்நாதன் துயிலுமென மூடன்

(௮) கள்ளமொடுஞ் சிவபக்தன் நானே— மன்னற்குக்
கனிவாய்ச்சி வாகமநூற் கழறவந் தேனே

(௯) என்றவன்ற டையைவ மதித்து— உள்ளே
யெழும்பள்ளி தனைக்கொண்ட யிறையிடங் குதித்து

(௰) நின்றவன்ற னைமனைவி கண்டாள்—பள்ளியினின்று
நிமலவெ ழுகவென நிகழ்ந்தன்பு கொண்டாள்

ஆர்யா.

மனைவியு ரைக்கவெ ழுந்தார்—மனதா ரவலிறெடு பவ மீதிலழுந்தார்—பனகம ணிந்தவர் நேரே—பணிசெய் தொண்டரி வரோவெ னவிள்வாரே

தேண்டீ. .

(க) தொண்டர்வே டந்தரிப்பார் நேரே நின்று
தொத்திரஞ் செய்துபூசிப் பாரே—யெங்க

(உ) ளண்டர்நா யகனுருத்தானே—யிவண்
அமர்ந்ததோ வென்றுரைத்து மானே—ஏழை
(ங) யென்றனர்மீ தன்புகூர்ந்திப் போதே—வந்த
தியாதெனச் சொல்வீர்வருந் தாதே—யென்று
(ச) வந்துமெய்ப் பொருளுமே கூற—வதில்
வரைந்தான்முத் தநாதன்பொய் மீற

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ரூபகம்

பல்லவி.

கேளு மையா மனது தேர்ந்து கனிந்து (கேளுமையா)

அநுபல்லவி.

நாளு மன்பர்கட் கமுத மளித்தவர் தாளி ணையில் மலர் தூவி
மகிழு மேதாவி (கேளும்)

சரணங்கள்.

(க) பக்தி நெறியினி லுற்ற மனமொரு மித்தவ ருலகி
லும்மையே விட
யெத்தி சையுமிலே யுத்தம வு னையே நத்தியுமிகம கித்து
வந்தே
னுவந்தேன் (கேளும்)

(உ) உங்கள் கடவுளர் சங்கரர்சொ லும மலங்கிருத வாகம
நூலிதா—மூல
மெங்கு மரிதரி திங்கு மதுசெவி தங்கும் படி கொடு
வந்தேன் மனது ம கிழ்ந்தே (கேளுமையா)
(ங) மோன முடனபி மான முலகினி லேநி னைவின்றிநி
தானமாய்ச் செவி
யே நலமுறயி தான ஸமயம் மெய்ஞ் ஞான முதவுமின்
னூல்நிக ரிலதிதுலே (கேளும்)

ஸ்வாயி·

(க) இத்தகை யாகவு ரைத்தம திதனை மெய்த்தவர் கேட்டுமி
கச்சிறந்தே
நத்தியே நாம்செய்த வத்தின்பே றீதெனச் சித்தம ரைவிக
சித்துவந்தே

(உ) ஐயனே யித்தகி யுய்யும்வ கைசெய்யும் செய்யவிந்
நூலினைச் செப்புவீரே—யெனத்
தையல் விலகிடிற் சொல்லுவே னென்னவத் தண்மொழி
கேட்டதை யொப்புவரே

கலித்துறை·

கன்னே ரகமுறும் வஞ்சகன் சொன்ன கடுமொழியால்
மின்னே விலகெனத் தொண்ட ருரைக்கவும் மேதகையார்
அந்நேர மந்தப் புரஞ்செலக் கண்டுவந் தண்டர்பிரான்
சொன்னேர்சி வாகம நூலினைக் கேட்கத் துணிந்தனரே

இராகம்-சகானா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

(க) வேடங்கொண் டெழுமுத்த நாதனைத்த விசிருத்தி
மேதினி யிற்று மிருந்தார்—மன்று
ளாடும் பிரான்சொல்நூலை ஐயரே சொன்மினென
வாதுர மாய்க்கேட் டமர்ந்தார்.

(உ) கேட்கக் கவளிநின்று நூற்கண் டெடுப்பவன் போற்
கிளர்வாட் கைதவ னெடுத்தான்—அதனைக்கொண்டு
பாற்கான் போல்விளங்கும் பானருள் கொண்டவர்மேற்
பதியக் குத்தியே விடுத்தான்.

(ங) எம்பிரான் வேடமுல கெங்குமெய்ப் பொருளென
வீசர் பக்தியைப் புரிந்தார்—அதனாலிங்கு

துன்புசெய் தாலுமுத்த நாதன்வே டத்தைக்கொண்டு
சுத்தர் வணங்கி யிருந்தார்.

(ச) கைதவன் மெய்ப்பொருளோ டுள்ளே தனியாய் நின்ற
காரணமென் னென்று பயந்தான்—பயந்ததத்தன்
எய்த வாட்கொடுநின்ற பொய்தவமுத்த நாதனை
மிகலைக் குத்தவு முயன்றான்.

விருத்தம்.

இவ்வாறு முயன்றதத்த னற்னைத்த டுத்தே
யிவர்சிவ வேடங்கொண்ட நமராந் தொண்டர்
செவ்வாறு பெருகவதைப் பொருத்து மந்தச்
சிவனடியார்க் கிடையூறு செய்யே லென்றார்
அவ்வாறு சொன்னவுரை கேட்டதத்தன்
அடியேனம் மொழிதவறு நடப்பே னின்னும்
எவ்வாறுங் குற்றேவல் சொன்மி னென்றான்
இனியமொழி கேட்டிசைப்ப ரிறைவரேறே.

பதம்-இராகம்-சங்கராபரணம்-தாளம் ஆதி. ஏழைப்பார்ப்பானடி-
என்ற வர்ணமெட்டுப்போல.

பல்லவி.

அடியார்க் கிடை யூறின்றி யவர்த லத்திற் சேர்ப்பாய் (அடியார்)

அநுபல்லவி.

கொடிய செய்கையுறும் நெடியபூதலர்வந் திடிய தானவுரையே
பகர்ந்திவரைப் பொடிசெயவே நிரையே—வருவர் (அடியார்)

சரணங்கள்.

(க) அண்டர் நாதர்மகிழ் தொண்டரின் பெருமை மண்டலத்
தோ ரறியார் மாணிவனைக் கண்டுமன்பு தரியார்
—பெரிய (அடியார்)

(உ) பூதி மேனிதரித் தாதி யானபரஞ்சோதி நாமமோதித்திகழு
மிவர் கியாதி தெரியப் போதித்—தினிய (அடியார்)

ஸ்வரம்.

(க) மன்னரு ளைகேட்ட பின்னர் சிவவேடன்
றன்னை யழைத்தும்தத் தன்செல வே
பொன்னுல குற்றவ ரின்னவன் செய்கை
பொறுக்க வொண்ணு திவ னைக்கொலவே

(உ) வந்தவ னைத்தடுத் தந்தமன் னனுரை
சிந்தைம கிழ்ந்துதத் தன்மொழிந் தான்
அந்தவு ரைகட்கி சைந்துல கோர்விட்டுப்
பந்தமு றுந்தம் பவமொ ழிந் தார்

(ங) இப்படி யோதியு மிப்படி யோர்வில
கப்பணி வாய்வன முங்கடத்தி
சொற்படி செய்தன னென்றுமன் னராந்
துறவி யிடம் வரைந் தான்றிடத்தில்

(ச) தத்தன் வரும்வரை தம்முரையிர் தாங்குமத்
தண்ணளி யாரிடந் தானும்வந்து
பக்தரைக் கொண்டு விடுத்தன னென்று
பகர்மொழி கேட்டுவந் தார்சிறந்து

பதம்-இராகம்-கானடா தாளம்-ஆதி.

பல்லவி.

போதனை செய்தாரே மெய்ப் பொருளரு நேரே (போதனை)

அநுபல்லவி

ஆதரவுடன் றங்கு மாரா மைச்சரையு மழைத்து முத்தியின்
பத்திற் றிளைத்துவ கைகிளைத்துப் (போதனை)

சரணங்கள்

(க) எண்டிசையுஞ் சாருந் தொண்டரையே நீரும்
கண்டவர் களெமனை யழைத்தமு தமளித்து
மண்டுப வமொழித்து வருவீரென் றுந்
தழைத் தெனப் (போதனை)

(உ) ஐந்தெழுத்து மோதி யநுதினம் விபூதிப்
பந்த மறமெய்யெங்குந் தரித்தீச ரைக்குறித்துப்
பணிசெய்வீ ரெனத்தொண்டர் பக்கதிபெரி தெனக்
கொண்ட (போதனை)

விருத்தம்

மைந்தர்கட் கினியபுத்தி மகிழ்ந்தினி துரைத்தபின்னர்
பந்தம்விட் டவராயீசன் பதத்தையே மனத்திலுன்னச்
சந்தநான் மறைகளோதத் தனிமன்று ளாடுகின்ற
வெந்தைவெள் விடைமீதேறி யினிதுட னெழுந்தார் மன்னோ

இராகம்-வலந்தா-தாளம்-சாப்பு.

பல்லவி

ஈசர்த ரிசனஞ் செய்தார் எங்கள் மெய்ப்பொருணாயனு
ரற்புத ராம் வரஜக தீசர்

அநுபல்லவி

கேசவ னயன்முதல் நேசர்தே டியுங்காணுக்
கிளர்பத மருவியெக் களித்தின்பத் திற்குளித்து ஜக (தீசர்)

சரணங்கள்;

(க) கைலைம லைநிகர்வெள் விடைமீ துமையுமின்னக்
கண்ணான ருகில்நின் று மண்ணால்மேற் றுதிபன்ன
மயிலமரு முருகேசர் கயமுகர் மருவி யருகினி
லமா வுருகிட ஜக (தீசர்)

(௨) கண்களினி ன்றானந்த பாஷ்பங்க ளுஞ்சொரியக்
கருணை வாரிதியக விதழ்மல ரும்விரியப்
பண்ணவர்கள் மலர்மாரி பொழிந்திடப்
பணிந்து தொடர்ந்திடும் பவநோ யொழிந்திட (ஜகதீசர்)

(௩) ஸாலோக ஸாமீப ஸாரூப முங்கடந்து
ஸாயுச்சிய மாந்-துரியா தீத பதமடைந்து
சீலமுடன் ஜகதீசனருகினில் தினமுந் துதிசெய்து
கனிய மொழிபெய்து ஜக (தீசர்)

விருத்தம் பலசுருதி.

இந்தவித மெய்ப்பொருளா ரினிய தொண்டா
வீசர் பத நிழலமர்ந்த காதைதன்னைச்
சிந்தைமகிழ் ந்துரைப்போர்கள் கேட்போரெல்லாந்
தினமுலகிற் சிறந்தபத மடைந்து வாழ்ந்து
பந்தமறப் பவமொழிந்து பரமனான
பரஞ்சோதி யெந்தையுல கமர்ந்தென் னாளும்
சந்ததமுந் தொண்டர்கள்கூட் டத்தினோடு
தாமுமிருந் தினிதாக வாழ்வர் மன்னோ

மெய்ப்பொரு ளாயனார் சரித்திரம்

முற்றிற்று.

கண்ணிகள்	3	ஆர்யா	1	ஆக உருப்படிகள் 19
பதம்	6	தெண்டீ	1	
வெண்பா	1	ஸவாய்	2	
விருததம்	4	கலித்துறை	1	

ஆக சரித்திரங்கள் 6-க்கு உருப்படிகள் 171

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

(7) †விறன்மிண்ட நாயனார் சரித்திரம்

லாவணி அல்லது ஸாகி.

(க) பராசா யுதமுறு மாதவ முனிவன் பரசி ராம நாடு
திரைசெய் கடல்வளம் நிலவள மலைவளம் செழித்திடு
மலைநாடு

(உ) வாரி சொரியுங்கதிர் முத்தும் வயல்மென் முத்தும் மல்கு
கரும்பின் முத்தும்
†வேரல் விளையுங்குளிர் முத்தும் திறலுறும் வேழக்
கரும்பின் முத்தும்

(ங) ‡மூர லெனச்சொல்லும்நல் வெண்முத் தநகையார் முறை
கோக் குஞ்சேரர்
ஆரூர் திருநாட் டேர்முன்சிறந்தமூதூர் அணிசெங்குன்
றூர்சேர

(ச) மறையோர் குலத்தோர் வழிவழி நின்றொழுகு மகிமை
யாலே நிறைந்தே
வுறையு மந்நகரில் வே ளாளர்கு லத்தினில்வந் துதித்தனர்
பக்திசிறந்தே

(ரு) பக்தி நிறையுந்தொண்டர் களைச்சிவ மென்றெண்ணிப்
பணியுந் தொண்டு ¶புரிந்தோர்
மித்தையு லகின்வாழ்வை யெத்தும்வி றன்மிண்ட
ரெனத்திகழ் நாமஞ்சிறந்தோர்

---

†மூங்கில் ‡பல் ¶புரிந்தோரென்ற எழுவாயும், சிறந்தோரென்ற எழுவாயும் உதித்தனரென்ற வினையைக்கொண்டு முடிந்தன.

பதம்-இராகம்-ஸாவேரி தாளம்-ஆதி

பல்லவி

ஆரூரில் வந்து மணந்தார் அரனார் மகிழ்விறன்மிண்டர் (ஆரூர்)

அநுபல்லவி

நேரூர் மலைநாடு வழிநடந்து பாரார் வெகுதேசமதுகடந்து (ஆரூர்)

சரணங்கள்

(க) சீரார் பலதங்கள் மிளிர்ந்திவரும் நீரார் சடையினை நைத்தொநா
முழுது வரும்
பேறே தம தறமெனக்கொண்டு நின்ற வாறே நிலையுறு
கலிநடை வென்ற (ஆரூர்)

(உ) மேருச் சிலைவளைத்துப் புரங்கள்செற்ற சீரார் வை திகத்தே
ரதனிலுற்றுக்
காரர் விடக்கண்டர் வசிககப்பெற்ற சீரால் முக்தி நினைக்க
வினையகற்ற (ஆரூர்)

(ந) தேவா சிரியத்தி னிடைபொருந்து மூவார் தொண்டர்
குழுவி னைமறந்து
மேவா நம்பி யா ரரனையும்வந்து நாவா லொரு வாறு
*புறகென்றுவந் (ஆரூர்)

(ச) நம்பி யிவர் தொண்டு வலிமையென்றும் நம்பித் திருத்
தொண்டுத் தொகைசொல்லென்று
அம்பு லியின் சடையார் நவிலவன்றும் அன்பின் சொல வ
வர் தங் கோதுமகன்று (ஆரூர்)

---

* புறத்துவணங்கிச் செல்லாமல் மனசால் இவர்க்கு அடியேனும் நன்னு னோர்நாளென்று வணங்கி ஒருவாறாக ஒதுங்கிச் செல்லுமென பொருள் கொள்க.

விருத்தம்

ஜகத்திலுளோர் நாமுமுயத் திருத்தொண்டத் தொகைநம்பி
செப்ப நான்கா
வகுத்திவரு மறைகளுக்கெட் டாதவரன் மலரடியை வழுத்துந்
தொண்டர்
மகத்துவஞ்சேர் கூட்டத்தி லிருவருமொன் ருதலெனில்
மகிமைதன்னைப்
பகுத்துரைசெய் திடவொணுமோ விறன்மிண்டர் பணிபெரிதாப்
பகரலாமே.

விருத்தம்

திருத்தொண்டர் மகிமையினை விளக்கவந்த திருத்தொண்டத்
தொகைபாடக் கருவியாகும்
பெருத்தொண்ட ரெனப்பாரோர் புகழ்ந்து போற்றும்
பெருமைபெறும் விறன்மிண்ட ராஞர்க்கேற்ற
அருத்தியொடும் தொண்டுசெய்தந் நாள்தொட்டேநின்
றகிலமுறுந் தொண்டர்களை வணங்கவீசன்
கருத்துமகிழ்ந் திடவுமின்பக் கைலைபுக்குக் கணநாத ரெனவமர்ந்
தார் கனிவாய் மாதோ

பலசுருதி விருத்தம்.

அன்பினிற் றொண்டுசெய்து மமர்விறன் மிண்டர்காதை
இன்பமாப் படிப்போர் கேட்போர் இகத்துறுஞ் சுகங்க ளோற்
பம்புமோர் வினைகள் கொய்து பரமனூர் கைலைபுக்குச் (றும்
சம்புவின் கமலப்பாதந் தனையடைந் திருப்பர்மாதோ.

விறன்மிண்ட நாயனூர் சரித்திரம்
முற்றிற்று

ஆூ லாவணி அல்லதுலாகி	1
பதம்	1
விருத்தம்	3
ஆூ	5

ஆூ சரித்திரங்கள் 7-க்கு உருப்படிகள் 176

உ

கணபதிதுணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

(8) *அமர் நீதி நாயனார் சரித்திரம்.

லாவணி-இராகம்-இந்துஸ்தானி-காபிதாளம்-ஆதிஸாகியாகவும் பாடலாம்.

(க) திருமருவியசே ரியர்வாழ் பொன்னிச் செழுநன் னாடுடையார்
மருமருவியபொழி லுடையார் தடநிறை மருதவேலி யுடையார்

(உ) கிள்ளைகள் மறைகளை யுள்ளப டிபகரும் கிளைவே தியாகமும்
கள்ளவிழ் சோலைக டொறுமறை யவர்கள் கருத்தொடு செயுமகமும்

(ங) மங்கு லொலிகளென வெங்குமுழ ங்கிரத மருவும் மன்னர்கள் தெருவும்
துங்க நிதிகள்குவை குவைகளா விளங்கித் துலங்கும் வணிகர்மருவும்

(ச) ஆகம பாடங்கள் நீங்கிடா துசை வர்கள்வளர் வீதிகளும்
யோக நிலையிலோ வியம்போற் றனையறி வோர்கள்ஸ மாதிகளும்

(ரு) பொருந்திய திருப்பழை யாறையில் வணிகர்த போபல னெனவாழும்
காந்தைய ணிபரம னடியவர டிகளைக் கண்டு வணங்கிநாளும்

ஆர்யா

(க) போற்றிசெய் வதில்மனம் வழுவார் பொய்யா கியவாழ் விடேடி னிதுழுவார்
ஆற்றல தம்பொரு ளின்ப மமர்நீ தியால மர்நீதி யெனநம்பும்

(உ) திருநாம வணிகர் நாளுஞ் சிவநாம மனைதம றவாத வனை
யாளும்
பொருளு டியபுகழ் வல்லார் புயல்நா ணுங்க ருணையாளர்
மிகநல்லார்

பதம்இராகம்-கர்னடா-தாளம்-ஆதி மிசிரகதி

பல்லவி

செய்தார்பெருகியநல் லறமே தினமும்　(செய்தார்)

அநுபல்லவி

வெய்தாம் பிறவிகூடி யெய்தாத வழிதேடிச்　(செய்தார்)

சரணங்கள்

(க) அடியவர் கட்குமுறை விரும்பியே யூட்டி யவரடிமலர்களைச்
சிரமதிற் சூட்டிச்　(செய்தார்)

(உ) நம்பரை மேவிய நம்பர்போல் நாடி
இன்பம்பொ ருந்தும்தொண்ட ரங்கெனத் தேடிச்
(செய்தார்)

(ந) ஏர்வையு டனேபக்தர்க் கிடுங்கோவ ணங்கள்
போர்வைக ளைக்கொடுத்துப் புகழ்மிஞ்ச வேதொடுத்துச்
(செய்தார்)

ஸ்வாய்

(க) நித்யமு மிப்படி பக்தியு டன்சிவ பக்தர்க ளுக்கமு
தொத்திட வேசே
நத்துல வும்பணை யுற்றநல் லூரில் நடத்தும்வி ழாவினி
டத்ததி சீரே

(உ) பொங்குமட மொன்ற மைத்தடி யார்க்குப் பொருந்தமு
தாக்கி விருந்திட நாடிக்

கங்கைய ணியெங்கள் சங்கர னன்ப ரலங்கிருத பக்திவி
ளங்கவே தேடி

பதம்-இராகம்-பியாக்-தாளம்-ஆதி

பல்லவி

வந்தாரே யீசர் மலைமகள் நேசர் (வந்தாரே)

அநுபல்லவி

சந்திரகிரண மென விபூதிசாலத் தழைக்கும் படிக்குபிரும
சாரிகள் போல (வந்தாரே)

சரணங்கள்

(க) சடைகாந் ததோர்திரு முடிச்சிகைதொங்க புடைபுரந்
தவுரமுப் புரிநூல லங்க
அடைவுடன் மான்றோலு மதில்முடித் திலங்க வுடையப
வித்ரமா கதவொளி துலங்க (வந்தாரே)

(உ) முஞ்சி யரைஞாணுற வரையினிற் பொருத்தித்
தஞ்ச மறைக்கோவணந் தாழ்த்திட்டத் திருத்தி
வஞ்சவல் வினைவே ரறுத்திடக் கருத்தில்
மிஞ்ச வுவந்திருதாள் மேதினியி லிருத்தி (வந்தாரே)

(ங) கண்டவர் மன நவ நீதம்போ லுருகத்
தொண்ட ரன்புவெளியிற் றோன்றிடப் பெருகத்
தண்டின்மீ திருகோவணந் தருப்பையுந் திருகக்
கொண்டுவந்த மர்நீதியார் கோதின்மடத் திற்குறுக
(வந்தாரே)

ஸ்வாய்

(க) வந்தவ டிவினைக் காண்டலுந் தூய மனத்தினி லும்வத
னம்மலர் வாகிச்
சிந்தைவி ரைந்தெதிர் வந்துவ ணங்கித்தந் தேகம்பு ளகுற
வேமிக்கன் பாகி

(உ) காணக்கி டைத்திடாத் தங்கள்தி ருவடிக் கஞ்சக்க ளிந்தம
டத்தினிற் றேயப்
பூணமுன் செய்தபெ ருந்தவம் யாதோ பொருந்தும்ப
டிவந்த தென்றனர் நேயர்

(ஙு) வேதிய ருமமர் நீதிய ரைநோக்கி மெய்யடி யார்க்கினபஞ்
செய்யவென் றெண்ணிக்
கோதில முதூட்டிக் கந்தைகீ முடைகள் கோவண
மீதிலகேட் டும்மிட நண்ணிக்

(ச) காணவந் தோமெனக் கண்ணேறு தலிறக ரந்தவர் கூறக்
கனிந்தவர் நாடிப்
தோணம றையவ ருண்ணும்ப டிக்குச் சுவைபெற வேதிய
ரட்டனர் கூடி

(ரு) இம்மடத் திலமு தூண்டடி யேன்புண்ய மெய்தவைப்
பீரென வேயிசை வாகி
நன்மைபொ ருந்தவொ ருமொழி கூறுவர் நாடைந்தொ
ழில்களி னும்நிருவாகி

ஆர்யா.

மணிதிகழ் பொன்னி யிலாடி—வரும்வே ளையில் ம ழையினால
வதிமுடி
நணியிடில் நனையும தென்ன—நற்றண் டிலவிழ்த் ததோர்கோ
வணமின்ன

வெண்பா.

இக்கோ வணமகிமை யெய்தியதுன் பால்வைத்துத்
தக்கோய் நதியாடிச சார்பொழுதி- னிற்கரத்தில்
ஈவா யெனநதியி லேகிமுழ் கிக்குறிப்பி
னுவலுட னேதிரும்பி னார்.

பதம்-இராகம்-சென்ஸ்ஜுருட்டி-தாளம்-சாப்பு

பல்லவி.

ஆடித் திரும்பினார் நீர்விளை யாடித் திரும்பினார்

அநுபல்லவி.

ஊடிப் பிரிந்த மங்கை யைப்பின்னுங் கூடிக் கலந்த
கொள்கை போல் மகிழ்ந் (தாடி)

சரணங்கள்.

(௧) வாரி திக்கதி புண்யங் கொடுத்துப் பாரிலுள்ளவர் பாபங்
கெடுத்துச்
சாரு மந்நதிக் குற்றம் விடுத்துச் சீர ருள்திரு மேனியதிற்
றோயவிடுத் (தாடி)

(௨) கோவ ணப்பெரு மையினைக் கூறிக் கொடுத்துப் பூமிசை
தவத்திற் றேறிப்
பூவ ணப்பதங் களையிப் பாரிற் பொருதிக்களி மிகமீறிக்
கருதிப்ரிய மொடு காவிரி (யாடி)

(௩) கொடுத்த கோவணம் பத்ர மென்ன யெடுத்து ரைத்தய்ய
ரேக வுஞ்சொன்ன
வடிப்பம் போல்வைக்க மனறத்திட் டுமின்னல் மாரிபொழிய
வேநினைந்து சீரியாதி லேமெயுநனைந் (தாடி)

விருத்தம்.

சென்றமறை யவர்வணிகர் வைத்தகோ வணமறையச் செய்து
பொன்னி
யின்றுறைநீர் படிந்தனரோ சடைக்கரந்த கங்கைநனைத் திடவந்
தாரோ
மின்றிகழ்வான் மழையில்நனைந் துவந்தவர்தண் டத்துறுஞ்செவ்
வியகௌபீனம்

ளன்றுகனேந் ததுமுனந்தந் ததைத்தாவென் றூதனைப் புதைத்
தார்தாமே.

வெண்பா.

வேதியராற் றூய விருந்தருக்காக் கிச்சொன்முன
மாதி யடிவணங்கி யய்யர்தந்த—சோதித்
திருக்கோவ ணத்தினைவைத் திட்டதிற்கா ணாதன்
பருக்கோது வார்விற் பனர்.

பதம் இராகம்-தோடி. தாளம்-ரூபகம்.

வைத்தவிடத் திற்றந்தகோ வணங்காணே னென்றூர்

அநுபல்லவி.

சித்தசுத்தி யாயமர்நீ தியார்நொந்து நின்றூர் (வைத்த)

சரணங்கள்.

(க) மாயையினூலே மறைத்ததை மேலே நேயரெங்குந்தேடிவித
னித்தொருக் காலே (வைத்த)

(உ) செய்யமனையுறவோ ரிதென்னென்று மயங்க
அய்யரிடம் வழக்கினி லகப்பட்டுத் தியங்க (வைத்த)

(௩) தேவரீர்சொற் போல்பயபத் திரத்தில்வைத் ததையே
ஆவலுடன் வைத்தநிலை யாராய்ந்து மிலேயே (வைத்த)

(௪) கோவணத்தி னுக்குங்கள்வன் வருவானோ வென்றே
மேவியெங்குந் தேடிவிசா ரித்துங்காணு தின்றே (வைத்த)

(௫) பழியைநம்மி டஞ்சுமத்தப் பகைவரு மில்லை
யிழிவுவந்த தென்றுபயந் தென்செய்வோமென் றெல்லை.
(வைத்த)

கலித்துறை.

வைத்தவி டத்திலே நீர்தந்த தென்ன மயங்கிமன
நெய்த்தவ ராகிப் பணிந்து பணிந்தெழுந் தேங்கிநிற்க
மெய்த்த மறியைக் கரந்துதண் டேந்திய வேதியர்சொற்
பொய்த்தவ னேயென்செய் தாயென்று கோபச்சொற் போற்
சொல்வரே.

பதம் இராகம்-சுருட்டி தாளம்-ரூபகம்.

பல்லவி.

கள்வன்வந் தானே கோவணத்திற்கும் (கள்வன்)

அநுபல்லவி.

உள்ளநி தியிருக்க உயர்ந்தப ணியிருக்கக்
கொள்ளாம லதைவிட்டுக் குறிப்பாயி தற்குமட்டும்(கள்வன்)

சரணங்கள்.

(க) படித்துப் படித்துக்கூறிக் கொடுத்துப்பு னற்காவிரி
யடுத்துமூ ழ்கிமாரி யடிக்கவே தடுமாறி
நடுக்கிமெய் யாடக் கோவணங்கள்மெய் நனைத்தெங்கு மூட
வருங்கோலத்தைப்
படித்தநீர் கண்டுமுள்ளம் பதைக்கிறீ ரிதற்குள்ளே (கள்வன்)

(உ) மிக்கம கிமைபெற்ற மேன்மைக்கோ வணமென்று
தக்கநி சமுரைத்த தப்பிதம் நம்மேலொன்று
தொக்கிட நாடி வருமுன்னமி தற்கிடந் தேடி யொளித்த
வரார்
மெய்க்கச்சொல் வீர்மதித்து விண்வழி யாக்குதித்துக்
(கள்வன்)

(ங) பயந்தவர் போலமெல்ல நயந்தெமக் கிதஞ்சொல்ல
அயர்ந்துவந் தீரேநல்ல அமர்நீதி யெனவெல்ல

மதுபோற்பேர் வாய்ந்து கபடஞ்செய்வ தறியாமற் சார்ந்து
கொடுத்ததுகா
ணுமலெங் கேபோச்சு பூமியிலு மைமேச்சுக் (கள்வன்)

(ச) கொடுத்தோர்நா ழிகையில்லை கொள்ளையிட் டாரோகல்லை
படிப்பாரென் றெண்ணவில்லைப் பதாரம விந்தச்சொல்லைப்
பகாவந் தீரே நன்ருச்சுது பகைவரு நேரே யிதுசெய்வாரோ
பாதுகாக் கிறேனென்று சாதுவைப் போற்சொன்னீரே
(கள்வன்)

கேசாவளி

(க) பிரமாத மிருகோ பமாகி யிதுசெப் பமா ஞகார்
உபமா ரகித வற்பமா மென்னிடமின் பமா ரன்புசெய்
(உ) தெனக்க ருள்புரிந் தனைத்து முமதாய் நினைக்குஞ் செய
லினைத்த முவுமென் மனத்தி டர்களை நினித்தன் புரீர்

வெண்பா

நேய மிகுத்தவமர் நீதியார் மெய்மறந்து
தாயகமா வின்பவுரை சாற்றியே--தூயமலர்ப்
பங்கே ருகச்சரணை பற்றிப் பிடித்தன்ப
ரங்கி துரைசெய்வ ரால்

பதம்-இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி

பல்லவி

குற்றம்பொறுப் பீ ரென்ருர் கற்றவேதியர் முன்னே நின்ருர்

அநுபல்லவி

சற்றும்வஞ்ச மிலேயே தெரியாத தன்மையுளேன் வன்மமிலேன்
உண்மைக் (குற்றம்)

சரணங்கள்

(க) மெய்நடுக்க மேவியே பொய்சொல்லாத மேதாவியே
கையிணைக ளைக்குவித்துக் கலங்கிப் பாத வித்துக் (குற்றம்)

(உ) நேரினிற் றேறு மலே யாருங்கண்ணிற் காணுமலே
சீரின்வைத்த துமா யாவி சித்ரமறைத் திட்டது போலுற்ற
(குற்றம்)

(ந) வஞ்சர்கள்முன் னேநில்லேன் துஞ்சநேரி னும்பொய்
சொல்லேன்.
*அஞ்சுதலை யையு டையேற் §கா றுதலை கூறியே யென்மேல்
(குற்றம்)

ஆர்யா

கவச மௌனமான மூடக் கண்களி நீர்பெரு கியேமெய் யதிலோட
அவச மமர்நீதி யாரே அய்யரி டத்தின முமேயு மைசெய்வாரே

ஸ்வராய்

மஞ்சுள வேதியர் செஞ்சரணங்களை யஞ்சலி செய்துந யஞ்சொல்
வர் நாடி
நெஞ்சினிற் சற்றேனும் வஞ்சமி லேனெனை யுஞ்சகிப்
பீரெனக் கெஞ்சுவர்வாடி
(உ) நூதன வஸ்திரம்பு-ராதன நற்பணி-யாதன மும்பெறு-
மாதன நன்றூர்
ஸாதனம் வேண்டுவ-தேதேனும் நல்குவன்-வேதனு
மொப்பிலா வேதிய வென்றார்.

விருததம்.

‡ஏணிகையிற் பிடித்தேறு பரிக்கள்வர் பதியினிய யியம்பக் கேட்டு
வாணிபகன் றூச்சுதென-வெகுண்டடக்கி யவர்போல-மதித்து
நல்கும்

---

* அஞ்சுதலை—பயப்படுந்தன்மையை § ஆறுதலை—தேற்றுதலை.

‡ ஏணி-மானையுடையவர், கையிற்பிடித்து-கையால் பிடித்துக்கொண்டு ஏறுபரி-இடபத்தைக்குதிரையாகநடத்தும் -கள்வர்பதி-அறுவைரிகளை -யறுக்கும்நாயகன். மற்றொருதொன்யர்த்தம்- ஏணியைக்கையில்கொண்டு-ஏறு பரிக்கள்வர்-ஏறும்படியான. உபரி-மேலானகள்வர்களுக்குப்பதி.

சேணுறுங்கோ வணத்திடைதந் திடுமனத்தோ திலெனக்கோத்
திடுந்தண்டத்தின்
பூணுறுங்கோ வணத்திடைநல் குமென்று ரன்பருங்கையிற்
கொ–டுமென்றார் தாமே.

கலித்துறை.

மாசிட் டருமவிழ்த் துக்கொடுக் கக்கையில் வாங்கியன்பர்
பேசிட் டருமகிழ் வாகிச் சிரம்வைத்துப் பெற்றிபெறுங்
காசிட் டரிய பெருந்துலை நட்டிரு கண்ணினுந்த
ராசிட் டதில்வைத்துத் தூக்கினர் பேரற மாக்கினரே.

பதம்-இராகம்-பைரவி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

வேதியர் கோ வணந்தன்னை யோர்தட்டில் வைக்க வன்பர்
மாதட்டு மீதெட் டியதே யெல்லாந்தெரிந்திடும் (வேதியர்)

அநுபல்லவி.

பூத லத்திலன் பரை மேதக வாக்கித் தாழும்
பொறுமைகாட் டியது போ லருமைத் தொண்டரை யாளும்
வரகிருபாளு (வேதியர்)

சரணங்கள்.

(க) பக்தர்கட் கென்னத் தனி வைத்தகோ வணங் களை
மெத்தத் தராசிலிட்டு மேலெழுந் ததைத் தொட்டு
¶அத்தர்க்கு ளகப் பட்டு *அத்தத்தி லையார்பட்டு
வத்திரத்தையொரு மித்து வைக்கமெத்த மெத்த வுயரப்
பிரமித்த கங்களைத் திளைத்து (வேதியர்)

(உ) என்னமா யமி தென்னப் பின்னுந் துகிற்பொ திகள்
வன்னம் வன்னமா யேற்ற வணிகர்த மையேமாற்றப்
பின்னுமு யர்ந்து காட்டப் பேரிசை நிலைநாட்டச்

¶ அத்தர்-ஈசன். * அத்தம்-பொன்

சொன்னப் பணிகளைப் பின்னும் வைப்போமெனத்
துணிந்தய் யாடியைப் பணிந்தெ ழுந்து கனிந்து (வேதி)

(ரு) ஆகிலுந் தா மல்ல ஆனால்வைப் பேரென்ன
அணியும்ப ணியுந் துய்ய மணியுஞ் செம் பொனு மின்ன
வேருவித் துப்பற் ரூறு லோகங்க ளையுஞ்சொன்ன
விவரப் படிக்கிட்டு மூயாப் படிக்கட்டில்
வெளுப்பு றுங்கோவண மிழுப்ப மனமுந் தவிப்ப (வேதி)

சந்த விருத்தம்.

இதுபுதுமை யெனநகரு ளெவருமதி சயமுறமெய் யெழில்
வணிகர் துகில்பணிகள் மிகுலோக
மதுகளையு மிடவுயர மனதில்மிகு கவலையொடு மறுகிய யரினை
யடிகள் பணியாமுன்
நிதிபுதிய நிதியிவளை வினியென்மனை மகவொடுச நிதிமுனிடுமகி
மைபெறுதுலையேறக்
கதுமெனவ ருளுமெனந லதுவெனவி சைபமனது கனியமன
மகிழ்வொடிது புகல்வாரே

பதம். இராகம்-சென்ஸ்ஜுட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

அருந்துலை யேறினர் அமர்நீதி நாயனார் (அருந்துலை)

அநுபல்லவி.

பொருந்து மீசர் கூறிட யிருந்துயர மாறிடப்
புன்பிறவி மாறிட யின்ப மூறிட (அருந்துலை)

சரணங்கள்.

(க) மறையவ ரடியில் வீழ்ந்துமே வணங்கிமுடி தாழ்ந்துமே
மைந்தன்மனை தானேர்ந்துமே சிந்தைகளி கூர்ந்து மே
(அருந்துலை)

(உ) ஈசர் திருவிபூதி மேல் எனதன்பு மீறுமேல்
மாசில்துலை சரியிட்டு வருமெனவே பேச்சிட் (அருந்துலை)

(ங) பஞ்சாட் சரத்தை யெண்ணியே பரமனை யுன்னியே
வஞ்சமில்லக் கியுமீற மனங்களி கூற (வருந்துலே)

(ச) தனிக்கோ வணமூர் தொண்டுமே சரியெனக் கொண்டுமே
தட்டிரண்டுஞ் சரியாக தொட்டது குறியாக (அருந்துலே)

(ரு) தொண்டர் பெருமை மீறவே கண்டோர்புகழ் கூறவே
அண்டர்மலர்மா ரிதூறவே அருஞ்ஜன்மங்க ளையேறவே ()

கலித்துறை.

தட்டிரண் டுஞ்சரி யாக வருமந் தணர்மறைந்து
மட்டிரு கோட்டு விடைமீ துமையொடும் வான்விளங்கக்
கொட்டிரு கண்க ளிமையாது கைகளைக் கூப்பிமறை
யெட்டித் துதித்து முடியா ததைத்துதித் தேத்தினரே.

தட்கா

இமா சலவரஸ¯ குமா ரிரமணாநி கமா
 தியுமதும கிமா வையுரை செய்த
ரமா வெனிலெனில்வ சமா சொலிடமுடி
 யுமா கருணை பொழி
ஸமா னரகிதமு கமா வொடிசைபெறு குமா
 ரஜனகபு ரமா ளசனையும தமா கநகைநய
நமா ரனலையிடு ரமார் வர விண்ணவர்
 விமா நிதஹரஹ ரமா தயையொடென
யுமனத் தினில்வைத் தாய் அடி யவ ரொடுமொரு
 வனெ னவு நட்புற மெய்த்தாய்.

விருத்தம்.

ஞாலத்தில் போன்பர் தவமகிமை தனைநிறுத்து நண்பிறகூட்டு
மேலைத்தர் மகிழ்ந்துநம துலகீந்தோம் சென்மினென விளங்கு [முன்னூர்
கோலத்திற் றிருநல்லூர்ப் பரமர்புக்க வன்பர்மனைக் குமா [ரேறுடுஞ்
சாலித்த ராசவிமா னத்துற்று வடகையிலே சார்ந்தார் மாதோ.

தோட்டு.

பாலய பக்தம கோலய நித்யகிரு பாலய மாமக ராலய கோர்
வேலையு லாவுற மேலிடு பாலக னுஓப தேசக பாலதரா
மாலய நாடு மேலய்ய நீடு மாகையி லாஸம கேசசி வா,
மாதுமை பாக நாதவ நேக மாதய வாகவென் மீதருள் வாய்.

அமர்நீதி நாயனார் சரித்திரம்
முற்றிற்று.

ஸாகி அல்லது லாவணி	1	சந்த விருத்தம்	1	கேகாவளி	1
ஆர்யா	3	விருத்தம்	3	பதம்	8
தோட்டு	1	கலித்துறை	3	ஸவாய்	2
கட்கா	1				

வெண்பா 3   ஆ. உருப்படிகள் 27.

ஆ. சரித்திரம் 8-க்கு   உருப்படிகள் 203.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

(9) *எறிபத்த நாயனார் சரித்திரம்.

லாவணி இராகம்—இந்துஸ்தானி காபிதாளம்—ஆதி.

கண்ணிகள். ஸாகியாகவும் பாடலாம்.

(க) திருமரு வியகா விரிநதி பாயச் செழிக்கும் பணையில் நாளும்
மருவளர் செநெல்பசு மணிகொழித் திடவிண்ண மார்பதி
[யென்க்கூழும்

(உ) மாடகூ டங்களுப்ப ரிகையிடை யினிற்குல் மஞ்சுது
[இல்போலுறையும்
ஆடாம் பைம்பையர்கள் நிறைபோன் மணிக்கொடிகள்
[அசைந்து மெத்தைமேனிறையும்

(ங) கரிகள் துறையில்மா மயில்கள் புறவிலாங் கத்தில் மின்னு
[ராடும்
நெரிகுழல் களில்வண் டாடும ணியொளிதண் ணிலவினெு
[ளிபோலாடும்

(ச) பொன்னு டியமலை போல்புய ரு பயன்மா போர்க ளாருஞ்
[சீரார்
என்னு ளும்வளமை பெருகுந திசிதிக ளேதிகழ் கருவூரார்

(ரு) ஆனிலை யெனும்பி தானச் சினகாத்தி னமைந்திடு
[மைக்கண்டர்
பானிலை வகலாப் பத்தி புரிபுமெறி பத்தரெ னுமெய்த்
[தொண்டர்

(சு) ஈசா டியவர்கட் கிடரியற் றுமவரை யேபுலி யெனப்பாய்
[வார்
மாசில் மறைபாசு பரசெடுத் தெறிந்து வன்கனல் போற்
[காய்வார்.

வெண்பா.

இத்தகையார ன்ன லினிது செயுநாளிற்
பத்திபுரியன் பருக்குளுபர்—சித்திபெறும்
ஏதச் சிவகாமி யாண்டார்நம் மீசர்பிர
சாதப் பணிவிடைசெய் தார்.

பதம். இராகம்—பூரிகல்யாணி. தாளம்—ஆதி.

பல்லவி.

ஈசருக் கன்பார் தொண்டேபுரிந் தாரே (ஈசருக்)

அநுபல்லவி.

காசினி புகழ்சிவ காமியாண் டாரே நேரே (ஈசருக்)

சரணங்கள்.

(க) கதிருதிக் குழுன்மூழ்கிக் கனிந்துவி பூதி
கடாட்சமி குந்தருத் திராட்ச மணிந்துஜோதி (யீசருக்)

(உ) நித்தியானுஷ் டானஞ்செய்து பக்தியாய் நாடித்த
னிப்பார் செ பிப்பாரென னப்பாரி டழுவப்பார் (ஈசருக்)

(ங) வாய்கட்டி யேநந்தா வனத்தினுட் சென்றுநல
வாஸித ஜாதிரோ ஜாதிதொ டுத்த ஞதி (யீசருக்)

(ச) கொண்டை மாலை யிண்டை சாணிலை யங்கி
குறித்துத் தொடுத்துக் கொடுத்துக் கதியையடுத் (தீசருக்)

ஸ்வரம்.

(க) சந்தத மிப்படிக் கெந்தைம கிழ்தோண்டைச்
சிந்தைம கிழ்ந்துசெ யும்பொழு தோர்நாள்
நந்தவ னத்திற்பு குந்தும லரெடுத்
துந்தனிக் கூடைநி றைந்திட வன்னுள்

(உ) கைத்தண்டத் தங்குசத் திற்புனை தன்பொடு
காலையிற் சாற்றவென் றேவிரை வாக
மெய்த்தொண்டர் செல்லவி வைநிற்க வன்னகர்
மேவும்பு கழ்ச்சோழ னார்மகிழ் வாக

(ங) வட்ட வுலகினிற் செற்றவு ரைவெல்லும்
பட்டவர்த் தனத்தைப் பாகருங் கொண்டே
இஷ்டமு டன்மாந வமிமுன் னுட்பல்
வியமுழங் கநதி நீராட்டி யன்றே

(ச) செழிக்கவ லங்கரித் தேவம தங்கொள்
செயல்கண் டியாவரு மோட வெறிக்க
வழிச்செல் சிவகாமி யார்முன்சென் றேகொடு
வன்கையாற் பூக்கூடை தன்னைப்ப றிக்க.

விருத்தம்.

பறித்தவுட னிறைக்கூடை மலர்சிதற மேற்கொண்ட பாகர்நாடி
வெறித்திடும்மால் யானைமிசை கால்கொண்டு போவார்போல்
விரைவிற்போகக்
குறித்திடுந்தொண் டரும்பதைத்துத் தந்தியின்பின் ரொடர்ந்
தடிக்கக் கூடிவந்தார்
முறித்துச்சென் றிடமூப்பாற் செலமாட்டா தாங்குநின்று
மொழிந்தார்தாமே.

பதம். இராகம்—செஞ்ஜுட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

சிவதா சிவதா பவதா ரணபரம (சிவதா)

அநுபல்லவி.

தவதா ரகப்பிரும ஸத்குரு வேஸதா (சிவதா)

சரணங்கள்.

(௧) தந்தியு ரித்துப்போர்த்த வெந்தாயெ ளியோர்வலி
தாளுகி யன்பாறி வானதெள் ளமுதே சதா (சிவதா)

(௨) தண்மதிக் கங்கைபுனை யுஞ்சடை யே றுமலரை
யெண்ணிக்க ரிசிதற வெண்ணுமோ புரமட்ட (சிவதா)

(௩) தஞ்சமென வேநம்புந் தனையனுக் காகக்கரு
மஞ்சனைய மேனியின் மறலியை யட்ட ஸதா (சிவதா)

விருத்தம்.

என்றுரைத்த மொழிகேட்டங் கெறிபத்தர்
தொண்டர்முன மெய்திமூளுங்
கன்றுமன லெனப்பொங்கி யானடியார்
வழிப்பகைகைக் களிறேயென்றே
கொன்றதைவீழ்ப் பனெனமழு
வெடுத்தநிவி ரைவிற்சென்று கொற்றத்தந்தி

சென்றவழி நோக்கிக்கண்ட டர்த்தார்
கெம்பீரமனத் திடத்தார் தாமே.

பதம். இராகம்—பூரிகல்யாணி. தாளம்—ஆதி.

லாலனமன என்ற இந்துஸ்தானிபோல்.

பல்லவி.

மா மதகரி யதனையே வீழ்த்தார் (மாம)

அநுபல்லவி.

(ஈசர்) மலரடி களில்முடி தாழ்த்தார் (மாமதகரி)

சரணங்கள்.

(க) எங்குசெல்கி றாயென யெதிர்ந்துபுலி போலப்பாய்ந்து
பொங்குகனல் போற்கிளம்பிக் காய்ந்து (மாமதகரி)

(உ) கண்டவுடன் வெங்கனற் கட் கரி சீறிப் பதறக்
கொண்டவெறி யோடெதிர்க்கக் கோப (மாமதகரி)

(௩) ஈசர்முன் னூ ரித்தவேழ மெய்த்தியுயிர் பெற்றுவந்த
தோஜலதி மூழ்குநாக மோ வென (மாமதகரி)

(௪) * துதிக்கைபெ ருமலரை மதிக்கை யிலா மற் சிதறுங்
o துதிக்கை துண்டுபடவே வீட்டி (மாமதகரி)

(௫) பாகரங்கு சத்தைநியிர்த் தேசடிதி யிற்சுழன்று
பம்பரம்போ லச்சூழ யாடு (மாமதகரி)

விருத்தம்.

படபடென வுடனங்கிக் கடலெனக்க தறிமலைபோற்
பாய்ந்துவீழ
வடமுறவைம் புலப்பகையை
வென்றார்க ளிற்றின்மே லமர்ந்து தாண்டும்

---

* துதிக்கை—தோத்திரஞ் செய்கை. o துதிக்கை—தும்பிக்கை.

திடமுடைப்பா ளர்களிரு வர் கோற்காரர்
மூவர்களைச் சினத்தில் வீட்டிக்
கடவுள்ருத்தி ராங்கிசமாய் நிமிர்ந்தார்கைப்
பாசொடுமங் கமர்ந்தார் தாமே.

ஆரியா.

(க) கண்டவ ருள்ளமும் வாடிக்—கால்போ லோடி யாண்வாயில்
தனைநாடி
மண்டிய காவலர் நேரே—மனகொந் துநடந் ததீதெ
னைநவாரே

(உ) சொற்றவு டன்விரை வாகச்—சோளேந் த்ரவரம ஹரா
ஜனதிவேக
முற்றாண் வாயிலில் வந்தான்—முதிர்கோ பமதா லுமே
விழிசிவந்தான்.

கலித்துறை.

இதியா வராற்செய் தரிதன்னவி சாரித் திடாதுநிற்க
மதியூக தந்திரத் தின்முத லோர்வள வன்னிலைகண்
டதிவேகத் தோடு சதுரங்க சன்னத்த ராகிநிற்கக்
கதிர்வேல னென்ன வெழுந்தான் செனியர்சி காமணியே.

பதம். இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

பல்லவி.

சினத் தொடு மெழுந் தானே சென்னிய னதி (சினத்தொடு)

அநுபல்லவி.

கனத்தக னகமக மேருவ னேகமென—வனத்தி லுயரிர தங்கொடி
கள்நிறைய—மனத்தி டையிருக யங்க ளொடுவிரைய(சினத்தொடு)

சரணங்கள்.

(க) வாரி யலைகளின் வாவி வருதுாக—மனேகங் கள்ச
வாரி யிடமதில் நேர்குடை களுமாக—மெனச்சினந்து

நேரு மருவலரை யுடர்த்திடு மதி கூறிய புகழிகள்
நிரப்பிடுமிரு
நெட்டுறு தூணி ரஞ்சரந்தமு தருகு றக்கட்டிடியமா
வீரங்கொண்டவர் மருவச் (சினத்தொடு)

(உ) காங்க ளினிலயில் சிலைமழு வதிவேக—பிண்டிபா லத்தோ
மரங்கள் முசலம் வளைகழு வசியுமாகக்—கழல்களைப்பூண்
டுரங்கொள் பேரிகை சங்கொடு தாரைகள்
மருங்கு சூழ்துடி பம்பைகள் தூரிய
மொத்ததிர்ந் திட முழங்க வுயரண்ட பித்தியின்செ
விடுமண்ட
மிகவேகொண்ட (சினத்தொடு)

(ங). மாலின் மணிகள்க ணீரிட மகியதிர—நடத்தங்குசத்
தால்வெரு விடுபிளி றிடமுகில்விதிர—சங்கங்கள்போல
வாவுப ரிகளறு மானிதமுற வழி—மேவுறு சைனிய மேலிடு
மொலிகள்மி
குந்தகடலெனமு ழங்கவதநடு வெழுந்தகதிரெனந
லங்கொள் பரியின்மிசை (சினத்தொடு)

விருத்தம்.

கடுவிசைகொண் டெழுந்தாச வீதிவழி சென்றடுபா கரொடுதந்தி
படுகளத்திற் குறுகிட்ட பகைவரைக்கா ணிருகைப்
படுவேழத்தைத்
தொடுபரிசி றெடுங்கண்டான் நடராஜ னடிபரவு தொண்டரிந்தக்
கொடுவினைசெய் யாரெனவே யயிர்த்திடச்சூழ் பாகரிது
கூறுவாரே.

வெண்பா.

பாரா ளரசேநின் பட்டவர்த்த னத்திடத்து
நோராய்ப் பகைவரெவர் நிற்கவல்லார்—ஆராயுங்
காலிப் பாசரிந்தக் கைமலைக்குத் தீங்குசெய்தார்
மேலிதிற்சந் தேக மிலை.

கலித்துறை.

* என்னச்சங் கக்குழை யாரன்பர் நற்குணத் தின்னியல்பார்
† மன்னச்சங் கொள்ளப் புரிபிழை கண்டன்றிவ் வாறியற்றூர்
‡ வன்னச்சங் கச்சது ரங்கத்தி னேக்கை யமர்த்திநிச்
§மின்னச்சங் கக்குரல் வாம்பரி நின்று மிழிந்தனனே.

இராகம்—சென்ஸஜுட்டி. தாளம்—ரூபகம்.

கண்ணிகள்

(க) வன்னப் பரிவிட் டிறங்கி வளவன் மன்னன் விதனித்தான்
—உழை
தன்னிற் சூழ்வோரை யுமகிறுவினன் தானே கவனித்தான்
—இந்த

(உ) மைக்குன் றனைய மொய்ம்பு டையவிம் மதக ரியின்
முன்னே—பத்
திக்குன் றனையர் புக்குந் தோறும் தீங்கிலா தின்னே—யென்னத்

(ங) தவமு டையவ னுக்கி னுரெனத் தனகத் தெண்ணினன்
—இந்தப்
புவனத் தரசர் சரமிட் டிடுமெய்ப் புகழை நண்ணினன்

(ச) பக்தர் கள்சிரோ மணிய ரசனன் பரிடம் நாடினன்—நல்
சித்தங் கனிந்து திருவ டிகளைச் சிரத்திற் சூடினன்.

வெண்பா.

பணிந்தெழுந்து மெய்யன் பரோதந்தி க்கையைத்
துணிந்திடவும் பாகர்துடி த்துத்—தணிந்துபட
வீழ்ந்ததுவும் வந்த விதம்சொன்மி னென்ன வன்பர்
ஆழ்ந்தி தனையுரைப்ப ரால்.

---

* என்னச்சங்கக்குழை—என்று சொல்லச் சங்கென்னும் பூடைக்காதி லணிந்த. † மன் அச்சம்கொள—அரசன் பயத்தையடைய. ‡ வன்ன, சங்கச், சதுரங்க—அழகிய கூட்டத்தோடு கூடின, ரத, கஜ, துரக, பதாதி. § மின்னச் சங்கக் குரல்—பிரகாசமானவும், சங்கையொத்த தொனியுமுள்ள சத்தம் பொருந்திய.

பதம். இராகம்—செஞ்ஜுருட்டி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

நடந்தசங் கதியே நவில்கிறேன் பதியே

அநுபல்லவி.

திடம்பெறு தந்திசெய்த தீங்காலித் ததியே (நடந்த)

சரணங்கள்.

(க) காலை வேளையிற்சிவ காமியாண் டாரே
ஏலவீ சர்க்குமல ரெடுத்தெய்த நேரே (நடந்த)

(உ) பள்ளித்தா மக்கூடையைப் பறித்து வந்தாரே
தள்ளித்தந் திபறித்துச் சதித்ததிவ் வாறே (நடந்த)

(ங) சகித்தி டாமலாண்டார் தவித்திடக் கண்டேன்
தகிக்குமக் கினிபோலத் தான்சினங் கொண்டேன் (நடந்த)

(ச) பதித்தகை யைக்கையின் பாசுவாற் றுணித்தேன்
குறித்திடாப் பாகரையுங் கொன்றுசி னந்தணித்தேன் (நட)

சந்தவிருத்தம்.

இதுசொற்ற தனைமுற்று முணர்வுற்ற வளவத்தி
னிறைசிட்ட ரெறிபத்த ரென நாடியே
மதுவுற்ற கமலத்தி ணையெனச்சொல் பதனைப்பொன்
மகுடச்சி ரமதுற்றி டவே சூடியே
விதுவொப்பு வதனப்ர பைசொலிக்க வுறைவிட்டு
மிளிர்கட்க மதனைக்கை கொடுநீடியே
அதிகைக்கொ டெனைவெட்டி விடுமிப்பி ழைபொறுக்கு
மடுமொக்கு மெனமெய்ச்சொல் புகல்வானரோ.

இராகம்—ஆனந்தபயிரவி. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

(க) பக்தியி லுற்சிறந் தோரே பாவிசெய்பி ழைக்குநேரே
கத்தியினு லெனைத்துண்டு கண்டுகொள் வீரே

(உ) தந்தி பாகர் செய்த தீதுக் கிந்தத்தண்டனை போதாது
தமியேனையுஞ்சேர்க்கில் நன்றாய்த் தருமென்றிப் போது

(ங) வந்ததொண்டர் மெய்பதறக் கந்தமல ருஞ்சிதற
மறித்துப்ப றித்ததந்தி யால்மயங் கிக்கதற

(ச) இந்தவினைக் கெல்லாநானே யேதுவாக விருந்தேனே
எந்தைசிவா பாதத்துக் கிடோ அடியேனே

(ரு) தந்தியால்ம லர்க்குடலைச் சிந்தவீழ்ந்த தற்குடலைத்
தானேவெட்டி விட்டாற்றீருந் தண்ணளி க்கடலே

ஸவாய்.

(க) மெய்யுரு கித்தொண்டர் கையினில் மன்னன்
விதிர்த்திடும் வாளைக் கொடுத்திட வாங்கிச்
செய்ய வளவன் றிடமுறும் பக்தி
தெரியாது கெட்டே னெனவன்ப ரேங்கி

(உ) வாங்கிய வாளினைத் தாங்குமெ றிபத்தர்
மாவள வன்பக்திக் கஞ்சின ராகத்
தீங்குபு ரிந்தது தாமெனக் கண்டத்திற்
றீட்டுறும் வாளினைப் பூட்டினர் நோக.

ஆர்யா.

கண்டு நடுங்கின னுகக்—கடிகா விரிநாட னுடி விரைவாகத்
தொண்டர்புயத்தைய றுக்கத்—தொடுவார் காவாள மேன மூவி
வாங்கிடு மன்பரு மடைவே—மதிசோர்ந் துளம்வா டிகாடி [நிற்க நின்றிடவே
ஓங்கி யுமேவெள்ளி டையே—யுயர்சொல் லுமெழுந்த தேய தன்புடையே

பதம். இராகம்—வஸந்தா. தாளம்—ஆதி.

பல்லவி.

திருவாக் கெழுந்த துவே ஆகாயத்தில் (திருவாக்)

அநுபல்லவி.

மருவாய்த் திடுங்கொன்றை மலர்சூ டியருள்செய் யத் (திருவாக்)

சரணங்கள்.

(க) கண்ணுதல ருள்புரியக் கதிக்குமுன் தொண்டுதெரியத்
திண்ணியக ரியால்மலர் சிதறியதென் றுபெரிய (திருவாக்)

(உ) மண்ணடிய வர்களகம் வெண்ணெயென வேயுருக
வெண்ணும்வ ளவன்பக்தர்கண் ணினிதாநந்த நீர்பெருகத் ()

(ங) மத்தகய மும்பாகரு மொத்துயிர்பி ழைத்தபீஷ்ட
பத்தர்கட்கு முத்திநிலைச் சித்தியினை நிலைநாட்டத் (திருவாக்)

விருத்தம்.

திருவாக்கங் கெழுந்திடவே யெறிபத்தர் வளவர்கோன்
திருத்தாள்வீழ்கத்
தருவாய்க்குங் காதலத்தான் எறிபத்த ரடிவீழ்கத் தாமெழுந்து
மருவாய்க்கும் பேரொலியை வணங்கியிரு வரும்போற்ற
வானோர்விண்ணைப்
பொருவாக்கும் படிமலர்தூற் றிடவன்ப ரிருவருமெய்
புளகுற்றாரே.

பஞ்சசாமரம்.

(க) குன்ற வில்லி யருள்செய் திடத்தண் கூடை நிறைந்த
மலரினோ
டன்றுள் மகிழ்ந்தி டச்சிவகாமி யாண்டா ரெழுந்தங்
கிவரினோ

(உ) டணுகி நிற்க முகிலை யொப்ப யானை பிளிறிட் டெழுந்தவே
துணிவு றும்பாகர் கோற்கா ரொடுந் துரைதாள் வணங்கி
விழுந்தவே

(ங) கண்டு மன்னன் மகிழச் சேனை கடல்போ லப்பொங்
கிக்கலிக்கவே

யெண்டருமுரா சங்கள் முழங்கி யிடிக்கு முகில்போ
லொலிக்கவே

(௪) பத்த ராசன் றனைக்கும் பிட்டி பத்தி லேறிக் கண்களிக்கவே
இத்த கையுடன் பவனிவருக வெனவி சைந்தின்பங்
குளிக்கவே

வெண்பா.

மைநாக மீதில் மருவுஞ் செழுங்கதிர்போல்
கைநாகத் தாரோ கணித்திடவே—பைநாகந்
தாங்க வுடனெளிக்கத் தார்வேந்த னுள்ளமகிழ்ந்
தாங்கு பவனியெழுந் தான்.

பதம். இராகம்—கரகரப்பிரியா. தாளம்—ஆதி.

பல்லவி.

பவனி வந்தான்புவிக் கீசன் சிவ பக்தி மிகுத்த சோள மகாராஜன்
(பவனி)

அநுபல்லவி.

தவமிகு பாரிற் றழைக்குமு தாரி சங்கரர் கிங்கரர் களுக்குபகாரி
சைல நிகர்த்ததந்திப் பிடரேறிப் (பவனி)

சரணங்கள்.

(க) எழுகட லுந்திரண்டாற் போலே—சேனை—யெங்கினும் பொங்கி
வர மேன்மேலே தழுவியேநாடச் சாய்மரை போட [ங்கி
சந்திரவட் டக்கவிகை தண்ணிழ லாடத்
தாசிக ளரம்பை போல்நடமாடப் (பவனி)

(உ) நடராஜர் திருவரு ளூடி—நளினப்பதவிணை களைமுடி-சூடித்
திடபக்தி கூடிச்—செழுத்திடநீடிச்
சிவகாமி யாண்டார் பக்தி தனையுங்கொண் டாடிச்
செய்ய தொண் டர்க்குப் பெரு மையைத்தேடிப் (பவனி)

(ங) நம்பிய தொண்டர்களின் சீரே—நட—ராஜரன்றி யறிய யெவர்
யம்புவி போற்ற வவிர்மலர் தூற்ற [நேரே
அன்புட னெறிபத்த ரகமகிழ்ந் தேற்ற
அண்டர்நாய கனென வேதோற்றப் (பவனி)

விருத்தம்.

* பெரும்பவனி வந்துமணித் திருக்கோயிற்
புகுந்துசிங்கப் பிடாற் றங்கி
† விரும்பவனி யாசர்பணி யாதனத்திற்
பானுகுல வேந்தன் பத்திக்
‡ கரும்பவனி தயமகிழ்ந்துற் றுலகமெலாங்
காக்கவன்பர் களைக்காத் ○ தின்பந்
தரும்பவனின் னயவுலகை யெறிபத்தர்
காணியெனச் சார்ந்தார் தாமே.

எறிபத்த நாயனார் சரித்திரம்

முற்றுற்று.

வெண்பா	4	பதம்	7	ஆர்யா	2
கலித்துறை	2	பஞ்சசாமரம்	1	ஆக உருப்படிகள்	28
விருத்தம்	6	கண்ணிகள்	3		
சந்தவிருத்தம்	1	ஸவாய்	2		

ஆக சரித்திரங்கள் 9-க்கு உருப்படிகள் 231.

* பெரும்பவனிவந்து—பெரிதாகிய நகர்வலம் வந்து. † விரும்பு, அவநி, யாசர்—விரும்பத்தக்க, பூமியையாளக்கூடிய வேந்தர்கள். ‡ பக்திக், கரும்பவன், இதயமகிழ்ந்து—பக்திக்கரும்புபோல் இனிமையான, இதயத்தோடு, மகிழ்ச்சி பொருந்தி. ○ இன்பந்தரும், பவன், நின்னய வுலகை—இன்பத்தைக் கொடுக்கும்படியான வீசனுடைய நிர்ணயமான வுலகை, அதாவது கைலயங்கிரியை எனக் கருத்து.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

(10) † ஏனாதிநாத நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்—இந்துஸ்தானிகாபி. தாளம்—ஆதி.

ஸாகியாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

(க) பொன்வரை யினில்புண்ட ரீகக் கொடிநிறுத்திப் பூவுல
கினையளிக்கும்
தன்னிக ரில்தரள வெண்கவி கைநிழற்றத் தார்புனைந்
துமெக் களிக்கும்

(உ) வளவர் பரம்பரைகள் விளங்குஞ்சோ ணாட்டினில்
வண்டறை பூஞ்சோலை
வளமிகும் மருதத்தண் பணைசூ ழெயினனூரின் மகிமைக்
கிணையோ வேலை

(ங) வேழைக் கரும்புமென்க ரும்பினுஞ் செந்நெலோங்கி
விளங்கும் வளத்தை நேர
வாழக்கு டிதழைத்து மன்னிய வப்பதியில் மருவிவந்
தனர் தீரர்

(ச) ஈழக்கு லஞ்சிறக்க வந்தவ தரித்திடு மேனாதி நாதனார்
சூழத்தொண் டர்கட்கென்றும் உபசரிக் கநினைப்பார்
ஸகுணர் பக்திவி நோதனார்

பதம். இராகம்—ஹரிகாம்போதி. தாளம்—ஆதி.

ஸநிதோடித்தேவே என்பதுபோல

பல்லவி.

உப சரித்தாரே தொண்டரை (யுபசரி)

அநுபல்லவி.

சுபசரி தப்பிரக் யாதர் சுகுணரே ஞதிநாதர் (உபசரி)

சரணங்கள்.

(க) மன்னற்கு வென்றி வடி வாட்படைப யிற்றும்படி
நன்னயத் தொழிலிற்கொடி காட்டுமவ ரடிக்கடி (உபசரி)

(உ) தொன்மையாந் திருநீற்றுத் தொண்டின்வழி பாட்டி
லேற்றும்
நன்மைதவ ருது சாற்றும் நலம்பெறவே யென்றும்
நோற்றும் (உபசரி)

(ங) வாட்படைப யிற்றிவந்த வளந்தனையெல் லாம்பொருந்தத்
தாட்டிகர்தொண் டர்க்குக்ந்த தன்மையோடாக் கித்திருந்த

(ச) அதிதிகளைத் தேடித் தேடி அவர்களைக்கண் டுகொண்டாடிப்
புதியவமு தெனநாடிப் பொருந்தமுத மீன்றுங் கூடி (உப)

விருத்தம்.

எத்தினமு மிவ்வாறு தொண்டுசெய்யு
மியல்புடனிவ் வடியார்களி லங்கிநாளும்
சத்துருக்கு மூமுமிவர் தம்மையேற்றும்
தன்மையினிலமர்ந்து நின்று மொழுகுநாளில்
சத்தியமில் லாதபக்தி நெறியில்லாத தானென்ற
வகந்தைகொண்ட சூரனென்ற
பித்தனிந்த வடியார்போல் வாள்பயிற்றும்
பெருந்தொழிலில் தாயாத ஞகினனே.

வெண்பா.

சூரனென்ற தீயோன் சுகுண ரடியவர்முன்
நேரில்நின்று வாட்பயிற்றி நிற்கவொணு—நீர்மையினல்
ஏனுதி நாதர்புக ழேற்றமுற வேசகியா
னவவ னேயிகலா ஞன்.

ஆரியா.

ஆதலி ஞலடி யாரை—யமர்செய் துவென்றி டுவோ மெனவுநேரே
பாதக னவரைய ழைத்தான்—பரிபவ முறவவர் களொடுச
மர்விளைத்தான்.

பதம். இராகம்—மோகனம். தாளம்—ஆதி.

பல்லவி.

போர்புரிந் தான்வெகு கோரன்—இந்தப் புவியிலெ வருமிகழ் சூரன்

அநுபல்லவி.

நீர்புனைந் தசடையார் நேசமென் றமுடையார்
நிற்றலு முத்தம மைப்பணி பக்தி நிகழ்த்திய சுத்தர்மு னக்ரம
முற்றிடப் (போர்)

சரணங்கள்.

(க) கதிரோ னெழுமமுங்கு மதிபோ லெழுந்த தீய
கரிக்குணங் களுடைய•கயவன் மதியுபாயன்
சதிசெய்துங் குடிகெடத் தானெடுத் திடுங்காயன்
ஸத்குணி களைக்காணில் தயங்கி யொதுங்கும்பொன்
தன்னொடு துன்னிய பன்னக மென்னவும்
இன்னல்கள் பின்னமும் வன்மமு முன்னிய
சொன்னல்கள் மின்னிய கன்னல்கள் செந்நெலும்
அன்னிய நன்னக ரின்னவை யுன்னிய
தீது றுங்குண மள்ளர்க ளும்பல—மேத டம்புய முள்ளவ
[ரும்பலர்
வாது றுஞ்சம ரெள்ளியு றுந்தல—மீது வந்திடு கொள்ளைசெ
[யுங்கல
கத்தைவி ளைத்திடு முக்கிரர் சேரவு—கிர்த்திற முற்றபு
[லிக்கிணை நேரவு
ரத்திற மொத்தந ரிக்கிணை போலவும்—உத்தம பக்தர்மு
[னக்ரம மேலவும் (போர்)

(உ) போர்க்களத் தினில் வெற்றி புரிந்தவர் வாள்பயிற்றும்
புகழ்தருந் தொழிலினைப் *புரிவோ மெனவேமுற்றும்
மூர்க்கனை யழைக்கவென் றும் முதிர்ந்தபக் தியியற்று
முனிவரே ஞதிநாதர் முனிந்ததற் கொப்பிச்சுற்றும்
மொய்த்திடு மெத்தவ லுத்தபு யத்தவர்
கத்தியொ டொத்ததை மெத்த வுரத்திறம்
வைத்த ரிமையத்தெறு மத்தவி றற்படை
முற்றுணர் கற்றவ ரைத்துணை பெற்றிட
வீர கண்டையெ னுங்கிளர் மணிபத
மார வென்றித ரும்படை பலவித
மேரு வென்றிடு மம்புஜ முறுமத
மீறு வெங்களி றென்றய மூளமித
மொத்தவர் கச்சுமி றுக்கியு நின்றிட
வத்தம வரத்தெவு றுக்கியும் வென்றிட
நத்தி யவர்கருமுன் வெட்கம கன்றிட
அத்தரு ணத்தினில் உக்கிரன் முன்றிடப் (போர்)

(ங) வீர ருரும ருங்கும் வீசும்வாள் நுனி நாக
மின்னலை நந்தவர்நா வென்றுவி ளங்கவேக
மாரிய திர்க்கெதிரா யடுத்தமர் செய்யத்தேக
மற்றுச்சி லர்வீழ்ந்திடு மமர்க்களத் தினிற்சாக
அத்தவ ரசுடவ ழிந்துதி றைந்துதி
ரங்கடல் பொங்கியி ருப்புவி யெங்கும்
விரிந்துறு டந்தர மன்றுபொ ருந்திட
வுகநூ றின்குல முங்கத றுஞ்சிலர்
காக மங்கு விழுங்குடர் கொத்திட—வேக விந்து மருங்கினில்
[மொய்த்திட
வேதுரங் குமி ழந்தவர் பற்பலர்—வாகு வின்றிவி ழுந்தவர்
[சிற்சிலர்
இத்தகை யுத்தம திற்புவி செய்தத-வத்துரு வத்தின ருக்கிர
[மெய்துசெ
யிர்த்தெழு வத்ததி யிற்பெரு மூடன்வ-லித்திற மற்றுவ
[ருத்தமும் நாடவும் (போர்)

கட்கா

தொண்டரும் வெஞ்சமர் நின்றுமெ ழுந்தெதி ரும்ப டையின்பல
ரும்பட வும்பல முந்திக ழுஞ்சில ரின்சிர முங்கொய வுஞ்சில ரின்கர
முங்கெட வுஞ்செய்த ருந்தவர் நின்றிட வுங்கய வன்பரு கண்களி
னின்றுபு லிங்கமு திர்ந்திட வன்பரை வென்றிட வுந்திட மன்றிம
யங்கியொ டுங்கிந டுங்கிம றைந்துவி ரைந்தும ரங்கந்—தனை
விட்டுநடந்தே அதிவிரை வினி-விகழ்வொடு-புறகிட் டனனேந்தே

சந்தவிருத்தம்.

அந்தவிர வொன்றுசய நந்தனில மர்ந்திடவு மங்குறுயி லின்றிமரு [வியசூரன்
இந்துதர ரன்பரையும் வஞ்சனையில் வென்றிடுவ மென்றிருள்பு [லர்ந்திடும மயனோ
வந்திருவ ருந்தனி யி டந்தனிலு நின்றமரு வந்துசெய்வ மென்று [சொலி விடவார
முந்தரம மர்ந்திவரு மன்பருமி சைந்திடவு முந்தியவி டந்தனில [மருவாரே.

வெண்பா.

வஞ்சகன்று நித்தலிடம் வந்தவன்பர் நின்றிடவும்
புன்செயலோன் வஞ்சம் பொருந்திடவும்—மஞ்சளமார்
பூதி நுதலணிந்தும் பொய்யனதைத் தான்மறைத்துஞ்
சாதுறும ரங்கமமர்ந் தான்,

பதம். இராகம்—கல்யாணி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

எதிர்த் தானறஞ் செயவி திர்த்தானே—யெந்தை—யிடபந்தனி
லமர்சுந்த ரிடமன்பொடு தொழுமன்பர்முன் (எதிர்த்தான்)

அநுபல்லவி.

கதித் தாரணி யத்தில்வி டக்கினைக் கண்களிநே ரக்களியுறு
சிங்கமெனச் சொலுமவரையும் (எதிர்த்தான்)

சரணங்கள்.

(க) கையினிற் பலகையுங் கடகமுங் கவச முமிக வணிந்து
[கொடுஞ்
செய்கையே தொழி லெனப்புரி பவன் றீங்கு புரியத்
[துணிந்து—நின்ற
பொய்யனுந் துள்ளிக் குதிக்க வெந்தப்—புவனமு மவ
[மதிக்க வந்த
கைதவன்மெய் மறந்துபாவ—மெய்திடவும்வி ரைந்து மேவ
கந்தையுடனு மெந்தையீசர்—சொந்தர்முனிலும் வந்து மூச
(எதிர்த்தான்)

(உ) கச்சு மிறுக்கி வாட்கையுங் கொண்டு கழல்பதங் களி
[லொலிக்கத்—தொண்டர்
மெய்ச்சு மேனுதி நாதர் சிறந்து மிகும முகுடன் ஜ்வலிக்க—
[நின்றும்
வச்சிர தேகந் தனிற்கவ சமும் மருவி யுங்குது கலிக்க—
[யென்றும்
நச்சரவமு மதியு மேறு—முச்சுடர்திகழ் நயன மாரும்
நாதர்பதவி ணையிணை முன்னும் மாதபசுறு மடியார்
[முன்னும் (எதிர்த்தான்)

(ங) அடியவர் வஞ்சன் றனைக்கொன் றிடவு மடிபெயர்த்
[துவந் தெதிர்க்கக்—கண்ட
கொடிய பாதகன் சமயந் தெரிந்து கூறு முடலம் விதிர்க்க
[நின்றும்
சடிதி யில்நெற்றி மறைத்த பலகை தன்னை யெடுத்து
[முன்னிலும் நிற்கக்
கடுவிரைவொட மர்ந்ததொண்டர்—வடிவுறுதிரு நீலகண்ட
னுடனிகலா னடியரென்று—படிமிசைதொழு மவர்முன்
[னின்றும் (எதிர்த்தான்)

இராகம்—குறிஞ்சி. தாளம்—அடதாளசாப்பு.

கண்ணிகள்.

(க) பூதி நுதலணிந்த பாதகன் றனைக்கண்டு போற்றியே
துதி சாற்றியே—தொண்ட
ராதர வுடனிந்தச் சாதுவினை யுங்கொல்ல—லாகுமோ மனம்
நோகுமோ—வென்றும்

(உ) நினைத்துத் தயங்கிக் கொல்லும் நிலையில்நின் றவாந்த
—நேரமே வேகுதூரமே விலகி
அனைத்து லகுமதிக்கு மமுதகு ணமுடைய—வய்யரே பூதி
மெய்யரே

(ங) கையிலி ருந்தவாளைப் பையவெறி ந்துநிற்கக் கண்டவன்
பித்தம் கொண்டவன்—இந்த
வையகத் திலுயர்ந்த செய்யதொண் டரைக்கொல்ல
வந்தனன்—கஞ்சி வந்தனன்

(ச) கொல்லவெ திர்ந்தசூர னெல்லையில் வருவதைக்
குறித்திட்டா ரன்பு தரித்திட்டார்—இந்த
நல்லதொண் டர்வாள்கையி லல்லாத நமைக்கொல்ல நாடி
னல்—வழி தேடினல்

(ரு) வாளில்லா தவனை மாளச்செய் யுந்தோடத்தை மருவுவர்
அன்பர் சருவுவர்—என்று
நீளுமன் புறுதொண்டர் வாளையெ டுத்துக்கொண்டு
நின்றனர் பவம் வென்றனர்.

விருத்தம்.

இத்தகையா நின்றதொண்டி னியல்பி லார்ந்த
வேனாதி நாதரெண்ணந் தெரியாமுடன்
எத்திசைக்கு மிகழ்ச்சியுளோன் றானும்வைத்த
யிச்சைதனை முடித்துநிற்கத் தொண்டரான்

வுத்தமரு முவந்துவினைப் பாசந்தன்னை
யொழிவுறச்செய்த துகட்க மென்று போற்றிச்
சத்திசிவந் தனைநினைக்க விடைமீதேறிச்
சங்கரருந் தொண்டர்முன மமர்ந்தார்மன்றே.

ஆர்யா.

ஈசர்ப தலிணையின் மீதே—யினிதார் தொண்டர் மனம்நாடி [யப்போதே
ஆசையொ டுந்துதி செய்தா—ரடியார் மனமகி ழவே நிதிகள் [பெய்தார்

பதம். இராகம்—பூரிகல்யாணி, தாளம்—சாப்பு.

சுத்த வடமொழியாகப் பாடவேண்டும்.

பல்லவி.

காமி தார்த்த பல தாயக கருணாகர ஹரி ஸாயக (காமி)

அநுபல்லவி.

ஸோமதரோ மாநாயக ஸூக்ஷ்ம மதே ஸுக காயக (காமி)

சரணங்கள்.

(க) மஞ்சுள கமந ஸுரநுத மதுராபுர வாஸ—ஸுக— ரஞ்சித
முநிகண ரட்சமாம் மிருதுஹாஸ [பரிஜந
பஞ்சவதன பாபசமன பாலிதஜந சூலவஹந
சஞ்சலவா நாகபரண ஸதய ஹிருதய கமல சரண (காமி)

(உ) ஸிருஷ்டி ஸ்தித் தியாதி பஞ்ச கிருத்ய—திவ்ய காரண ரூப —சிரம்
க்லிஷ்ட பவஸா கரத ரணவி சிஷ்டோ டுபப்பிர தாப—ஸ்புர
தஷ்டரூப மயஸு தேக துஷ்ட ஹாரண விருஷப வாஹ
திருஷ்டித் திருத யஸமு பேத ஷஷ்டிப் ரிய ஸுமுக தாத ()

(ரு) கைலாஸா சலவரமேரு கார்முக பூத நாத—ஹர
சைல ஹிமவத் தபோ ரூப தட்சயாக பேத
த்ரைலோக்ய ஸித்தவி சேஷ ஸஜ்ஜநஸ ஹிருதயநிவாஸ
தைல ரூப காலகால ஸத்வகுணநி தேஸ சீல (காமி)

ஸவாய்.

என்றுது திக ளி யம்பிவ ணங்கி யிதய மலர்—விரிந் தேசிறந்தே
அன்று கைலை யமர்ந்து விளங்கின ரானந்த மாய்த்தம்ப வம்
துறந்தே.

விருத்தம் பலசுருதி.

இவ்வாறு தொண்டுசெய்த வடியா ரான—வேனுதி நாதர்சரித்
திரமுரைப்போர்
பவ்வியமாக் கேட்போரு மிகத்தில் நேரும்—பாக்கியங்கள்
தனையடைந்து சிறந்து வாழ்ந்து
நவ்வியாரர்ந் திருக்கைலை தனையடைந்தென்—ஞுளுமெந்தை
யடிமலரை மகிழ்ந்து போற்றிச்
செவ்வையுடன் ஹொண்டர்கள்கூட் டத்திரேடு—சேர்ந்திவரு
மினிதுடன்வாழ்ந் திருப்பர் மாதோ.

ஏனுதிநாத நாயனுர் சரித்திரம் முற்றிற்று.

லாவணி அல்லது ஸாகி	1	கட்கா	1
பதம்	4	சந்த விருத்தம்	1
விருத்தம்	3	கண்ணிகள்	1
வெண்பா	2	சவாய்	1
ஆர்யா	2	ஆக உருப்படிகள்	16.

ஆக சரித்திரங்கள் 10-க்கு உருப்படிகள் 247.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

(11) *கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்—இந்துஸ்தானி காபி, தாளம்—ஆதி.

ஸாகியாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

(க) மாதவர் மாதவர் போதவ ராதவர் வாழ் கா ளத்தீசர்
பாதம லரைமற வாதவர் கண்ணப் பரெனும் பிரகாசர்

(உ) மலைவள நீர்வள நிலவளங் குடிவள மல்கிய புகழ்நாடு
தலவள மதிற்சிறப் புயர்கா ளத்திவரை சார்போத் தப்பினாடு

(ங) எடுப்பூர் தந்திக்கொம் புகளைச் சேர்ந் திடப்பிணைத் திடுவே
லியின் சீராம்
* உடுப்பூ ரிதமலர் தொடுப்பார்ந் தெனும்பொழி † லுடுப்பூ
‡ ருடுப்பூராம்

(ச) குன்றுவர் குழவிகள் புலிகரிக் குருளைகை கோத்துடன்
விளையாடும்
நன்றிது மானின மென்றுசி றுவியர்கள் நாடியே
பிடித்தாடும்

(ரு) வெல்லுறும் வேடுவர் கொல்லெறி குத்தெனு விளம்பு
மோசை பொங்கும்

---

* உடுப்பூரித—நட்சத்திரங்களால் நிறையப்பட்ட †பொழிலுடுப்பூர்—சோலைகளால், உடுத்தப்பட்ட, அதாவது குழப்பட்ட ஊர்—நகரமாகிய ‡ உடுப்பூர்—உடுப்பூர் என்னும் பெயர் விளங்கியயிடம்.

சில்லரி துடிகொம் போசையு மதைமறைத் திடருவி
யொலியெங்கும்

(சு) மார்க்கர்க ளையலைத்துப் பறித்துச்சேர்த்த—நிறை வாய்விடும்
பெருமுழக்கும்
ஏர்க்கும்வா னிடிக்குர லினுமதிர்ந் திடுங்களிற் றினங்களின
ணிமுழக்கும்

(எ நீங்கி டாதகொடுந் தொழிலுடை யார்கார் நிரைநிகர்
மேலுடையார்
தாங்கிய மாவுரி யிலையுடை யார்மே தகுவன் றேலுடையார்

(அ) வனவே டுவர்கட் கதிபன் னகனெனும் மருவும்
பெயருடையான்
மனமே நிகர்மன மாட்சி பொருந்துதத்தை மாதெனு
மனையுடையான்

(கூ) அரசுக் குரியதோர் புதலவனி லாமைய தாலே
மிகநொந்தான்
விரைசெய் கடப்பந் தாரணி செவ்வேள் மீது பக்தி
புரிந்தான்

(கo) சேவலு மயிலு முடையார்க் குப்பெருஞ் சேவல் மயிலு
நேர்ந்தார்
மேவிய பலவாம் விரதம் புரிந்துமிகு மேனியு மிளைப்பார்ந்
தார்

(கக) பருவ மாறிடினு மையன் கிருபையிருந்தால் பட்டம
ரந்தழைக்குமே
துருவனு லகுஞ்சிறி தெனமே லாம்பதந் தோன்றவின்
பம்விளைக்குமே

(கஉ) நத்தைவ யிற்றினில் வைத்தம ணிக்கிணை தத்தை கர்ப்ப
மானுள்
சித்தமதிற்கனி வுற்றுவரைக்கின ற சிந்தையு மகிழ்வானுர்

(கரு) சேர்ந்திடு மரவர் சார்தெய் வங்கட்குச் செயும்பூ சைகள் செய்தார்
நேர்ந்த சிறுபறைகள் துடிகொம் புகளுட னிதமும்பொன் மழைபெய்தார்

ஆர்யா.

திங்களு மீரைந் தாகத்-திருநேர் தத்தை மகிழ்வாரும் வயிர்நோகக்
கங்கைய ருக்கன் பாகக்-கடன்மீ தெழுமுழு நிலாவை நிகராக

பதம். இராகம்—ஸ்ரீ. தாளம்—சாப்பு.

பல்லவி.

தத்தைதயி டத்துதய மானார்—தொண்டர்—தமக்குமண் டருக்குமீ
சருக்குமிக் குறவானார் (தத்தை)

அநுபல்லவி.

சித்தம கிழ்வுகொள்ளச் சித்தூர்ம றவர்துள்ளப்
புத்தமு தத்தையெள்ளப் பொருந்தும்ப வத்தைத்தள்ளத் (தத்)

சரணங்கள்.

(க) இமையவ ருஞ்சந் தோஷிக்க—அதிர்ந்திடுந் துந்—துமியுமி கவேகோஷிக்கத்
தமையே நிகர்க்குமன்பர் தம்மையும் போஷிக்க
வுமையாள் மருவுமீச ருடனேஸம் பாஷிக்கத் (தத்தை)

(உ) அந்தன்கண் பெற்றதைப்போப் பாலே—நாகனுங்கண்டு
மைந்தனை யிருகைக ளாலே—யெடுத்தணைக்கச்
சிந்தைமை மலைமேலே திகழ்மைபோ லருளாலே (தத்தை)

(ரு) வண்ணமு றும்பிள்ளையைத் தாங்க—முடியாது
திண்ணமெ னும்பெய ரோங்கச்—சொன்மினென்று
அண்ணலு ரைபோற்கூற வனைவரு மகிழ்வூரத் (தத்தை)

விருத்தம்.

உதயமுறு மைந்தனுக்குத் தழைகள் சூட்டி
யுற்றதளர் நடையினையு நோக்கி நெற்றிக்
கிதயமகிழ்ந் திடத்தாக்கி நுகிராற் சுட்டி
யிட்டுமுத்த மிட்டுமுத்திட் டெழிலும் பார்த்துத்
தழையுமணிக் கவடிநிம்பை முத்தங் கோத்த
சதங்கையிடை தளர-நடை ததும்பி யாடும்
அதையளவில் மகிழ்ச்சியொடு நோக்கிச் சேயங்
கமுற்றார் பெற்றோர்பேரின் புமுற்றார் தாமே.

லாவணி. இராகம்—ஹமீர்கல்யாணி. தாளம்—ரூபகம்.

பஞ்ச சாமரமாகவும் பாடலாம்.

கண்ணிகள்

(க) உருவ மைந்த தந்தை சேய்க்கும் பருவ மைந்து நேரவே
கருவ மிஞ்சு வரியின் கன்றைப் பொருவுந் திண்மை சேரவே

(உ) மாவர் மைந்த ரொடுகு றிச்சி மனைக டோறு நாடியே
திரமு லாவு புயமல் கூறச் சேர வேவிளை யாடியே

(ங) ஞாளி கொண்டு முயல்கள் பன்றி யாளி யின்கு ருளைகளே
கோளி லாது பற்றி வெற்றி கொடுபொ ழிற்கண் வளைகளே

(ச) பொருவி டப்பி ணைந்து கட்டி மருவி யேவ ளர்க்கவே
பருவி னோடு கருவ மிஞ்சு பருவ முந்த ழைக்கவே

(ரு) திடமி குத்த புயவி ணைத்தி ரள்களை மெச்சி நோக்கியே
அடல்சு றித்த சிலைப யிற்ற வணியை நெஞ்சு ளாக்கியே

(சு) மைந்த ரைப்பு யந்த ழீஇம கிழ்ந்து முத்த மாடியே
சிந்தை மெச்சு சிலைப யிற்று தினமு மொன்று நாடியே

(எ) இராம தாய மரவ ருக்கு மிசைகொள் தாதை யேவவே
கனமு லாவு மலையின் வேடர் களுமகி ழ்ந்து மேவவே

(அ) துடிமு ழக்கி னொடும ணித்தி ரளும ணிப்பொ னொடியே
படியின் மெச்சு கரிம ருப்பு களையு மிக்க நேடியே

(௯) உணவின் மிக்கு ருசியெ னச்சொ லூனு மண்டு தேனுமே
கொணரு மூக்ய மரவ ருங்கு றிச்சி வேடர் தானுமே

(௧௦) வந்து நாக வரசன் முன்பு வந்து தாள்வ ணங்கவே
மைந்தன் வில்வி ழாவி யற்று மெந்த னன்புக் கிணங்கவே

(௧௧) மேரு வில்லு மீசர் நஞ்சு மெய்த நல்கிற் றென்னவே
சாரு மூனை யமுது செய்த் தக்க வில்லி தென்னவே

(௧௨) காப்பு மிட்டுப் புலிந ரம்புக் காப்பு மிட்டுத் துன்னவே
கோப்பு றுந்தன் குலம்வி ளங்க யோர்ப்ப நாக னென்னவே

(௧௩) மகிழு மைந்த னிடமு வந்து மறவர் நல்கி வாழ்த்தினார்
இகல்செய் நாகன் மருவு தத்தை யிருவ ருங்கொண்
டேத்தினார்

(௧௪) மலையி னெல்ல ரிசிபுன் மூங்கில் வளரு பேன லரிசியாற்
குலவு சோற மைத்துண் ணூனுங் கோதில் சுந்தம்
வரிசையால்

(௧௫) கனிக ளோடு தேக்கி லைக்கு ளினிய தாவ டித்துமே
புனித மான தேனி லும்பு கட்டி யேபு சித்துமே

(௧௬) தினையின் மாவ ருந்தி யிய லினையு நாடி யுண்ணுவார்
இனிய தாயெல் லோரு முண்டி சைந்த நீழல் நண்ணுவார்

(௧௭) குடிசை சிற்றூர் மாவர் வேடர் குன்று ளோர்க ளொடியே
படிய யற்பு றத்து ளோர்கள் பலவு மிக்க நேடியே

(௧௮) வாழும் வல்ல யெயின ரோடும் வரையெ யிற்றி யர்களுமே
ஏழ்ப ரிப்ப ரிதியு முச்சி யேக வேய னைவருமே.

விருத்தம்.

பாசிலையாம் படலைசுற்றித் தொடையல் சூட்டிப்
பருங்காசின் வடந்தோற்க வடியும் பூண்டு

மாசில்வெட்சி புனைந்துவில்லா சிறிய னேர்ந்து
மற்சிலையைச் சூழ்ந்துகொம்பு துடிவே யாரு
மோசைபொங்க மாவொலிப் போங்க நாகன்
உறுங்குறிச்சி தனைவலம்வந் துவந்தே மூாநாள்
ஆசகல் மங் கலவாத்ய முழங்க வீச
* ரடிப்பித்தார் கைக்குவில்லைப் † பிடிப்பித்தாரே.

ஆரயா.

(க) மலையரு கிற்சிலை கோடி—மருவப் பருவப் பயோத ரமுமோடி
உலையக் கருவித நீடி—யொளிர்விற் கணைதெரி துரோண
நிகர்கூடி

(உ) விற்றெ மூவிற்கை தேர்ந்து மிளிரும் வயதுப திறு
முடனூர்ந்து
மற்புய வெற்பிணை கூர்ந்து மகிழ்நா கன்றனை யனுக
வலிதேர்ந்து

ஸ்வாய்.

(க) தன்றளர் வுமைந்தன் றன்வளர் வுங்கண்டு சஞ்சலம் விட்டுத்த
முவினனே
சென்றது நங்குறை யென்றிது கூறிவெந் தீயப வத்தில்வ
முவினனே

(உ) நாடிய மைந்தனைக் கூடியி ருக்கையில் நாடுறும் வேடர்கள்
தேடினரே
காடுறும் வல்லமி ரு கங்கள்பெ ருகிக் கலக்குவ தைசசொல்லி
வாடினரே.

வெண்பா.

வாடும் வனவேடர் மாவர் மலைக்குறவ
ரோடு மிதுநாக னுரைசெய்வா—னுடியதன்

* அடிப்பித்தார்-பாதாரவிந்தத்தில் பயித்தியமுள்ளவருடைய †பிடிப்பித்தார்-பிடிக்கச் செய்தார்.

மூப்புரைசெய் தேமகனை முன்பாக்கி யென்போலக்
காப்புடையா னென்றுவப்பீர் காண்,

கலித்துறை.

மன்னா நினதுரி மைப்பெரும் வாழ்க்கையுன் மைந்தன்பெற
வின்னாளி லில்பொழு தேநல்கும் யாமிசைந் தேமெனவே
சொன்னார்கள் கேட்டு மகிழ்நாகன் றேவிக்குச் சொன்மினென
வன்னாளிற் கூற மகிழ்ந்துவந் தாள்தத்தை யாயிழையே

பதம். இராகம்—சுருட்டி, தாளம்—ஆதி.

பல்லவி.

தத்தை மாது வந்தனள் சிந்த மீது வந்தனள் (தத்தை)

அநுபல்லவி.

மெத்த வளர் மூப்பி னாலே மெய்த்தளர்வி னோடன் பாலே ()

சரணங்கள்.

(க) தலையிற் கண்ணி சூட்டியே சங்கின் மணி பூட்டியே
கலைக் கொம்பி ழைத்த பணி காதுகள் புக மாட்டியே ()

(உ) மயிற் கண்டம் பூட்டியே மணிப் பீலி சூட்டியே
அயிற் பின்மான் வயிற் றரி தாரத்தில தந்தீட்டியே (தத்தை)

(௩) மாலி னொடு தத்தியே மரவு ரியுஞ் சுற்றியே
நாலு தனங் காட்டி நாக நாதன்சமு கம்நத் தியே (தத்தை)

விருத்தம்.

* வருந்தத்தை முகநோக்கி மைந்தனார்க்கு—மன்னுரிமை
யளித்தனநீ வாழ்த்து கென்னப்
† பொருந்தத்தை நீக்குறுஞ்சூர் மகளிர்ப் போற்றிப்—புனிதையு
மைந் தனைவாழ்த்திப் புகழ்ந்து செல்லத்

---

* வரும்-தத்தை முகம்-வருகின்ற தத்தை மாதினுடைய முகத்தை
† பொரும்-தத்தை நீக்குறும்-பொருந்திய, ஆபத்தை நீக்குகின்ற

‡ திருந்தத்தைத் திடுஞ்சுரிகை யுடையின் றேலுஞ்–சிறப்புறவே
நல்கிமுன்கைப் புலித்தோல் வீக்கி
¶ யிருந்தத்தைக் காத்துவந்த தையும்விடாம லிருமென்றான்
வேட்டைக்க மருமென்றானே.

பதம். இராகம்—செஞ்சுருட்டி, தாளம்—ஆதி.

பல்லவி.

கண்ணே யிங்கு வந்திடீர் கட்டி முத்தந் தந்திடீர் (கண்ணே)

அநுபல்லவி.

வண்ணவர சுரி மையில் வாழ்ந்திங்குமு கந்திடீர் கண்ணே)

சரணங்கள்.

(௧) பந்தரையென் போலவே சொந்தமெனச் சாலவே
சிந்தைகளி கூறச்செய்வீர் அந்தமார்க்கண் டன்போ
லுய்வீர் (கண்ணே)

(௨) நல்லதைநீர் கொள்ளுவீர் அல்லதையே தள்ளுவீர்
வல்லமையை யுள்ளடக்கி கொல்லும்போது காட்டிவிள்வீர் ()

(௩) வேட்டையாட நாடுவீர் வேடரைக்கொண் டாடுவீர்
நாட்டம்வைத்து லகையாளிற் றேட்டமெல்லாங்
கைகூடுவீர் (கண்ணே)

வெண்பா.

மைந்தர்க் கினிய மதியுரைக்கத் திண்ணருந்தன்
தந்தையடி வீழ்ந்துமுப சாரஞ்செய்—தெந்தையே
யொப்பினை யென்றுவிடை யுற்றுவன வேடரொடு
மம்பொழுதே சென்றார்தீ ரர்.

---

‡ திருந்தத்-தைத்திடும் சுரிகை-திருத்தமாகப் பாய்ந்திடும் வாளாயுதம்
¶ இருந்தத்தைக் காத்து-இருக்கும் விஷயங்களைப் பாதுகாத்து

ஆர்பார.

(க) வேட ரொடுஞ்சுனை யாடி—மெய்த்தி ருருமிற் கவாவி
ஞெடுநாடி
நீடும ருந்துயின் மூடி—நினைவார் புலர்கா லையேயெ
ழுமுன்னோடி

(உ) வந்திடும் வேடர்ப ணிந்தார் மலர்சே ரடியைமு டிமீது
றவணிந்தார்
சிந்தையில் வேட்டடம்நி னைந்தார் திருமே வியகோ லமேமி
கவணைந்தார்

இராகம். ஆனந்தபைரவி, தாளம்—ஆதி.

கண்ணிகள்.

(க) காலங் கா ணுவார் வேட்டைக் கோலம் பூணுவார்—தோல்
கச்சி றுக்கிவாள் வீக்கியேமதன் மெய்ச்சத் தோ ணுவார்

(உ) சுருள்குஞ் சியின்மேலே மிளிர் சிகிபிஞ் சமதாலே—முன்
சூடிக் குறிஞ்சி முல்லை வெட்சிகள் தொடுத்துப் பின்பாலே

(ந) பின்னும யிர்க்கயிற்றால்—முருந்திடை பிணைகுன் றியுமேலே
முன்னெற் றியுற வணைந்திரு மதிநிகர் முதிர்சங் கணியாலே

(ச) குழைகள் காட்டினூர்—கவடி—யிழைகள் பூட்டினூர் பன்றிக்
கோடு மக்குமணி யோடு தொங்கலிட நாடி மாட்டினூர்

(ரு) ஆனைத் தந்தமதால்–சிறுமணி–யால்நற் றொங்கலிட–மணி
யணிவா குவலய கங்கண முன்கை யணிந்து மிலங்கி யிட

(சு) வீரக்க ழலும்பூட்டிக்—கால்களி—லாரச்செ ருப்புமாட்டிச்
—சுரிகை
விசித்தெவ ராலு மொசித்தி டாதவரி வில்லும் கையிற்
கோட்டி

(எ) புட்டிலு முதுகுறையக்—கணைகளு—மட்டிலா மல்நிறைய
—வேடர்கள்
பூட்டிவிட் டாரிசை நாட்டியிட் டார்க்கெழில் பொங்கிட
மிகவிரைய

விருத்தம்.

அலங்காரஞ் செய்தவுடன் சிறுநாணைசை-யதையிட்டார்
துடிபறைகொம் பதிர்ந்து விம்ம
விலக்காரந் நிலைதுலையக் குறிச்சியுள்ளோர்-மிகவேற்று
மொலிகம்ம வேடர்சூழக்
கலங்கார நெஞ்சுதுடிக் கிடக்கா னேகிக்
கான்பெயிலூட் டிக்குறவர் தம்மைநீக்க
மிலங்காரச் சூர்மகளிர் கருணைபெற்றங்-கிருந்தார்
வேட்டத்தில் மனம்வருந்தார் தாமே.

பதம், இராகம், ஆனந்தபைரவி, தாளம், அடதாளசாப்பு.

பல்லவி.

வேட்டம் புரிந்துமனங் களித்திடார்-பின்போர்
நாட்டத்தினையுமீசர்க் களித்திட்டார்-வன (வேட்டம்)

அநுபல்லவி.

மலைபை மிஞ்சு வலைகொண்டு மறைத்திட்டார்-கட
லலைகுன்று மொலிகொண்டு நிறைத்திட்டார்—பல
பலகொம்பு துடிபம்ப றைகளும்பெருகவண்ட
முலைபுமபடிமிருகங்கள் மலையும்படிமுழங்க (வேட்டம்)

சரணங்கள்.

(1) சிங்கங்கரடிபுலி பொங்கியே-யெழச்—செங்கண்க
ரிகள்குன்றி ரங்கியே—வர
அங்கதையைபன்றி யுங்குண்டை கவளருமை-பின்தம்பு
கள்வெறிகக வுங்கண்டு டல்விதிர்க்க (வேட்டம்)

(2) சிங்கங்கரடிபுநாணங் கண்கனை-பிடித் தங்கந்து லைக்கவுமி
மிருகங்களை-துடித்
தெங்குமோக்கவேடர் பொங்கிச்சி றக்ககொம்பி—னைனங்க
ளாககவிடும் பாணந்து லைக்கவன (வேட்டம்)

விருத்தம்.

இவ்வாறு வேட்டைசெய்யப் பருமோ ரேன
மிடும்வலையை யறுத்தேக நாணன்காட
னவ்வாறு சென்றுசிலீ முகங்கடுவ-வதன்முகத்தாற்
றட்டியொரு சூழற்புக்கச்
*செவ்வாறு புகுந்திண்ண னருங்கண்டு-செறுச்செயுடை
வாள் கொடாதை வீட்டமெச்சித்
†தெவ்வாருந் திடுக்கிடச்செய் திண்ணனார்க்குச்
செபபினா ரதற்கிசைய வொப்பினாரே.

இராகம் செஞ்ஜுருட்டி தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

(1) நாணனும் பெருங் காடனும்பன்றி நசையி னற்புகுந்
தெடுத்தார்-‡வண்டி
னாண னும்நாணும் மேனி யதிண்ண னரி டத்தில்வந்
தடுத்தார்

(2) அய்ய ரேவெகு தூரம் வந்ததி லதிகப்பசியி னாலே-நெருந்
தவதி யுற்றன மிதைவெ தும்பியுண் டாற்று வோமொருக்
காலே

(3) யென்று ரைத்துமெய் வருந்தி டத்தண்ணீ-ரெங்கெ
னச்சொல்ல மேலே
துன்றுதேக்கின் புறத்திற் சென்றிடிற்-றோன்று மலைக்கப்
பாலே

(4) சொ ண முகலி நதியென் றுநாணன் சொல்ல வேதிண்ண
னரும்-கார்
வர்ண முறும்பன் றியைநீங் களிரு-வரும்கொ டுமுன்பு
சேரும்

* செவ்வாறு—ஒழுக்கமுள்ளநெறி.
† தெவ்வாரும்—எந்தச் சத்துருவும்.
‡ வண்டினாணனும்—வண்டையே நாணாகவுடைய மன்மதனும்.

(5) என்ன வேதள்ளி நடந்த காக்காத-மேனிச் சூழலைக் கண்டார்-ஈச
னின்ன ருள்பெறுங் காலத தால்வரை-யேறு மெண் ணமுட் கொண்டார்

(6) கொண்ட துகண்டு காளத் திவரைக்-குடுமித் தேவரை நன்றாய்க்
கும்பிட் டுவர லாமென்று நாணன்-கூறி யேயெதிர் நின்றான்

(7) நின்ற நாணனை நோக்கி நீகண்ட-நிமலர் வடிவந் தோணச்
சென்று தரிசித் திடவி ரைவினிற்-செல்வை யென்றன்பு பூண

விருத்தம்.

உரைத்தேக யிருவரும்பின் றொடரச் சங்க
மொலித்துழுஞ்சா லதனில்முத்த மோடு பொன்னைக்
கரைத்தேகண் டவிடமெல்லாங் கொழிக்கும் பொன்மு
கலிக்கரைகண் டதிலோர்நீ ழலிற்சற் றூர்ந்து
விரைத்தேக மணங்கொடுபன் றியைச்சு டக்கார்
மேனிக்கா டனைநிறுத்தி விதிமாலாம
வரைத்தேகத் தனியண்ணல் வாழ்காளத்தி
வரையேறி யமலருரு வங்கண்டாரே.

பதம் இராகம் கல்யாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

கண்டார் பெரும் பிறவி விண்டாரே-திருக் காளத் தீசனை நேசனைக் (கண்டார்)

அநுபல்லவி.

வண்டார் பொழிற் பொன்முக லிப்பெரு மாநதியுந் தாணடிப்பவ வாரிதியுந் தாண்டிக் கனிற் (கண்டார்)

சரணங்கள்

(1) பஞ்ச துந்துமி முழக்கம் போலொலி-பரந்த தென்னென்று
கூற-நாணன்
பருவரைத் தேனி னீகளி றொலி-பரந்த தெனவன் பூர
விஞ்சுதத்துவப் படிகள் தாண்டி மேற்சி வபத மருவ
வேண்டி
விரைவார் தவர்போல்நாடிக்-கரைவார் படிமே லோடி
வரையார் சிவ மதைநீடி மலரார் விழியிட நேடிக் (கண்).

(2) இவர்கா ளத்தியன் னகி லேசர்கண் ணினையி-னருள்மேற்
பாயப்-பவத்
திடும் விலங்கொடிபடத்தம் மினையில் லாவ ருளினைத் தோய
அவரு ருவினைக் கண்டு களிக்க ஆநந்தக கண்ணீ ரதுகொப்
பளிக்க
ஆடித் தழுவியு முச்சியை-நாடிக்குழைவுற மெச்சி
-யசைந்து முகந்து விடாது
பொருந்து பவந் துடரா துறக் (கண்டார்)

(3) வெய்ய கரடி புலிகள் யானைகள் மிருத்த பேனங்கள் நாடும்
-வனத்
துய்யும் வேடர்போ லிவருந் தனிமை-யுற்ற தென்னென்று
கூடும்—அன்பு
மெய்வ ழியெங்கும் பொங்கிவழிய விழிவ ழிபக்தி மிகுந்து
பொழிய
மெய்த்தவரின் மனம்வழுவக் கைத்தவருந் தனிதழுவ
மெய்யுமறந் தவசமுறச் செய்புயவினை முழுதுமறக் (கண்)

விருத்தம்.

*இலிங்க மதிற் பசியிலையை நோக்கி யாவ
ரிதையமைத்தா ரெனவுமது தந்தையோடும்
‡ பலிங்க மரும் மிருகவேட்டை யாடும் போதோர்
பார்ப்பான்வந் தானவன்செய் ததுவா மென்று

*இலிங்கம்—சிவலிங்கம் ‡பல் இங்கு அமரும் பலிதமாக யிங்கு
அமரும்.

†புலிங்க முறும்விழி நாணைத்துரைக்க விர்தப்புன்செய்கை
நீக்கி நன்கு புரிவோமென்று
S கலிங்கமாத் தோற்காட னிடத்தின் மேவக்
கடந்திட்டா ரமுதாக்க நடந்திட்டாரே.

பதம் இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி.

வான முது செய்யத் தான டந்தார் செய்ய (வானமுது)

அநுபல்லவி.

மேனி வந்தவரை விட்டி றங்கி விரை (வானமுது)

சரணங்கள்.

(1) ஓடுவார் திரும்பி நாடுவார் விரும்பிக்
கூடுவார் விழுந்து வாடுவா ரிழிந்து (வானமுது)

(2 ஓடி முன்வைப்பார் ஈரடி பின்வைப்பார்
வாருறுங் கண்ணப்ப மனந்துணி பென்னப்பர் (வானமுது)

(3) வீழ்வர் வீழ்ந்த முடி தாழ்வர் தாழ்ந்த படி
ஆழ்வ ரீச ரடி வாழ்வர் துய்ய வடி (வானமுது)

(4) கன்றை விட்டு நீங்காக் கறவை யென வேங்க
நின்று நின்று சுத்தி யன்று நிமிஷத்தில் (வானமுது)

கலித்துறை.

மணத்தின் செழுங்கொன்றை சூடியின் றாளை வணங்கி யன்பாற்
குணத்தின் பெயருடை யானைத்தம் முன்னிட்டுக் கொண்டுவந்து
கணத்தின் வரைவிட் டிறங்கி நல்லூனமைக் கக்கருதி
வணத்தின் கரியதங் காட னிருப்பிடம் வந்தனரே.

லாவணி இராகம் ஹமீர் கல்யாணி தாளம் ரூபகம்

கண்ணிகள்.

(1) திண்ண னார்பொன் முகலி வாரத்-தினில்வ ருவது
நோக்கியே

---

†புலிங்கம்—தீப்பொறி. S கலிங்கம் வஸ்திரம.

வண்ண மான காடன் சென்று-வனத்தி டமிழ் தேக்கியே

(2) உத்த ரவின் படிக் காணி வைத்த னலை மூட்டியே
சித்தம் போலக் கூர்த்தக் தவே-னத்தை நன்றாய் வாட்டியே

(3) அரிந்து வைத்த தசையு மாறி-யலர்ந்து லர்ந்திதிப்
போதென்றான்
தெரிந்த நீங்க ளித்த லைதாம தித்த காரிய மேதென்றான்

(4) என்று ரைத்த நாணன் கேட்டங் கிவர்வ ரையின்மே
லினனென்றான்
இன்று மலைத்தே வரைக்கொண் டாடி—யேயய டிமைபூண்
டனனென்றான்

(5) தேவருன்னை யிறைச்சி கொண்டு-திரும்பி வருவே
னென்னவே
ஆவ லொடும் வந் தனனென் றுரைசெய் தான்ம னத்துயர்
துன்னவே

(6) கன்றுக் கிரங்கும் கொச்சைப் பசுப்போற்-கல்லின் றேவைச்
சுற்றினார்
நன்று நமது குலத்தின் மகிமை-நலத்தைத் தாளா
லெத்தினார்

(7) பெரிய பித்துப் பிடித்த தினிமேற்-பிரிந்தி டாதென்
றுரைக்கவே
உரியகாடன் மனத்தின் வருத்த-மோடு கண்கள்நீ
ரிரைக்கவே

(8) முன்ன ரசர்கள் போலு மிலைநீ-யென்ன வுமதைச்
செவிக்கொளார்
அன்ன லூனை யம்பிற் கோர்த்தங்-கனலில் வெதுப்பி
னார்மெள்ள

(9) ஊனின் ருசியை யரியகாவா-லொதுக்கி யேமெல்லப்
பார்த்திட்டார்
தேனின் றிதிக்கிற் றென்னை யுமிழ்ந்-திடவுங் கண்டு
வேர்த்திட்டார்

(10) உமிழ்ந்த தன்றி மீதி நமக்கு-முதவி டாதென்
றெரிந்திட்டார்
அமிழ்ந்தி னூர்பெரும் பயித்தி யத்திலென்-றய்ந்தி
ருவரும் பிரிந்திட்டார்

(11) அரசு னிடத்தும் பெற்ற தேவ-ராட்டி யிடத்துங்
கூறுவோம்
விரைவிலெனவே டரைமுன் னடத்தி-மேவி யென்னென்று
தேறுவோம்

(12) என்ன நடக்கு மிருவர் சென்ற-வியற்கை யைச்சற்று
நோக்கிடார்
தன்னின் பசியுந் தோன்றி டாது-தசையு மீசர்க் காக்கிட

(13) இறைக்கு மஞ்சனஞ் செயநீர் வாய்க்குள்-நிறைத்து
மெய்மகிழ் வாகியே
சிறக்கும் பள்ளித் தாமந் தலையில்—நிறைக்க வேவிரை
வாகியே

(14) தருவொ ருகையிற் றேக்கி லைத்தொன்னை-தனையொ
ருகையிற் றங்கியே
தனியுந் தனியா யிருக்கு மென்றெண்ணந்-தனைவைத்
துமிக வேங்கியே.

கலித்துறை.

நடந்தார் திருப்பொன் முகலி நதிதனை நாடிக்கரை
கடந்தார் பவத்தைக் கடந்தார் தென்காளத்திக் கார்வரைமேல்
படர்ந்தார் சிவக்கொழுந் தைக்கண்ணிற் கண்டன்பர் பண்பொடுக-
வடந்தா னிலாமனத தாரமு தூட்டிட மன்னினரே.

பதம் இராகம் சுருட்டி தாளம் சாப்பு.

பல்லவி.

அமு தூட்டி னரே யீசர்க்குத்திரு (அமுதூட்டினரே)

அநுபல்லவி.

அமை யொரு பாகம் வைத்த அய்யருக் குருசித்த (அமு)

சரணங்கள்.

பெரும்பசி யாலிளைத்துப் பிஞ்ஞக ருங்களைத்து
வருந்தினா ரென்றுளத்தின் மருகித் தாளிற்பொருத்தும்
வன்கழ லாலே சூட்டுமலரை-யுந்தள்ளி மேலே-வழியன்பு
போல்
மருவும் வாய்நீரைக் கூட்டித் திருமஞ்ச னமுமாட்டி
(யமுதூட்டி)

(2) திரு முடி மேற்சிரங்கொள் மலர்சூட் டியே புதுக்கி
மருவு நாவா லொதுக்கி வன்பற்க ளாலதுக்கி-மகிழ்ந்துமி
ழூனைத்-தொன்னை யிலேந்தி
வரும் பக்தி தானே-பழுத்தொழுக
மதித்து வணங்கி மிகத் துதித்தெதி ரானவைத் (தமுதூட்டி)

(3) இந்தத் தசையை யீட்டி யிசைந்த கோலிற் பூட்டிச்
செந்தழ லினிற்காட்டி வெந்திட வேவாட்டித்
திதிக்குமூ னென்னக்-கொஞ்சம் ருசிபார்த்
தொதுக்கியேவன்னத்-தேக்கிலைத் தொன்னை
கிமிர நிறைத்தேனென்று நிமிர வுண்ணுமென்று (அமு)

விருத்த

ஊட்டினார் கசிந்து கசிந் துருகியின்ப
வுரைபகர்ந்து மேருவினை வில்லதாகக்
கோட்டினார்க் கின்னமுமு னமுதநல்கக்
குறிக்குங்கா லையிற்கதிர்கள் சுருக்கி மெல்லக்
கூட்டினார் கலுழன்போற் பரிதி யாழுங்
குடக்கடலிற் குளிக்கவிருட் கோலவாட்டங்
காட்டினா ரிறைதனியா மெனமுன்னின்று
காத்திட்டார் கணையைவில்லிற் கோத்திட்டாரே.

பதம் இராகம் செஞ்ஜுருட்டி தாளம் ஆதி மிசிரகதி.

பல்லவி.

ஈசனைக் காத்தெதிரே நின்றார்

அநுபல்லவி.

மாசறும் பிறவியை வென்றார் (ஈசனை)

சரணங்கள்.

(1) மாலயன்மா லரியோர்த் திடும் வாழ்வினைப் பார்த்திடும்
மலர்க்கண்க ளினாற் காத்திடும் (ஈசனை)
(2) துஷ்ட மிருகங் களுங் கூடியே கிட்டுமென வாடியே
கொட்டிடா விழிகள் நாடியே (ஈசனை)
(3) சிலைக் கார்வின் னின்றிழிந் தென மலைக்காரு மேயின்ன
சித்திரவிற் கையினிற் றன்ன (ஈசனை)
(4) கானவரைச் சித்தர்தே வருங் கண்டிடா தவருங்
காணக் கிடைத் ததென் றன்பரும் (ஈசனை)

கலித்துறை.

இரியா விருளு மிரியப்பின் காலை யெழுந்துமனந்
தரியா திறைக்குநல் லூன்றேடிச் செல்லத் தருமிருகங்கள்
தெரியா தெனக்கரம் நீட்டிக் கதிருதிக் கச்சிவகோ
சரியார் புனிதஞ்செய் தேசிவ பூசைக்குச் சார்ந்தனரே

ஸவாய்.

(1) தாசரி யாவையு மீசனெ னவெண்ணு நேசனெ ழிற்சிவ
கோசரி யாரே
ஈசனை யேமணி யோலைச யொடுமன தாசையொ டுஞ்சிவ
பூஜைசெய் வாரே
(2) பூமல ருப்புன லுங்கொண்டு பெய்ச்சிவ நாமமொலியொடு
மேமகிழ் வாகச்

சோமத ரரிடம் சேமமு டன்வர வேமிகக் கூசின ரேமனம்
நோக.

(3) சன்னிதி முன்னிலே தன்னிலே லும்பையு மன்னுமி
றைச்சியு மென்னென நாடி
துன்னிய வேடரன் யாயமி துவென வுன்னிச்சி வாவெனப்
பன்னியே வாடி

(4) நேரிலி துசெய்த பேரையும் விட்டுவிட் டீரெதி ருவுளத்
தாற் பொருத் திரோ
யாரும்ச கித்திடு வாரோவெ னமூர்ச்சை யாய்விழுந்
துகண்ணி நீர்சொரிந் தாரே

(5) என்செய்வ தென்றெழுந் தேயவும் புனோ டிறைச்சி
யிலேகளை யும்மெறிந் தாரே
வன்செய்கை நாயடி யுஞ்செருப் படியு மாற்றிய லகிட்டு
மேல்புரிந் தாரே

(6) சொர்ணமு கலியின் முழ்கி நீ றிட்டுச் சுருக்கில்வந் தறுசி
தத்தையே மாற்றி
மன்னும்ப ரிசுத்தஞ் செய்துபின் னும்பூசை வர்க்கங்கள்
கொண்டு மனத்துய ராற்றி

(7) வந்துவ ணங்கிப்பு கழ்ந்துகா ளத்தி மகேசநுக் குத்திரு
மஞ்சன மாட்டி
சிந்தைம கிழ்வொடு மாகமத்தின்படி செய்துரை வேதித்தா
ரன்புபா ராட்டி

விருத்தம்.

இவ்விதம் பூசித் தய்ய ரிருந்தவனத்தி லேகச்
செவ்விய ராயபக்த சிரோமணி வனத்திற் புக்கு
மொவ்விய மிருகங்க ளைக்கண்டு வந்துகோ லால்வதைத்து
வெளவுமுன் சமைத்தி சர்க்கு வானமுதூட்டினாரே.

பதம் இராகம் சுருட்டி தாளம் சாப்பு.

பல்லவி.

ஞானநன் களித்தார்க் கூனமு தளித்தார் (ஞான)

அநுபல்லவி.

ஆனர் பசியாறுமொன் றகமுந்தத் தளித்தார் (ஞான)

சரணங்கள்.

(1) அரிந்தத் தைசவெதுப்பிப் பெருந்தொன்னை நிறைத்து
தெரிந்துதே னைக்கலந்து பரிந்துப சரித்து (ஞான)

(2) வழக்கப்படி பூசித்து மலர்க்கொய்பு த்தேனை
குழைத்துக்க லந்தேனென்று கூறியுந் தானே (ஞான)

(3) தேவர்க்க விதியினாற் செய்வது போலே
நாவினல் ருசிபார்த்தே னுனென்றன் பாலே (ஞான)

(4) நென்னெனி லும்ருசிக்குங் கன்னலைப் பழிக்கும்
இன்னமு தெனப்புகழ்ந் திருந்துய வொழிக்கும் (ஞான)

விருத்தம்.

‡பணியினைப் *பணியாப் ?பணிந்தவெம் பெருமான்-பரிந்தருன்
புரிநிடப் †பணிசெய்
தணிபெறுந் தீரர் பகலெலாம் வேட்டைக்-காலையே யிரவெலாங்
காத்துக்
துணிவுட னிருக்கக் காடனு ணனும்போய்த் துரையெனும்
நாகன்முன் புரைக்கச்
கணியமார் தேவ ராட்டியோ டுயர்நா கனும்வந்தார் வனம்வந்தா
ரிடமே

---

‡ பணியினை பணம் அதாவது படத்தையுடையதை, அதாவது சர்ப்பத்தை, *பணியாய் ஆபரணமாக ?பணிந்த அணிந்த †பணிசெய்து கைங்கரியம் செய்து.

வெண்பா.

பேணுமகன் றன்மனதைப் பேதிக்க வந்ததுவும்
பூணுநெஞ்சத் தார்ந்தகுறிப் புந்தவறிக்—காணுமனம்
விட்டார்கா ளத்தீசர் மேனோக்க மாயிருகண்
கொட்டாகி ருந்தாராங் கு.

கலித்துறை.

இரும்பினைக் காய்ச்சிப் பொன்னாக்கிய வாறென்ன வீசர்பக்தி
கரும்பினைத் தன்னுளி யானோக்க மாசும கன்றிடவே
திரும்பவும் வேடரை நாடுவ ரோவனஞ் சென்றுவா
விருமபின ராற்சிவ கோசரி யாரங்கு மேவினரோ.

ஆரியா.

மேவின ரதிவிரை வாக-மெய்க்கா ளத்திவ னைபேறி யெதிராக
பூவொடு புனல்கை யாகப்-புனிதரி டம்பார்க் கவும்மெய் மனசோக

பதம் இராகம் நவரோசு தாளம் சாப்பு ல்யாகனு யென்ற
ஜாவளிபோல.

பல்லவி.

வாடினார் மனநொந்து மிகநைந்து (வாடினார்)

அநுபல்லவி.

வாடினு ரெதிராக மறுகி நின்று சோரக் கண் ணிறையும்நீர்
வாரத்தம்
மிறைதன்முன் பாரப் புன் னுறை யூனிறைச்சியார (வாடினார்)

சரணங்கள்.

(1) சிவமே யிந்தவன்பாயஞ்-செய் தவனெவ னென்று
எக தவனோமுன் னின்று பெய் தனனூனை யின்று கண்
டிடில்விடு வேனோவென்று (வாடினார்)

(2) அள்ளியே யெறிந்தாரே யே றலவிழ்த்துக் கூட்டிழுத்தன்
ஜலம்விட்டார்
காட்டிக் கழுவிமுன்போற் காட்டி யழுதயா மேட்டிமுன்
(வாடினார்)

விருத்தம்.

வாடியிவை செய்தவனைக் கண்டுநாளை-வகைசெய்வே மெனமுனி
வர் சினங்கொண்டேகி
நாடுமிடந் தனிற்பரமர் சென்றிராவில் நளினத்தோ னிகர்சிவகோ
சரியார் முன்பு
கூடியன்பர் பெருமையெலா மெடுத்துக் காட்டிக் குறித்திடுநீர்
கொண்டசின மெல்லாமங்கு
தேடிவந்து நோக்கில்நன்றாய்த் தெரியுமென்று செப்பினார்
சொற்பனத்தி லொப்பினாரே

பதம் இராகம் வஸந்தா தாளம் ரூபகம்.

பல்லவி.

தனி வரில் நேராய் நாளைத் தினத்தில் முனிவனே பாராய்

அநுபல்லவி

கனி வுட னமதன்பன் காட்சியின் மாட்சியைத் (தனிவரில்)

சரணங்கள்.

(1) இவனைவே டனென்றேநீ மனதில்நினைத்திடாதே
கவனமு டனபார்க்கில்நெஞ் சகமுகங்கொ தித்திடாதே
(தனிவரில்)

(2) அன்பன்வ டிவமெல்லாம் நம்பால்வந் தடங்கும்
யின்பவ றிவுநம்மை பேயறிந் தொடுங்கும் (தனிவரில்)

(3) அவனது செயல்நமக் கானந்த மாகிடும்
அவனிரு கழல்சேய்க ளடிக்கிளை தேக்கிடும் (தனிவரில்)

(4) முனி காதால் விடுங்கங்கை போலிவ னுமிழ் நீராம்
புனிதன் றலைமலர்புங் கவரர்ச்சிக் கும்பூநோராம் (தனிவரில்)
(5) ருசி பார்க்கு மூனுயர்ந்தோர் தருமவி நிகராகும்
உசிதமு னிவர்வேதத் துரையிவ னுரையாகும் (தனிவரில்)

விருத்தம்.

இவனன்பை யொளித்திருக்கிற் காணலாமென்
றீசர் மறைந் திடவிழித்தங் கெழுந்து நாடித்
தவமுனிவ ரதிசயித்துப் பார்ப்போ மென்று
தானொளித் தினம்போலப் பூசித் தீசர்
தன்னுருப்பின் பொளித்துநின் றா ராறும்நாளிற்
றனிவேட்டை யாடிமுன்போல் யாவுங்கொண்டு
கவனமுடன் வரநம்பர் கண்ணிற் சோரி
கண்டாரன் பருமயக்கங் கொண்டார் தாமே.

பதம் இராகம் பிலகரி தாளம் ரூபகம்.

பல்லவி.

திண்ணர் மிகவும் வாடினார் ஈசர் கண்ணிற்சோ ரியை நாடி
கண்ணிக்கூ டிடவோடித் (திண்ணர்)

அநுபல்லவி.

(1) வனஞ் சென்று வேட்டமாடியே-யாரூந் தினத்திலூற்
பனங் கண்டு வேட்டம் நீடியே-யிறைக் கென்னமோ
வென்று
மனங்கொண்ட வே கமொடு தாண்டி
வந்தானைக கண்டிடவும் சிந்தைமயக் கந்தொடவும்
(திண்ணர்)

(2) மலர் நேர்கை யூனுஞ் சிதறவே-யலங் கோலமோடுந்
தலமேல்விழுந் துடலம் பதறவே தெளிந் தெழுந்தவுடன்
வெஞ்

சிலை வேடர்மேர் சிப்பரெனவுந்
தெரிந்தேனே படுபாவி பிரிந்தேனேயெனமேவித் (தின்)

(3) தேடியும் யாருமில்லையே-யென்செய் வேனென்மனம்
வாடிப்பச் சிலையி னெல்லையே-கண்டு பறித்துக் கசக்கி
ஓடி வந்தும் பிழிந்து கண்சோரி
யொழுகச் சகியாமலுருகி யழுகப்புனல் வாரமருகித் (தின்)

விருத்தம்.

பச்சிலைச்சாற் றாலும்பற் றாததனைக்கண்டு-பரிந்தினியென்
செய்வதெனத் தெரிந்துமுனை வாக்கி
வச்சிலையூ னமுதூட்டு மனியனைத் தின்னார்—வையமகிழ
ப்பர் கண்ணுக்கூனம்வரக் கண்டு
துச்சமுறு மெனக்கிகெண் ணிருக்க வையர்க் கொருகண்
டுன்புறலென் யாயமெனை வன்பின்மனித் தோர்ந்து
மெச்சிமகிழ் வாகமுன்னின் றுபசரித்தங் கிரங்கி-வேண்டி * யப்பி
னுற்கண்ணைத் தோண்டி †யப்பினரே.

பதம் இராகம் சென்ஸ்ஜூட்டி தாளம் ரூபகம்,

பல்லவி.

குருதி நின்றிட மகிழ்ந் தாரே. (மனம்)

அநுபல்லவி.

கருதி யிடந்து கண்ணைப் பொருதினர் நேரே (கருதி)

சரணங்கள்.

(1) ஊனுக்கூ னிடில்நன்று மொட்டும்-என்று
தானேசி தானித்துச் சரிபார்த்துக் கிட்டும்
தேனுக்கி ணைவிழியைத் தொட்டும்-ஈசர்
திருநய னத்தினில் வைத்திடவேமுன் கொட்டும் (குருதி)

அப்பினுல் அம்பினுல் † அப்பினர் அற்பணஞ் செய்தார்.

(2) புயங்கள்பு டைக்கத்தட்டிப் பார்த்து-மினிப்
பயங்கர மில்லையெனப் பரிந்தெதிர் பார்த்து
நயந்துகொண் டாடினர் காத்துச்-செய்த
நன்மதி யைப்புகழ்ந்தா ரன்மத்தம் போர்த்துக் (குருதி)

(3) இனிமேல் குறைச்சலெனக் கேது-வும்மைத்
தனியேவிட் டுப்பிரிந்த தால்வந்த தீது
இனி யெந்த விடத்தில்வ ராது-ஜக
தீசரே மெனப்புகழ்ந் திருந்தாரப்போது (குருதி)

பத்தியம் இராகம் ஆநந்த பைரவி.

கண்ணிடந் திழிசோரி விண்ணிடம் பொழிமாரி
காணவே வழியவது தேனுமலே
உண்ணிறைந் திடுமுவகை யெண்ணிலன் பொடுபெருகி
உருகியே வுயிரையும பேணுமலே
திண்ணர்நின் றிடவுமவர் தன்னினன் பினையினாமும்
எண்ணுலக ரியவையர் கோணுமலே
வண்ண மூறு தமதிடக் கண்ணிலுறு சோரியும்
வாரவே காட்டவுட னுணுமலே
அண்ணலுந் தைரியம தாகநின்று
அருமருந் தொன்றுகை வசமிதென்று
நண்ணியவர் கையம்பு விழியிலொன்று
நாட்டலுந் தினர்வேட ராஜரன்றே.

பதம் இராகம் காம்போதி தாளம் சாப்பு.

பல்லவி.

கண்ணப்பா வெனக்கூறின ரம்பர்தன் கண்ணைப்பார்த்
திடக்காதே நில்லுநில்லென் (கண்ணப்பா)

சரணங்கள்.

வண்ணப்பா ரிடந் தோன்கண்ணும் நின்கண்
மலர்க்கிணை யாமோ சிலக்கை பொருந்தமென் (கண்ணப்பா)

சரணங்கள்.

1. (a) இடந்தப்பி னுலு (b) மிடந்தப்பு மென்றே
யிடக்காற்செ ருப்பா லிடக்கண்ணி லூன்றித்
தடந்தப்பி டாமலப் பைக்கண்ணி லூன்றச் சகிக்கேமென்
றன்பர்கை தன்னைப்பி டித்தெந்தன் (கண்ணப்பா)

(2) அய்யர் தடுக்கத் தடைக்கடங் காதபே ரன்புபெ ருகப் போரா
சைபெ ருகநின் செய்யவ டிமைத் திறங்கண்டு வந்தோ
மெத் தேவரும் நின்னடி யாவாஞ் சேல்பக்திக் (கண்)

(3) பூசைபு ரிசிவ கோசரி யார்மெய் புளகுற வேதன் மகிழ்
வுற விண்ணவர்
மாசகல் புஷ்ப மழைபொ ழியநன்
மறைகள் துதித்து மகிமை மொழியவென் (கண்ணப்பா)

கலித்துறை.

* தண்ணப்ப ராமதி சூடும் பரம தயாநிதியுங்
கண்ணப்ப ராகிய திண்ணப்பர் தாமரைக் கைப்பிடித்திங்
‡ கெண்ணப்ப ராவன்ப நம்வலப் பால்வடி வெய்திநில்லென்
† றண்ணப்ப ராதிபர் சேர்த்தார் தழுவி யணைத்துக்
கொண்டே.

மங்களம்-இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மங்க ளஞ்ஜய மங்களம் சந்த தம்மங்களம் நய மங்களம்

(a) இடந்து அப்பினுலும்—தோண்டியப்பினும்.
(b) இடந்தப்புமென்று இடத்தைவிட்டு நீக்குமென்று.
* தண் அப்பு அரா—குளிர்ச்சிபொருந்திய, கங்கையையும், சர்ப்பத்தையும்.
† எண்ணப் பரா அன்ப எண்ணும்படியான, சிரேஷ்டம பொருந்திய அன்ப.
‡ அண்ணப்-பரா-அதிபர்-நெருங்கிநிற்கும், பார்வதிக்கு நாயகர்.

அநுபல்லவி.

மங்கைதன் பாகருக்கு மறைமொழி யோகருக்குங்
கங்கண நாகருக்குந் துங்கவை போகருக்கும் (மங்களம்)

சரணங்கள்.

(1) தொண்டர்க ணேசருக்குஞ் சொரூபப்பிர காசருக்கும்
அண்டர்வி சுவாஸருக்கும் அணிகாளத் தீசருக்கும் (மங்)

(2) வனவந்தி வண்ணருக்கு மகிழுமுக் கண்ணருக்கும்
தின * மன்ப ரெண்ணருக்கும் செய்யும்பக்தித் திண்ணருக்கும்

(3) மழவைச்சி தம்பரஞ்சொல் வளரும்பெருங் கவிக்கும்
தழைக்கும்க ருணைசெய்ச தாசிவர்க்கும் சிவைக்கும் (மங்)

கண்ணப்பநாயனர் சரித்திரம்.

முற்றிற்று.

ஆ லாவணி	2.	ஸவாய்	2
லாவணி. அல்லது பஞ்சசாமரம்	1.	வெண்பா	3.
ஆர்யா	4.	கலித்துறை	5.
பதம்	14.	கண்ணிகள்	2.
விருத்தம்	13.	பத்தியம்	1.
மங்களம்	1.	ஆ மொத்தம்	48.

ஆ சரித்திரங்கள் 11-க்கு உருப்படிகள் 295.

---

* அன்பர்-எண்ண-ருக்கும்-அன்பர்கள் எண்ணும்படியான வேதமும்.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிச்சிற்றம்பலம்.

12 குங்கிலியக்கலய நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்-கல்யாணி. தாளம்-சாப்பு
(பஞ்சசாமரமாகவும் பாடலாம்)

(1) பூமருவிய மணிகளையலை யால்மகிழ்ந்தெங்கும் வீசியே
தாமருவியெக் களித்துக்கொழிக்குந் தண்புனல்சல ராசியே.

(2) போலும்பொன்னி நாட்டில்ம்ருகண்டு பாலர்க்காயன்பு சாலவே
காலனையடர்த் திடும்நம்பர்திகழ் கடவூரிற்கதிர் போலவே

(3) விளங்கும்வேதியர் குலத்திற்சிறந்த களங்கமில்லாத வாய்மையார்
உளங்கனிந்தன்ப ருபசரித்தமு தூணவிக்குமனத் தூய்மை யார்

(4) சைவமுத்திரை தரிக்குமன்பரைச் சம்புவென்றகத் துன்னு [வார்
நைவரும்பொழு தினும்பரசிவ நாமங்களையே பன்னுவார்

(5) ஈசர்கைங்கரியமின்றிக்கன விடத்தும் வேறொன்றும் புரிந்திலார்
மாசிலீசன்றாள் பூசிப்பதன்றி மற்றைவழக்கந் தெரிந்திலார்

(6) நிகமாகமசாஸ் திரத்தினுட்பொரு ணிமலராடியென் றோர்ந்துளார்
தகைமைசேரீசர் திருவடிகளைச் சார்ந்திடவன்பு கூர்ந்துளார்

ஆரியா.

இத்தகை மேவிய சீரா
  ரிசைமே வியக்கலை யன்றெ னும்பெயரார்
அத்தர் பணிவிண்டயி னேரே
  அடியார் மகிழுவி வர்போலெ வர்செய்வாரே.

பதம்—இராகம்-கமாசு. தாளம்-சாப்பு.
(மாநிநீ மனஸ் யாலகாரகதே என்ற ஜாவளி போல)

பல்லவி.

முத்திவிரும்பி பக்திபுரிந்திட் டார் ஜீவன் (முக்தி)

அநுப்பல்லவி.

நித்தியாநித்யவஸ் துவிதென் றறிந்திட் டார் ஜீவன் (முக்தி)

சரணங்கள்.

(1) அமிருதகடேசர் தாளைநாடி
  யமிதஸித்திகள் கூடியே (முக்தி)

(2) பாபாகித ராய்க்குங்கிலிய
  தூபமீசருக் கூட்டியே (முக்தி)

(3) கலையனுரும்விற் சிலையினுடென்று
  நிலையனுடெனப் போற்றியே (முக்தி)

(4) நம்பரிடத்தில் வாசஞ்செய்திட
  வன்புடன்வாஸங் காட்டியே (முக்தி)

ஸவாய்.

(1) *காலயி லும்பணி யாத்தி னுர்க்கு
  மெக் † காலையி லும்பணி யார்வமதாகி

---

* காலயிலும்-காற்றைப்புசிக்கின்ற †எக்காலையிலும்-எப்பொழுதும்

(a) வெலையி லாமைபோ லைந்தடக் கிமறு
வேலையி லாமையிவ் வேலையாகி

(2) வேதனை நேர்செறலும் வேதிய னன்புற
வேதனை நன்மனத் தாலுமுன்மூன்று

(b) சோதனை யட்டவர் சோதனை செய்திட
வாதனை யாமன மீதுநை வாரே

பதம். இராகம்-பியாகு. தாளம்-ஆதி.
(தொடிமங்கெடபாதலாவே எனற இந்துஸ்தானி போல)

பல்லவி.

பக்தி சற்றும்விட்டி டாரே

அநுபல்லவி.

மித்தை மாயைமூடிடு மெனு விமர்தானை நாடும் (பக்தி)

சரணங்கள்.

(1) பஞ்சம் வந்தகாலுமே நெஞ்சம் மலைவிலாதுமே
மிஞ்சும் பணைகள்முற்றுமே விலை
கிஞ்சித்தாய் விற்றுமே (பக்தி)

(2) பணிதி விலைகள்புரிந்தும் கணிதியாகப்பொருந்தும்
மணிசேர் காலிகள்விற்று மிகத்
துணிவுடனே பற்றும் (பக்தி)

(3) கலையா வடிமைநீக் கினர் சொலையார் வேதவாக்கினர்
கலையார் பொருளறிந் தவர்
நன்மைக் கலையனு ருஞ்சிவ (பக்தி)

(a) சமுத்திரத்திலுள்ள ஆமைபோல்
(b) சோதனை-மூன்று கோட்டைகளை அதாவது திரிபுரங்களை.

வெண்பா.

* செய்ய வருமைச் சிறுவர்களும் பத்தினியும்
† வெய்ய வறுமையினால் மெய்தளர்ந்து—நைவதையும்
பாராத நண்பரையே பார்த்து மனைவியருஞ்
சோரா வுரைப்பர்முன்வந் து

இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(1) பொறுமை யுள்ள வெந்தன் றரும வுருவே கிருபை
பொருந்திய பிராண நாதா—யிந்த
வறுமை யாலே படுஞ் சிறுமை பொறுக்க வென்றால்
வசமோ தெரியாதா

(2) மழை காணாத பயிர் வாடுவ துபோற் சிறு
மதலைகள் படுந் துன்பமே
பழையப டிக்கதிதி களைக்கண்டுப சரிக்கப்
பாலிக்கு மோ வின்பமே

(3) கொள்ளித் தேளின் கொடுக்காற்
கொட்டல் போலும் பசியாற்
குழந்தைகள் மிக வாடுதே
அள்ளிப் போடுஞ் சோறுக்குந்
தண்ணீர்க்கு மேக்கமுறு
மவதியாற் களை போடுதே

(4) சா முணர்ந்து விக்க லெடுத்து மூர்ச்சை யாகித்
தானே விழிகள் சுற்றுதே
வாமிப்ப டிக்குமுன்னம் வாங்கிவந் தோமோ மெத்த
வயி றடிக் கடி பற்றுதே

---

* செய்ய. அருமை-செம்மையான அருமையுள்ள.
† வெய்ய வறுமை-கொடூர்தரித்திரமுள்ள.

(5) கொடிய பாபி யுயிர்தக் குழந்தைக ளின்றுன்பத் தைக்
கூசாமற் பார்ப்பா ளோ
அடியவர் புகழ்ந்திடு மன்பரே யிந்தத்துன்ப
மதைச்சகிக் கநாளோ

ஸ்வாய்.

(1) அய்யர் மனைவியர் வெய்ய கொடுந்துய
ராலுமெ லிந்து கரைந்தன ரே
துய்யா டியில் விழுந்து மயங்கி மெய்
சோர்ந்தன்பு கூர்ந்து வரைந்தனரே

(2) நாளிரண் டாகியும் பிள்ளைமு கத்தினை
நாடிலீ ரென்று தவித்தனரே
வேளைக்கு தவுமிம் மங்கிலிய ங்கொண்டி
னென்றுசொல் லிக்கைகு வித்தனரே

கலித்துறை.

‡ பொன்னு ணுடுந்திரு மங்கிலி யங்கையிற் போற்றிநல்கி
X மின்னு ணுடுநிற்க வேதியர் நெற்கொள வேசெலவே
அந்நா ளொருவன் பொதிநிறை குங்கிலி யங்கொடிவர்
முன்னால் வரயிது வென்னென்று கேழ்க்க மொழிந்தனரே.

இராகம் இந்துஸ்தானி-காபி. தாளம்-அட தாள சாப்பு.

கண்ணிகள்.

(1) வேதியரேவணிக ஜாதிவியாபாரி லஞ்சாரி சொல்லும்
வித்தகரே கேளும் முத்தீ யாளும்
கோதில்லாத நன்மை மாதவரே சும்மை வெண்மைக்
குங்கிலியப் பார மென்றுகூற

---

‡ பொன்னுணெடு-பொற்கயிறொடு X மின்னுணெடு-பெண்நாணத்தோடு

(2) ஈசரன்பு செய்ய வாஸமிரு மாகில் மோகித்
தேர்க்கலாமென் றய்ய ருரைசெய்ய
தேசிகனுங் கேட்டுச் செப்புமறை
யோரே நேரே யேது
செய்வீரெனுக் கென்ன மொழி பன்ன

(3) மங்கிலீய மீயக் குங்கிலியப் பொதியே
நிதியே யென்ன
வாங்கினரென் னய்யர் மகிழ்செய்ய
அங்கம்பூரித் திடவே யனுகும்பவங்கள்
விடவே யடைவே
யாருமில்லை மறந்தா ரனைத்துந் துறந்தார்

வெண்பா.

சாலிமறந் தார்நல்குந் தாலிமறந் தார்பாக்ய
சாலியுநா னென்னக்கூத் தாடினார்—மேலாம்
பெரும்பேற்றை விட்டுப் பெறுப்பேற்றை நச்சி
விரும்புவரோ வென் றுரைத்து மே.

ஸ்வாய்.

(1) மங்கிலி யத்திற்குக் குங்கிலி யச்சுமை
வாங்கினர் தோளினிற் றாங்கினர் நேரே
பொங்கியே யானந்த பாஷ்பம்வி ழிகள்
பொழியமெய் ரோமம்பு ளகுறுவரே

(2) ஆருற்ற செஞ்சடை யாரத்தர் கோயிற்பண்
டாரத்திற் சேர்த்தனர் தீரத்தி னரே
தாரத்தை மைந்தர்கள் வாரத்தை யும்மறந்
தாரத்தையார்சொல்லு வார்சித்தி யோரே

பதம். இராகம்-பியாகு. தாளம்-சாப்பு.

பல்லவி.

வந்தித்துப் பசித்தார் ஈாமாமிருதஞ் சிந்தித்துப் புசித்தார் (வந்)

அநுபல்லவி.

சந்தவு மைரேசனை யெந்தைவீ ரட்டேசனை (வந்தித்து)

சரணங்கள்.

(1) கறுத்துப் பவத்தையும்வே ரறுத்துப் பெரும்பசியைப்
பொறுத்தீஷ ணாத்திரயத்தை வெறுத்துக்க
ருத்திரேனும் (வந்தித்து)

(2) அவத்தைப் போக்கிப்பெருந் தவத்திற்
றேக்கிச்சொலுந்
துவத்தை நீக்குப்பர சிவத்தை
நோக்கித்தனி (வந்தித்து)

(3) மலையை நாணிபெறுஞ் சிலையெ னுவளைத்த
நிலையி னுரைமறைக் கலைய னூர்துதித்து (வந்தித்து)

ஆர்யா.

இத்தன் மைமையமே வினரோ
யிவர்தம் மனையினை யுமீசர் புரிதுறவே
மெய்த்தன் பொருசெய் திடவே
மிகவே யுபர்வா கியேவி ளங்கிடவே

பதம். இராகம்-பியாக். தாளம்-ஆதி. மிசிரகதி.

பல்லவி.

அத்தருள் செய்தோங்கவே குபேரன்நிதி
வைத்தனன் கலிநீங்கவே (அத்தர்)

அநுபல்லவி.

எத்திசையு முள்ளபன்னெண் ஸித்தர்தேவர் மாலயர்க்கு
மெட்டாத தாளர்வீ ரட்டானம் வாழுமெங்கள் (அத்தருள்)

சரணங்கள்.

(1) விண்ணவர்ப திகளும்வெட்க அடுக்கடுக்கா
நண்ணுமுப்ப ரிகைகள்மிக்கச் சொர்ணகுடங்கள்
எண்ணிலாது கதிரொளிக்க விளங்கிவாள
மெங்கினிலும் பரிமளிக்க வகிற்புகைகள்
வண்ணமுறு மேகங்கள்போ
லெண்ணிலாது கும்புகும்பா
வானிலுற வேயிந்த்ரன் மானசபை
மானவன்பர்க் (கத்தாருள்)

(2) குவைதுவை யாகப்பொன்களும் நவையில்லா
நவமார்ந வரத்தினங்களும்
செவையாகி யநகைகளும் பாத்ரங்களும்பு
தியதாப்ப லவகைகளும்
எவைகளு மேருவென வேகுவித்தி ருக்கப்பசு
வின்கூட்ட முங்கன்றுக ளின்கூட்ட மும்
பெருக (அத்தாருள்)

(3) பல்வளங்க ளுஞ்சிறக்கவே கருணைசெய்து
நல்லவர கம்நிறக்கவே
செல்வருடன் றுப் கிரங்கவே மயங்கிமூர்ச்சித்
தேதனைவி முந்துறங்கவே
நல்விரதர் மனைச்சொற்ப னத்திலுரைத் திடமன
நாடியெழுந்து பார்க்கக் கூடிநிச
மாகமகிழ்ந் (தத்தாருள்)

ஸ்வாய்.

(1) கண்டுவ ணங்கிப்ப ணிந்திது நந்நீல
கண்டா ருளென்றுட் கொண்டனர் தாமே
எண்டிசை யும்புகழ் தொண்டரா நண்பர்க்
கினியவ முதட்டச் செய்தன ராமே

(2) இவ்வித மிக்குறச் சைவசி காமணி
யீசர்தங் கோயி லிருக்கவுந் தேடிச்

செவ்விய நவ்வியர் பவ்விய ரொல்விடத்
திவ்விய மாயிதைச் செப்பினர் நாடி

(3) அன்பனே நீமெத்த வெம்பசி யாலினைத்
தாயில மேகிப்பா லன்னமுண் டாறி
யின்புணர் வாயெனு ஞ சொல்லுணர்ந் துமறுக்
கிற்பிழை யென்றஞ்சி யேகினர் தேறி

வெண்பா.

* மனையா தெனமயங்கு மய்யர் புகழ்சேர்
† மனையாற் றெரிந்துபுக்கு வன்ன—மனையாயீ
தென்ன புதுமையென வீசர்செய லென்றுரைக்கத்
தன்னகத்தில் மிக்கமகிழ்ந் தார்.

பதம். இராகம்-அடாணா. தாளம்-ஆதி.

பல்லவி.

களித்தா ரின்பத்திற் குளித்தார் வளர்கலையனார் கலையனார் (களித்)

அநுபல்லவி.

அளித்தா ளெனும் பாலகர்க் காயெமனை
யடர்த்தா ரருளால்வரு நிதிகண்டு (களித்)

சரணங்கள்.

(1) பன்மணி யால்விளங்கு மாடங்க ளையும்பொற்சு
தன்மைபோ லிலங்கும் கூடங்க ளையுநோக்கிக் (களித்)

(2) இருளைநீக் கிவிளங்கும் பொருளையு மிறையவ
ரருளையு நாடிமிகத் தெருளும னத்தார்மெத்தக் (களித்)

(3) பூவுல கத்தவருந் தேவுல கத்தவரும்
மேவுதற் கரும்பொருள் யாவையு நாடியகங் (களித்)

---

* மனை—வீடு. † மனை—சம்சாரம்.

(4) இருமையுந் துறந்தவ ரொருமையைக் கண்டுநம்பர்
அருமைய தாயளித்த பெருமையை யெண்ணி யெண்ணிக்
(களித்தார்)

விருத்தம்.

ஈசர்திரு வருணோக்கிக் கைகூப்பிப்
பணிந்துபணிந் தெழுந்துநம்பர்
மாசகலுங் குணங்கடமைச் சுருதிகளி
னுலும்சை வாகமங்க
ளோசைபெறு மொழியாலுங் கோஷித்துத்
துதித்தேற்றி யுவந்துதொண்டர்
நேசமிகும் விருந்தரொடு மிருந்தமுத
மருந்தினர்நன் னெறிநின்றாரே.

ஆர்யா.

(1) ஸந்தத மமிருக டேசர்
சரணத்வயபுண் டரீக நிஜதாஸர்
சிந்தையு வந்தன் பரையே
சிவவென் றமுதுசெ யவேசெய் திடுவாரே

(2) a அதிதியி லாநா ளுமிலை b
யதிதியு மிலையற் பமான c திதியுமிலை
நதியணி பவராரு ளாலே
நண்ணினர் சிவபக் தியோரு மனதாலே.

ஸவாய்.

(1) நித்யமு மிப்படி யற்பின்மி குத்தவள்
விற்பனர் மெய்கிழ லொத்திட நேரே
சித்தமதிற்கனி வுற்றும னத்தொழில்
பக்தியு றச்செய்தி டத்திகழ் சீரே

---

a விருந்தினர். b கெட்ட திதி. c செல்வம்.

(2) நாளும்பொ ருந்தினர் நீளுந்தி ருப்பனந்
தாளிற்சி வம்வளை வாகின தாலே
சோளநி லத்திறை வேழங்கள் சேனைகள்
சூழ்வந் தீசனை மீளமென் மேலே.

கலித்துறை.

[illegible]ணி முயன்றெச் சரித்து நிமிர்ந்தில தாற்
போராக்க முற்ற வாசன் மயங்கிப் பிழையென்செய் தேன்
தீராக் கவலைக் கெளையாட்செய் தாய் சிவ மேயெனநைந்
தோராக் கருத்துடன் மேயதைக் கேட்டன்ப ரோடினரே.

பதம். இராகம்-பூரிகல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

விரைந்தோடி னாரன்பி னார் சகித்திடாமல் (விரைந்)

அநுபல்லவி.

கரைந்தே யுருகிப்பெருங் * கற்றாவைப் போலநாடிக்
கண்ணுத லினைத்தேடி வழியைக்கூடி (விரைந்)

சரணங்கள்.

(1) * கால்கதி யைக் † கால்கதி யாக்கிச் சிவபெருமான்
‡ கால்களின் கதிநோக்கி வினையைப்போக்கி (விரைந்)

(2) ¶ விருப்பநந் தாவடியர் திருப்பனந் தாளைக்கூடிப்
பொருப்பின்வில் லைத்தேடி நேர்செயநாடி (விரைந்)

(3) விதியோ வெவர்செய்திடுஞ் சதியோ வென்றுகருணா
நிதியைக்கண் டாவல்தீர மிகுமன்பூர (விரைந்)

---

* தாயைத் தேடிய கன்றைப்போல.

* கால்கதி—காற்றின்கதி. † கால்கதி—நால்வாசியானகதி. ‡ கால்கள்—பாதங்கள். ¶ விருப்ப நந்தா அடியர்—விரும்பும்படியான கெடாத அடியையுடையவர்.

விருத்தம்.

அய்யர் வரவை நோக்கிவிரைந் தழைத்தல் போற்கொ டிகளாடத்
துய்ய மலர்மா மழைபெய்து சோலை களெலாஞ் சிரமசைத்துச்
செய்ய கனிக ளுதவிவிருந் திடுவான் றிருப்ப னந்தாட்புக்
குய்ய வரனார் திருவுருக்கண் டுற்றுப் பணிந்தங் கெழுந்தாரே.

பதம். இராகம்-முகாரி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஸகி யாமல் நொந்தார் தரைமேல் விழுந்தார் (ஸகி)

அநுபல்லவி.

விகிருத ருரு வினைக்கண்டு மெத்தவும யக்கங் கொண்டு (ஸகி)

சரணங்கள்.

(1) கோபமோ யெவர்மேல் மனஸ் தாபமோ புவியி லுள்ளோர்
பாபமோ வறியேனென்று தாபதர்ம யங்கிநின்று (ஸகி)

(2) தேவர்வணங் கப்பெற்றிடு மூவர்வணங் கவுற்றிடுங்
கோவின்வலை வினைநாட மேவுங்கண்ணீ ராறுயோட (ஸகி)

(3) மேருவில்வ ளைக்கும்போது நேரில்நின்ற விறை யென்ன
காரியங்கண் டோயிப்போது நேரில்நின்றி டாததென்ன ()

விருத்தம்.

இவ்வித முருகிநின்றங் கெழுந்துவெள் ளிடைவந்தய்யர்
தெவ்விலா தடக்குமன்னன் சேனைவெங் கரிகளோடு
மொவ்விய திருப்பணிக்கங் குற்றுநேர் படாமைநோக்கிச்
செவ்வியர் விதனித்துள்ளந் தியங்குவார் மயங்குவாரே.

வெண்பா.

வாடி மயங்கி மறுகியுரு கிப்பணியை
நாடிவந்த சேனையொடு நால்வாய்கள்—கூடி
முயன்றெய்த்து வீழ்ந்தவதன் மூர்ச்சைகண்டு தாமு
மியன்றவருத் தம்பொருத்தா ரே.

பதம். இராகம்-ஹமீர்கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

சங்காரை நேரே தங்கிடச்செய் தாரே சிவ (சங்கர)

அநுபல்லவி.

ஸங்கட்டமில்[illegible]ர்மலே ஸ[illegible]ரவர சிவ (சங்கர)

சரணங்கள்.

(1) இலிங்கம தனிதற்பூங்கச் சிட்டதின் மேலே சொலுங்
கயிற்றாலே
சொலுங்கயிற்றாற் பிணைந்ததிறைற் சிவ (சங்கர)
(2) அக்கயிற் றுடனன்பின் பாசமும் பூட்டி
நற்களத்தில் மாட்டி யன்புபாராட்டிச் சிவ (சங்கர
(3) இயானேசே னையின்றுய ரெனக்குமொவ் வாதோ
ஆளயித் தேகம் போனால் நலமெனச் (சங்கர)

வெண்பா.

ஈசருநே ராகவண்ட மெல்லா மிகநேராய்
மூகிவிழுந் சேனைகளு [illegible]ழுந்—தேசுபெறுந்
தந்திகளுங் கார்கண்ட தண்வனம்போ லுந்தொண்டர்
சிந்தையெல்லா மேநிமிர்ந்த தே.

விருத்தம்.

கண்டத்திற் பூட்டியெங்கள் கலையனா ரொருமைப்பாட்டின்
அண்டர்நா தனையிழுக்கு மதுவரை பொறுக்கு மோமும்
மண்டலத் தவருமார்க்க வானவர் மலர்கள்மாரிக்
கொண்டல்போல் பொழியவீசர் குனிப்புரு நிமிர்ந்தவன்றே.

ஸவாய்.

(1) இன்னபு துமையைக் கண் டவய் யரென்
னிறையேகு றைதீர்ந்த தென்றன்பி னுடி
மன்னும்பு வியில்வி ழுந்துவி ழுந்து
மறைமொழியாற்றுதி செய்யவுங் கூடி

(2) ஆனந்த பாஷ்பங்க ளால்நனைந் தேமிகு
மன்பினிற் கச்சோள மன்னவ னோடித்
தானந்தி கழுமி றையைப்ப ணிந்தய்யர் தந்துணைத்
தாளைவ ணங்கினன் கூடி.

ஆர்யா.

கூடிவ ணங்கிம கிழ்ந்து குணமே வியகலை யனார்பு கழ்நினைந்தீ
காடிம னதினில்ம தித்தான்-நாவின் பயனிது வென நனிதுதித்தான்

பதம். இராகம்-கானடா. தாளம்-ஆதி.

பல்லவி.

யானே தங்கள் பெருமைதெ ரியாதவ னானேன் (யானே)

அநுபல்லவி.

ஞானஸா காகிரு பாநிதி யேகலைய னாரேயென்
பிழைபொறுப் பீரே யிப்போது நேரே (யானே)

சரணங்கள்

(1) அயகீர்த் தியெனைவந் தடையா மற்புரியுந்
தபமேப ழுத்துவந்த தாவந்தீ ரென்றறியா (யானே)
(2) எந்தவு லகிலுண்டு யிந்தக்கண் காட்சி தந்தீர தற்குநீரத்
தாட்சி தாட்சிசெயும் (நானே)
(3) அருந் *தவர் வாழ்மேருவைப் பெருந் † தவ ராக்கி
‡ யிருந்தவர்க் குத்தவரிட் டேனென மலாக்கியும் (நானே)

விருத்தம்.

திரிபுரங்கள் வேவுறவை திகத்தேர் மேவிச்
செழும்பொன்வரை குனித்தார்செந் நிலையைக்காண

* தவர்—தபஸ்விகள். † தவர்—வில்லு. ‡ இருந்தவர்க்கு—இருந்த பேருக்கு.

அரிமையுடன் செய்ததற்கிவ் வுலகிற்கைம்மா
றுளதோசொ டனுஞ்சொல்ல வலதோ மாலும்
பெரியமண் ணுண் டதனினுங்கா ணுதசெய்ய
பெற்றிபெறு மடிகளையன் பர்களையன்றித்
தெரியவெவர் நேர்காண வல்லரென்று
செப்புதுதி செய்துமகிழ்ந் தேத்தினரே

ஆரியா.

(1) அரியவ ரிணையடி போற்றி
யானுர் மனமகி ழுவேமி கவுமேற்றி
யுரியதி ருப்பணி யாற்றி
யுயர்வா னசிறப் பதாக மலர்நாற்றி

(2) வாஸமி குந்திட வெங்கும்
மறையோ விடவிய மனேக வொளிபொங்கும்
நேசர்கள் சூழ்தர நேரே
நேவ தனமிஞ் சவேசெய் வித்தாரே.

வெண்பா.

அடைவிற் பெருஞ்சிறப்பை யாற்றி வளவன்
விடைபெற்றுத் தம்பதியை மேவத்—தடையின்றி
நங்கலைய ஞர்சிலது நாளங் கிருந்தானை
மங்களஞ்சேர் தோத்திரஞ்செய் வார்.

பதம். இராகம்-எதுகுல காம்போதி. தாளம்-சாப்பு.

(கீதியாகவும் பாடலாம்.)

கண்ணிகள்

(1) சந்த்ர சேகரா ஸுந் தரசுபாகரா
மந்த்ர ஸாகரா உ மாமனோகரா

(2) நாக பூஷணு பக்த ராக சோஷணு
யோக போஷணு மித்யா போக தூஷணு

(3) கருணை நோக்கினீ ரயக் கியாதி நீக்கினீர்
தரும வாக்கினீ ரெனைத் தன்ய னாக்கினீர்

(4) கலக நீங்கவே வுல கையெலாந் தாங்கவே
நிலையி னோர்நின் றீர் கன்னற் சிலையன் றனைவென் றீர்

(5) அடியார் பெருமையை வெளி யாக்கு மருமையைப்
படிய றியச்செய்தீர் க்ருபை யடிமை மீதுபெய்தீர்

விருத்தம்.

இவ்விதந் துதித்தங் கிருந்தவர் விடைகொண்
டேகியே திருக்கட வூர்க்குச்
செவ்வியர் புக்கு வமுதக டேசர்
திருவடி பணிந்து றுநாளில்
திவ்விய ஞானப் பிள்ளையா ரினிய
செழுந்திருத் தாண்டக வரசோ
டொவ்வியங் கெழுதல் கேட்டெதிர் சென்றங்
குவந்தடி களிற்பணிந் தனரே.

வெண்பா.

பணிந்தெழுந்தா னந்தப் பரவையிட மூழ்கிக்
* கணிந்தாவி யங்கிகண்க ளானார்—இணங்குதிரு
மேனிநேர் கண்டதினு மிக்கமகிழ் வாகியவைத்
தானவுப சாரஞ்செய் தார்.

பதம். இராகம்-ரீதிகவுளை. தாளம்-சாப்பு.

பல்லவி.

உபசரித் தாரே தபசரி தருமகிழ்ந் (துபசரித்தாரே)

அநுபல்லவி

சுபசரி தற்குமனத் தூயர் நேயமொடு (முபசரித்தாரே)

---

* கண் இந்து இரவி யங்கி கண்களானார்-சோம, சூரியாக்கினி யென்னும் நேத்திரங்களை யுடையவர்.

சரணங்கள்.

(1) கண்டேனே காட்சி தங்களருளாற் கொண்டேனே மாட்சி
தொண்டனி லத்திற்பாதத் துணைவைத்தீர் தாட்சியேதென்

(2) இருவினை நீக்கி யெனையுந்தொண்டி லொருவனென் றாக்கி
யருளினீரென்
றருமலர்க் கைகளா லடிவணங் கினோக்கிநின் (றுபசரித்)

(3) ஆதன மிட்டுப் பரிகலத்தின் மீதனம் வட்டித் தறுசுவையோ
டேதமில் மருந்தைமட் டிடுமினி யவிருந்திட் (டுபசரித்)

விருத்தம்.

* அருங்கலைய னுருபச ரித்ததையு
மெய்யன்பையுங்கண் டானந் தித்துக்
† கருங்கலைய னுருமிவர்க் காணில்மெழு
காவரெனக் கருதி யோர்ந்து
‡ நெருங்கலைய னாதரவோ டிகழ்குழலார்
மண்பொன்மய நீத்தோர் செல்லப்
¶ பெருங்கலைய னார்சீர்பூ சுராண்பிற்
பிரியாதார் பிரிந்தா ரன்றே.

ஸ்வாய்.

(1) ஆளுடை யபிள்ளை யாருநன் னவுக்
கரசும்பி ரியவ ருத்தமுற் றாரே
நாளுமமி ருதக டேசர்க்குத் தொண்டி
னலத்தின்மி குத்ததி ருத்தம்பெற் றாரே

---

* அருங் கலையனார்-அருமையாகிய குங்குலியக் கலையனார்.

† கருங்கலையனாரும்-கருங்கல்லை யொத்தவரும்

‡ நெருங்கு, அலை, யனாதரவோடு-நெருங்கும்படியான இருட்டை ஆதரவன்றியிருக்கும்படி

¶ பெருங்கலையனார்—பெருங்கலையையுடையவர், பிரமனென்றாவது சோமனென்றாவது கொள்க.

(2) நேர்ந்தப ணிவிடை யோர்ந்துசெ யும்பக்தர்க்
கீந்தனர் தம்பதம் சார்ந்தனர் நேரே
வாய்ந்தசி வபெரு மானரு ளால்திரு
மாமலை புக்கினர் மாமறை யோரே.

பலசுருதி சந்த விருத்தம்.

இச்சரி தத்தைவி ருப்பொடு மெச்சி யிணைச்செவி யுய்த்தவ ரிடமேவுந்
துச்சரி தத்தையொ ழித்தடி யர்க்கினி துற்றப்ரி யத்தினை யடைவார்கள்
உச்சரி த்தப தத்தினை யுற்றத னுட்சில பற்பக லதின்மேவி
யெச்சரி தத்தக ணத்தொடு நற்கயி லைப்பதி புக்குமருவுவாரே.

குங்கிலியக்கலைய நாயனார் சரித்திரம் முற்றிற்று.

லாவணி	1	கண்ணிகள்	3
ஆர்யா	5	கலித்துறை	2
பதம்	10	விருத்தம்	7
லவாய்	7	சந்த விருத்தம்	1
வெண்பா	7	ஆக உருப்படிகள்	43

ஆக சரித்திரங்கள் 12-க்கு உருப்படிகள் 338.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

13 மானக்கஞ்சாற நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்-மாஞ்சி. தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) சீர்பொருந் தியகஞ்சா றூரினில் வாழுஞ்
செழிப்புறும வேளாளர் குலத்திலென்னாளும்

(2) ஏர்பெற வுதித்தறம் வளர்த்திடு நிதியா
நிதம்பொருந் தியவேந்தர்க் கிருஞ்சேனை பதியார்

(3) திருந்திய தன்னிழ லெனவென்று நீங் கா
திருக்கும் பத் தினியோடி சைபெறும் பாங்கா

(4) மருந்தினின் னமுதினை விருந்தர்கட் களிப்பார்
வளர்பிறை யெனப்பத்தி வினோதாக் களிப்பார்

(5) இத்தகை பொருந்திய திருமனை மகிழ
நத்தின் வைத் துதித்த முத்தெனத் திகழ

(6) வித்தகம் பெறவோர்கன் னிகைபினைப் பெற்றார்
வினையுஞ்சீர் தழைவுற மிகச்செழிப் புற்றார்

பதம். இராகம்-மாயாமாளவ கௌளை. தாளம்-ரூபக சாப்பு.

பல்லவி.

மனது மகிழ்ந்தார்

அநுபல்லவி.

வனமார்ம கனைப்பெற்று மனையுட்கஞ் சாரு (மனது)

சரணங்கள்.

(1) கொஞ்சநாள் மகவில்லாக் குறைவிலீ சரைத்துதித்
தின்சொல்ம னைவயிற்றி லேமக வுதிக்க (மனது)

(2) பிறவித்து யாரீங்கப் பெருஞ்செல்வ மோங்க
நிறையும் பயிர்க்குமழை குறைவில்லா ததுபோல் (மனது)

ஸ்வாம்.

(1) அன்பர்ம கிழ்ந்திட வின்பமி குங்கிள்ளை
யஞ்சொற்பு தல்வி வளர்பிறைபோல
பம்பும ணப்பரு வம்பெற நாளின்
பயிற்புறக்கேட்டு மிகுமகிழ் சால

(2) பாங்குபெ றுமேயர் கோன்கலிக் காமற்குப்
பண்புறுந் தங்கள் புதல்வியைச் சாரத்

தேங்கமழ் மன்றல்செய் விப்பிரென் றுன்றோர்கள்
செப்பிட வொப்பினர் மானக்கஞ் சாறர்

ஆரியா.

இசைமொழி யைக்கூ றிடவே
யிருமன் றலிஞ் ளின்மேவ நேரிடவே
இசைபந்தர் களொடு நாம
விக்கார்மதனை நிகாரர் கலிக்காமர்

வெண்பா.

மன்றலுக்கு வந்திடுமுன் மானக்கஞ் சாறர்பக்தி
யின்றன் பெருமை யினைத்தெரிய—நன்றருளைச்
செய்யவெண்ணி யீசர் திருவுருமா றிக்கொடன்பர்
உய்யும்வணம் வந்தா ருவந்து

பதம். இராகம்-பியாக். தாளம்-ஆதி.

(சாகிஸபையாபன சித்ர என்பது போல)

பல்லவி.

மாவிர தியர்போல வேவிரை வினிலீசர்
வந்தாரே மன துவந்தாரே

அநுபல்லவி.

மாவின் பத்திறேடும் வழிகூ டியெங்கள்
மானக்கஞ் சாற ரிலந்தேடிக்—கொண்டாடி (மாவிரதியர்)

சரணங்கள்.

(1) நெற்றியிற் றிருபுண்டர மிகச்சொலிக்கச்சிர
சிற்க வென்புமணி களுங்கலிக்க
பற்றுங்குண் டலங்களும் பஞ்சிதிமாலை யென்பாக
பணிந்தன்பர் தாம்பலிக் கமிகஜ்வலிக்க (மாவிரதியர்)

(2) சர்ப்பமா லையைநீக்கி யுயர்யோ கப்பட்டை
தனித்தோ ளிலுமயிர் வடமுமேக

முப்புரி நூலுந் தரித்திந மாகப்-பூதி
பொக்க ணமாக்கட்டிக் கொடுவேக—மொடும் (மாவிரதி)

(3) படிகம ணிச்சூத்தி ரங்கையி லிலங்கத்தினங்
குடியாக வேமறைக் கோவணந் துலங்க
வடிகொளுத் ரியம தன்மீதிலங்க மறைத்தாள்
பஞ்சமுத்ரை யைத்-தரைக்கு னுன்றித்துலங்க (மாவிரதி)

(4) செம்மேனி விபூதி யுத்தூளி தம்பெருக வன்பர்
தம்மிரு வினைகளுந் தாங்கருக
நின்மலர் நே யமனம் நேயம்போ லுருகத்
தன்மவு ருவங்கண்டோர் தாமனந் தம்பெருக (மாவிரதி)

ஆர்யா.

வந்திடு மாவிர தருமே—மானக்கஞ்சா றர்வாழ்வை மிகுபெருமை
ஸந்தத மேவுற நேரே—தாழ்ட் புகுதவெ திராகி மனதருமே.

பதம். இராகம்-சென்ருட்டி. தாளம்-சாப்பு.
(நன்னுகாவவே என்பதுபோல)

பல்லவி.

உப சரிதஞ் செய்தாரே

அநுபல்லவி.

தபத்தி லுயர்மா விரத ரைக்கண்டு
சந்தித்துப்பணிந் (துபசரிதம்)

சரணங்கள்.

(1) தேவ ரீரிங் கெழுந்த ருளிய தினமே ஸுதினந்—தன்ய
னுனே னென மேன்மை பொருந்தும் (உப)

(2) கண்கொள் ளாத காட்சி யைப்பெற் றுக்கனதை
[கொண்டேனே
யிரு வினை களையும் விண்டேனே—யெனவுப (சரிதஞ்)

(3) இவ்வி லஞ்செயுந் தவப்ப யனென விணைப்ப தத்தாளை
சிரத்தில் வைத் துவைத்து மவ்வேளை (யுபசரிதம்)

வெண்பா.

உபசரிதத் தோடு முவப்பெய் திவந்த
தபசரிதர் தம்மடியிற் றாழ்ந்து—நிபுணர்
வினைய மொடுநிற்க விரதியரு நோக்கி
யினையவுரைசெய்வ ரே

பஞ்சசாமரம்.

(1) மங்க ளக்கு றிப்பி தென்ன வகைசொல் வீர்களு சாரரே
யிங்கென் மக்களுக் கினிய மன்ற லென்ற னர திதீரரே
(2) உங்களுக்கு மங்கலங்க ளுண் டாகவென்றும் யோகரே
உங்கள் னிகையைமணக்கோ லத்துட னிங்க
மையும்வி வேகரே
(3) என்று கூற மன்றல் மகளை யினித ழைத்து வந்தனர்
அன்று மங்கனம் பணிய நோக்கி யதிதி மிக்கு வந்தனர்
(4) மின்னி டையின் கூந்த லைக்கண் டென்னய்யரும்
வியந்தனர்
நன்ன யமிக்கு மல்பூ ணும்நூற்கு நலமென்றிடவே
நயந்தனர்
(5) ஈச ரடியார் குறிக்கவியைந்த தேக லமதா மென்னவே
மாசில் கன்னிகைக் கூந்த லையுடை
வாளினூற்றுணுக் கென்னவே
(6) மங்க லக்கனி யென்றெண் ணுமல்
மகிழ்ந்தடியொடுங் கொடுத்திட்டார்
எங்கி னும்புகழ் பூர்வ புண்யத்
தின்ப யன்கையி லெய்திட்டார்
(7) ஏர்ப்ப வர்போலென் னய்யர் மறைந்தங்
கிமயமாமலை மகளொடும்
மேற்பண் விடையிற் றோன்றப் பூமழை
மேதி னியெங்கு மூடிடும்
(8) படியின் னவர்கள் பொழிய நிற்கப்
பரமருருவங் கண்டனர்

அடிக ளிற்ப ணிந் தெழுந்து மனத்து ளடங்காவானந்தங் கொண்டனர்

(9) பரவ சத்தொடு மருங்கி னிற்கநம் பாமரன்பநின்பயிலன்பை விரைவி னில்யாரு மறியச் செய்தோம்நீ விடுபெ ரும்பிற வியின் றன்மை

ஸ்வாய்.

(1) என்றிது கூறியு மீசர்கை லாயத்தை
யெய்திட மானக்கஞ் சாறர்ம கிழ்ந்து
நின்றிட யிவ்வணம் யாவுங்க லிக்காமர்
நெஞ்சமு ருகிடக் கேட்டுப்பு கழ்ந்து

(2) மேயசி வானந்த மெய்திட மின்னாட்கு
மெய்க்கருங் கொண்டலெ னத்திரளாகி
யேயக ருங்குழல் மெத்தவ ளரவு மீந்தனர்நங்கலிக் காமற்கன் பாகி

பதம். இராகம்-ஸாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

மாதை மகிழ்வாகக்கலிக்காமர் மன்றல்புரிந்துகளித்தார்
மின்பவாரிதி யிற்குளித்தார் (மாதை)

அநுபல்லவி.

மாதயை மேவுகஞ் சாறர்சுற் றத்தாரொடும்
வானமகிழக்கன்னிகா தானமாக நல்கவந்த (மாதை)

சரணங்கள்

(1) பூமல ராலெங்கினு மிசைந்த பந்தர்கள்துன்னப்
பொருந்து மணியிழைத்துத் திருந்தும் பீடத்தில்மன்ன
மாமறை யவராசிர் வதித்திட வெகு
க்ஷேமமு றயாவருந் துதித்தி டத்திரு (மாதைமகிழ்)

(2) பல்லியத் திரளொலிக ளண்டகோ ளத்தைமுட்டப்
பாவையர் கள்மங்கலம் பாட மிகவுமிஷ்ட
மல்கும் பெரியோர்கள் சூழ்ந்திடத் திரு
மங்கலத் தினைப்பூட்டித் தங்கமுடன் வாழ்ந்திட (மாதை)

(3) பூமழை களுடனே பொன்மழை யுஞ்சிறக்கப்
பொழிந்து வருங்கவிஞர்க் கிரு நிதி யுநிறக்க
வேமகிழ் வாயிசை யோங்கவே நல்கி
நேமமு றுமில்லறந் தாங்கவே யெழில்பொருந்து (மாதை)

ஆர்யா.

தம்பதி யாமன நாடித் தம்பசி மேவிமி கவேநல் விசைதேடி
அன்பர்க ளுக்கமு திட்டா ரைம்பொறி யாறின் மனதே
கிடவுமொட்டார்

பலசுருதி விருத்தம்.

மகளின்கூந் தலையெண் ணாது வரும்பக்தர்க் கரிந்துநல்கும்
புகழின்கஞ் சாறர்செய்யப் புனித மாஞ்ச சரிதந்தன்னை
மிகவிரும் பினர்கேழ்ப்போரின் மேதினி யின்பமுழ்கித்
துகளறும் கைலைமேவிச் சுகம்பெற்று வாழ்வர்மாதோ.

மானக்கஞ்சாற நாயனார் சரித்திரம்.

முற்றிற்று.

ஆடலாவணி	1.	ஆர்யா	3.	விருத்தம்	ட.
ஆடபதம்	4.	வெண்பா	2.	ஆ	14,
லவாய்	2.	பஞ்சசாமரம்	1.	ஆ சரித்திரங்கள் 13க்கு	

உருப்படிகள் 352

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

14 அரிவாட்டாய நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்-மாஞ்சி. தாளம்-அடதாள சாப்பு.

கண்ணிகள்.

(1) வேலைசூழ் புவிமெச்சு சோலைக் ளோயும்
விரிமலர் நிறையுங்கர் விரிநதி பாயும்

(2) ஆலைக்க ரும்புஞ்செந்நெல் மணிகளை விளைக்கு
*மாலைக்க ரும்பிடுந்தா மரைபொங்கித் திளைக்கும்
(3) பணைகணி றையுஞ்சோழ நாட்டினிற் பெருஞ்சீர்க்
கணமங்கலமெனவே காசினி புகழூர்
(4) அந்நக ரத்திலுயர் வேளாளர் குலத்தில்
நன்னய மாயவதா ரஞ்செய் தோர் நலத்தில்
(5) கருணையா லோட்சிக்குந் தன்மையிற் ‡றாயர்
தருணத்த ருள்ளோரபி தானமுந் ()தாயர்

ஆர்யா.

இவர்செயல் யாதெனி லுருசித்
திடுமாவடுகீ ரையோடு மெல்லரிசிப்
பவனுர் நல்லுண வாகப்-பரிவாய் நிதமீ குவார்வி
னைகளேக

பதம். இராகம்-ரீதிகௌளை. தாளம்-ஆதி.

பல்லவி.

மிகு மாவ லொடுமன் புவிளைத்தார் பஃறியுந் திளைத்தார்
வெம்பவங் களைத்துளைத்தார் யீசர்க் கின்பமாயுழைத்தார் (மிகு)

அநுபல்லவி.

அகமே மிகமகிழ்வாயன்பரடி யாரைக்கண்
டுபசரிப்பா
ரன்பினுலென்பிரான் றிருப்புகழ்விரிப்பார்
அபிதானங்க ளுச்சரிப்பார் (மிகு)

சரணங்கள்.

(1) புவியோ ரடி யாகப்பெரும் புதுமைபொருந் திடவளர்ந்தும்
புகழ்சே ரிபரு மேனமா ப்புடவியூற படப்பிளந்தும்
அவயேபெ றத்தளருருப்மபக் கங்காட்டும் பொன்னம்பலவ

---

* மாலைக்கரும்பிடும்-சாயங்காலவேளையில், அரும்பாகவாகும்.

‡ தாயர்-மாதாவின் குணத்தையுடையவர் () தாயர்-தாயர் என்றுநாம
முடையவர்.

ரடிநற் கமலத் திணையைத் தினம்நினைவார்
இதயம்பொருந்தப்புனைவார் (மிகு)

(2) நிதியிற் புகழ் † தனதன் சிவ நேச ரிடத்திற் ‡ றனதன்
பதிகத்தவ ரவருக்கு பசரித்து வணங்கிடும்புனிதர்
நதியைப்புனை a சடையார்க் கின
நாடுந் தொண்டினிற் (b) சடையார்
நாடொறும்பொருளைக் கூடுறுநன்னடையார்
நட ராஜருக்கன்புடையார் (மிகு)

(3) நைவேதனை பாரா தட்டுக் கதிக் குஞ்சம்பா வரிசியொடுங்
கடுவுண்டவாய்க் கமுதாமா வடுவுங்கீரையு முதவிடும்
நைவேதனம் புரியநட ராஜர்க்குத் தப்பாதளிப்பார்
நாடொறும் வேலையாத் தேடியே மனங்களிப்பார்
போரா னந்தக்கடற்குளிப்பார் (மிகு)

விருத்தம்.

(c)உலக்கை பற்று முலக்கையினுற் குத்திடுந்தண்
டுலத்தையுமா வடுவையுங்கீ ரையுநாடோறும்
வலக்கைகொடு மெடுத்தேந்தி நடராஜர்க்கு
மகிழ்ந்துநைவே தனத்திற்கீ வாரைநாடி
நிலைக்கையிலை யார்சோதித் திடமாவுண்ணும்
நிலைபெற்ற விளங்கனிபோற் செல்வங்குன்றக்
கலக்கமிலா மனத்தர்முன்போல் வழுவாத்தொண்டு
காட்டினர்பெரும்புகழை நாட்டினரே

பதம். இராகம்-சென்ஸுருட்டி. தாளம்-ரூபகம்.
(மனஜாலகளித என்ற ஜாவளி போல.)

பல்லவி.

பண்டுபோற்றொண்டு செய்தாரே (கனி)

---

† தனதன்-குபேரன் ‡ தனதன்-சொந்தமாகவுள்ளவன்.

(a) சடையார்-ஜடாபாரத்தையுடையவர் b சடையார்—சளைக்காதவர்

(c) உலக்கை-மலைபோலப்பலத்தையுடைய.

அநுபல்லவி.

கொண்டு நடம்புரி சரணரைக்கண்டு கொள்ளநினைத்தவ
ருள்ள மொத்து நேரே

சரணங்கள்.

(1) கூலிக் கறுக்குஞ்சம்பாவரிசிநடக் கொற்றவர்க் காக்கிட
வளிப்பார்-மட்டை
நீலநெல் லரிசி யன்னத்தைத் தாமுண்டு நித்திய
முமனங் களிப்பார் செழிப்பார் (பண்டு)

(2) கதிக்கும் பக்தியை யறிந்து வயல்கள் கார்விளைக்
காமலே செய்ய-நன்று
மதிக்குந் தில்லையம் பலத்தர் நலத்தின் வண்மைசெய்
தாரென்னும் உண்மை மனங்கொண்டு (பண்டு)

(3) நல்ல புண்ணியம் பழுத்த தென்றன்பர் நாவி
னால்மிகத் துதிக்க-மிக
வல்ல போறி வாறப சிக்கலை மாறிடப் பேரின்ப
மீறிடத் தேறிடப் (பண்டு)

(4) சற்று மாகார மின்றி மனையார் தவித்துப்
பல்கீரை சமைத்து-மிக
நற்ற வர்க்குமுன் பளித்துப் பின்புண்டு
நயக்குங் காலத்து வியக்க வமைத்துப் (பண்டு)

(5) இப்ப டிக்கின்னுட் கழிக்கப் பல்கீரை
யின்வேர் தீர்ந்திடக்கண்டு-கரு
மைப்ப டிகுழல் மனையன் பாலுற்று வார்த்திடு
நீரையு முண்டுமனங் கொண்டு (பண்டு)

ஸ்வாய்.

(1) * இப்படித் தாயவி தப்படித் x தாயர் தினப்படி 0 தாயக
மாத்தொண்டு செய்ய

---

* இப்படித்தாய-இந்தவிதமாக. x தாயர்-தாயனென்யவர். 0 தாயகமா-சிநேகிதமாக.

மைப்படி கண்டர்ப டித்தா மாவழுக் கப்படி
நைவேத னத்திற்குத் துய்ய

(2) மாவடு வோடுஞ்சம பாவின் ரிசியும் பாவுஞ்செங்
கீரையு மாவலா வல்ல
தேவதே வர்க்குநம் தாயர்முன் பாய்க்கொடு சென்றிடப்
பஞ்சகவ் யந்தனை நல்ல

(3) மனைவியர் கைக்கொண்டு பின்சென்றி டத்தடு
மாறிய தாயர்கை யேறியதாய
வினையநைவேதனஞ் சாதன நீள்கம ரிற்கொட்டக்
கண்டுப தறினர் தூயர்

வெண்பா.

வெய்ய வெடிப்பினில்நை வேதனத்தின் சாதனங்கள்
கையினின்று கொட்டிக் கவிழவே-துய்ய
§ மனத்தரச்சம் பாவரியும் வாளைக் ‡ கமலா
னனத்தர் களம்பூட்டி னார்

பதம். இராகம்-சகனு. தாளம்-சாப்பு.

பல்லவி.

வாளி னாற்கழுத் தரிந்தார் தொண்டின் வகையெ
லாந்தெரிந்தா ரறிந்தா ரரி (வாளி)

அநுபல்லவி.

நீளும் பிறவி வே ரறுக்க வேசம்பா நெல்லைய
றுத்திடும் வல்லக்க ருக்கரி (வாளி)

சரணங்கள்.

(1) சேயசெங் கீரையு மாவடு வுமரி சியும்வெ
டிப்பினுட் சிதறக்-கண்டு

---

§ மனத்தர் மனத்தையுடையவர். அச்சம்பா அரியும் வாளை-அச்சமபா நெல்லையறுக்கும்படியான அரிவாளை

‡ கமலானனத்தர்-தாமரைபோன்ற முகத்தையுடையவர்

நேயர்ம னத்துவென் னேயம தாகவே
நெக்குரு கியுடல் பதறத்தாயர்
ஆயவன் பர்வினை யுதாக் கள மரியும்
போதுசெங் குருதி பிதிர (வாளி)

(2) மனையர் கூடையைப் பிடிக்க வுநில்லா
மற்றவ றிக்கொட்டக் கண்டு-நல்ல
வினைய ரம்பலத் தரசி னுக்குநை வேதநிப்
பில்லாதை விண்டு-யினி
யெனையிவ் வுடலைக் கொண்டு-பயன்
என்னவென் றேயெங்கு மன்னுமு னைத்தண்டும் (வாளி)

(3) ஈசா முதுக்கு பயோக மில்லாதே யேதுக்கங்
கேபோக வேணும்
மாசக லத்தொண்டு முற்றுந டத்தவ
கையில்லா மாசுடல் பூணும்-உயிர்
நேசத்தி லென்பய நாணு-மென்ன
நெஞ்ச முத் தத்தொடும்
வஞ்சமி லார்கோ ணும் (வாளி)

விருத்தம்.

(a) கருக்கரிவாள் (b) கொடுகருக்குக் கருக்கெனவே வறுக்கவன்பர்
கையின்மூன் று
திருக்கறிவா ரறிந்திறுகப் பிடித்துவிடு விடெனுமொழி
(c) செவிக்கின் பூர
வருக்கறிவாய் மையர்பொன்னம் பலத்தரசர்
மாவடுவ தனைக்க டித் (d) தன்

(a) கருக்கரிவாள்-கொடுகருக்கரிவாளைக்கொண்டு.

(b) மூன்றுதிருக்கறிவார் - ஸோம சூர்ய அக்கினியென்று மூன்று நேத்திரங்களினுல் அறிபவர்.

(c) செவிக்கின் பூர் அவருக்கறிவாய்மையர்-செவிக்கின் பமூரும்படியாக அந்த நாயனுர்க்கு அறியக்கூடியஸத்தியமாயுள்ளவர்.

(d) அன்பருககு அறியவாய்திட-அன் பருக்கு ஞானவொளிபொருந் தும்படியாக

பருக்கறிவாய்ந் திடக்கமர்நின் றெழுந்தார்
தொண் டி லரிடமன் பழுந்தார் தாமே

பதம். இராகம்-பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

எழுந்தார் நடேசர் செழுந்தொண்டர் நேசர் (எழுந்தார்)

அநுபல்லவி.

தொழுந்தாயர்க் குப்பவத்தி லழுந்தாமல் முத்தி
தொடுத்துக் கொடுக்கப்பருவெடிப்பிற் கிளம்பி நத்தி (எழுந்தார்)

சரணங்கள்.

(1) கடுக்கென மாவடுவைக் கடித்திடு மோசை
காட்டியன் பர்கையினைப் பிடித்திடும் போதே
அடுத்ததொண் டர்மெய்புள கிதமுற மாதே
வருமன்று ளாடும்பதத் துணைகாட்டிக்கமர்மீதே(எழுந்தார்)

(2) ஆனந்த பாஷ்பங்களு டம்பெங்கும் பெருக
அன்பர்வி னைகளினங் குரங்களுங் கருக
ஞாலமில் லேனல்குஞ்சிற் றுணை வையும் பருக
நாடும முதெனக்கொண் டடென்று நே யருருக (எழுந்தார்)

(3) அன்ப நினைச்சோதிக்கக் கமரினிற் கவிழ்த்தோம்
அரசிவ டுக்கிரையை யமுதாகக் களித்தோம்
இன்பந்தந் துனதிரு வினைகளைத் தவிர்த்தோம்
எமதுல கில்நீமனை யிருந்திட வளித்தோ மென்(றெழுந்தார்)

வெண்பா.

தாயனையார் கண்டந் தனிலவரிவாட் பூட்டியதால்
தாயரை யேயரிவாட் டாயரென-வேயுலக
மெல்லாங்கொண் டாடுமன்பர்க் கேற்றவரம் நல்கி
யெல்லாம்வல் லாரெழுந்தா ரே

பலச்சுருதி விருத்தம்.

ஈசஞர் மணிவிடையி லெழுந்தருளத் தாயர்தம தில்லாளோடும்
வாசமார் கையிலைபுக்கு மகிழ்காதை யினைக்கேழ்ப்போர்
வளருமாயுள்

நேசமார் மனைமைந்தர்நிறைசெல்வங்கல்விபொறை நீங்காதுற்றுப்
பாசமுறு மிருவினையும் நீங்கிப்பின் பரசிவத்தின் பதஞ்சேர்வாரே

அரிவாட்டாய நாயனார் சரித்திரம்
முற்றிற்று.

ஆ லாவணி	1.	விருத்தம்	3.	ஆ உருப்படிகள்	12.		
ஆர்யா	1.	ஸவாய்	1.	ஆ சரித்திரங்கள்	14-க்கு.		
பதம்	4.	வெண்பா	2.	உருப்படிகள்	364		

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

15 * ஆனாய நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்-இந்துஸ்தானி காபி. தாளம்-ஆதி.
ஸாகியாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

(1) பூமா துலவும் புகழ்ப்பழ நாட்டிற் பொருந்திய மங்கலவூர் மருவும்
கோமா மகிமை விளங்கிடு மாயர் குலத்திற் பிறந்து நலம் பொருவும்

(2) செய்ய மறையாற் றுதித்திடு நீறு செழித்திடு நீதி திகழ் நாயனார்
வையம் புகழ்ந்திடு மானா யானன்பு வளரும் சிவபக்தர் மேனை யனார்

(3) விண்ணதி தண்மதி நண்ணுஞ் சடைதிக ழண்ணலார் குஞ்சித் தாமரையார்
பண்ணுல வுமனத் தாமரை யார்நாம மெண்ணித் தழும்புறு நாவினையார்

பதம்-இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உதயமா கியிலங் கினார் ஆனாயனார் (உதய)

அநுபல்லவி.

இதயத்தன் புதுலங்கி னார் ஈசரருளால் (உதய)

சரணங்கள்.

(1) திரிகர ணங்களினுந் தில்லையி னடத்தைய
ரரியதாட் டுணைநம்பி யுலகிலென் றுமுய்ய (உதய)

(2) மெய்த்திரு மேனிதிரு மேனியி லகநாடி
நத்தும் பசுக்களைாட் சித்திட வென்றேதேடி (உதய)

(3) மிருகங்கள் செய் துயர்தீர்த்து விளங்கும்புற் கற்களிற்
சாய்த்து
பொருந்தப்பொ றுக்கமேய்த்துப் புல்லும்வினை களைத்
தேய்த்து (உதய)

(4) கருப்பசுக் களுமிளங் கன்றுத்தாய் களுமுளம்
விரும்பும்பாற் பசுக்களும் விளங்கிடக் கனங்கொளும் ( )

ஸ்வரம்.

(1) இப்படி வாழ்ந்திடு நாளினி லோர்நாள் இசைந்திடுங்
கோலுடன் பந்தர்களூட
மெய்ப்புறு மாவினி னங்களைக் கானகத் திற்பரிய மோடு
மேய்த் துப்புகழ் நீட

(2) கந்தமி குந்திடுங் கொன்றைம ரந்தனைக் கண்டுப ரமருரு
வென வெண்ணிச்
சிந்தை மகிழ்ந்தைதத்தெ ழுந்தையும் வேணுவிற் சந்தமபொ
ருந்தவா சித்தனர் நண்ணி

பதம். இராகம் கானடா. தாளம்-ஆதி.

பல்லவி.

குழலிசை செயதா ராயனார் ஈசர் கழலிணையை
மறவாத் தூயனார் வேய்ங் (குழலிசை)

அநுபல்லவி.

பழைமை பொருந்து சாரசர மெங்கினுஞ் செழிய
பண்ணமுத மழையை நண்ணி யெங்கும் பொழியக் (குழ)

சரணங்கள்.

(1) இசைக்குஞ் ருதிதப்பி டாமற்ப குதிவிகு திகளின் பேதந்
தெரிந்து திகழ்மந்தா மத்திமம்
அசைக்குந் தாரம் ரா கத்தின் ஆகத மனகத மானவழியி
னுத்தமம்—கதிபொருந்தும்
தசவித குணந் தேக்கி யவகுணம் பத்தும் நீக்கித் தரும்வாதி
ஸம்வாதி யநுவாதி விவாதி தாக்கில்
விசையன்றி நாதமத்தியில் வாழுமா நந்தமாகிய-சங்கரனைத்
தெழுத் தைதிரு வாகி யோகிமகிழ் வாகிமிகுமன்பாகிக்
(குழலிசை)

(2) வண்டெழு விரல்களைத் தாவிப் பிடிப்பதுபோல்
வைக்குந் துளையின்வழி வளியைப்போக்கி யிடமேற்
கண்டுமெலி வித்தும்சமம் புரிந்தும்வலி வித்தும்யாரும்
கனியுமா னந்தம்ஜனித் திடவுண்டு செய்து நேரும்
பண்டின்சாத் திரப்படி தப்பாம லேகீதம்
பரவும துரத்திலேந் தெழுத்தைக்க லந்துநாதம்
திண்டரு மதுரத்த முதங்கலந்து
தெரிந்துதொண்டர தாம்வைத்துப் புகழ்
பொருந்த வன்பொடு கவனித்துத் திகழ் (குழலிசை)

(3) வாயில்வைத் துப்புல்லருந் தாமற்ப சுக்கள் நிற்க
வசுக்கள்தாய் முலையில்வாய் வைத்தப டியிருக்க
மேயுங் காளைகள்மான் மயிர்கள் சிலிர்த்திருக்க
மேவிம யில்கள்புட்கள் கூவா மற்பெருக்க
மேயுமிவ் வுலகோரும் வானுல கோருஞ்சூழ
விருந்தேவ மின்னார்மனம் பொருந்திமய ங்கித் தாழ
ஆயும்விஞ்சையர் கின் னரர்கள் விமானம் வாழ
அன்புடனேப ரனைந்தித்திட யின்புடனேயுல
கோர்வாழ்ந் துய்த்திடக் (குழலிசை)

(4) உருக்குமி சையமுதத் தர்ற்காரணங்கள் மூன்றும்
ஒத்துப்பாம் பும்மயில் மீதுறச்சிங் கத்தின் முன்றோன்றும்
காிக்குழாங் கள்மான்வாிப் புலியைத்த மூவஞான்றும்
கதிக்குமி ரைச்சல் நீக்கிக் கானரு விகள் கான்றும்
தருக்களும் கொம்பசையா திருக்கப்பட்ட தருவும்
தளிர்க்கமங் குல்கள்முழங் காமற் கூடிமருவும்
பருத்தவ லைக்கடலு மோசையின் றிப்பொருவும்
படிகா ணித்திட வடியர்கள் சூழப்
படியேழிற்பல வுயிர்களும் வாழ்கக் (குழலிசை)

ஒலி.

(1) இவ்வா றவே ணு கான மிசையா லிம்மகி வானச்
செவ்வாய்ப் பாவிட ஞான திவாக ரனையொப் பவார்நன்
னயமான (தேவ தேவ) மகாதேவ

(2) நடரா ஜர்செவிக் கேற நலவமு தெனவன் பூர
திடமார் வெள்விடை மீதே தேவியுடன் றோன் றினார்க
ணப்போதே (தேவ தேவ) மகாதேவ

பதம். இராகம் பியாகு. தாளம்-ரூபகம்.
(நின்னிடபாஸி யென்பதுபோல)

பல்லவி.

தில்லையில் வாஸர் திகழ்நடராஜர் ஒல்லையில்
கருணைசெய் துவந்தாரே (தில்லை)

அநுபல்லவி.

தொல்லைம றைமுனிவர் விண்ணவர் முதலானோர்
எல்லையிற் றவஞ்செய்து தோன்றாதே
சேர்ந்தின மறியார் சார்ந்தகைம் மறியார்
தொண்டரி சைமீது மனங்குறியாய்த் (தில்லை)

சரணங்கள்.

(1) பேரிசை கேட்டிட வொலியால் பெருங்கடலின்
பெற்றிபெ றவேயும்பர் கணநாதர்

பேசித்து நித்திடாமல் கைகட்டி வாய்புதைத்துப்
பெருஞ் சித்திரம் போலுறப் பிரக்கி யாகத் (தில்லை)

(2) கலையாரும் வெண்மதியும் வெண்டும்பை வெண்ணறியும்
கலந்துபொன் ஞர்சடையின் மீதிலங்க
மலைமாதோர் பாகம் வைத்தினிதாக
வளர்வெள்ளி மலைபோலும் விடையேகத் (தில்லை)

(3) அன்பனே நின்னிசையில் நம்மைநந் தெழுத்தையு
மமைத்துக்கா னித்திடவே கேட்டுவந்தோம்
யின்பதுசால வேயிந்தக் கோலத்
தெய்துநம் ஸபையிலென் றநுகூலத்-தொடும் (தில்லை)

ஆனைய நாயனார் சரித்திரம்
முற்றிற்று.

ஆக லாவணி 1 ஸவாய் 1 ஆக உருப்படிகள் 6
பதம் 3 ஒவி 1 ஆக சரித்திரங்கள் 15க்கு உருப்படி-
கள் 370

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

(16) * மூர்த்தி நாயனார் சரித்திரம்.

லாவணி-இராகம்-மாஞ்சி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) சீர்மன்னி யகுடிகள் சிறந்தோங்கி நீடும்
நீர்மன்னு முகில்நெடுந் துகில்போலமூடும்
(2) தண்டலை நிகழுந்தண் பணைகளி லேபும்
(a) வண்டலை யுஞ்செழுந்தேன் மடைவழி பாயும்
(3) கன்னல்செந் நெல்கள்மணி பின்னியே செழிக்கும்
கதிர்கணி றைந்தவுடுக் கணங்களைப் பழிக்கும்

(a) வண்டலையும் - சங்குகளலையும.

(4) நன்னயஞ் சேர்பொதிகை நறுஞ்சந்த மணக்கும்
மன்னுங்கு ளிர்தென்றல் செந் தமிழொடு மணக்கும்

(5) பாண்டியின் வதனவொப் பாகவே யிலங்கும்
வேண்டும்பெ ரியோரெல்லா மிக்கவே துலங்கும்

(6) பொன்னுல ககமொப் போ b பணி யுலகும்
சென்னிவ ணங்கிப் c பணி செயும் d பணி யிலகும்

(7) e செய்யுட் சங் கங்களெங்குந் திரண்டோர்ந்தங் கொலிக்கும்
f செய்யுட் சங்கங்களெங்குஞ் செழித்திடக் களிக்கும்

(8) தோடுக மழ்பங்கயத் தோட்டின் மேலாள்
நாடிவ ளருமந்த நங்கைபோல் மாலாள்

(9) யாழிசை குயிலிசை நவில் சுரும் பிசையும்
g ஏழிசை பாடவெங்கு h மிசைந்திட i விசையும்

(10) திகழு நக ரமின்னுஞ் சிவபெரு மானே
மகிழ்தென்னன் மருகனு மகிழினைத் தானே

(11) யாண்டுஞ்சங் கத்தொருவ ராகின ரென்று
மீண்டுரைக் கத்தகுமோ விசைபணி நன்றாய்

(12) மும்மைப்பு வனங்கட்கு முதன்மைமூ தூரே
நன்மைமி க்கமதுரை நகரத்தின் சீரே.

ஆர்யா.

அப்பொற் பதிவாழ் நாவே—யணிமா வணிகர்த வமேமு திர்வு பெறவே·

மெய்ப்பொரு ளன்புரு வானார்—மினிர்நா மமுமூர்த் தியா ரெனு மானார்

(b) பணியுலகு-நாகலோகம். (c) பணிசெயும - பணிவாகச் செய்யும்.
(d) பணி - பணிவிடை. (e) செய்யுட் சங்கங்கள் - வயல்களில் சங்குகள்.
(f) செய்யுட் சங்கங்கள் - பாவினங்களால் விளங்கிய வித்துவச் சங்கங்கள்.
(g) ஏழிசை - சப்த ஸ்வரங்களோடுகூடிய கானம். (h) இசைந்திட - பொருந்திட. (i) இசையும் - கீர்த்தியும்.

வெண்பா.

பிஞ்சமதி குஞ்சரவப் பிங்களநற் செஞ்சடையார்
மஞ்சலவுங் கூடல் வளர்பெருமான்—நெஞ்சமகிழ்
j சந்தப் பணிவிடையார் தாமாத லான்மகிழ்ந்து
k சந்தப் பணிவிடை செய்தார்

பதம். இராகம்-பூரிகல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

சந்தனப் பணிவிடை நிதஞ் செய்தார்

அநுபல்லவி.

சிந்தனைப் பெரும் பிறவியை யெய்தார் (சந்தனப்)

சரணங்கள்.

(1) முந்தவழு திக்கோலம மைந்துலகாள் சுந்தரேசர்
மூர்த்தியார்க்கு மூர்த்திநாய னாரே (சந்தனப்
(2) காலையிலெ ழுந்துமூழ்கிச் சாலவிபூ தியணிந்து
கந்துமனத் தைந்தெழுத்தை யோதிச் (சந்தனப்)
(3) a அத்தமலை வில்லார்க்குச் b சித்தமலை வில்லார்நாடி
முத்தமிழ்ம லைத்தேய்வைத் தேடிச் (சந்தனப்)
(4) பட்டுவெண்டு கிலால்வாயைக் கட்டிப்பனி நீர்தெளித்து
மட்டில்லாப்பச் சைக்கர்ப்பூரஞ் சேர்த்துச் (சந்தனப்)

ஸவாய்.

(1) சேளுந்து ணையும்ப தங்களு மீசர் ளொடித் தாமரை யே
யென நாடி
காளும்பு ரிதொண்டு முட்டின்றி யன்பர் நடத்துமன் னனில
டத்துடன் கூடி
(2) வண்டமிழ் நாட்டை வடுகக்க ருநட மன்னவன் சூழ்ந்துவ
ளைத்தன னுகி

(j) அழகிய பணிந்த விடபத்தையுடையார்.

(k) சந்தனத்தாலாகிய பணிவிடை.

(a) அத்தமலைவில்லார்-தங்கமலை, அதாவது: மகமேருவை வில்லாக வுடையவர். (b) சித்தமலை வில்லார்-மலைக்காத சித்தமுள்ளவர்.

திண்டோர்க ளிபரி தானைக ளாற்றென்னன் சிந்தைக லங்
கத்து ரத்தவுமேவி
(3) மன்னக ரந்தனி டந்தெரி யாதுற மாமது ராபுரி யைக் கை
ப் படுத்து
மன்னுமுன் னுந்தெரி யாதவன் மூடப்ர வஞ்சம தாகக்
கொடுங்கோல்தொ டுத்து

விருத்தம்.

தீயவனுங் கொடுங்கோன்மை செலுத்த வெண்ணிச் சங்கற்பித்
திடச்சா மைப்போர்
பேய்வலையப் படுதலென வருகவந்த ராற்சூழப் பெற்றுநீற்றின்
மாவளத்தின் றண்வனத்தைக் குறைத்திடுங்கு டாரியென
மதுரையென்னும்
தூவளஞ்சேர் கலைமதிக்கோர் கரும்பணிபோ னெனக்கொடுங்கோற்
றுறை நின்றனே

பதம். இராகம் தனுசரி. தாளம்-ஆதி.

பல்லவி.

அடியார்க்கி டர்செய்திட லானனே யீசர் (அடியார்)

அநுபல்லவி.

குடியாச்ச மணர்கையிற் போனனே யீசர் (அடியார்)

சரணங்கள்.

(1) c மலைத்தவரை நாடி நிலைத்தவர் போற் கூடி
d மலைத்தவ ரார்சினைத்துக் கும்வழி தேடிச்சிவன் (அடியார்)
(2) e கருங்கல்லி னெஞ்சன் f நெருங்கல்லின் வஞ்சன்
கங்கை திங்கள் சூடிய தாள்களைத் தஞ்சம்புரி (அடியார்)
(3) ஸாதுஜனர் நேரா நீதிவழி யோரான்
பூதிநெற்றி யைச்சித்தி ரத்தும்பா ராணிறை (அடியார்)

(c) மலைத்தவரை - மலைக்கக்கூடிய தன்மையுள்ளவர்களை, அதாவது சமணர்களை. (d) மலைத்தவரார் - மகாமேருகிரியை வில்லாக வுடையவர். (e) கருங்கல்லின் - கருங்கல்லைப்போல. (f) நெருங்கல்லின் - நெருங்கிய யிருட்டையொப்ப.

(4) g சிந்திதரார்த்தி h சிந்தச்செய் சீர்த்தி
ஸௌந்தரேச i மூர்த்தி யைத்தொழு j மூர்த்தி யெனும் ( )

வெண்பா.

எள்ளி யடியார்தொண் டியற்றவிடர் செய்துமதைத்
தள்ளி நறுஞ்சுந் தனக்காப்புத்—தெள்ளு
மனத்தடியார் போனடத்த வல்லார்யா ரந்தி
வனத்தர்பெரு மைக்குமள வாய்

ஸவாப.

இச்செயல் கண்டும னச்சின னாகிய அர்ச்சன னச்சர வத்தினை
யென்ன
மெச்சடி யார்க்கிட ரைச்செய நெஞ்சினு ளச்சமில் லாதவ
ருச்சித் வன்ன

பதம்-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

விடைமீது வந்தார்க் குச்சந்தப்பணி விடைசெய்து வந்தார்

அநுபல்லவி.

நடைபிச காதவர் தடையிலாமலே வெள் (விடை)

சரணங்கள்.

(1) படர்மூர்த்தி சாலு மூர்த்திபாரகத் ருடபக்தி யாலும்—
வருத்தமெண்ணு—தடைவேதொண் டுமேன்மேலும்
தடையிலாதுசெ யக்கையிலை போதும் (விடைமீது)

(2) காலையி லெழுவார் நித்யாநுஷ்டான வேலையில் வழுவார்
சாலச்ச பாட்சிகாந் தனைத்தொழுவார்தம் மெனத்தழை
வார் பணி (விடைமீது)

(3) அடைப்பணி போலும் மனத்தின்மன்ன னடத்தினை
மேலும்—செலுத்திவாக்
கிடைத்தபட் டுமுட்டின்றி நடத்தினார்மனத் திடத்தினர்
பணி (விடை)

(g) சிந்திதரார்த்தி-நினைக்கக்கூடியவரின் மனோவியாதி. (h) சிந்தச்செய் - சிதரச்செய்யும்படியாக. (i) மூர்த்தி - உருவம். (j) மூர்த்தி மூர்த்தி நாயனார்.

(4) g சிந்திதரார்த்தி h சிந்தச்செய் சீர்த்தி
சுந்தரேசர் i மூர்த்தி யைத்தொழு j மூர்த்தி யெனும் ( )

வெண்பா.

எள்ளி யடியார்தொண் டியற்றவிடர் செய்துமதைத்
தள்ளி நமுஞ்சுந் தனக்காப்புத்—தெள்ளு
மனத்தடியார் போனடத்த வல்லார்யா ரந்தி
வனத்தர்பெரு மைக்குமளா வாய்

ஸவாய்.

இச்செயல் கண்டும னச்சின ளுகிப தார்ச்சன னச்சா வத்தினை யென்ன
மெச்சடி யார்க்கிட ரைச்செய செஞ்சினு ளச்சமில் லாதவ ருச்சித் வன்ன

பதம்-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

விடைமீது வந்தார்க் குச்சந்தப்பணி விடைசெய்து வந்தார்

அநுபல்லவி.

கடைபிச காதவர் தடையிலாமலே வெள் (விடை)

சரணங்கள்.

(1) படர்மூர்த்தி சாலு மூர்த்திபாரகத் ருடபக்தி யாலும்—
வருத்தமெண்ணு—தடைவேதொண் டுமேன்மேலும்
தடையிலாதுசெ யக்கைபிலே போ... (விடைமீது)

(2) காலையி லெழுவார் நித்யானுஷ்டான வேலையில் வழுவார்
சாலச்ச பாட்சிகாந் தனைத்தொழுவார்தர்ம மெனத்தழை
வார் பணி (விடைமீது)

(3) அடைப்பணி போலும் மனத்தின்மன்ன னடத்தினை
மேலும்—செலுத்திவாக்
கிடைத்தயட் டுமுட்டின்றி நடத்தினார்மனத் திடத்தினர்
பணி (விடை)

(g) சிந்திதரார்த்தி-நினைக்கக்கூடியவரின் மனோவியாதி. (h) சிந்தச் செய் - சிதரச்செய்யும்படியாக. (i) மூர்த்தி - உருவம். (j) மூர்த்தி மூர்த்தி நாயனார்.

கலித்துறை.

தென்னு மதுரத்-தமிழ்ப்பாண்டி நாடெனுஞ் சேயிழையாற்
றன்னு (a) மரச (b) னரசனென னப்படுந் தன்மையவே
யுள்ளும் புறமு நிறைஸூந்த சேர்மெய் யோங்குசந்தங்
கொள்ளுந் துறையுந்தடுத்தான் பெருங்கொடுங் கோன்மன்னனே

லாவணி இராகம் யாயாமாளவகௌளை-தாளம்-ஆதி.

கண்ணிகள்

(1) தீய வஞ்சனுயிர் மாய வந்தரக சியமுந் தெரியாமற்—கொடி
தெனமன
தினிலுங் குறியாமற்—றொண்டர்—சித்தம்வருத்திய பாவி
குண்டர்
பொய்த்தவத் தினிலேமேவித்—தினம்
தீங்குபுரிந்தனன் வேங்கையினும்வஞ் சினத்தின் கடுங்கோவி

(2) அருக ருரைக்குமொழி யாவையும் வேதம தாகம்
பியுந்தானே—தனதுகுல
மானம் பொருந்தானே தேவா லயச்சிறப் பினைக்குறைத்
தான்
பிர்ம்மா—லயத்துரத்தினைக் கரைத்தான் அடியவர்க்கட் கிட
ரைச் செலவெய்த் திட்டித் தனெனப் பெயர்த்தழித்தான்.

(3) கொடிய பாவியிது செயவே யன்பருளங் கொதித்து
வாடியே—சந்தனத்
தொண்டு—குறித்து நாட்டியே—நிதி—கொண்டெங் கெங்கும்
குண்டெடன்
றன்பின் குன்றந் தேடியே
கடிநகர் பற்றிக் காங்கெனச் சுற்றிக் கைக்குட் சிக்கா
தெய்த் துக்கா காரா வாடியே

(4) கொளுமிடங் களெல்லாந் தடையாக வுளமும் வெதும்பியே
கண்களிநீர்—குளம்போற் றதும்பியே—யொன்றுங்
கூறிடாதுகெட் டுயிற்பி னேடுமறுகிக் கொதிக்குங் கும்பியே
உளமிகத் துடிப்பா ருடம்பின்வேர் வடிப்பார் உறுதித்
தொண்டைக்-

(a) அரசன்-வேந்தன் (b) அரசன்-ரஸமில்லாதவன்.

கருதிச் சிந்தித் துயர்ந் தாங்கும் வைப்பார்.

வெண்பா.

a மத்தமிக்கும் கொன்றை மலர்ச்சடையார்க் கன்பர்கதி
b ரத்தமிக்கு மட்டு மகைந்துலைந்து—முத்தமிழ்சேர்
கூடற் சிவபெருமான் கோயிலுக்குட் சென்றுமனை
நாடற் கரிதியற்றி னார்.

பதம். இராகம் இந்துஸ்தானி. காபி-தாளம்-ஆதி மிசிரகதி.

பல்லவி.

முன்கை யினைத் தேயவுரைத்தார்

அநுபல்லவி

பொங்கும்பவங் களைக்களைந்தார் (முன்)

சரணங்கள்.

(1) நட்டம்புரி வார்க்குச் சாத்தி யிஷ்டம்பெறப் பணிந்தேத்தி
முட்டின்றுவந் தானுமென்கைக்கு
முட் டிலையென விரைவொடு களும்புற பட (முன்)

(2) குருதியெங்கும் வழிந்தோடக் கருதுமன மொத்து நாடப்
பரிதிநிகர் மேனியுமாடப் பா பரப்புட னாரத்தொடு
மரைக்க வியர்க்க (முன்)

(3) அன்பர்கைந ரம்பினொடி முன்பருகிச்சென பினிற்சாடி
பின்புமுனோ பற்றுமட்டுமே—யதி பிலத்துட னிழுத்திழுத்
தழுத்தி வலுத்த (முன்)

கேகாவளி.

(1) தவாத தவருமெ யவாவொ ப்ரியமினிர் திவா காரனையொப்
பவார்கு ருதியொடு பிவாறு செயவா லவா யண்ணலும்

(2) பொறுக்க முடியா தருக்க மொடுமன் பருக் காமகிழ்ந்
c திருக்கு மறியா d ரிருக்கு மறியா ரருட் சோலே

பதம், இராகம் சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

திருவாக் கல்விடத் தெழுந்தது கேட்டுநிறுத்
தினரே யன்பினுர் கேட்டுத் (திரு)

(a) மத்தம் - உன்மத்தை, அல்லது மதங்கொடுக்குமது. (b) அத்தமிக்கும் - அஸ்தமனமாகும். (c) மகிழ்ந்திருக்கும். மறியார் - மகிழ்ந்திருக்குமானை யுடையவர். (d) இருக்குமறியார் - வேதத்தாலுமறியக்கூடாதவர்.

அநுபல்லவி.

மருவாய்க் குங்குழல் மீனாக யனிமன மகிழும் பிராணேசர்
ஸௌந்தரேசர் (திரு)

சரணங்கள்.

(1) நீயன் பின்றுணி வாலிது செய்திடல் நிறுத்து வாயய்யா
உன்றன்
றாயமனம் வருந்துந் நீயனின் றிரவில தோகதி யடைவன்
மெய்யா பாரென்று செய்யத் (திரு)

(2) அகத்தில்வ ருத்தந்தீர மாற்றலன் கைக்கொண்டமண்
ணளித்துங் காக்கவு—மிந்தச் (திரு)
சகத்திரு ளாயிரிக்குங் கதிர்போற் குண்டர்மேற் கொண்ட
சினத்தைத் தீர்க்கவும் செவிகேழ்க்கவும் (திரு)

(3) வேண்டு மட்டும்புவியை யாண்டு பின்புநம்பணி விடைசெய்
தின்பமே

(4) யாண்டும்பொ ருந்துநம துலகெய்தெ னக்கருணை நாடி
யன்பர்மேல் தயவா மேன்மேல் (திரு)

விருத்தம்.

(a) இவ்வண்ணந் திருவாக்கங் கெழுந்ததுகேட் டஞ்சியன்
ரியைந்துநிற்கக்

(b) கைவ்வண்ணப் பணிவிடையால் வாசமெலாங் கலந்தொப்
பக் கமழவுறுஞ்

(c) செவ்வண்ணத் தத்தமது தேய்ந்தபுண்ணு மாறியொளி
திகழும் பொன்போல்

(d) மெய்வண்ண மாகினர்மெய் மூர்த்தியா ருலகமகிழ்
சீர்த்தியாரே

ஸ்வாய்.

(1) இங்கிவை நிற்கவன் ஞளிர விற்சம ணின்புகல் சார்வடு
கக்கடு நாடன்

(a) இவ்வண்ணம்—இந்தவிதமாக. (b) கைவண்ணப் பணிவிடை—அழகாகிய கையால் சந்தனம் அரைக்கும பணிவிடை. (c) செவ்வண்ணத்து அத்தம்—சிகப்பு நிறத்தோடு கூடிய இரத்தம் வழியுங் கை, (d) மெய்வண்ண மாகினர்—அழகாகிய பழய சரீரத்தை அடைந்தனர்.

பொங்கழல் மன்னவ னானுமு டிந்தன பொற்புறு
தொண்டர்தன் பம்பற ந்தோட

(2) சங்கரன் சார்பில வர்க்குநெ டுங்காற்ற மைத்திடு பெய்வாழ
மைப்பினு மீதே

மங்குலிற் றோன்றிம றையுமின் போலல வா வென்று லகம்
புகழவப் போதே

(3) தொண்டர்க ளிக்கவ சுகீத்த மேலோர் துறக்கம் விரைவில்
செல் தொல்வழக் கேய

கண்டக னுமதி கோரவ ழிநர கத்திடை வீழக்க டிதுயிர்
மாய

கலித்துறை.

மூற்றுங் கொடுவினை செய்மன் னவனெனு முண்மாத்தைப்
பற்றுங் கொடிய வினயமாதர் வெம்பிப் பாதவிக்க
வற்றுன்பந் தீரப் புலர்கா லையிற்கதி ராதவனுஞ்
சுற்றுங் கடலில் முளைத்தான் பின்பாயதைச் சொல்லுவனே

பதம்-இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரா சனுக்கிம விதி யதைமுடிப் பித்தார்

அநுபல்லவி.

அரா சனுக்கோ ரரசில் லாமையால் வாடி (அரச)

சரணங்கள்.

(1) உரைதேர மைச்சரெல்லா மொருங்குறக் கூடி
உற்ற மனதிற்கடங் காமையால் (அரச)

(2) பைங்கூழ் குடிகளிறை பசியிருந் தாலும்
மங்குல் மழைவிருப்பல் போலுமே (அரச)

(3) தங்கு பாசில்லாச் சகமுயி ரின்றி
மங்கிய வெற்றுடலஞ் சாலுமே (அரச)

ஆரியா.

பல்வகை யினுமுள நாடிப்—பாரோர் கள்தவித் திடாத வகைதேடி
யைபவரை யினையமெய் நாக—மதனைக் கொணர்வீ ரெனுமு
னதிவேக

மொடுபாக ன்கொடு வந்தான் உயர்ஜன் முறையர்ச் சனுதி
கஸயுந்தா
னடைவே செய்துப சார—மதனுல் மகியா ளவேய ரசின்னோரம்

கலித்துறை.

கைக்கொடு தூக்கிப் பிடர்மிசை வைத்திந்தக் காசினியை
மிக்கவுங் காக்கக் கொணர்வா யெனமத வேழக்கண்க
ளொக்கதிர் வெண்டு கிலாற்கட்டி யேவிய தன்பிறகே
புக்கவுந் தேடிப் புனிதரைக் கண்டுடல் பூரித்ததே.

பதம். இராகம்-சகானு. தாளம்-ஆதி.

பல்லவி.

நாய னரைப் பிடரின் மீது நாடித் தாங்கியதே மூர்த்தி (நாய)

அநுபல்லவி.

தாயென வுலகுக் கருள்புரி ஸோமஸுந்
தரேசர் க்ருபையால் நரேச னெனவெங்கள் (நாய)

சரணங்கள்.

உரல்க ளின்சுவடு படவதிர்ந் துநடை பொடுமா மதில் சூழுங்
கூடல்
புரமட ருங்குகள்க டைகள்மடங் கள்குளிர் பொழிற்பு குந்து
நாளுந்—தவர்
மருவுங் கன்மநய னங்களைமூடி மனக்கண்ணி லறிவொளி
தனைநாடித்
தெரியுஞ் செயல்போலெங்குந் திருவியே கூடித் தேடிக் கோபுர
வாயில் ஓடிக் கண்டங் குறவாடி (நாய)

விருத்தம்.

இரவின்கண் ணெழுந்ததிரு வாக்குணர்வா
லெம்பிரா னினிது நோக்கம்
பெருகருளா மெனிலிந்த வயந்தாங்கும்
பெரும்பெருமை பெறுவனென்ன
வரியதொ ண்டர் திருக்கோயிற் புகுந்துநின்ற
வரைத்துதிக்கை யதனுற்றாக்கி

மருவுபிடர் மிசைதாங்கு மளவிலுதித்
திடுங்கதிர்போல் வயங்கினால்.

ஆர்யா.

(1) துன்பக் கடலில மிழ்ந்துந்—துணையில் லுயிர்கட வியாது தவிவந்தும்
பம்புமருங்கல மென்னப்—பயில்தொண் டரைநா டினார்கள் மகிழ்துன்ன

(2) நன்மதி சேர்மந் திரிமார்—நாடித் தொண்டரி ருதாள்ப ணியவுந்நேர்
பன்மணி சேர்கடல் போலே—பதியோர் மகிழ்கொண் டவோதை மிகமேலே

பதம். இராகம்-ரீதிகௌளை. தாளம்-ரூபகம்.

பல்லவி.

தந்திமீதெ ழுந்தருளினார் தாயனார் மூர்த்தி நாயனார் மகிழ்பெறுந் (தந்தி)

அநுபல்லவி.

அந்திவான்பி றைச்சடையனார் பேரருளினார் மனத் தெருளினார் திடத் (தந்தி)

சரணங்கள்.

(1) சங்கங்கள் தாரைகள்நாதிக்கப்—பேரிகைமிரு
தங்கங்க ளண்டங்கள் பேதிக்க—முழங்கப்பல்லி
யங்கள்நாகசு ரங்கள்கீதந டங்களெங்கெங் கினுங்கதிக்க வுலகந்துதிக்கத் (தந்தி)

(2) பாலலைபோற் சாமரைபோடப்—பாவாடை குஞ்ச
மேலலையச் செங்கதிர்மூடக்—கவிகைநிழல்
சாலமுழுமதி போலநிலவிட யேலவே வாழ்த் திசையொலி நாட—மிகக்கொண்டாடத் (தந்தி)

(3) கஞ்சுகர்வி ருதுகள் கூற-விணையமதி விஞ்சுமமைச் சர்மகிழ் ந்துறச்—சுற்றிலும்வரக்
கொஞ்சமதிக்குண்டர் நெஞ்சகந்திடுக்கிட் டஞ்சப்பெருமைமி றைஞ்சுலகஞ் செழிப்பார்—துயரொழிப்பார் (தந்தி

விருத்தம்.

மதகரிநின் றிழிச்செமலர்த் தொங்கல்புனை முடிசூட்டு மணிச்
சாலைக்குள்
சிதமிருந்த மனத்தினைக் கொடுபுகுந்த ரியணையினிற் சிறக்க
வேற்றி
நிதமுமொரு மதிக்குடைக்கு ளமைதாமுற் றுலகமெலா
நீடுகாக்கும்
விதமுறநற் செயல்புரிந்தா ரரிந்தார் மிக்குறுமேன்மை
தெரிந்தார்தாமே.

லாவணி, இராகம் ஹமீர்கல்யாணி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(1) திசைவே திகளின் மங்கல வாகுதி செயவன் னியை
வளர்ப்பித்தார்
இசைவே தியர்நா லால்வரைந் தரும்பத் தினிற்கங் கை
யைப்பூ ரித்தார்

(2) மந்திர யோகி நிறுத்தவு மங்கல மாதர்க டைமநோக்
கினரே
சிந்தையிற் சிவமே பொருளெனத் தெளிமூர்த் தியர்செப்
புனை தாக் கினரே

(3) பொய்ச்சம ணீங்கி மெய்ச்சைவ மோங்கிப் புவியர சுபுரிவே
னென்றார்
மெச்சிய மைச்சரிவ் விதமுசெய நினையன்றி வேறியா
ரெனப்பணிந்து நின்றார்

(4) வைபவ தாங்கிட வெனிலபி ஷேகம் வயங்கொ ளித்திரு
நீறே
செய்ய கலன்க ளப்பன வையாளர் திகழ்சடை முடியதன்
சீரே

விருத்தம்.

என்றநல்லு ரையை நன்கறி யமைச்ச ரினிதுகேட் டுவந்துநின்
றாருளே.

கன்றென வியந்து நற்றவ வேந்தர் நாடிய குறிப்பினிற் சார்ந்தங்
கொன்றிய நீழல் போலவே யாசா ளுரிமைக்கங் கியல்பின
வுய்ததார்
அன்றுதொட் டிசையக் கொடுங்கலி பறக்க வன்பரு மரசு செய்
தனரே

லாவாய்.

(1) எங்கினும் பொங்கின மங்கல மார்பல் லியங்கள்மு ழங்க
விளங்கதிர் போலே
துங்கமி குமன்பர் திங்களின் மேனுய ருங்கன மார்சிக ரங்க
ளினுலே

(2) மேனுயர் பொன்மலை சாலவ னேகங்க ளாலவிர் மானங்கள்
பான்மினிர்ந் தோங்கும்
கோலமுறுங்கோயில் சூழவ லம்வந்து கொங்குல வுங்கய
வின்கொடி தாங்கும்

வெண்பா.

சபாரட்சி பாகத் தமர்வந்த ரேசர்
சுபமா ரிணையடிகள் தோயத்—தபமார்
சடைமுடியிற் சூடியய்யர் தண்ணளிபெற் றன்ன
லடைவுடனே யிப்புவியாண் டார்.

பதம். இராகம் தோடி. தாளம்-ஆதி.

பாபரிதோரோ யென்பதுபோல,

பல்லவி.

பூப ரிபால னஞ்செய் தாரே (பூப)

அநுபல்லவி.

பாப ரஹித மூர்த்தி யாரே (பூப)

சரணங்கள்.

(1) மாதனத் தாலமைமலிம் மாதனமேவ
சீதமதிக் கவிகை a சுலாவ மோதிளங்காற்சா மரையுலாவப் ()

(a) சுலாவ - சுற்றிவர.

(2) மந்திரி மார்குறிப்பின் வைகியே நாடச்
சிந்திய மண்போய்ச் சிதறி யோட வெந்தைசைவநீ றிலகி
நீடப் (பூப)

(3) கண்ணுதல் வாய் தூற் பதம் நிறைந் தோங்க
வெண்ணீறு டன்கண்டிகையுந் தாங்கத் திண்ணக்கலி தேய்ந்
தோய்ந்தங் கேங்கப் (பூப)

(4) ஏலக்குழ லாரிடத் தாசையை நீக்கிச்
சாலப்புலன் தெவ்வடர்த் துப்போக்கி யேலவனைத் துந்தம்
மிடத்த தாக்கிப் (பூப)

விருத்தம்.

இவ்வண்ண மகியரசர் பணிந்தேற்றிக் கப்பமிடு மியல்பதாகச்
செவ்வண்ணத் திருச்சந்தப் பணிவிடையும் வழுவாமல் தினம்
நடாத்திப்
பைவண்ணப் பணிமுடிதாங் குலகமதை நீடூழி படக்காத் துப்பின்
மைவண்ணக் கண்டரடித் தாமரையிற் ஞெண்டர்நிதம் வைகினாரே

பலசுருதி விருத்தம்.

சீர்த்தியார் சிதிடவே சைவஞ் செழித்தநீ டூழிபல்க
மூர்த்தியா ரரசியற்று முதன்மையாஞ் சரித்தி ரத்தைப்
பார்த்தியார் படிக்கினும்பின் பமுறக்கேட் கினும வர்க்கிங்
கார்த்தியா மெவையு நீங்கி யானந்தத் தினிது வாழ்வார்.

மூர்த்தி நாயனார் சரித்திரம்
முற்றிற்று

ஆ. லாவணி	2	விருத்தம்	7	கேகாவளி	1
ஆர்யா	3	பதம்	9	ஆ. மொத்தம் உருப்படிகள்	34
வெண்பா	4	கலித்துறை	3	ஆ. சரித்திரங்கள் 16க்கு உருப்	
ஸவாய்	4	கண்ணிகள்	1	படிகள்	404

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

17 † முருக நாயனார் சரித்திரம்.

இராகம்-மாஞ்சி. தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) தாதவிழ் பூமலர் தாங்குமென் குழலார் தடமலை மகளுறு
மேனியி னிழலார்
பாதிம திபுனலுந் தரித்திடும் வேணி பணியும்ப ரவும்பரன்
பதிவுறுங் காணி
(2) சோதிசூ ழுமௌ லிச் சோழநன் னாடு துலங்கும் பொன்
னியில்வளர் சோலையாற் கூடும்
மாதவர் வசிக்கும்நன் மடங்களும் பலவும் மருவும்பூம்
புகலூரென் றொருபதி குலவும்
(3) அப்பதி யிலிலங்கு மணியாகந் தனங்கள் அரன்பணிக்
கிசைவுறு மகிற்பூவி னினங்கள்
செப்புமப் பதியினிற் செனித்திடும் தகையார் செழுமறை
யவர்குலத் தினில்முன்னும் வகையார்

வெண்பா.

மாமகிழு மின்பமுயர் மாமுருக னாரெனவோர்
நாமமுற்றுத் தொண்டருமென் னாளுமுயர்-க்ஷேமமதால்
மேலாம் பதவியுற மெய்ஞ்ஞானத் தாலுயரும்
சாலவருந் தொண்டுபுரிந் தார்.

பதம். இராகம்-நாதநாமகிரியை. தாளம்-அடதாளசாப்பு.

(செலியாத்ஸாலூனே என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

தொண் டியற்றினார்

அநுபல்லவி.

மண்டுப வமகற்றித் தொண்டர்மு ருகனார் (தொண்)

சரணங்கள்.

(1) திருப்புக ஆர்ப்பரமன் திருப்பணிச் சடைமீது
திருப்பள்ளித் தாமமும் சாத்தித் (தொண்)

(2) உதயமுன் னெழுந்துநீ ராடிநித் யாநுஷ்டானத்
தனையுமு டித்து நடித்துத் (தொண்)

(3) கோட்டு நிலம்நீர்கொடித் தோட்டும லரெடுத்து
நீட்டுமா லைகள்தொடுத்துத் (தொண்)

(4) கண்ணிக ளும்பிணையல் களுந்தொடை யல்சமைத்து
அண்ணல்மு டியிலமைத்துத் (தொண்)

(5) அர்ச்சனை செய்துமஞ்சக் காத்தை யோதியுணுதி
மெச்சும் புகழும்விரியத் (தொண்)

விருத்தம்.

மறைகள் முதலாம் ஞானமதை மகியோர்க் களித்தம் மகிதலத்தை
முறையா வீன்ற வுமைமுலைப்பால் முற்று மயின்ற சம்பந்த
இறைவர் நண்ப ராகித்தொண்டு மியற்று முருக னார்தவத்தைக்
குறைவில் லாமற் செய்துமின்பம் குளித்தார் மனமெதக்
களித்தாரே.

ஸ்வாய்.

(1) அன்னவ டிவமு மேனவ டிவத்த மாரிப் ருமனறிதற்
கரிதா
நன்னய மார்வர்த்த மானத்து ளீசனை நண்பிற்று இத்தன
ரன்பிற் பெரிதாய்

(2) இத்தகை யாத்துதி செய்துபுக லியி னிற்பிள்ளையார்தம்
மணத்திலில் நேரே
சுத்தருஞ் சேர்ந்து கையிலேக்கி றைவன் துணைமலர்
போற்றிடத் தோன்றிடு வாரே.

பலசுருதி விருத்தம்.

முருகனார் சரிதந்தன்னை முனிவறப் படிப்போ ரின்பம்
பருகிடக் கேட்போர் மேலாம் பதிகளை யடைந்து வாழ்க்கை

பெருகிடக் களித்து நின்றெப் பேறினு மமர்ந்து மாசு
குறுகிட வரன்றாள் போற்றிக் கொண்டுமெக் களிப்பர் மாதோ.

முருக நாயனார் சரித்திரம் முற்றிற்று.

கண்ணிகள்	1	விருத்தம்	2
வெண்பா	1	ஸவாய்	1
பதம்	1	ஆ.	6

ஆ. சரித்திரங்கள் 17-க்கு உருப்படிகள் 410.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

18 † உருத்திரபசுபதிநாயனார்சரித்திரம்

பஞ்சசாமரம்.

(1) பொன்னி நாட்டுத் தலங்க ளினின்மிகு போற்று யர்ந்திடு நகரமாம்
மன்னுந் திருத்த லையூரெ னும்பெயர் வாய்ந்தெதன் னகர்க் குஞ் சிகரமாம்

(2) மறைய வர்வேள்வி வான ளித்திட மலர்ச்செறி செழுஞ் சோலையே
நிறையுந் தேனை யளிக்க வீசர் நிகழ்பஞ் சகவ்ய வேலையே

(3) ஆன ளித்திடத் தான தர்மம் அறுதி னம்நீதி நேர்மையும்
மேல்ந லத்துட னன்ன கர்தரும் மேதி னிக்குயர் சீர்மையும்

ஆர்யா.

(1) இம்மகி மைபொருந் தியதோர்——இனிதூ ரதில்வே தியர்குல மதிலணிதேர்

இன்மைப் பசுபதி யாரே-யெனவுயர் பெயருற் றிசைதொண்
டுறுவாரே

(2) மறையே யுருவொடு வந்தார்—மனமீ துயர்சுரு தியின்னி
சையுவந்தார்
கறையின் கண்டனர் மகிழக்—கதிதரு தொண்டுதனையேசெய்
தனர்புகழ

(3) கரைமே வியகம் பலையுட்—கடுவொலி கறங்க வறையுறு
வண்டொலியும்
நிறைகரு வரால்கள் பிறழும்—நிரைநெடு கயனீ ரிடைசெய்
தஞ்சலியும்

பதம். இராகம்-கமாசு. தாளம்-ஆதி.

பல்லவி.

பக்திபொ ருந்தினரே சிறந்தனரே

அநுபல்லவி.

முக்திபெ றுமதியார் மூர்த்திப சுபதியார் (பக்தி)

சரணங்கள்.

(1) செங்கம லமென்தடத் தினிற்கழுத் தளவிட
லிங்கித ரிருந்திட யிசையமர்ந் திருந்திடப் (பக்தி)

(2) உச்சிமேற் கைகுவித்து உருத்ர மும்ஜபித்துப்
பித்தர்ம கிழநத்தும் பேரின்ப மும்பொருத்தும் (பக்தி)

(3) நீரினுள் நெருப்பென்று நிகழ்ந்திட மனம்நின்று
மாரணி யவர்க்கென்று மங்கமர்ந் திடவென்றும் (பக்தி)

(4) திருமலர்ப் பொகுட்டிருந் திருந்தவ னையொப்பாரும்
மருவும றைக்குயரு மானருத் ரம்பகரும் (பக்தி)

விருத்தம்.

உருத்திரமே பகர்வுறலால் உருத்ரபசு பதியாரென் றுலகோர்
மெச்ச
வருத்தியொடு மான்மகிழ வநுதினமப் பணிவிடையா லமர்ந்தா
ராகக்

கருத்தினரென் றீசனெணிக் கமலமெனுந் தங்கழற்கா ளாக்குமந்த
திருத்தனார்முன் பிருந்துதிற மாம்பதத்தில் நிலைவுறவே நின்றார்
மாதோ.

பலசுருதி ஆர்யா.

இந்தவி தந்தொண் டமரு—மிசைபசு பதியா ரின்கா தையி
லெவரும்
சிந்தைபொ ருந்திட நேரே தெளிவுறு மிகபர ஸுகமுறு
வர்கள்சீரே.

உருத்திர பசுபதி நாயனார் சரித்திரம் முற்றிற்று.

பஞ்சசாமரம்	1	பதம்	1
ஆர்யா	2	விருத்தம்	1
		ஆக	5

ஆ சரித்திரங்கள் 18-க்கு உருப்படிகள் 415.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

19 † திருநாளைப்போவார் நாயனார் சரித்திரம்.

(அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தில் சந்தவரைகந்தகுக
நாதா என்ற வர்ணமெட்டுப்போல.)

கண்ணிகள்.

(1) சீருலவும் பொன்னிவள நாடு—தனில்—செழித்திடுங்
கொள்ளிடமுங் கூடும்-அதில்
செழுமணி களைத்தந்தம் திரைக்காத் தால்முகந்து சேர்க்கு
மரை களார்க்கும்

(2) அந்நதியிற் பாயும்பண்ணை சேரும்-பழைய ஆதனூரென்
ஒருபதி யாரும்—அதில்
அகண்ட வொளிபெருகி நிகழ்ந்திடுந் திருநீற்றி லணையுந்
தொண்டு மிணையும்

(3) பழனங்க ளிற்கருப்பஞ் சாறே—பாய்ந்து—பழந்தொளி
யாக்கவுறுஞ் சேறே—உழுகும்
பகட்டேர் கொழுக்கிழித்து மகட்டுறுஞ் சாலில்வரால்
பாயும் வந்துதோயும்

(4) சேற்றலவன் கணங்கரு வுயிர்க்கும்—செழும்—செங்கமலங்
களுமுருகுயிர்க்கும்—செறி
தேன்கள் பொழிந்து விரை திகழ்தளி ரொடுதருச் சேரும்
வானி லாரும்

(5) அத்தருக்க ணின்றசைக்கத் தேனைப்—பொழியு—மலங்கிருத
மாகவருஞ் சோனை—பெருக
அதுபுனன் மழையல தலர்மது மழையோவென் றறியும்
பூஞ்சோலை செறியும்

(6) பாளைவிரி மணங்கமிழ்ப் பைங்காய்த்—தெங்கின்—தாளதிர
முட்டிடக்கி டங்காய்ப்—பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழமிதப் பப்பலாவின் தேனே
(a) உகளும் தானே

(7) நந்தனம லரெங்கெணு ங்கமழும்—அதின்—னறை யைவண்
டினமுண்டு முமிழும்—திசையின்
நாற்புற முமாடங்கள் மேற்புறத் தின்புயலை நாடும்
மகிழ்வோடும்.

நொண்டிச்சிந்து

நந்தனார் சரித்திரத்தில்

(ஐயேவொரு சேதிகேளும் என்ற வர்ணமெட்டுப்போல)

கண்ணிகள்.

(1) இத்தகைமை பெற்றவளமும்—பழன மின்பமுடன் நகர்சுற்றி
யேற்குர் வளமும்

(a) உகளும்—பாய்ந்துவிளையாடும்.

எத்திசையு மெச்சவுழுகும்-தொழிலில் வற்றமுறு
குழுவினர் நின்று மொழுகும்

(2) மலமகல் புலைப்பாடி-மருவும் மனைகளின் கூரைகளை முற்று
மூடிக்
குலவிய சுரைக்கொடியும் பார்ப்புட்-குலவுங்கு
ரைத்துநாயும் வந்துபடியும்

(3) வலைகளு மக்களுறங்க-நிழல் மன்னுமருதங்கள் நின்று
மெங்கும்பிறங்க்
மிகையுறுங் கடைஞர் செயல்-செயவேண்டி-விழிக்கக்க
தறும்யாம வாரணத்தி யல்

(4) வெங்கும்விளங் கிடநாடிப்-புலைய ரின்பமுயர் காஞ்சிநிழல்
பம்பக்கூடிப்
பொங்குமானந் தமுங்கலிக்க-நெற்குத்தும் பொழுதுசெய்
திடுமின்பப் பாட்டுமொலிக்க

(5) புள்ளுந்தண் புனற்கலிக்கும்-பொய்கையினில் பூங்குவளை
நீங்கமது வேங்க நிலைக் கும்
கள்ளுண்டு களிதூங்கப்-புலைச்சியர்கள் கறங்கும்ப
றையடிக்கு மொலியோங்க

(6) இத்தகைவ ளங்கள்பொருந்தும்-சேரி யினிற்கொரு
கூவிளமா மன்னத்திருந் தும்
சத்திசிவத் தினில்விருப் பார்-மதிநிதம் சருவு நந்
தனென்றொ ருவரிருப்பார்.

பதம். இராகம்-சங்கராபரணம். தாளம்-சாப்பு.

பல்லவி.

பக்திபு ரிந்துசிறந் தார் இந்தப் பாரினைசதுறந்தார் (பக்தி

அநுபல்லவி.

சுத்தநிஷ் களங்கமாம் ஜோதிஸ்வ ரூபமான
நித்தியவஸ் துவைத்தேடி நிமலநந் தனர்நாடி (பக்தி)

சரணங்கள்.

(1) சேரிக்கு ளதிபரா நின்று—பண்ணைத் திறத்தொழி
லதிலுமு யன்று
காரிபா கர்க்குரிய நயத்தொண்டு றுதியென்றும்
கூறும்பே ரின்பவழி கூட்டுமார்க் கமேயென்றும் (பக்தி)

(2) ஈசரா லயங்களெங் கெங்கும்—நாத பிணையும்பே ரிகையு
முழங்கும்—விதம்
மாசறு தோலுதவி மதுரவி சையினங்கும்
ஓசைவீ ணையாழ்தந்திரி யுதவும வம்விளங்கும் (பக்தி)

(3) எங்கள ரன்மகிழ்ந்து களிக்க—அன்ப ரினியகோ ரோசனையு
மளிக்கச்
சங்கரர் பேரன்பின் தண்ணளியிற் குளிக்கப்
பொங்குமா னந்தக்கடல் பொங்கிவந் துகொப் பளிக்கப்

(4) ஆலயங் களெங்கெங்குஞ்சென்று—அங் கரனூர்ஸந் நிதி
வாயில் நின்று
ஆலமுண் டோனுமங்க ளவரா தங்கழன்று
ஆடிப்பா டிக்கொண்டாடி யறுவை ரிகள்வென்று (பக்தி)

வெண்பா.

இந்த விதந்தொண்டு மியற்றித் திருப்புன்கூர்
நந்துசிவ லோக நாதரடி-யுந்துதித்து
நந்தனு ரின்ப நயம்பெறுதற் கன்புதுவைத்
தந்தநக ரிற் றுமனைந் தார்.

விருத்தம்.

திருப்புன்கூர்ச் சிவலோக நாதனையே நந்தனார் ஸேவைசெய்ய
அருத்தியுற நந்திமறைத் திட்டதினு லவர்விலக வரனையன்பர்
வருத்தமொடு வேண்டிநிற்க ஈசர்மன மகிழ்ந்தவர்தாண் மலரை
யன்பர்
திருத்தமொடு தெரிசனைசெய் திடநந்தி தனக்கிதனைச் செப்பு
வாரே.

பதம். இராகம்-செஞ்ஜுருட்டி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

நந்திகேச சற்றேவிலகு நந்த னந்தந் தெரிசனை செய்ய (நந்தி)

அநுபல்லவி.

சிந்தை மகிழ்ந்து நந்த னம்மை சேவை செய்யவு மாவ
லுற்றதால் (நந்தி)

சரணங்கள்.

(1) ஆநந்தக்கண்ணீர் பெருகிச் சொரிய வகவிதழ் மரைபூத்து—நம
தடியி ணைகளில் நிறைய மகிழ்ந்து மநுதி னமதிற்
சேர்த்து—மபி
மானமுடனே குதித்து—நம்மை மனதுவந் திடத்துதித்து
நிற்கும்
மோனமு டைய ஞானியென் றெண் ணு முக்த னித்தனென்
றுற்று மதித்து (நந்தி)

(2) ஒரும தியிரு விருவி னைமூன்று யுறும லங்களை வென்று—
அவர்க்
குரிய நான்காம் பதவி யடைய யுண்மைப் பொருளி
தென்று—நம்மையே
கருது மனத்தைப் பொருந்து மன்பர் கவலை விலகத்
திருந்து நம்
கருணை யளிக்கச் சிறந்து பொருந்து கருவி யுருவ மெனவுந்
தெரிந்து (நந்தி)

ஆர்யா.

சங்கர னிவ்வித மறையத்-தனிநந் திகேச னிடம்வி லகிட மறையத்
துங்க மிகுநந்த ரேசுந்தரர் தரிசன் மதே செய் திடுவாரே.

பதம். இராகம்-கானடா. தாளம்-ஆதி.

பல்லவி.

தெரிசனஞ் செய்தார் இருவினை கொய்தார்

அநுபல்லவி.

நறுமல ரடிகண்டு நந்தனு ரின்பம்கொண்டு (தெரி)

சரணங்கள்.

(1) தேனவிழ்த் திடுங்கொன்றைச் செழுமலர்த் தொடையும்
திங்களும் ஸுரநதி திகழும்பொற் சடையும்
தீனர்கட் களியளித் திடும்நற்கட் கடையும்
செந்திரு மாலுருவம் ஜனித்தவெள் விடையும் (தெரி)
(2) தேவர்கள் போற்றும் பாதா சிவலோக நாதா
த்ருபுர பேத விநோத சின்மய நீத
ஆவலா யெற்குனளி யளிக்கலா காதா
ஐங்கா தாதயென வறைந்தன்பின் போதர் (தெரி)

ஸவாய்.

(1) என்றுதெ ரிசனஞ் செய்திடும் நந்தனர் ஏர்வையு றுங்குளம்
நேரிலென் றெண்ணி
யென்றின்வி ழிக்கடை யாருருள் முன்னிட வின்புறும்
நன்குள மாகவே பண்ணி

(2) கோயில்வ லம்வந்து கொன்றைம திச்சடைக் குன்றவில்
விலங்கி தானத்த மர்ந்து
நேயமொ டுந்தொழு தாடிக்கொண் டாடித்தன் இன்பந
கர்க்குள ணைந்தனர் வந்து

(3) அப்பதி நின்றுசி வப்பொருள் மேவு மபற்பதி யெப்பதி
யாவிலு மேவி
ஒப்பில ரன்கழ லற் பொடு போற்றி யவர்ப்பதி மேவின
ரொப்பிமே தாவி

கொவளி.

முதம்பெ ருகிவரு சிதம்ச ருவிமதி யிசைந் தன்பரும்
சிதம்ப ரமதனை யடைந்தி டவெனுநி னைவுங் கொண்டனர்.

விருத்தம்.

இரவுகண் டுயிலாராகி யிசைந்திடப் புலர்ந்த தற்பின்
உறவினர் தம்மைவிட்டு மொருங்குறு மனத்த ராகிப்

பொறுமையாத் தில்லைநாளைப் போவனென் றுரைத்து ரைத்து
நிருவிகற் பத்தில்நெஞ்சம் நிலைநிறுத் தியுறு மாதோ

*பதம். இராகம்-பியாகடை. தாளம்-சாப்பு.

பல்லவி.

நாளைப்போ வேனென்று நாளைக் கழித்ததினால்
நலமென்னெ னநவின்றனர்

அநுபல்லவி.

வாளைப்ப ழித்தவிழி யாள்பழி யாள்மயக்கின்
வலைக்குட்சிக் கிநின்றாக வலைக்குட்பட் டுழுழன்று (நாளை)

சரணங்கள்.

(1) ஐம்புலன் களையா னவர்பணி யிற்கமைக்க
ஆத்தொழி லிற்பொருந்தா தறுவை ரிக்குட்சிக்க
வம்பாமெ ழுபிறவி மருவிம யங்கியெய்க்க
வாஸனை மேலிடநல் வழியில்நின் றுதியக்க (நாளை)

(2) ஒளியிலா விழியினை யுற்றமாந் தர்கள்போல
வும்பர னான்பணிக் குதவா வுடம்புமேல
வெளியுறும் பாலைநில மேஜல மெனச்சால
வீண்மதி யினைநம்பி விடிலென்னென் றிடச்சிலர் (நாளை)

வெண்பா.

இந்தவித மன்பர்சொலி யின்பமுறுந் தம்பதிநின்
றந்தணர்மூ வாயிரவ ன்புபொருந்-துந்தரமாம்
அம்பலத்தில் நந்த னருத் தியொடு வந்தணைய
வம்பலத்து ளோர்களறிந் தார்.

ஆர்யா.

அம்பல மேவிய நந்த-னார்தங் கடையர்கு லமான தபொருந்த
பிண்புறு மானையு மணைய-யிசையா துருகிய றைவார்து யருபிணைய

பதம்: இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

கண்ணிகள்

(1) முந்தைவி திப்பயனோ முதிர்தவத் தின்குறைவோ
முக்கணன் சோதனையோ வினையோ
யெந்தவி தத்திலோநான றிகில னெந்தையா
னிணையடிக் குநாளாகா தெனையோ

(2) கைக்குட்சிக் கியகனி வாய்க்குக்கிட் டாதவொரு
கதையினிற் கொப்பும்வகை காணுதே
பொய்க்குமிச் சடலத்திற் புலையனு மாப்பிறந்து
புன்செய லாலோவென்று தோணுதே

(3) மல்குந்தண் ணீர்வளமும் வயலுஞ்செந் நெல்வளமும்
மற்றும்வ ளமும்சேருந் தில்லையே
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேளவிப் புகையெங்கும்
பறந்திடு மும்பர்நக ரெல்லையே

(4) குன்றனை யமாளிகை தொறும்கு லவும்வேதிகை
ஒன்றிய மூவாயிரத் துறுமறை யோர்
மன்றுள்ந டம்புரிந்த மருமான் கழல்மலர்
மருவிக்கிட் டித்தொழாத தென்குறையோ

(5) மறையோர்செய் மறையோசை வழங்கும்வாத் யத்தினோசை
மன்றுளொ லிக்குங்கண்டா மணியோசை
குறைவில்லா திருசெவிக் குட்புகுந் திடக்கோயிற்
குட்செல விடுக்குதே யெனதாசை

(6) கஞ்சன்மு தலமார் களிக்கநின் றாடும்பதம்
காணக்கா தலென்மனம் கலக்குதே
புன்ஜட லமாமீனப் புலையனா வந்ததனாற்
போற்றவொண் ணாமலதை விலக்குதே

(7) எந்த விதத்தில்மன்று ளிணங்குந டேசன்பத
விணைம லர் களைச்சிர மணிவேனோ

சுந்தர னருளன்றி வேறுமற் ருெருவரின்
துணைகொண்ட நதினமும் பணிவேனே.

கலித்துறை.

இந்தவி தந்தொண்ட ருஞ்சொல்லித் தில்லையி னெல்லைவலம்
வந்துப ணிந்து மிரவிற் றுயிலா வகையுளரா
எந்தவி தம்நட ராஜனைக் காண்ப தெனவிருக்கச்
சுந்தரன் சொற்பனத் திற்றன்மு றுவலிற் சொற்றனரே

பதம். இராகம்-வஸந்தா. தாளம்-ஆதி.

பல்லவி.

அன்பனே யிதுசெய்கு வாய் உனை யாதரிக் குமதி லுய்குவாய்

அநுபல்லவி.

துன்பவி னைவிலக்கித் தூரத்தியே யோட்டும்
இன்பமார் வழியில்நீ யிசைந்திடக் காட்டும் (அன்)

சரணங்கள்.

(1) தில்லைமூ வாயிரத்தோர் சேர்ந்துதீ வளர்த்துத்
தேடியு னையழைத்துத் தீயினிற் குதித்து
ஒல்லையில் வாவென்றவ ருரைப்பார்முன் னுதித்து
ஒழுங்குடன் வரில்பதங் கிட்டிடு மதித்து (அன்)

(2) தீயின்மூழ் கியெழுயிச் சென்மமும் விலகிச்
செம்பொன்மே னியில்முந்நூல் தெரிந்திடயிலகி
யேயும்பே ரின்பக்கட லிற்களித் தலகில்
இனியதொண் டர்க்குள்முன்னி விருப்பீரிவ் வுலகில் (அன்)

அபங்கு.

(1) அன்பருக் கிதுரை பன்ன- அதில் அகமகிழ்ந் தன்பரு மின்னத்
துன்பம்வி லகினதென் றுவந்தார்-ஜன்மத் தொல்லைப்ப
வக்கடலைத் துறந்தார்

(2) ஈசனந் தணரிட மேகித்-தீ யெழுப்பியன் பருக்குறவாகி-நம்
நேசரா மன்பரை யழைத்துத் தீயில் நெருங்கிவி
ழச்செய்திடிற் பிழைத்து-மன்பர்

(3) இன்புறு வரென்ற னனறைந்த-மொழி யினிற்கிணங்
கிமறையோர் நிறைந்த
கும்புடன் தீவளர்த்தன் பரையே-நெருங்கிக் கூப்பிட
வந்தன்பரு முறையே

(4) தில்லைந கரிற்றென்பு றத்தே-வளர்த்த தீயணைந் தநந்தனு
ருத்தே-மகிழ்ந்
தெல்லின்க திரின்றீயின் வலமே-சுற்றி யீசன்க ழல்நினைந்து
நலமே-தா

(5) வென்றடி யவர்தீயில் விழுந்தார்-என்றும் எழுபிறப்
பதனிலு மழுந்தார்
ஒன்றுமெய் யினில்முந்நூல் முடியே-வேணி யுறுமுனி
வடிவுறும் படியே-வந்த

(6) தொண்டர்செம் மலருறுந் தாதா-யென்னத் தோன்றிவந்
திடவிண்ணில் மீதார்
அண்டர்கள் மலர்மழை தூவ-அவை யகிலவு லகெங்கெனு
மேவ

வெண்பா.

இத்தகையார் தொண்ட ரினைமறையோர் போற்றிநிற்க
மெய்த்தவரும் கோயில்வலம் மேவிவந்து-நர்த்தனஞ்செய்
எந்தை நடராஜ ரின்பதங்கள் போற்றியன்ப
ரந்தரமா மின்பமடைந் தார்.

பதம். இராகம்-பூரிகல்யாணி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஈசர் பதத்தி லமர்ந்தார் எத்து மிருவினையையுந் துறந்தார் (ஈசர்)

அநுபல்லவி.

பூசுரர்வடி வுடனெங்க ளன்பர் புன்செய லிகழ்ந் திடத்திட
வின்ப (ஈசர்)

சரணங்கள்.

(1) தில்லை யந்தணர்கூட்டம்—மற்றும் ஜனங்களு மிக நாட்ட
—முடன்
எல்லையில் நின்றும் பார்க்கத் தெரியா தேக வெளியா
யிணங்கு மூரிய (ஈசர்)

(2) குஞ்சித பாதந் தாலே—யீசன் குலவு நர்த்தன மேலே
செய்யும்
ரஞ்சித நடம் புரிந் திடுமின்ப நயங்கண் டருகில் ஐயம்கொண்
டுருகி (ஈசர்)

(3) பொன்னு மொளியு ஞ்சால—நறும் பூவும் மணமும் போல
அன்பர்
மன்னுஞ் சிவமு மொன்றே யாகி மகிமை பொருந்தத்
திகழும் யோகி (ஈசர்)

பலசுருதி விருத்தம்.

நந்தனார் சரிதந் தன்னை நயமொடு படித்துக் கேட்டுச்
சிந்தைதமா மகிழ்வோர்க் கிந்த ஜன்மத்தின் பேறுமற்று
மந்தமா வுலகிற்கேற்கு மரும்பத மடைந்துஞ் சுற்று
மெந்தமா வினையுநீங்கி யினிதுட னிருப்பர் மாதோ.

நந்தனார் சரித்திரம் முற்றிற்று.

காவடிச்சிந்துக்கண்ணி	1	விருத்தம்	3
நொண்டிச்சிந்து	1	கேகாவளி	1
பதம்	6	கண்ணிகள்	1
வெண்பா	3	கலித்துறை	1
ஆர்யா	2	அபங்கு	1
லவாய்	1	ஆக	21

ஆக சரித்திரங்கள் 19-க்கு உருப்படிகள் 436.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

20 * திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சரித்திரம்.

லாவணி. இராகம்-ஹமீர் கல்யாணி. தாளம்-அடதாள சாப்பு.

கண்ணிகள்

(1) துதிக்குந் தொண்டை நாட்டில் கம்பை நதித்தடத்தினி லீசரைப்
பதித்திடவுமை பூசிக் கவெள்ளங் கதித்துப் பொங்கிநேசரை
(2) மோதிடுமெனத் தழுவக் குழைந்த ஜோதி மெய்யுருவானை
ஓதி யமறை துதிக்க மேவ வுயருங் காஞ்சி மாநகர் [வர்
(3) வாழு மேகா லியர்கு லஞ்செய்த மாதவமென வுதித்தவர்
ஆழும் பவத்தின் கடலைச் சுவற்றி யடர்வினைகளைச் சதித்தவர்

ஆர்யா.

அடியார் தொண்டனில் வழுவா-ரலதிற் சிலதும னதார வேதழு வார்
வெடியுமு னேதுயி லெழுவார்—விமலர்தி ருக்கோ புராதி யைத் தொழுவார்

பதம். இராகம்-ஆநந்த பைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

புரியுந் தொண்டின் சீரே யதன் மகிமை தெரியவல் லவர் யாரே
(சிவபெருமான் மகிழுநேரே) (புரியும்)

அநுபல்லவி.

மருமலர்ச் சோலைதிகழ் காஞ்சிபு ரம்மருவு (மதிக்கு மேகா லியர்
குல நிதியென வுதிக்கு மாவன் பருமன தருகியே) (புரியுந்)

சரணங்கள்.

(1) திருமா துலவி வளர் புயமால் வருந்தி முனம்
தேடிக்கா ணாதபதம் நாடிப் பொருவில் மனம்
உருவா மூன்று மொத்துப் பரிவாயிங் கறுதினம்
(உவந்து கருதிவி டாமலொ ருபடியாய் உணர்ந்த டியவர்க
ளிடம் கடைப்பிடியாய்) (புரியுந்)

(2) தமதுமும் மலவமுக் ககற்றவு பாயந்தேடிச் சத்திமி
குத்தசிவ பக்தர்க ளைக்கொண்டாடித்
தமைநேரு மவர்துகி லழுக்கெடுத் துமுந்நாடித்
(தப்பிவெ ளுத்துவு லர்த்திய டித்துத விப்ரிய மொத்துறி
தப்படி யிப்படிப் (புரியும்)

(3) குறிப்பறிந் தேவல்புரி குணத்தினு லன்பர்திருக்
குறிப்புத்தொண் டரெனப்பேர் நவிற்றும னத்தின்வரும்
வெறுப்பெவ்வ ளவுமின்றிப் பொறுத்துச்செய் தொண்டி
லொரு
(a) (விதமேகருத்து வைத்திடச் செனியா (b) விதமே
கருத்து வைத்திடத்தனி யாய்ப் (புரியுந்)

வெண்பா.

இவ்வணமா டோறுந்தொண் டின்வழுவா தன்பர்செய
மைவண்ணக் கண்டர் மகிழ்ந்தருள—நைவண்ணத்
தாதுலரா மாதவர்போ லையர் தனிக் காஞ்சி
யூதூர்க் குட் சென்றார் முயன்று.

பதம். இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம.

பல்லவி.

சோதித் தருள வந்தார் சொல்ல துலாதுல மாதவர்போ
லன்பரைச் (சோதித்)

---

a) ஒருமாதிரியாகக் கர்ப்பத்தில் பொருந்தி (b) மறுதாம் ஜனனிக்காதபடி எண்ணங்கொண்டிட.

அநுபல்லவி.

மே தருமன்பர்க் குதவிபுரிய வெறுப் பில்லாத்திருக் குறிப்புத்
தொண்டரைச் (சோதித்)

சரணங்கள்.

(1) வழுப்ப டாவன்ப ரகந்தை யொழிக்க மடித்த கந்தையை
யெடுத்து—யாரு
மழுக்கை யழுக்கால் மாய்த்த வியல்பென் றறிய வெளுத்துக்
கொடுத்துத்—தொண்டி
னழுத்த முலகோர் காணக் கண்-டனைவ ரும்பக்தி பூண-மிகப்
பழுத்த மேனியாத் தோணப்—பக்தி (பாவனையோ
ருளநாணப் பூவினிலன் பரையாணச்) (சோதித்)

(2) (a) மாதரை புன்றுக் கருளும் பதங்கள் (b) மாத-
ரையினித் தேயப்—பதப்
போதரைக் கண நிலைப்பின் றிநடம் புரிகு றுநடை யேயக்
—காஞ்சி
மூதூர் மருகில் நாடி நம்பர் முதுமை காட்டித் தள் ளாடி
—மனத்
தாதரவொடுங் கூடி யயனனமென மிகவும்நேடி யறியாவுரு
வினர்தேடிச் (சோதித்)

(3) தொண்ட ரிசைபோல் மெயில்வி பூதித் தூளிதம் மிகச்
சொலிக்க—வதிற்
றொண்டல் படிந்த தென்ன வழுக்குக் கோலக் கந்தையும்
சலிக்கச்—சீதம்
மண்டுங் காலத்தை நோக்கி மாரி வடந்தை யாலுமுன்
டாக்கி—வைத்துக்
கொண்டு வெயில்முன் தேக்கி யெறிக் (குங்குணமா
மூனமாக்கித் தங்குதொண்டர் வினைபோக்கிச்) (சோதித்)

கேகாவளி.

(1) அருந்த வரைநேர் பெருங்க ருணையே பொருந் தன்பர்நேர்
விரும்பு ப்ரிய மார் மருந்த னையதொண் டருக்கண் டனர்

(a) மாதரை—பெண்களை. (b) மா-தரை—பெருமை பொருந்திய பூமி.

(2) கடந்த பொருளென் றுடன்ப ணியமுன் படர்ந் தார்வினை
நடந்து செலவே றிடங்கொள் தவரி னிடங் கூறினர்

இராகம். ஸ்ரீ தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

(1) அடியே னூழியஞ் செயும் படியாக் கந்தையைத் தந்தால்
அழுக்குப்போக் கிவெளுத்துக் கொடுப்பே னென்றார்
குடியார் பெருவண்ணாரோ கொடிய குளிராற் றொடக்
கூடாக் கந்தையை நின்முன் கொடுக்கே னென்றார்

(2) கொடுக்கேனென் றதவரைக் கும்பிட்டு வாய்புதைத்துக்
கொண்டுப ரிதாபத்தோ டிதுகூறுவார்—தாங்கள்
உடுத்தகந் தையைச்சுத்த மாக்கிக்கொ டுக்கில் நாயேன்
எடுத்தஜன் மஞ்சுத்த மெனத்தேறுவார்.

(3) செப்புமொ ழிகேட்டய்ய ரொப்பிக்கொ டுக்கக்கந்தை
யைப்புழுக் கியழுக்கை யெடுப்பீரா—நீர்
இப்பாரு மறையுமுன் றப்பாமல் தப்பியதை
வெப்பம்பெ றவுலர்த்திக் கொடுப்பீரா

(4) என்றவ சனங்கேட்டு நன்றென விசைந்தன்பர்
ஏர்த்துக்கந் தையைக்கையி லேயெடுத்தார்
யின்றுத வாதேற்கிழத் தேகத்திற் கிடருமெய்
யிடுஞ்சோக மும்நீர்தந்த தெனக்கொடுத்தார்.

வெண்பா.

(c) இருங்கந்தையைத்தம் மிருவினை நெல்வித்துக்
கொருங்கந்தை யொப்பாக வுன்னிப்—பருங்கந்தை
மாணுமொய்பபினர் சிரமேல் வைத்தி லத்திலுற்றமதி
மாணுண்மகிழ்ந் தேயிது செய்வார்.

(c) பெருமை பொருந்திய கந்தைத் துணியைத் தம்முடைய பிரு வினையாகும் நெல்லான வித்துக்குப் பொருந்தும் அந்தை நிகராகப் பொருந்தி பெரிய துணைப்போ லுயர்ந்த தோளினையுடையவர் சிரம்மேல் வைத்து.

பதம். இராகம்-சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

கோதி லாதவன்ப னீதுசெய் தனர்திருக் குறிப்புத் தொண்டனார்

அநுபல்லவி.

மாது பிரியார்க்கடித் தொண்ட ரிடத்திற்பக்தி
வைக்கும் மிண்டனார் மனதிற்சற்றுங் (கோதிலாத)

சரணங்கள்.

(1) (a) குளக்கண்ண னைமதிக்கு முளக்கண்வைத் தரைக்கணங் கூடமறவார்—நிறை
(b) குளக்கண்ண ரைமட்டுஞ்சென் றழுக்கடி யடித்தன ரொழுக்கம் பெறுவார் (கோதி)

(2) சற்று நேரமுவர் மண்பிடித் தூறிட வைத்துத் (c) தப்புவார் மிக
நெற்றிவெ யரொழுகப் பற்றும்பி றவிகளில் நின்றுந் (d) தப்புவார் (கோதி)

(3) உள்ளாவி சுகம்பெறத் தள்ளாவி ரதர்நன்று வெள்ளாவி யிற் (e) புழுக்குவார்—சற்று
மெள்ளாம லில்லறத்தைத் தள்ளாமற் பவங்களைக் கொள்ளாமலே (f) புழுக்குவார் (கோதி)

கலித்துறை.

விரைவாப் புழுக்கி வெளுத்துலர்த் திப்பத்தி மெய்த்தவர்மெய்
சரைவாய்ந்த தால்நடுக் கெய்துமென் றேதகை தங்கவுண்மை
யுரைவாயர் கல்குவ மென்ன முபலவு மேசரெண்ணத்
திரைவாயின் மொண்டுமை நீங்காது பெய்யச்சிந் தித்தனரே.

(a) குளக்கண்ணனை—நெற்றிக்கண்ணையுடையவனை. (b) குளக்கண்—அரைமட்டும்—தடாகத்திடத்தில் அரையளவு. (c) தப்புவார்—வெளுப்பார். (d) தப்புவார்—தப்பிப்போவார். (e) புழுக்குவார்—அவிப்பார். (f) புழுக்குவார்—நீக்குவார்.

பதம்: இராகம்-நாட்டைக் குறிஞ்சி: தாளம்-ரூபகம்.

பல்லவி.

தனியே புலம்பினார் சொல்நிந் தனைக்குஞ் செய்யுந்தீ வினைக்கு
மாளாகி னேனெனத் (தனியே)

அநுபல்லவி.

கனிவு டனன்ப ரிடத்தி லுடுத்தக் கந்தையை யோர்த்தத
கந்தையென் றோ நன்றோ வெனத் (தனியே)

சரணங்கள்.

(1) நேய ரிடத்திற் றுகிலேற் கும்போதா காயம் நின்மல
மாச்சுதே—நம்பி
யேய தைவெளுத் துதவு வேனென்ற சாயம் வெளுத்துப்
போச்சுதே—யென்ன
மாய முன் செய்யும் வினையோ மழு மானார் செய்த சோ
தனையோ—வெனத்
தாயி னுமன்பர்க் குதவி டாமல்மை தண்ணீராப் பொழியக்
கண்ணீர் வழியத் தொண்டர் தன்னம் (தனியே)

(2) இடைவி டாமற்கண் ணுழைந்தி டக்கூட விடைவெளி
யின்றிப பெய்யுதே—பகற்
கடிகை யுஞ்செலச் செலமைக் கொண்டல் களுநி றைந்திருள்
செய்யுதே—யென்ன
நடைபி சகிடலாமா சொன் ஞ ணயமிப்படிப் போமா
வழிக்
கடையி லிப்படிப் பெயுருமன் பாதைக் கண்டேனேபாவி
விண்டே னுவி நிற்காதெனத் (தனியே)

(3) அழுக்க டியடித் தவுடன் னிழ லதனிற் காயவைத்தே
னிலையே—ஐயர்
பழுத்த வுடம்பு குளிரால் நடுக்கப் படுமென் றெண்ணமற்
சொலையே—இஜ
வழுத்த மாயுரைத் தேனே—மிக வலத்ய னென்றெனத்
தானே—யாரும்

வழுத்தி டயிது வரைக்குஞ் செய்தொண்டின் மதிப்பிழ
ந்தேனே தளர்ந்தேனே யெனவன்பர் (தனியே)

ஆர்யா.

(1) மெய்த்தவ சிக்கிட ராக்குப்—பிணையே யுயிர்வைப்
பதாலெ ன்சிலாக்யம்
சித்திக் கும்மென நாடித்—திடவா லோசனை யினுலு
மிசைதேடி

(2) சிந்தைத வைத்திடு பாறைக்—கன்மீ துதலையி னைமோதி
டவுநேரே
சிந்தைம கிழ்ந்தா ஞரே சிரன் பர்முறுத யமாகி யருள்வாரே

பதம். இராகம்-பியாக். தாளம்-சாப்பு.

பல்லவி.

அருளினுர் மறைப்பொருளினுர் தெருளினுர்க் (கருளி)

அநுபல்லவி.

கருமைக்கந் தார்தயைக் கருமைக்கந் தார்பக்தர்க் (கருளி)

சரணங்கள்.

(1) சிந்தைத்து யரைக்காட்டி நொந்தக்கு ளிராலாட்டிக்
கந்தைத ரப்பாராட்டித் தந்ததற் குசீராட்டி
பிந்துவை யொப்பா—வெளுத்திடுவே னென்றது தப்பா
முடியக்கல்லின்
சந்தத்த லையமோத வந்தவே ளையில்நாதர் (அருளி)

(2) கல்லின்மேற் செழுமரை மெல்வித ளோடுவிரைந்
தொல்லையெ ழுந்ததென
சொல்லும்ப டிக்கவ்வன்னக் காரணங் காட்டி யீசரபயக்
கையினை நீட்டி
(தொண்டர் தலையைப்) புல்லிப் பிடித்துவந்து நல்லன்ப
• வெனநயர் (தருளி)

(3) மையின்ம ழைநிறக்கப்பூ மலரின்ம ழைபொழியத் துய்யரின்
றொண்டினைச்

சோதித்திட் டோஞ்செழிய
வையங்கள்புகழ க்கையிலேயில்நீ வந்தென் று மகிழ
விருந்துவாழ்கென்
றய்யரு மைமாதோடுந் தய்யவி டையீதெழுந் (தருளி)

பலசுருதி விருத்தம்.

அன்பர்குறிப் பறிந்தேவல் புரியத்தொண்ட ஞர்க்காஞர்
மகிழ்ந்தருளிக் கையிலை யிற்சேர்த்
தின்பமுறச் செயுங்காதை யிதனைக்கேழ்ப்போ ரிகத்தினில
ரோகத்ருட காத்ராாகித்
துன்பகற்றி நிறையாயுள் மைந்தர்செல்வந் துலங்குவிவே
கம்பொருமை தயையுதார
மின்பநிறைந் தோங்கிப்பின் சிலலோகத்தினி னிதாயெங்
காளும்வசித் திருப்பர் மாதோ.

திருக்குறிப்புத் தொண்ட நாயனூர் சரித்திரம் முற்றிற்று.

ஆ. லாவணி	1	கலித்துறை	1	ஆ. உருப்படிகள் 14
ஆ. பதம்	5	கேகாவளி	1	ஆ. சரித்திரங்கள்
ஆரியா	2	கண்ணிகள்	1	20-க்கு உருப்படிகள்
வெண்பா	2	விருத்தம்	-	450.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

21 சண்டேச நாயனூர் சரித்திரம்.

லாவணி. இராகம்-இந்துஸ்தானி. தாளம்-ஆதி.
ஸாகியாகவும் பாடலாம்.

(1) திருவளர் பொன்னிப் புனனாட் டினில் மண்ணித் தென்கரை
தனில்வாழு-

மொருவரை கிழிதா வயில்விடுத் தமுறுக ருதவும்சேய்
ஞலூர் வாழும்
(2) வெண்ணீற் றொருமையிரு பிறப்புமுத் தழல்நான்கு வேதமு
முறைநாடுவார்
எண்ணுமைம் புலனும்பின் னிடவறு தொழில்செய யேழுல
குங்கொண்டாடு வார்
(3) மானசி னமுந்நூல் மார்புறக் குழைக்குஞ்சி வயங்குஞ்சி
றுவர்குருவும்
மானவு டுக்கண்மதி நேரம டங்கடொறும் மறையொலிக்
கவிண்வெரு வும்
(4) யாகசா லைதொறுவியுண வருமா லயன்புட் களுமின்ப
மாதுஞ்சேக் கைபோலு மிந்த்ரன்யா னைகட்டுங்கந் தனைய
யூபஸ்தம்பம்
(5) நிறுவிய விடங்களு மோமதே னுப்பால் நிறைமடி
களி(1)னொழுக் கும்
நறியத டங்களாடி மறையோர்ம களிரொடு நாடும
வரி(2)னொழுக் கும்
(6) தாளஞ் சொரிபூ கப்பா ளைகளினைச் சாய்மரை கலைப்போல
நிரைநிரை யாநாட் டியசா லைகள்பல நிகழுநை மிசஞ்சால
(7) பண்பய னிசைபா லின்பயன் சுவைகண் பயன்பா
யொளிநா வின்
எண்பய னைந்தெழுத் தெழிலியின் பயன்மழை யிருமறைப்
பயன்சைவம்
(8) அன்னமண் ணின்பய னவ்வூர்ப் பெருமையை யாரும்புக
ழத்தரமா
இன்னதன் மைக்குமுன்னோ ருரைபய னாசைகொண்ட
வெளியினும் சொல்லுந்திரமா
(9) அபயத லோத்துங்கச் சோழன்றில் லையெல்லை
யனைத்தும்பொன் மயமாக்கித்
தபன னென் னமரு வலரை வென்று புலி தனிலுறுங்
கலிநீக்கி

(1) ஒழுக்கும்—தாரையும. (2) ஒழுக்கும்—ஒழுக்கமான நடையும்.

(10) அனபாய னென்னும் பெயருற்றவன் மாபதனோர் முடிசூட்டும்
தனமே வியபதி யைந்தொளொன் றெனச் சொலுந்
தகையோர் புகழ்நாட்டும்.

ஆரியா.

இத்தகை மேவிய மூதூ—ரெனும்வார் கடலூத யபாநு
வெனவோதும்
அத்தகை பெற்றவர் நேரே யுணிவேதி யர்கள்கு லதீப நிகர்வாரே.

பதம். இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

அவதா ரஞ்செய்தார் சண்டேசர்திரு (வவதாரம்)

அநுபல்லவி.

பவதா ரணஞ்செயுஞ் சிவதா ரகப்ரும்ம பக்திப மூத்துக
ருத்தொடும் சித்திபெறும் (அவதாரம்)

சரணங்கள்.

(1) பண்புடை யோர்களுந் திகழ்சேய்ஞலூ ரின்புறத்
தனியாளும்—மறையவரு
ளெண்பெறு மனைவாழுங் காசிபகோத் திரச்சார் பினிற்
சூழும்—கிரணமணி
யும்பணி நஞ்சமு நல்கும்ப ணிய தெனப் பம்புமி ருவினைக்
கோர் படிவ மாகிமனத்
திண்பெறு மெச்சதத்தன் றிருமனை வயிற்றிநத் தின்பெரு
மணிபும்பே ரன்பர்சிக மணியென (அவதாரம்)

(2) மறையோர் மகங்கதிக்க வெவருஞ் சைவத் துறைநல
மெனக்குதிக்க—கைலையில்நம்
மிறையொன் மனத்திலுதிக்கச்—செயுங்கருணை யினில்முழு
கித்துதிக்க—வென்றாங்
குறைவில்லா த பே ரின்பத்தின் றினைக்கக் குவலயத்
தினிற்சிவ பக்தியை விளைக்கத்

தரையி லுள்ள தொண்டர் யாவரும் பிழைக்கத் தருமுதா
ரவிசார சர்மரெ னத்தழைக்க (அவதாரம்)

(3) நியமா கமம்பெருக மறையவர்கள் நியமா திகள் பெருக
—முனிவர் மனத்
தியமா தியுங்களிக்கச் சிவபக்தர்மெய் யெங்கும்வி
பூதிஜ்வலிக்கப்—புகழ்பெரியோர்
தமையெல்லா முருவாத் தழைத்தகா ருண்ய ஸம்பத்தி
லுங்தே ஜோலா வண்ய
மயமா கியுஞ்சிவ பதஸாத் குண்ய மாக ராகசோ காதிகளு
நீக்கும்புண்யர் (அவதாரம்)

ஸ்வரம்.

(1) (a) தந்தைய னையர்தஞ் சிந்தைம கிழ்ந்திட வெந்தைய
வதரித் தைந்தென வோதும்
சந்தப்ப ருவம மைந்திட வாகம முந்தனி வேதங்க
ளின்பொருள் மீதும்

(2) வந்திடும் பல்கலை யுந்தனின் முந்தவு ணர்ந்திடுந் தொந்தமி
குந்ததி னாலே
புந்தியில் யாவுந்தெ ரிந்திடத் தண்முகை யின்றன்ம
ணமடக் குந்தன்மை போலே

(3) தம்முள்ள டக்கிவெ ளியில்வி டாதுறத் தக்கவ யதுமே
மாகிட நேரே
ரம்மிய மாகவுந் தந்தையு பநய னம்புரிந் தோதுவிக்
கத்தெரிந் தாரே.

பகம. ஆபாகம்-இந்துஸ்தானிகாபி. தாளம்-ஆதி.
ஜானந்தேரே ஜானியென்ற வர்ணமெட்டுப்போல.

பல்லவி.

உரைக்கவுந் தெரிந்தார் முன் னுணர்ந்தறிந் தார் (உரைக்க)

(a) தந்தை—பிரமன்.

அநுபல்லவி.

(1) தரைக்குள்வே தாகம சாஸ்திரங்கள னேகமாக்
கரைக்குள்மோதும் (b) பல்கலை கனைனப்(c)கல்கலை (உரை)

(2) வாஸமறை கூவிட வாய்ந்தபொரு ளும்கட
ராஜாடித் துணையென நாடுவா ரிடம் (உரைக்க)

(3) தந்தையுப மாணிக்கத் தக்கோர்கள்ஸ மாணிக்க
வைந்தடக்கு வோர்மனத்து ளபிமானிக்க (உரைக்க)

(4) ஆச்சரிய நாடவே யனைவருங்கொண் டாடவே
வாய்ச்சகலை யாவுமிவர் மனங்கூடவே (உரைக்க)

விருத்தம்.

(d) ஓதுவித்ததினுமேலா யுரைக்கமறை யவர்மைந்த ருடன்சூழ்ந்
துற்ற
(e) போதுவித்த கருங்காணப் பசுநிறைமேய்த் திடுமிடையன்
போதவாங் கோர்
(f) ஆதுவித்தன் கோடுகளால் முட்டவவன் கோல்கொடுகூ
சாதடிக்கத்
(g) தீதுவித்த னையமுடா நில்லெனம கிமையையய் யர்
செப்புவாரே.

பதம். இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்.

பல்லவி.

தொடலாமோ துரோகி துரோகி துரோகி கையாற் (தொட)

(b) பல்கு, அலை...பெருகிவரும், அலை. (c) பல்கலை—பலவிதமான சாஸ்திரம்.

(d) ஓதுவித்ததினும்—கற்பித்துக் கொடுத்ததினும். (e) சூழ்ந்துற்ற போது, வித்தகரும் காண—சூழ்ந்த ஸமயத்தில், படித்தவருங்காண. (f) ஆதுவித்தன், கோடுகளால்—பசுவினுடைய இரண்டு கொம்புகளால். (g) தீது, வித்து, அனைய—தீங்குகளுக்கு, விதைபோன்ற.

அநுபல்லவி.

தொடலாமோ பசுத்துன்பம் படலாமோ காணிற்கும்
பிடலாம்பொ ருளெனச்சற் றேனுமறிந்திலை
கோனே ஒருசிறுதுரும் பானும் (தொடலாமோ)

சரணங்கள்.

(1) புவனத்ர யத்திலுள்ளோர் பூஜைசெய் யும்மூர்த்தம்
அவனியில் புண்யதீர்த்த
மனைத்தும் நிறைந் திவருப்பெ ருப்பதார்த்த
மெனத்தெரிந்தும்
கவனியா மலடித்தாப் கருத்தினம்பிது வேதார்த்தம்
எதார்த்தம் (தொடலாமோ)

(2) தினமும் தன்முகத்திற் றெரிசித்த வர்க்குக்கூடும்
கனவிலுந் தன்பெப்தாது புண்யமோ வென்றால் மனதிற்கு
மடங்காது
மங்கலம்பொங்குபசு அனைவர தமுனிவோ ரகமும்விண்ணோ
ரகமுமிதி லடங்கும மடங்கத் (தொடலாமோ)

(3) நடராஜர் நதிமதி யணியுஞ்சி ரசிற்றினப் படிபொழி
பஞ்சகவ்யம்—பின்னும் நம்பரன்
புடனணிந் திடுந்திவ்ய மாகும்விபூதி
யுடனேயு தவுமபொருட் கிடமிதென் றறியோ தெரி
யாயோ கையாற் (றொட)

(4) (a) நம்பரைக் கண்டிடகிழ் (b) நம்பரை யுடன்றுங்கு
மின்பம்பொ ருந்துந்தன்ம மே விடைத்தேவரென றம்புவி
பணிஜன்மமே—யவர்க்குமிதன்
கும்பெல்லாம் பந்தவென்றால் கூறிடும் தாமா கமபா
லுறமாத் திறமாத் (தொ—)

(a) நம்பரை—ரசனை. (b) நம்-பரை—நம்மையாதரிக்கும் பார்வதி.

வெண்பா.

(c) கோபால னைமனத்துட் கொண்டவர்முன் னின்றசினக்
(d) கோபால னுக்குமன்பு கூறவே—(e) கோபால
னத்தனே நாகுமெங்க ணயனார் தம்மகத்து
ளத்தனையுந் தேர்ந்துரைப்ப ரால்.

பதம். இராகம்-நாதநாமகிரியை. தாளம்-ஆதி.

பிருகனைஜா ரேயென்ற இந்துஸ்தானிபோல.

பல்லவி.

பசுக்களைமேய்ப் பேனென்றார் பவங்களைத்தீக் கநின்றார் (பசுக்)

அநுபல்லவி.

வசுக்களைத் தேற்றி மனக்களை மாற்றி
யசுக்களையெல் லாம்ரட்சிக்கு மதுகளைப் போற்றிப் (பசுக்)

சரணங்கள்.

(1) பாவனர்ச் சனைசெய்யக் காலனை யுதைத்தய்யர்
சாலவரு ளியதாலே தக்கதெனவெண்ணிப்பையப் (பசுக்)

(2) ஆன்களை வருத்துவ ரழிவரென் றடிக்கடி
தேன்கனிகர் கணகணீர் சிதறியங்கு நின்றபடிப் (பசுக்)

(3) ஆவினங் களிக்குமேல் மேவுந்துன் பொளிக்குமே
(f) கோவிடையா கோபமீங்கிப் (g) போவிடையா
வென்றுபாங்கிற் (பசுக்)

(c) கோபாலனை—நேத்திரத்தை நெற்றியிலுடையவரை. (d) கோபாலன்—இடையன். (e) கோ, பால், அனத்தனை—மேன்மையாகிய பால்போன்ற, வெண்மையுள்ள, அன்னத்தையுடைய பிரமனை.

(f) கோவிடையா—பசுக்களிடத்திலா. (g) போ-விடையா—இடையனே, போ.

சந்த விருத்தம்.

இந்தவுரை யன்பர்சொல நொந்திடைய னும்பணிவோ
டெழுகோலத்
தந்துசெல வந்தணர கந்தொறும டைந்திவர்த கைமையாலே
சிந்தையினி லெந்ததனை யுஞ்சொலவி சைந்திடம தியின்மேலே
பந்தமற நின்றவரெ ழுந்தநிரை பின்செல்குவர் பரிவாலே

பதம். இராகம்-நாதநாமகிரியை. தாளம்-ஆதி.

பல்லவி.

ரக்ஷணை புரிந்தார் நயந் தெரிந்தார் கோலம் (ரக்ஷணை)

அநுபல்லவி.

தட்சணங் கோலால் வித்தகர் மேலாய் (ரக்ஷணை)

சரணங்கள்.

(1) பருவரப் பினில் விட்டுப் பரிந்து முன்னிட்டுத்
திருமண் ணி யில்முழுக்கிட் டுச் சொரிந்து தேய்த்திட்
டருமையு டனே முத்திட்டுக் கோலம் (ரக்ஷணை)

(2) பறித்துப் புல்லைக் கொடுத்துப் படுகை மேற் சாய்த்து
வெறித்தி டாமற் றேய்த்து
நிழலில் விட்டுப் பொறுக்குமட்டு மேய்த்துக் கோலம் (ரக்ஷ)

(3) குஞ்சிமு டிச்ச விழக் கோவணத் தோடு முஞ்சி யுலைய
நீடுங் கிருஷ்ணாஜின
முஞ்சிக்கு றவே கூடும் (ரக்ஷணை)

(4) கறக்கும் வேளை ஸாரபி களை யெலாம் விடுத்து நிறக்குநா
மமுச்சரித்து
ஸமி தாதானஞ் சிறக்க முடித்துத் தொடுத்துக் கோலம்
(ரக்ஷணை)

விருத்தம்.

பருவமதிற் பெயுமழையாற் செழிக்க வோங்கும் பயிர்களெனப்
பசுக்குலங்கள் தழைத்துப் பாலும்
பெருகுநிறை குடம்போல மடிசுறந்து பெய்யமறை
யவர்களெல்லா மகிழ்வோ டிருக்கச்
சுரபிகள் கன்றுகளை மறைக் கன்று மேய்த்தல் சுகமுறவே
வியப்புறவா வினங்களெல்லா
மருமையுட னய்யர்தமைச் சுற்றிநீங்கா தார்ந்ததாம் பேரின்பம்
சார்ந்ததாமே

பதம்-இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி. நீருமரியாத
மென்ற ஜாவளிபோல.

பல்லவி.

ஆன்கள் பிரி யாமல் நாடு மான்க ளெல்லாங் கொண்டா
டுமய்யனை (ஆன்கள்)

அநுபல்லவி.

பலகோ டிஜீவன்கள் நாடி யலகிற் றவங்கள் செய்யக்கூடி
பழுத்தது போலே தழைத்தவர் பாலே பாலே சொரிந்திட
வன்பாலே யய்யனை (ஆன்கள்)

சரணங்கள்.

(1) அய்யர் மேனி யதனில் நாவால் செய்ய பூழி நீக்கும் பூவா
லநியொடுந் துள்ளு மதியின்பங் கொள்ளும்
அன்புடன் சுற்றிநீங்கா தகத்துள் ளுங்கறவை (ஆன்கள்)

(2) கட்டுத் தறி விட்டு நோக்க் கன்றெ திர்நின் றுலும பாரா
தெட்டியே வோடு மெங்கெனத் தேடும்
சிட்டரைக் கண்டவுடன் செழிப்போ டுமய்யனை (ஆன்கள்)

(3) முத்த மிடல்போல் மோந்து பார்க்குஞ் சுத்தர் கையாற்
சொரியத் தூக்கு

முகத்தினை நீட்டு மகத்துவங் காட்டு
முன்னின்று சாய்மனை போல் வாலாட்டுமய்யனை (ஆன்கள்)

விருத்தம்.

(a) கேதனம்போல் வால்தூக்கிக் கண்களிலா னந்தவெள்ளம் கிளைத்துப் பொங்க
(b) மாதனஞ்சேர் மடியில்முட்டுங் கன்றுகளை மறந்தாலு மறக்க வொண்ணாப்
(c) போதநந்தா மறைக்கன்றை நீங்காமற் பால்பொழியும் புதுமை நோக்கி
(d) நூதனமஞ் சனமாட்டிப் பூசைசெய்து சிவஸேவை நுகர்வோ மென்றே

கட்கா.

* நாடிட யிருவினை யோடிட நிரைகளன் போடிட மிதுவெனக் கூடிட மகிழ்வொடு தோடிட மலர்களைமாடொடு மணிகளை மாடிடு மணிநதி நீடிய கரையினி லாடிய சரணரைத் தோடிடு செவியரைக் கோடிட பரையன்ப ரோடினி யவரைவெண் கோடரி யயன்முதற் றேடவ ரியவரை யாடக வரையரை யாடர வரைப்பூசனைசெய் திடவுற்றார் அதிதிட மனதிலெள் ளவுந வடுமற்றார்

* நாடிட யிருவினை ஓடிட, நிரைகள்-பசுக்கூட்டங்கள், அன்போடு இடமிதுவெனக் கூடிட-மகிழ்வொடு, தோடு இடு அம மலர்களை தாதுகள் பொருந்திய அழகியபுஷ்பங்களை, மாடொடு மணிகளை, ஸ்வர்ணத்தோடு யிரத்தினங்களை மாடிடு மணிநதி-பக்கத்தில் பொருந்திய மண்ணிநதி, நீடிய கரையினில், ஆடிய சரணரை-நர்த்தனஞ்செய்யும் பாதமுள்ள வீசனை, தோடிடு செவியரை-தோடென்னு மாபரணந் தரித்த காதையுடையவரை, கோடு யிட

(a) கேதனம்-கொடி
(b) மாதனம்-பெருமையும் மேன்மையும்
(c) போத-நந்தா-ஞானங்கெடாத மறைக்கன்றை-வேதரூபமான யிளங் கன்றை அதாவது சண்டேசநாயனாரை
(d) நூதனமஞ்சனமாட்டி-புதிதாகவபிஷேகித்து

பரை-கொம்புள்ள யிடபத்தை யுடையவரை, அன்பரோடு இனி யவரை, வெண்கோடு-வெண்மையான சங்கந்தரித்த அரியயன் முதல் தேடவரியவரை, ஆடக வரையரை-ஸவர்ண கிரி அதாவது மகாமேருவையுடையவரை, ஆடு அரவரை, ஆடும் ஸர்ப்பத்தை யுடையவரை,

பதம்-இராகம்-மாயாமாளவகௌளை தாளம் அடதாளசாப்பு
தநிவலசோரயே என்ற வர்ணமெட்டுப் போல்.

பல்லவி.

பூசனை செய்தாரே யுமை நேசரைவிசுவாஸமொடும் (பூசனை)

அநுபல்லவி.

மண்ணிநதிக் கரை யோர மணலில்மத் திமநேரம்
நண்ணு மாத்தி மரத்த ருகிரம் நிழ லண்ணிப் பிரியந் தொடுங்க
ணிஆரு மண
நாடித்தவந் தேடிச்சிவ (பூசனை)

சரணங்கள்.

(1) திருமதிலுங் கோபுரமுந் திகழ்சுற்றுச் சினகரமும்
அரிய (a)விதா னமு மாதனமும் நன் குறியலிங்க மெனு
(b) மாதனமும்
மண லாற்சமைத்தூ மூர்த்தம்வைத்துப் (பூசனை)

(2) புதுக்குடங் களையேந்து வதற்குமுன் மடிசோர்ந்து
பூதேநுக்கள் பால்சொரிந்திடவே—யங்கள் மாதேவர்க்
கென் றேதெரிந்திடவே
யன் புள்ளிமைத்துக் கோயி லுள்ளே வைத்துப் (பூசனை)

(3) பொருந்துபன் மலரெடுத்துத் திருந்துமர்ச்சனைதொடுத்துப்
பூசித்து நம்பர் சிர நிறைந்திடப்—பாலத்தி ருமஞ்சனமு

(a) விதானமும, ஆதனமும—இசாடியும் ஆதனமும். (b) மாதன மும்—பெருமையும மேன்மையும்.

பாசித் தய்யர் மிகச் சொரிந்திட-வாயாற் செப்பாமல் காலந்
தப்பாமற் சிவ (பூசனை)

(4) (c) ஆவின்பா லன்பா லாட்ட (d) அம்பலத் தின்பா டலாட்-
மேவும் வாணர் மகிழ்ந்து மனங்கொள்ள
ப்பொற் போவி யம்போ விருந்து கனிந்துள்ள மொத்
திருந்துதனை மறந்தானைப் (பூசனை)

விருத்தம்.

இப்படிக்குச் செய்யும்பூசைக் கினிதுவந்து குடங்கணிறைந்
திடுமாக் கண்ணி
தப்படிக்கி மறையவர்க ளகந்தொறுமுன் போல்பாலு தவுமந்நா
ளை
யப்படிக்கென் னய்யர்செய்கை யுணராதோர் வேதியரந் தணர்க்கு
ரைக்க
வெப்படிக்கிச் செய்வனென்றன் ஞோர்கள்முனிந் தய்யர் தந்தைக்
கியம்புவாரோ

பதம்-இராகம்-சுருட்டி-தாளம்- ஆதி

பல்லவி.

மைந்தன் செய்கை யோக்யம் யாவர்க்கும் ஸந்தோஷ
முன்பாக்கியம்
உமதருமை (மைந்தன்)

அநுபல்லவி.

பந்துவி ரோதியு மானுனே யிது பத்தமோ யக்ஞ தத்தரேயு
மதருமை (மைந்தன்)

சரணங்கள்.

(1) ஆதியில் வேதியர் வீடுக டொறுந்தப் பாமல் வந்து
கேட்டார்-நல்லதென்

(c) ஆவின், பால், அன் பால் ஆட்ட-பசுக்களிடத்தில், அனைப்பா
ராட்ட (d) அம்பலத்தின் பால் ஆட்டம்-சித்லைபயினிடத்து, ஆட்டத்தை.

ளுதினை படிக்கான் தேய்ப்பு மேய்ப்புகளை யொழுங்கா
நடத்திப் போட்டார்—எப்
போதினி லுமதிக மேனியுந் திடமாய் பொருந்திற் றுக்
கறக்குமே பால்குடங் குடமாய்
மீதியைக் காணுமே யிருக்குங் கபடமா விந்தையொன்
றையறிந் தோமொரு வனிடமாய் (மைந்தன்)

(2) எண்ணிக் குடங்குடமாப் பாலை விரைந்து கறந்திட்டது
களினிறைத்தான்-திரு
மண்ணி நதிக்கரைவெண் மணலில் சிதறியிட வாரி வாரி
யிறைத்தான்-நல்ல
புண்ணிய வேள்விதனக் கிசைந்திடும் பாலைப்-பொழியாம
லுலகினிற் பழியாஞ்சொல் மேலே
யண்ணிய வெங்களையும் பகத்தனன் பாலே (a) ஆக்குவித்
தானிப்படி (b) யாக்குவித்தா னெண்ணுமலே (மைந்தன்)

(3) வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடுமேய்க் கும்பிள்ளையை
மதித்திழந் தவர்போலும்-ஆசைக்
கயிற்றிற் சுருக்கிட் டாசனை நம்பிப் புருடனைக் கையை
விட்டவர் போலும்-நமக்குப்
பயத்துட னேநடக்கு மிடையனை விட்டுப்-பையனை
நம்பிவிட்டோம் பசுக்களைத் தொட்டு
நயத்தில் மேய்ப்பதாச் சொன்னதை யிட்டு-நாடினோ
மெத்தப்பயன் தேடினோ மிந்தத்தேட்டு (மைந்தன்)

ஸ்வாய்.

(1) வேதிய ரிப்படி யோதிட விப்ரனு மெய்வெயர் வோடிட
நைவின னுளி
ஆதிமு தலிந்தச் சேதியி லெட்டுணை யாயினும் யானறி
வேனென்னிற் றரோசி

(2) என்றினி மேற்குற்றம் வந்திடி லென்னதெ னப்பணிந்
தேபொறுப் பீரென வேண்டி

(a) ஆக்குவித்தான்-பசுக்களைக்குவித்தான் (b) ஆக்குவித்தான்-செய்வித்தான்

கன்றிமனைக்குள்வந் தென்றின்க திரினுற் கரைநவ நீதமெ-
னுமுளனுகி

பதம்-இராகம்-சென்ஸ்ஜுட்டி-தாளம் சாப்பு மைஹாதிஹூமெ
என்ற யிந்துஸ்தானி போல பஞ்சசாமரமாகவும் பாடலாம்.

(1) வேதியர் ஸந்தி வந்தன முடித் தேதமு மிகவே-மன
மீது விளைய ஓதல் மறந்து வீட்டி னுட்புகவே

(2) வந்தமைந்தனைத் திரும்பிப் பார்த்தோர் வசன முஞ்சொல்
லார்
இந்தப்பழிச் சொற் கிடம் வைத்தானென வெதிரி
னும்நில்லார்

(3) (c) வேதனை நிகர்வேதி யர்க்கிந்த (d) வேதனையாமோ (e)
யிப்போத னைவரும் பகைக்க யெவர்துர்ப்(f)போதனை நாமோ

(4) அடங்கி யிருக்கத் தெருவி னிவிழுத் தலைத்து விட்டானே
மனத்
திடங் கொண் டிப்படி நடக்கில் மனைதைத் தேறவொட்டா
னே

(5) சிவபெருமான் பூஜைக் கென்னச் சிந்தை யோர்ந் திலான்
தவமகிமைதன் பெயர்க் கிணங்கிடச் சற்றுந் தேர்ந்திலான்

(6) உளர்ப் பகைவா யார்க்குஞ் சகிக்கவொண் ணுமோவென்பார்
இதைப்
பார்ப்ப வர்பொறுப் பாரோ யிதற்கென் பண்ணு
மோவென்பார்

(7) மறையோர் குலத்திற் பிறந்து மில்லாத வழக்குந்
தொடுத்திட்டான்-அதைக்
குறைவில்லாமலும் செயலில் லைபழி கூற விடுத்திட்டான்

(8) என்ன யிரவுண் ணுது துயிலு மின்றிப் போக்கினர்
பின்னும் விடிந்த தான்க ளுடன்றன் பிள்ளை நோக்கினர்

(c) வேதனை-பிரமனை (d) வேதனை-துன்பம் (e) இப்போது அனைவரும்
(f) துர்ப்போதனையென்றும் e f ஐப் பிரித்துக்கொள்க.

(9) மண்ணிக்கரையி லமைத்தத் தந்தையு மடிப்பி றகேசென்றார் -தூரா
நண்ணு மரத்துச் சியினி லேறி நாடி நோக்கி நின்றார்

ஆரியா.

(1) குராமர மீதினி லார்ந்து-கூரார் விழியினை யுமூடி டாதோர்ந்து
அராரிகர் வோனுற வையர்-அகமொத் தினிதுசி வபூஜை யதுசெய்ய

(2) கண்டுவி ளைந்தி (a) ழிவானன் கனியா மதியின னதலானு (b) மிழிவானன்
(c) தண்டிட வெரினிட நேரே (d) தண்டிட (e) அடிகள் (f) அடியாக வுணாரே

பதம்-இராகம்-சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

(g) அடியினை யுணாரே சிவபெருமா (h) னடியிணையுணர்வாரே தந்தையடிக்கும் (அடியினை)

அநுபல்லவி.

மடிவுடன் பின்னொளித்து வந்து(i)புடைக்கும் வன்றடி யாலய்யர் முதுகுபு (j) டைக்கும் (அடியினை)

சரணங்கள்.

(1) இடியென வுரைபகர்ந் தேகினத் தோடும்- கொடியநெஞ் சந்துடிக்கக் குலுங்கிமெய்யாடும்

(a) இழிவானன்—இறங்கினன் (b) இழிவானன்—கேவலத்தையடைந்தான் (c) தண்டிட, வெரினிட சமீபித்து, முதுகருகேவர (d) தண்டிட-கோலைக்கொண்டடிக்க (e) அடிகள் அடியாரானசண்டேசர் (f) அடியாக—உதையாக (g) அடியினை-உதையினை (h) அடியிணை-இரண்டுபாதங்கள் (i) புடைக்கும்-நெருக்கும் (j) புடைக்கும்-வீங்கும்

படிநெறு நெறெனப்பறக் கடிப்புட னீடும்- தடியொடி
யும்படிக்குத் தாங்கியே போடும் (அடி)

(2) நேய மோடுருகும் வெண்ணெயைப் போலுந்-தூயம
னத்தின்பூ சுரான்பி ளுனு
மேய பக் திமுதிரும் விதாணை யாலுங்-காயமாதிதிரி
காணமொத் ததிருலும் (அடி)

(3) நாமங்கள் சொலியர்ச் சனைசெய்து மேலே-சோமத
ரர்முடியிற் சொரிந்திடப் பாலை
நெமகண் டகன்கண்டு பதட்டத்தி ஞலே-தாமதை
யெற்றியுடைத் ததின்வரை மேலே (அடி)

விருத்தம்.

முற்றுமபி ஷேகஞ்செய் முனமறையோன் பாற் குடத்தை
முரண்டாளைக் கொண்
டெற்றுவதைக் கண்டுதந்தை யெனத்தெரிந்து மய்யர்கையி
லெழிலார் கோலைப்
பற்றுறவு மதுமழுவாப் பவிக்கவவன் மேல்வீசப் படுதுண்டாத்தா
ளற்றுவிழப் பினும்பூசைக் கிசையாநம்பர் மகிழ்ந்துதரி சனமீந்
தாரே

பதம்-இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டனர் நேரே கருணை பெற்றூரே

அநுபல்லவி.

எண்டிசை புகழ்ந்திடு (k) மொருமானைக்கையி
லேந்து மெங்கள்சிவ பெருமானைககண்ணிற் (கண்டனர்)

சரணங்கள்.

(1) நந்திமு தற்கணங்க ளும்பணிந் தேற்ற நாமங்க ளினைச்சொ
ல்லி நற்றவர் போற்றச்

(k) ஒருமானை-ஓர் மிருகத்தை

செந்திரு மாலயன் மகிழ்ந்தெதிர் தோற்றத்-திருமால்
விடைமிசை பிரியா வுமையொடுங் (கண்டனர்)

(2) தம்புரு வோடிசைத்துத் தும்புரு பாட அன்புறு வீணை
யினா ரதரிசை கூடச்
செம்பவ ளவிதழ ரம்பைய ராடத்-தேவதுந் துமிகோஷித்
திட விண்ண வர்கொண்டாடக் (கண்டனர்)

(3) புவிதெரி யாமற்செழும் பூமழை பெய்யக்-கவிகளாற்
கந்திருவர் கானங்கள் செய்யக்
குவியுங்கை களோடிந்த்ரன் குனிந்தென்று முய்யக்
கும்பிட்டெ திரிலுற வின்புற்றி டுமென்னய்யர் (கண்டனர்)

(4) மதிநதி கொன்றையா வஞ்சடை மூசக்-கதியொடுங்கிக்
கண்டத்திற் கடுவொளி வீச
அதிவெண் ணீறிடுநுத லதனிற்ப்ர காச மாகமற லியுடலை
மாய்த்துதைத்த தாளைநேசர் (கண்டனர்)

வெண்பா.

கண்ட வுடனேதே கமதை மறந்து (a) மதி
கண்ட (b) பௌவ மென்னக் கடும்பவத்தை-விண்டவர்தாள்
வீழ்ந்து பணிந்தெழுந்து மெய்குளிர்ந்து நித்தியரா
வாழ்ந்திடுவார் தோத்திரஞ்செய் வார்

கட்கா.

பரா பரதிகம் பரா வரணியச பரா திபரையன் பராக வருள்தத்
பரா வடியரிக
பரார்த் தமுறநட் பரூ வுதவுதயா பரா மதியொடம் பரா வணி
ஜடா பரா வணிகொள்
சம் பராரி யரிகுரு பராதி ஸா முகவப் பராஜ ஸா யோக பரா
ளின்பநி
பரா தியாயெனைப் பரா நந்தமுறப் பணிப்பீ ரெனக்கூறினார்
இருவினை களினடி யிறத் துணிப்பீ ரெனத்தேறினார்

(a) மதிகண்ட-சந்திரனைக்கண்ட
(b) பௌவமென்ன-ஸமுத்திரத்தைப்போல

இதின் கருத்து

பராபர-பரம், அபரம் இரண்டையுமுடையவனே. திகம்பரா-திக்கைவஸ்திரமாகப் பொருந்தியவனே. ஆரணிய, சபராதிபனை-ஆரண்யத்தில் வேடராசனான அர்ச்சுனனை. அன்பாக அருள் தத்பரா, அடியர்இக பரார்த்தமுற-அடியார்கள், இகத்திலும் பரத்திலுமுள்ள பிரயோசனத்தையடைய. நட்பு, அறு-சிநேகம் நீங்காது உதவுதயாபரா-உதவும்படியான. கிருபாமூர்த்தியே மதியொடு, அம்பு, அரா, அணி, ஜடாபரா-சந்திரனோடு, கங்கையையும் சர்ப்பத்தையும் அணியும்படியான ஜடாபாரத்தை வகித்தவனே. அணிகொள் சம்பராரி. அரி. குருபரா-அழகுபொருந்திய சம்பராரியான மன்மதனுக்குச் சத்ருவாக விளங்கும் குருபரனே. ஆதிஸுமுக, அப்பா-ஆதியா விளங்கும் விநாயகக்கடவுளிற்குப் பிதாவே, ராஜஸுயோக பராளின்-ராஜஸுயோகயாகத்தை நடத்தும் சிரேஷ்டர்களுக்கு, இனிமையா விளங்குபவனே. நிசபராதியா வெனை-அபராதமில்லாதவனாக வென்னைப், பராநந்தமுற-இலாக்கியமான ஆநந்தத்தைப்பொருந்தும்படி, பணிப்பீரெனக்கூறினார்-பணிவிக்கச்செய்வீர்என்று சொன்னார். இருவினைகளினடியிற- இரண்டுவினைகளின்மூலங்கள் அற்றும்போகும்படி துணிப்பீ ரெனத்தேறினார்-துண்டித்துவிழச் செய்வீரென்று தேர்ச்சியுடனுமுரைத்தார்.

ஆர்யா.

பொங்கி யெழிந்தா நந்தப்-புனல்வா ரருவிநி கராக வரவாகந்
தங்கிந னைந்திட நேரே-தகையார் சிறுவரு டனாதர் பகர்வாரே

பதம்-இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

(a) தந்தோந் தந்தோ மென் றாடிய பாதர் சண்டேசர் பதம்
(b) தந்தோம்
தந்தோமென் றார்நாதர் (தந்தோம்)

(a) தம்தோம் தம்தோம்-தம்தோம் தம்தோ மென்ற ஜதியோடே
(b) தந்தோம் தந்தோம்-கொடுத்தோம் கொடுத்தோமென்றார்

அநுபல்லவி.

செந்தா மரைக்கையாற் றெட்டுத்த டவவன்று
தேஜோ மயமாகுந் தேகியா கியமன்றுள் (தந்தோம்)

சரணங்கள்.

(1) நம்மைப்பூ சிக்கவிக்கி னற்செய்யுந் தந்தைகாலை-நாடிம
ழுவினால்பா ராமல்வீட் டிமேன்மேலே
நன்மைத ரும்பக்திவி டாதுபு ரிந்ததாலே நாமேதந் தையா
னோமென்றன் பினாலே (தந்தோம்)

(2) தழுவியுச் சிமோந்து நறுங்கொன்றை மாலை-தன்னைம
கிழ்ந்தெடுத்துச் சூட்டினர் பாலே
குழுவின்றொண் டர்கள்பதி யாகிநம் மாலே- குறித்துச்சூ
டுவதைத் தரித்திடென் றொருக்காலே (தந்தோம்)

(3) உடுப்பது முண்கலனு முனக்கெனப் பிரிய- மோடளித்
தனம்விண்ணோர் மலர்மழை சொரிய
அடுத்துவி திதுதிக்க முனிவர்க ளரிய-தானமா மறைசொல்ல
வகிலமெங் குந்தெரிய (தந்தோம்)

விருத்தம்

விடைவாக ரருள்புரியக் கணங்கள்துதித் திடவிக்த மேனியோடும்
அடைவாகச் சிவபெருமான் மகிழ்ந்திடும்பா லகராகு ரங்கை
கூப்பித்
தடையறவே யணைந்துடனே செலப்பூசைக் கிடையூறுந் தந்தை
யய்யர்
படையாலப் பிழைநீங்கிப் பந்தரொடுஞ் சிவலோகப் பதிசார்ந்தா
ரே

பலசுருதி விருத்தம்.

சண்டேசர் பதம்பெற்ற சரிதந் தன்னைத் தானவில்வோர்
விருப்புற்றுக் கேட்போர் நாளும்
வண்டேச ராகிநிறை யாயுள்செல்வ மகப்பேறோ டன்பினிய
மனைவாழ் நன்மை

திண்டேசா திபத்தி யஞ்சத் கீர்த்தியோங்குஞ் ஜீவகா ருண்ய
மெலாம் பொருந்தி யின்னும்
கொண்டேசம் புபதமும்பெற் றெந்தநாளுங் குறைவில்லா
விறைவர்பத முறைவார் தாமே

சண்டேசநாயனுர் சரித்திரம் முற்றிற்று.

ஆ லாவணி	1	விருத்தம்	7	ஆ உருப்படிகள்	30
ஆர்யா	3	சந்தவிருத்தம்	1	ஆ சரித்திரங்கள்	
பதம்	12	வெண்பா	2	21-க்கு	
லவாய்	2	கட்கா		2உருப்படிகள் 480.	

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

22 * திருநாவுக்கரசுசுவாமிசரித்திரம்.

காப்பு
வெண்பா.

சீர்பெருகுஞ் சைவஞ் செழிக்கப் புறச்சமயக்
காரிருளெ லாமொழிக்கக் காய்கதிர்போ- லேர்மருவ
நன்குதித்த வெங்கடிரு நாவுக் கரசரிசைச்
செங்கனிக்கு மாவைநினைத் தேன்

லாவணி-இராகம்-காபிதாளம்-ஆதிஸாகியாகவும்-பாடலாம்.

கண்ணிகள்

(1) மங்கள சுபகர மெங்குமு முங்கிய வான்றிரு முனைப்பாடி
துங்கநன் னாட்டின்வ ளந்தனின் மேன்மைய தோவினு
டனைநாடி

(2) எட்டிப் பார்ப்பது போலுயர் மாடமா ளிகைதிருக்
கோபுரங்கள்

கட்டிய சினகர நட்டிய கொடிகண்ம கரவர தோரணங்கள்
(3) புரிசைகள் வீதியின் வரிசைக ணவநிதி பொலிவுறு
மாவணங்கள்
விரியுந றுமலர்க ணிறைநிறை யில்கவே யிலங்கிடு
காவணங்கள்

(4) சிவபெரு மான்மகிழ் திருவிழா வும்வே தியர்சிவபூஜைகளும்
தவநெறி தவரா தவர்சிவத் யானஸ மாதியி லாசைகளும்

(5) நீங்கி டாதுவளர் சைவா கமநெறி நிலைதவராதவரும்
ஓங்கிய திருவா மூரெனும் நகரினி லுண்மை யர்ய ரெயவரும்

(6) மதித்திடக் கங்கா குலத்தினிற் குறுக்கையர் வாழுங்
குடிவிளங்க
உதித்திடும் புகழனார் கதித்திடுந் தவத்தினுக் குயர்பல்ன்
போலிலங்க

(7) a பத்தினி மாதினியாரிவர்நேரெனும் b பத்தினிமாதினியார்
நத்தின்ம ணியெனவு தித்திடு பெண்மணி நளினத்தி
லதவதியார்
(8) பிறந்துசின் னாட்சென்ற பின்புதன்குலமெனும் பெரும்பாற்
கடல்மேலே
சிறந்து தித்தமதி யெனமரு ணீக்கியார் திகழ்ந்துதித்
தனராலே

ஆர்யா

மாசி லாதமணி போலும் வரசிவ பெருமானருள் மகிமையினாலும்
தேசு லாவுநிதி போலுந் திருவள ரடியவர் செலநல கதிபோலும்

பதம்-இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி

அவதரித் தார் மெய்ப் புகழ் விரித்தார் வந் (தவரித்தார்)

அநுபல்லவி

தவவடி யவர் நேசர் ஸர்வேசர் தாசர் வாகீசர் வந் (தவதரித்)

(a) பத்தினி மாது இனி யாரிவர் நேரே (b) பத்தினிமாதினியார் பதிவிரதாப்பெண்

சரணங்கள்

(1) மாயா மயப் ரபஞ்ச மருணீக்கி யாரென்ன-நேய நாமம்
துன்ன
அஞ்ஞை யிருணீக்குங் கதிரென்ன வந் (தவதரித்தார்)

(2) ஈசர் மனங்க ளிக்க யின்பக் கடல்கு ளிக்கத்
தாச ரெல்லாமெக்க ளிக்க மூடச் சமணர் தத்தளிக்க வந்
(தவரித்)

(3) அறநெ றியுந்த ழைக்க வமணர் பூதி குழைக்கத்
திறமாந் தொண்டுசெய் துழைக்க ஸர்வ ஜீவரெல் லாம்
பிழைக்க வந் (தவ)

(4) எங்குந்தன் மய மானாரி ருகையும் மழு[c]மானார்
தங்கரு ணைக்கு மானார் தமக்குத் தானே ஸமானார் (அவ)

இராகம்-மாஞ்சி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்

(1) திருப்புக ழனாருமா தினியாரு மகிழ
விருப்புறுந் தொண்டர்கள் மேன்மேலும் புகழ

(2) அருணோக்கி யருணத் தர்லேயன் பாலே
மருணீக்கி யாருக்கு மகிழ்ந்தொருக் காலே

(3) சிறியச டங்குகளைச் செய்துமுன் பாலே
குறியநெ டியகுஞ்சி யிட்டார்பின் பாலே

(4) கலைமதி போல்வளர் காரணங் கண்டு
விலைமதி யாப்பிள்ளை மேலன்பு கொண்டு

(5) பருவமைந் திற்கல்வி பயிற்றவுற் றாரே
யருமையா கவைத்தா ரனைத்துங்கற் றாரே

(6) மைப்புரு வத்திலத வதியாருக் கின்ன
செப்பும்ப ருவமீரா றதுவந்து துன்ன

---

c மானார்-மானையுடையவர்

(7) இப்படி யிருக்கச்சி றந்தவாண் டகையார்
மைப்புயல் போற்கொடை வாய்கலிப் பகையார்

(8) குலத்தினு நிலத்தினுங் குணத்தினு மிக்கோர்
நலத்தினு யர்புகழ றுருமே தக்கோர்

(9) மகளாகி யதிலத வதியாரை மதித்துத்
தகைமைம ணம்புரியத் தகோரைத் துதித்து

(10) நிச்சயித் தேவினர் நிகழ்பெரி யோரே
அட்சணத் திற்புக ழுனர்தம்பி னோரே

(11) உரைக்கச் சம் மதிக்கப்பின் புவக்கச்சென் றூரே
யருட்பெற்ற கலிப்பகை யார்முன்னின் றூரே

(12) சம்மதித் ததையவர் தமக்குரைத் தனரே
செம்மையு டன்மகிழ்ந்தார் சீர்பொருந் தினரே

(13) சிறப்புட னிருக்கவத் தேயமன் னவன்மேற்
றிறத்துடன் வடமன்னன் செருக்கொள மேன்மேல்

(14) வந்தது கண்டெடுத் வகைவெல்வோ மென்னச்
சிந்தனை யுடனேபுத் தியிற்கொண்டான் மன்னன்

(15) சேனுதி பதி யான திறற்பெருந் தகையார்
மானுப ரணமென்ன வளர்கலிப் பகையார்

(16) தம்மையே வினரவர் தாஞ்சென்று சிலநாள்
அம்முனை யிற்பொருதி யவரங்கே யுறுநாள்

விருத்தம்.

இப்படிக்கிக் கலிப்பகையா ரடுபோரை நடவுறுநா ளிசைந்தவூழ்வி
னைபபடிக்கிப் பெரும்புகழ ஞர்சிவலோ கக்கதியை யடைந்தார்க்
கண்டு
மைப்படியுங் கருங்குழலின் மாதினியார் கணவர்தமை
மருவவேண்டி
யப்படிக்கே யுடன்சென்றூர் திலதவதி யார்தனித்தறைகின்றூரே

இராகம்-தனுசரி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

(1) தெய்வமே யெவ் விதமுய்வமே-நாங்கள் சிறியம தலையர்க்
ளொருவருந் துணையிலையே யிலையே

(2) ஐயனே பே ராருண் மெய்யனே எங்கட் காதர வார்
சொல்வர்

(a) பாதர வாருதய்யோ அய்யயோ

(3) அன்னையே பா ரென்னையே-நீரு
மன்பிலர் போலுமென் றம்பியை யும்மறந்தி ரிறந்தீர்-இது

(4) பாபமோ வென்மேற் கோபமோ-பழி
பாதக மெனமொழி யாவெலைமை யழையீரோ நேரோ

(5) வஞ்சமோ கன்னேனர் நெஞ்சமோ-கொடு
வன்கண்மை யோ-இது வுந்தண்மை யோ உண் மேயயா
நன்மையோ

(6) ஆறுமோ வென்மனந் தேறுமோ-எம
தனையுமெனையு மென (b)பினையுந் நினைக்க விலையேதொலையே

விருத்தம்.

மண்ணுருக விண்ணுருகக் கொடியோர்கல்லின்
மனமுமு ருகப்புரண்டு வாடிவாடிக்
கண்ணுருகக் கசிந்துருகித் தம்பியாரைக்
கட்டியணைத் தழுதரற்றுங் காலை நெஞ்சட்
புண்ணிலெனு நிந் திலதவதி யாரும் வெய்யிற்
புழுப்போலத் துடிதுடித்துப் புலம்பக்கண்டு
வண்ணமுறுந் தண்ணமுதம் போலுற்றார்கண்
மாற்றுவார் துயரமதை யாற்றுவாரே

(a) பாதரவு-துன்பம்

(b) பினையும்-அநுஜனைகோதரான திருநாவுக்கரசையும்

இராகம்-ஆனந்த பைரவி. தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

(1) பெண்ணே மயக்கங்கொள்ள லாமோ கொள்ள லாமோ-யிந்த
மண்ணிற்செய் வினையையா வருந்தள்ள லாமோ

(2) இனிமே லழுதால் நாங்கள் சகியோம் நாங்கள் சகியோம்—
நினைவீ ராகிலரை க்ஷணமும் நிர் வகியோம் [இதை

(3) நாங்க ளிருக்கப் பய மேது பயமேது—உமைத்
தாங்கி வளர்ப்போ மனஞ் சகிப்பீ ரிப்போது

(4) புத்தியி னிற்சிறந்தோர் நீரே சிறந்தோர் நீரே—யினி
வர்த்திப்பீர் சிவபெரு மானருட்சிப் பாரே.

கலித்துறை.

இவ்வாறு சுற்றத் தவர்தேற்றத் தேறி யிளம்பருவச்
செவ்வாம்பல் வாய்த்தி லதவதி யார்பின்னர்ச் செல்வரைக்கொண்
டுய்வாம் படிதந்தை தாயர்க்க ருங்கட னோம்பி யெல்லாஞ்
செவ்வாகச் செய்து முடித்தார் மதியிற் சிறந்தவரே.

விருத்தம்.

இன்னணமிங் கிவரிருக்கக் கலிப்பகையார் போர்முனைத்தெவ்
வினைச்செற்றுத்தம்
மன்னவருக் கரசளித்துத் தாமும்விண்ண ரசுமன மகிழச்சென்று
ரன்னதையா வருங்கூறத் திலதவதி யார்கேட்டங் கவதியோடுந்
தன்னமையாக் கலிப்பகைக்குத் தம்மைமணம் நேர்ந்ததிறற்
றயங்கினரே.

இராகம்-தோடி. தாளம்-ரூபகம். பஞ்சசாமரமாகவும் பாடலாம்.

கண்ணிகள்

(1) தாயர் தந்தை யாரு நேர்ந்த தலைவ ரேநீர் கோபமோ
நேயமோ அன்யாய மோமுன் னேசெயுங் கொடும் பாபமோ

(2) எமது பேர் சொ லாதி ருந்தா லுமது பிராமணன் வளருமே
நிமட மேனு மிதைநி னைக்கி னெஞ்சம் நொந்து தளருமே

இருக்கி லென்ன விறக்கி லென்ன யிந்தப் பாவி ஜன்மமே
கருக்கு தேநெஞ் சறுக்கு தேமெய் யுருக்கு தேயென்
கன்மமே)

(4) உம்மை பேசி னைத்தி றந்தாற் பின்மை யேனுங் கூடுவேன்
செம்மையென் றிவ் வுலகை நப்பிற் றீமை யேனும் வாடுவேன்

வெண்பா.

திலதவதி யார்மயங்கித் தேம்பி யழுது
பலவா றுகலிப் பகையா—ரிலதந்
திருநோக்தும் விண்ணாட்டிற் சேர்வமெனக் கூற
மருணீக்கி யார்புலம்பு வார்.

பதம். இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

இந்த வெண்ண முமக் கென்னம்மா மனதிற் சும்மா (இந்த)

அநுபல்லவி.

வந்தவிதி யைநேராமல் மைந்தனை னையுப்பா ராமல் (இந்த)

சரணங்கள்.

(1) அன்னை தந்தை யாருஞ் சென்றாரோ (நம்மையும் மறந்) தன்னை
சின்னஞ்சிறி யேனைக்கைவிட் டென்னயோசனை செய்தீரோ ()

(2) தனியா யுமைவிடு வேனோ (துணையில்லாமற் றன்னம்)
தனியா
அனியாயத் துயரின் மூழ்கி யவதிமிகப் படுவேனோ (இந்த)

(3) சற்றும்விச னிபா திருந்தேன் (உமதருளைக்கிச்) சற்றும்
மற்றைவித மெண்ணிலிந்த வஞ்சவுலகிற் பொருந்தேன் ( )

வெண்பா.

(a) தண்ணிந் திலமென்னத் தப்பிதண்ணீர் விட்டிரங்க
(b) வண்ணந் திலத வதியாரும்—நண்ணித்
தழுவி யுபசரித்துத் தன்மனத்தி லெண்ணம்
வழுவிடப்பின் னின்னணம்வாழ் வார்

(a) தண் ணிதிலமென்ன—தண்ணீர், முத்தையொப்ப.
(b) வண்ணந், திலதவதியார் என்று பிரிக்க.

இராகம்-ஹமேர் கல்யாணி தாளம்-அடதாளசாப்பு.
பஞ்சசாமரமாகவும் பாடலாம்.

கண்ணிகள்.

(1) வாணி லாவு லாவு பொன்னும் பூணும் நூலை நீக்கியே
வாணி போல்மெய்ஞ் ஞான நூலை வாழும் நெஞ்ச தாக்கியே

(2) தம்பி யார்மே லன்பு வைத்துத் தாயை நேர தாகவே
இன்ப மாவ ளர்கக நெஞ்சி னிற்க னிந்தன் பாகவே

(3) இருவ ருங்க னிந்து தன்ம வுருவ மாகி வளரவே
கருவ மிஞ்ச தர்ம மான கலியும் நொந்து தளரவே

(4) பசித டுக்கு மன்ன சாலை ருசிகொ டுக்கும் (a)வாஸமே
புசிப முக்ய தாக சயன மிசைபுஞ் சாலை (b)வாஸமே

(5) நீங்கி டாத நந்த னங்க ளோங்கு பாட சாலையே
தேங்கு நீர்த்த டங்கள் சூழும் பாங்கு லாவு சோலையே

(6) வன்ன மேவு மால யங்கள் வளர்செய் கோபு ரங்களே
மின்னு லாவு பொன்னு லாவி ளங்கி டுஞ்சி கரங்களே

(7) வஸ்த்ர கன்னி கோப நயன மாவி சேஷ தானமும்
நித்ய வித்வ ஜனர்கள் மெச்ச நிதிபெ றுஞ்ச மானமும்.

விருத்தம்.

இவ்வண்ணம் நாடோறு மிபற்றிமதித் திடுங்கலைக ளினையா ராய்ந்து
(c)செவ்வண்ண நெறியெதென வுய்த்துணர்ந்து கொல்லாமைத்
தேர்ச்சி யோர்ந்து
(d)மைவண்ணத் தூழ்கடுப்ப (e)வணத்தந்தி வணாருளா
மையிறைற் (f)றூலக்

(a) வாஸமே—வாஸனையே. (b) வாஸமே—இருப்பிடமே. (c) செவ்வண்ண நெறி—செவ்வையாகிய மார்க்கம். (d) மைவண்ண—கரும் வண்ணமாகிய அதாவது பாபம் நிறைந்த. (e) வணத்து அந்திவண்ணர்—அழகு பொருந்திய, மாலைக்கால வர்ணத்தையுடையவர் அதாவது யீசன். (f) தால—பனைமரத்துக்கு ஸமானமான.

(g) கைவண்ணத் தானைபடு குழிவீழ்ந்த தெனச்சமணிற் கலந்தார் மன்னோ

பதம். இராகம்-கமாசு. தாளம்-ஆதி.

பல்லவி.

நித்ய நெறி யைம றந்தார் பொய்த்தசம ணிற்சி றந்தார் (நித்ய)

அநுபல்லவி.

சித்தியில் லாததைப்ர ஸித்தியெ னமதித்து
யுக்தி விட்டுயர் புத்தி கெட்டதை நத்தி யிட்டவர் பித்தி
லகப்பட்டு (நித்ய)

சரணங்கள்.

(1) (h) தூறு தலை நினை யாமல் (i) தூறுதலை நனை யாமல்
நாறுதலையுண ராதமூடர்கள் (j) தேறுதலைக் (k) கடைத்
தேறு தலையென்றெண்ணி (நித்ய)

(2) பத்திமயிற் றெம்பை யாலே அஸ்தமஸ்த கத்தின் மேலே
வைத்திடவ தில்ரு சித்துள நன்னெறி கைத்து மனதில்நி
னைத்த தினேசித்து (நித்ய)

(3) பாசிப் படித் துறை போல வீசுபெரும் பற்கள் சால
மாசுபொருந்தின தோசி யர்கள்சுற்ற மத்து றுந்தநி
யொத்து மூன்று சுமூன்று (நித்ய)

(4) பாடலி புத் ரமென் றொரு மாடநகர் தனிற்பெரு
மூடச்சமண்பள்ளி நாடவிதுமுத்தி வீட ருளுமெனக்
கூடியே கொண்டாடி (நித்ய)

சந்த விருத்தம்.

பொய்த்தமர் சுற்றிலு மொத்திவ ருக்கருள் போதனை செயவதின்
மனநாடி
மெய்த்தவர் ஸித்தி யனைத்தும தித்திட மேதகு பதமிது வெனநீடிச்

(g) கைவண்ணத்தானை—அழகாகிய துதிக்கையையுடைய மத்தகஜம். (h) தூற்றுதலை. (i) செடிபோன்ற தலை. (j) தேற்றுதலை. (k) கடைத் தேற்றுதலை.

சித்தம திற்கனி வுற்றத னுட்பொருள் தேர்வுற மிகமகிழ்
வொடுகூடிப்
புத்தமு தத்தினை மொய்த்திடு (1) மட்சிகை போலிவ ருடன்மரு
வினர்தாமே.

பதம். இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

மித்தையம ணிற்சிறந்த ஸித்தாகினர் (மித்தை)

அநுபல்லவி.

சத்தி யவ ராற்சமான்ய ராகியே லலாட சூன்ய (மித்தை)

சரணங்கள்.

(1) பந்துஜனங் கள்வி கித மூந்தவிர வேஸஹித
தந்திரஞ்செய் தார ஹித தந்ததாவ னாஹித (மித்தை)

(2) (a) அவகட நீரைத் தாங்கும் (b) நவகட நீரைத் தாங்கும்
அவர்கள்சூழ்ந் திட வேங்கும் பவமுறப் பி றவி யோங்கும் ()

(3) அம்மதப் பெருமை முற்றும் செம்மையாவு ணர்ந்து பற்றும்
தர்மஸேனர் நாமம் பெற்றும் துர்மனத்தே ரர்ச் செயித்தும்
(மித்தை)

கட்கா.

அந்தம தந்தனின் மூந்துறு சிந்தைக ளிந்துபு கழ்ந்துவி யந்து
சிறந்துசி வந்தனை யுந்தனை யுந்தனி நெஞ்சம றந்துக சந்துப வந்
தரு தொந்தவி னைத்தொடர் வசமானர் முருசமணப்பர வசமானர்.

விருத்தம்.

அங்கிருக்கு ஞ்சமணரொடு மவரிருக்க த்திலதவதி யாருந்தன்புந்
றிங்கிருக்கத் துயரொழியா தென(c)விருக்கும் பாவுசிவத்
தெந்தைதாளின்

(1) ஈக்கள்.

(a) அவகட நீரை—கெட்ட தன்மையான குணத்தை. (b) நவகட நீரை—புதிதாகிய கடத்திலுள்ள தண்ணீரை. (c) இருக்கும்—வேதமும்.

பங்கிருக்குந் தொண்டர்களன் பாயிருக்கக் கெடிலவட பாற்றீர்த்
தத்திற்
சங்கிருக்கும் பணைத்திருவ திகைவீரட் டானமதிற் சார்ந்தார்
தாமே

பதம், இராகம்-கமாசு, தாளம்-அடதாள சாப்பு.

பல்லவி.

தொண்டுசெய்து கொண்டுபவம் விண்டிட நாடினார்

அநுபல்லவி.

மண்டலம்பு கழ்திலக வதியார்தி ருவதிகைப் பதியார் விண்ண
தியார்க்குத் (தொண்டு)

சரணங்கள்.

(1) செங்கதிரு திக்குமுன்னந் துங்கநீர்ப டிந்துசிவச்
சின்னமது தாங்கியேயெள வன்னமயிலார்
தங்குதிரு வலகிட்டுத் துங்கவான்பு னிற்றகன்ற
சாணமெழுக் கிட்டுமணிப் பூணுலவு கோலமிட்டுத் (தொண்)

(2) பூமலரா விண்டையிட்டுத் தாமமணிக் கொண்டைகட்டுப்
பொன் (d) மாலை சூட்டிமகிழ் முன் (e) மாலையில்
சோமதா ரையுமபி ராமியையுந் தினந்தோறும்
சுற்றிவந்து தரிசனம் பத்தியொடு செய்துநிதம் (தொண்டு)

(3) சிட்டர்புக ழும்திருவீ ரட்டானத்த லத்திலுள்ளார்
தேவதேவ சம்போமகா தேவ தேவனே
துட்டமத சங்கரனே கஷ்டமொழித் தெந்தனையாள்
ஸுந்தரனே யென்றுமகிழ்ந் தந்தரங்கக் கண்ணீர்பெய்து
(தொண்டு)

கலித்துறை.

வஞ்சப்ர பஞ்சத்தின் வாழ்க்கையைச் சற்றும் மனத்திலெண்
ணேன்

(d) மாலை—ஹாரம். (e) மாலை—ஸாயந்திரம்.

கிஞ்சித்து விண்ணப்பங் கேளப்ப னேசமண் கேடரொடுங்
கொஞ்சத் தனமெண வெண் ணுதென் றம்பியார் கூடினருன்
கஞ்சச் சரணத்திற் காட்செய்து காக்கக் கடனுமக்கே.

பதம். இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஈச னேயு மத டிமைக் கே (a) சறுவே ருரய்யனே (ஈசனே)

அனுபல்லவி.

பாசபவ மோச னப்ர காசவுமை நேசஜக (ஈசனே)

சரணங்கள்.

(1) சைவநெறி தவருத மெய்யுறுங்கு லத்தில் வந்தோம்
தெய்வமேயுன் னைதந்தையர் சேரவே கொ டுத்துநொந்
தோம் (ஈசனே)

(2) பெண்பிறந்தோ ரில்லென்போலத் துன்படைந்தோ
ருண்டோசால
யென்பிறவிக் கவமதி யெய்துமதியோசம்மதி (ஈசனே)

(3) நம்புமென்றன் றம்பியரை வெம்புசமண் மூடலாமோ
அம்புவியுள் ளோர்களேசத் துன்பமுற்று வாடலாமே (ஈச)

(4) பஞ்சகிருத்ய மும்புரியும் பரமென நெஞ் சிற்றெரியும்
அஞ்சிமறு தெய்வம் போற்றேன் கெஞ்சியென்க
வலேசாற்றேன் (ஈசனே)

(5) தொண்டருட னேமருவித் தொண்டுசெய்யப் பணிப்பீரே
வண்டவமண் சமயத்தின் மயக்கத்தைத் துணிப்பீரே (ஈச)

விருத்தம்.

இருந்துயரந் தனிலாழ்ந்து திலதவதி யார்புலம்ப வெழிலார்
கொன்றை
பொருந்துசடைக் கடவுளுஞ்சொற் பனத்தில்வந்து (b) நும்பியார்
புன்மை தீர்ப்பான்

(a) சறு—சலுகை. (b) உம் தம்பியார்.

வருந்துவயிற் றெரிசூலை நோவேவி நமடிக்கீழ் வசஞ்செய்வோ மென்
றருந்தவத்தோர்க் கெட்டாதார் மருணீக்கி யார்க்குச்சூலையை யிட்டாரே.

பதம். இராகம்-ரீதிகௌளை. தாளம்-ரூபகம்.

பல்லவி

சூலைநோயி னால்வெதும்பி னார் தருமசேனர்
வேலைபோற்கண் ணீர்ததும்பி னார்.

அநுபல்லவி.

ஆலமுண்டோர் விரைந்தேவச் சாலவன னுடன்மேவ
அடித்துவி ழுந்துதுடி துடித்துப்பல் லைக்கடித்து (சூலை)

சரணங்கள்.

(1) வெய்யுவுட லைத்திருக்கியே—முகங்கருக்கிச்
செய்யகுட லைமுருக்கியே—நையவிழி கள்செருகி
வெய்யில்வெண்ணெய் போலுருகி நாவுமிக வேவரண்டு
பூவினிற்ற ளிப்புரண்டு (சூலை)

(2) கைகளையுந் தூக்கியடிக்கும்—பொறுத்திடாமல்
மெய்களைபோ டவேர் வடிக்கும்
செய்யாதுசெய் திடலிந்த வையங்கலங் குமென்பது
தெரியாமல் வருங்கார்ய மறியாமல் எரிகுன்மச் (சூலை)

(3) அமணரெல் லோருங்கூடினார் கரகநீரில்
நிமிடமந் த்ரத்தை நாடினார்—தமதுசெய லெலாங்காட்டித்
தண்ணீர்தெளித் தனல்மூட்டி
யமையும்பீலி யாற்றடவ அதிகமாகி யேவிடவச் (சூலை)

விருத்தம்.

(a) பெரும்பாழி யறையிலிவர் தமைவிடுத்து மெலநழுவிப் பேசா தேகக்

(a) பெரும்பாழியறையில்—பெரிய பாழான அறைக்குள்.

(b) கரும்பாழி யலைகடலிற் றுரும்பாகி யேமெலிந்துங் கபனின்
மேவி
(c) வரும்பாழீ யெனவிந்த மதத்தினில்வீழ்ந் தோமென்று
மனதுவாடி
(d) இரும்பாழி யெனச்சுழன்றங் கெண்ணுறுதல் லாமனத்து
ளெண்ணினாரே.

ஸ்வாய்.

(1) புண்ணிய சம்வந்து கண்ணவு முன்பிறப் பன்னைத மைமனத்
துன்னினரே
அண்ணிகி தழுந்தஞ் சொன்னமொ ழிதவ ருதவொ
ருவனை முன்னினரே

(2) முன்னிய வனிட ம்பின்னவை யாவுமொ ழிந்துவ ரவென
யேவினரே
அன்னவன் வந்துதி ருவதி கைவீரட் டானக ரின்னின்
மேவினரே

(3) மேவிநந் தாவனத் தின்புரம் வாழும் விவேகரு ணுதிய
ரைத்தொழுதே
தேவிநந் தம்பியா ரேவவந் தேனெனத் திங்குள
தோவென்று ரப்பொழுதே

விருத்தம்.

என்னச்சொன் முனமுமது தம்பியார் பெருஞ்சூலை யெய்து
நோவாற்
கன்னத்தே கழுமெலிந்து படுத்துயரை யுமதிடத்திற் கழறியற்போ
முன்னற்கால் விளைவிலெலை வாவென்று ரெனவாடி மொழிந்தான்
யார்க்கு
மன்னைக்கொப் பாந்திலத வதியார்ஸங் கதியாலீ தறைகுவாரே.

கலிப்பா.

பொல்லாச் சமண்பள்ளி போந்திடுமோ மென்றுகற்பின்
வல்லா ருரைக்கவந்த மாற்றமவர் முன்னுரைக்க

(b) கரும்பு ஆழி யலைகடலில்—கருப்பான, ஆழமாயுள்ள அலைசேர்ந்த சமுத்திரத்தில் அல்லது கரும்பின் எந்தரத்திலும், அலைசேர்ந்த கடலிலும். (c) வரும் பாழ் ஈயென—வருகின்ற பாழான, ஈ போலே. (d) இரும்பு, ஆழியென—இருப்புச் சக்கிரம்போல.

நில்லா நெடுந்துயரை நீக்குவதெவ் வாறெனவே
கல்லார் மனமுங் கசிந்துருக வாடினரே.

லாவணி. இராகம்-ஹமீர் கல்யாணி. தாளம்-ஆதி.

ஏனோ சமண்மத மயலினி லானோ மிவரிட முயிர்விடில் வானோர்
பதமரி தெனவேனோம்
இதுகதியோ வெவர்சதியோ பாகதியோ
வெனமன தினில்மிகவாடி யிருகண்ணீர் நதிபோலோடி மருகியே
விதனமூடித் தெளிவுற மனநாடி
எனவோம் என செய்வோம் எதிலுய்வோம்
எனவொரு வழியதுதேர்ந்து பழுதில்லை மையில்மதி சார்ந்து தழுவி
மென வோர்ந்து இதைவிட மதிகூர்ந்திங் [டல் நல
கொழிவானோர் பழிபோனோர் வழியானா ரிதுசெய்தனர் மதியே.

விருத்தம்.

இடுக்கணொழித் திடமுயர்ச்சி செயுமுன்ன மயர்வொதுங்க
விணங்கானும
னுடுக்கையுறும் பாயுமுரிக காகநீ ரையும்பீலி யுடனேநீத்துச்
சிடுக்கைவிட வெண்டுகிலும் போர்ததிரவிற் கானுமற் சென்று
மந்தம்
கடுக்கையணி வேணியான் திருவருள்பு ரிதிருவதி கையைச்
சார்ந்தாரே.

விருத்தம்.

சார்ந்தா திலத வதியார்தன் றுளின் மிசைவீழ்ந் தழுதாற்றி
நேர்ந்த துயரந் தனைப்புகல நிறையுங் கருணை யுடனோக்கி
யார்ந்த சைவ நெறிதவறி யதனுலிந்தத் துயருழன்றீர்
தீர்ந்த தெழுமின் சிவபெருமா னருளா லெனப்பார்த்
திவைசெப்பும்.

பதம். இராகம்-ரீதிகௌளை. தாளம்-சாப்பு.

பல்லவி.

கோலங் கொண்டீர் நீரேனிந்தக் (கோலங்)

அநுபல்லவி.

ஆலமுண் டோரரு ளாமை யாலோ யிந்தக் (கோலம்)

சரணங்கள்.

(1) கண்டோர்கள் சிரிக்கும் வேஷங் கொண்டதென்ன ஸந்தோ
ஷம்கண்ட ரெமையும் விண்ட ருமையுங் கண்டகண்க
ளுங்கூசப் பெண்க ளும்மேசச் சுப்ர
காசச்சி வபெருமா னேசத்தை யும்மறந்திக் (கோலம்)

(2) பெரியோர்செ யுஞ்சாபமோ வுரியவென் றன்பாபமோ
அரியமுகிலின் கரியதுகிலும் விரிமயிற்றெழும் பையுநாடி
வெண்டும் பையுஞ்சூடிக் கன்பு
புரியுந் தொண்டருடன் மருவிவா ழாமலிக் (கோலம்)

(3) தாய்போலவ ளர்த்தெ டுத்தேன் பேய்கைபுக வேவி டுத்
தேன்
கண்ணீர்வடிக்கத் துடிதுடிக்கக் கண்டோரிடத் துப்பேச
மன திற்கூசப் பெரு மோசச்ச மணர்களை நேசித்திவ்
வாபாசக் (கோலம்)

விருத்தம்.

அகத்திருளும் புறத்திருளு மகன்றேடத் திருநீறிட் டன்னை போல
மகத்துவஞ்சேர் திலதவதி யார்தொண்டு செயுங்கருவி மன்னிக்
கைக்கொண்
டிகத்திலுறும் பழிநீங்கப் பின்னரைப்பின் னிட்டுக்கொண்
டியல்பதாக
(a) நகத்தநுவார் திருப்பள்ளி யெழுகைமுன மெழுகையரா
நாடினரே.

ஆரியா

நாடிக் கோயில்பு குந்தார் நம்பரி ருக்கையை யன்புடன் வலம்
வந்தார்
ஆடித் தரைமிசை வீழ்ந்தார் (கொண்) டாடிப் பரசிவ ஞாடி
நிழல்வாழ்ந்தார்.

(a) மேருவை வில்லாகவுடை யவர்.

ஸ்வராய்.

(1) தூயவு ணர்வொடு செந்தமிழ் மாலை சொலும்படி நன்மனம் நாடினரே
மேயமதியாற் கூற்றுயின வாறு விலக்ககலீலெனப் பாடினரே

(2) அன்பதி கத்தொடு செம்பதி கத்தமி ழாலுநன் மாலைகள் சூடிடவே
துன்பதி கத்தில்ந டுங்கிடொ டுங்கிடத் தொல்வினை யாவுங்கண் டோடிடவே.

வெண்பா.

மேனி புளகரும்ப வேர்வை பொடித்தரும்ப
நீனிறக்கண் ணானந்த நீர்ததும்பத்—தேனிகர்சொல்
நாக்குழறப் பேரின்ப நாடியுற வுண்மகிழ்ந்து
வாக்கினாற் றோத்திரஞ்செய் வார்.

பதம். இராகம்-சென்ஸ்ஜுருட்டி. தாளம்-ஆதி.

கேலதகங்கரமார்யா வென்ற இந்துஸ்தானி போல

பல்லவி.

சங்கரசங்கர (a) கங்கரனே சிவ (சங்கர)

அநுபல்லவி.

ஐங்கர னையுமிரண் டாறுகர னையும்பெற்ற—நங்கையு மையை
யொரு பங்கோனே யென்கோனே கிருபைவானே
பெரு (b) மானூர் பெரு (c) மானே—சிவ (சங்கர)

சரணங்கள்.

(1) பங்கச்ச மணமதப் பங்கக்க டல்கடத்தும்
வங்கத்து ணைமலர்த்தாள் தந்தீரே-நிறைந்தோரே உவந்தீரே
கனிந்தீரே சிறந்தோரே சிவ (சங்கர)

(a) கம் கரனே—சிரசைக் கையிலுடையவனே.
(b) ஆன் ஊர்—இடபத்திலேறுகின்ற.
(c) பெருமான்—பெரு மகிமையையுடையவர்.

(2) (a) இராவண முற்றிடு மிராவண னுக்குங்கருணை
மேவிய குணநிதியே பதியே வெருவாம் வேத ச்ருதியே
சீருதியாலாம் ஸங்கதியே சிவ (சங்கர)

(3) மாலய னுங்காணாத வடிவைக்கண் டுகளிக்கச்
சூலைசெய் ததையினி யான் மறவேன்-மறவேனே பிறவேனே
அடியேனே யுறவானேன் சிவ (சங்கர)

விருத்தம்.

மருவிருக்குங் கைலைமலை வசித்திருக்கும் சிவபெருமான் மதித்துக் கூறும்
திருவிருக்குஞ் செயலெனவே தேர்ந்திருக்கும் வாகீசர் தெளிவுற் றோங்கி
யுருவிருக்கு நிகர்பதிகத் துவந்திருக்குந் தொண்டரெலா முண்மை தேர்ந்தாங்
கருவருக்குஞ் சமணைவிட்டா ரய்யமெனா வியமுழங்கி யார்த்தார் தாமே.

கலித்துறை.

தொண்டரெ லாம்புகழ்ந் தேற்றவும் விண்ணிற் றுலங்கிவள
ரண்டரெ லாம்பணி யும்வீரட் டானத்தி னண்ணலையே
(b) கண்டா வாபா ணுவா ணுஜகத் காரணவென்
றெண்டரு நாமத்தை யேத்திப் பணிசெய் திருந்தனரே.

பதம். இராகம்-சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

பணிவிடை நேரே பணிந்துசெய் தாரே

அநுபல்லவி.

அணிவிடை யா ரருள்கூற வகமகிழ்ந் துழவாரப் (பணி)

சரணங்கள்.

(1) சிவச்சின்னந் தாங்கித் திருவரு ளோங்கிப்
பவத்திரு ளதுநீங்கிப் பரமானந் தத்திற் றேங்கிப் (பணி)

(a) இராவண—இரவின் பிரம், அதாவது கருகிறம். (b) கண்டு, அரவாபரணு, ஆரணு, ஜகத்காரண வென்று பிரித்துக்கொள்க.

(2) (a) நந்தனந் துன்ன (b) நந்தன மென்னச்
சிந்துநீர் பாய்ச்சிப்புல் செதுக்கிம திக்கவன்னப் (பணி)

(3) அன்யமதத் தாலே யவதியுற மேலே
மன்னியதைத் தீர்த்த தாலே தன்யனானே னென்றன்
பாலே (பணி)

(4) தும்பையுமா ஓரம் பம்புகர வீரம்
அன்பொடுமந் தாரம்வைத்திவ் வாறுபயி ரேத்தி நத்திப் (ப)

விருத்தம்.

பணிவிடைசெய் துறநாளிற் பாடலிபுத் ரத்தமணர் பரிந்துகூடிப்
பிணிவிடவி லாமையினாற் றம்மதத்திற் சம்மதித்துப் பெயர்ந்த
தாலே
(c) திணிவிடவெங் துயர்பெயர்ந்தால் நமதரசும் பெயருநந்தம்
செயலுந்தீரும்
தணிவிடுவெஞ் சடையன்மதங் கொழிக்குநமை யழிக்குமெனத்
தயங்கினாரே.

கட்கா

மானமுலையவபி மானமொ ழியநம தானப தமிழிய வேநல மூமொழிய, வீனமு றவேதர்ம ஸேனர்சை வநெறியை யேநய மெனமெல வேநழு வினைதையு மானவ ழியொடுநங் கோனிட முறைசெய்கு வோநிமி ஷகதியி லேநிறை யிருளுரு வானச மணர்கொடி யானடு மாசாண் மனைவா யிலில்வந்தார் அரசிட முறைசெய்ப வரையே வினர்நொந்தார்.

வெண்பா.

வேந்தே யமணரெலாம் வெந்துயருற் றுக்கடையிற்
சார்ந்தாரெ ன்றூர்வாயி றூன்காப்போர்—சேர்ந்தவரை
யிங்குவிடு மென்னவவ ரெல்லோரும் வந்துபணிந்
தங்கியன்ற தைப்புகல்வ ரால்.

பதம். இராகம்-மாஞ்சி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

தர்மஸேனர்செய்த மோசந்—தன்னைத் தானம்பினோமே தெரிந்
ததுவிசு வாஸம் (தர்ம)

(a) நந்தனம்—நந்தாவனம். (b) நந்தனம்—நமது பாக்கியம்.
(c) திணி—வலி மெய்.

அநுபல்லவி.

நன்மை செய் யக்கொடும் கன்மம்வ ருமோவம்பு
நாமேதே டிக்கொண்டா லாமோ மிகவே நம்பு (தர்ம)

சரணங்கள்.

(1) நமதுமத தத்தினிற்சம் மதித்தார்—மெல்ல நலியா மலையெங் [கள்
தலையிலே றிமிதித்தார்
நிமிஷம தனில்மந்த்ர தந்த்ரங்கற் றுக்கொடுக்கும்
நிபுணரா கியிந்த வமணரெ லாங்கெடுக்கும் (தர்ம)

(2) சூலைநோய் கொண்டவர் போலே—பெருஞ்
சாலஞ்செய் தார்நம்பி னோமேயன் பாலே
சால நீள் சடைய னருகூலித் ததுபோலே
தப்பிப்பிழைத்தோமென்று செப்பலாமென்றுமேலே(தர்ம)

(3) நமதுமத தங்கெடுக்குங் கருவி—யென்று
நாடிடா மல்வினை தேடினோ மே மருவி
யமையுங்கா சுநாயகர்க் கன்புபோ லேசருவி
யணைபவ ருளம்போல ஆசைவைத் துச்சருவித் (தர்ம)

விருத்தம்.

அமணரெலா மொருங்குரைக்க மிகவெருண்டங் கதட்டிவெகு
பதட்டமுட னுதட்டிற்பற்பாய்ந்
திமனைநிக ராவிழித்த வனையென்செய்வோம் எனக்கூறி
நின்றுண்ணுந் தமரை நோக்கி
நமது செய லழித்துநம தாணைதப்பி நடந்துநந்தஞ் செயலறிந்து
மிகழ்ந்ததாலே
நிமிடமதில் வேதித்து வாதித்திட்டால் நேரென்றுனிங்குகொணர்
வீரென்றுனே

பதம். இராகம்-ஹமீர்கல்யாணி. தாளம் ஆதி.

பல்லவி

தடையில்லா மல்நடவீர் திடவீர் அடைவீர் தடதடவெனத்
(தடை)

அநுபல்லவி

அடமுட னடைபிச கிடுமப கடனிட மஞ்கிடாது கெஞ்சிடா
தடாதுடன் (தடை)

சரணங்கள்

(1) நமதும தத்தையழித்தா னொழித்தான் பழித்தான்
சமணர்க ளுறுதிதெ ரிந்தவன் மனதுதத் [வஞ்சனையுடன்
தளிக்க விழிவிழிக்க நமர்களிக்கத் (தடை)

(2) கண்டபேர்கள் நடுங்க வொடுங்க வடங்கும் படியாமொழி
விண்டு கொண்டு பயமின்றி நழுவினவன்
மெய்பதறக் கையுதாச் செய்யுறத் (தடை)

விருத்தம்

கொல்லாத விரதரெனும் பெயரைக்கொண்டு
கொடுந்தொழிலே புரிந்தடருங் கூற்றின் மேலோ
(a) ரல்லாருங் கரியமுகி னிறத்தார் வஞ்ச
மனத்தினையும் புகட்டியநெஞ் சுறத்தார் மன்னன்
சொல்லாலே வதிகைபுக்கு யமைச்ச ரோடுந்
தொண்டுசெய்வோர் தமைக்கண்டெம் மரசனை
வல்லார்பல்ல வரழைத்தா ரதனால்வந்த
வாறென்பார் பின்புவரு வீரென்பாரே.

வெண்பா

(1) கருங்கடலி னஞ்சனையார் கட்டுரையைக் கேட்டுப்
பெருங்கடமா னேந்து பெருமான்—மருங்கடைந்த
வன்று தொடுத்தினிநா மார்க்குங் குடியல்லோ
மென்றுரைத்தார் வாகீச ரே.

இதுவுமது.

(2) வஞ்சர் நினைத்திடநா மார்க்குங் குடியல்லோங்
கிஞ்சித்து முங்கள் கிளைநினையோம்—நஞ்சனைய
பொய்மதத்தை விட்டோம் புகழுற்றோ மென்றுரைத்தார்
சைவமணி யாம்வாகீ சர்.

(a) அல்லாரும்—இருட்டையொப்ப.

பதம். இராகம்-சகாணா. தாளம்-ஆதி.

பல்லவி

நாமார்க் குங்குடி யல்லோம் பொய்சொல்லோம்

அநுபல்லவி

பூமான் கள்மருவுங் கோமான் களுங்காணாச்
ஸ்ரீமான்க ருணையுற்றோஞ் சிந்தையுந் தெளிந்திடுங்
கனிவுபெற்றோம் (நாமார்க்)

சரணங்கள்

(1) உங்கள ரசன்முன்பு நாடோங் கொண்டாடோம்
மங்குல்நி கர்த்திடுந மனுக்குமஞ் சோங் கெஞ்சோம்
கங்குல்நி கர்த்தநர கம்புகோம் (b) விழியினம்புகோம்
இனிமேல் (நாமார்க்)

(2) துன்பஞ்செய் கிளைவிடுத் தோமெய்ப டுத்தோம்
நம்பித்தொண்டு தொடுத்தோம் வெம்பவங் கெடுத்தோம்
அன்புடன் பாடிப்பிரும் மானந்தாம்ருத பானந்தானுணு
(நாமா)

(3) இமன்வலி யோனெனவே யேவல்செய் கென்னக்
கம்பையுட னேசொன்ன கனமொழிதுன்ன
நமதுகா திலுங்கொள்ளோ—நம்பர்தொண் டதனி லன்பு
கொண்ட வினி (நாமார்)

விருத்தம்.

ஈசரடி யாரிவ்வா றுரைக்கக் குண்ட ரினியமொழி யால்வேண்ட
விசைந்தெவ்வாறு
மாசிலரன் றுணைநம்மை யாளுமென்று மருவிகந்தார் செலக்
கொடுபோய் மன்னன்முன்பா

(b) விழியினம்புகோம்—விழியினுடைய அம்பு அதாவது [illegible] விடமாட்டோம்.

பாசர்விட வெகுண்டிவனைச் செய்வதென்னப் பகருமென
நீற்றறையி லிடவென்றோது
மோசமன்ன னதற்கிசைய வறையிற்பூட்ட முன்னிரு ரானடியை
யுன்னினுரே

பதம்-இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

குளிர்ந்திட நீற்றறையி லிருந்தாரே ஐயர் (குளிர்ந்)

அநுபல்லவி.

தெளிந்த வுள்ளமின்னிச் சிவபெருமானை யுன்னிக் (குளிர்ந்)

சரணங்கள்.

(1) மாசில் வீணைபோலு மாலைம தியம்போலும்
ஈசர்க மலச்சர ணிழல்போலு மய்யர் (குளிர்ந்திட)

(2) a நந்தா வனம்போலும் (b) நந்தா வனம்போலு
மந்தமா ருதம்போலு மலர்போலு மய்யர் (குளிர்ந்திட)

(3) குண்டர்க ருந்தாட்பூட்டி கொண்டெழு தினமூட்டி
மண்டும னற்செழுந்தா மரைகாட் டியய்யர் (குளிர்ந்திட)

வெண்பா

இப்புதுமை கண்டரச னின்சமுகத் தெய்திநம
தற்புதமார் மந்த்ரபலத் தாற்பிழைத்தார்-இப்பொழுதே
நஞ்சூட்டிக் கோறல்மிக நன்றென்றார் சம்மதிக்க
(c) மஞ்சூட்டு மேனியர்செய் வார்

ஆரியா.

மதியைத் தொடர்பணி போலே வரிகைப் பிடியொடு கொடுபுக்
கினர்மேலே

(a) நந்தாவனம-கெடாதஜலம் (b) நந்தாவனம்-நந்தனவனம் (c) மஞ்சூட்டு-மேகம் போன்றகருநிறமுள்ள

சதியைப் புரிபவ ராலே தரு (d) மைப் பாலன முணவித்
தனாலே

பதம்-இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

(e) பால னத்தை யேபயின்றார் (f) பாலனத்தை யேபயின்றார் ()

அநுபல்லவி.

(g) காலனத்தை யேபழித்துங் கண்டத்தொனியார் (h) வண்டர்க்
கினியார்
குண்டச்சனியா ரிடும்விஷப் (பாலனத்தை)

சரணங்கள்.

(1) நாதரடி யார்க்குமெந்த நஞ்சமமு தாகுமிந்தப்
பாதகர்செய் தோதகமென் பண்ணுமென்றெண்ணி நண்ணி
யேவுண்ணும் (பாலனத்)

(2) எண்ணுலகெ லாமுருக்கும் வண்ண *மையு மீசருக்கும்
தண்ணமுதாம் நேசருக்குத் தானப்படி யேபாமென
வேநட்புட னேவார்தரு (பாலனத்)

(3) புண்யவச மேயுதித்துக் கண்ணியனை யேதுதித்துத்
தண்ணமுத மாமதித்துத் தானேயருள் பெருகியபெரு
மானேயுணு வானேயெனப் (பாலனத்)

விருத்தம்.

பாலன நஞ்சுண்டார் விண்ணமுதுண்டார் போலிருக்கும்
பரிசுநோக்கிக்
காலுதரக் கைபதறங் காவலன் பல்நமது மந்த்ரக் கருத்தினுலிவ்
வேலையிலும் பிழைப்புற்றார் நமதுமத மினிப்பிழையா
வென்றுகுண்டர்

(d) மை-விஷம்கலந்த (e) பால் அன்னத்தை (f) பாலனம்-ரட்சணை (g) காலன்-ரத்து-காலன்சங்கம் (h) வண்டர்-துஷ்டர். * மை-விஷம்.

சாலவுரைத் தார்மாவா லடுவென்றான் பகையுமொழிந்
திடுமென்றானே.

சந்த விருத்தம்.

தந்தாவ ளந்தனைவி டும்பார திர்ந்திடவ சைந்தாடி வந்திடிவிவன்
சிந்தாகு லம்பெருகி நொந்தேய சைந்துயிர் சிதைந்தேவி
டுங்கொணர்மினென்
றுந்தான் மொழிந்திடந டந்தார்ச மண்கலிய ருந்தாக
டம்பெருகவே
வந்தார்பெ ருங்கரிகொ ணர்ந்தார்ம தம்பொழிய வந்தேவெ
குண்டததுவே.

பதம்-இராகம்-கமாசு-ஆதி-ஆயிலோ மேதரேமந்திலவா
என்ற இந்துஸ்தானிபோல்.

பல்லவி.

அதிர்ந்து மதகரி நடந்து வரவே அடைந்த சமணர்க ளுடைந்து
பெறவே (அதிர்ந்து)

அநுபல்லவி.

எதிர்ந்த சண்டரொனுங் குண்டரைத் தாக்கி
யிரும்பினை நிகர்கரும் பனைககரந் தூக்கி
யுதிர்ந்திடு நறுமலர்த் தருககளை நோக்கி
யொடித்துப்பற் கடித்தம ணகரைப்பா ழாக்கி (அதிர்ந்து)

சரணங்கள்.

(1) அமணர்கள் வீதிக ளெங்கெங்குஞ் சுற்றி
யடித்தபா கன்றலை யொடித்திடப் பற்றி
யிமைகொடி யளவினிற் றிரிகியே யெற்றி
யெறிந்துகண் கனற்பொறி சொரிந்திட வெறிமுற்றி ( )

(2) மாடகூ டங்களடி யோடிற விடித்து—மதித்தெதிர் சமணரை
வதைத்துயிர் குடித்து

நீடும்பள் ளியின்கோ புரங்களை யிடித்து—நிர்த்தூளிப்
படுத்தி நெஞ்சந் துடிதுடித்து (அதிர்ந்து)

(3) அய்யரைக் கண்டவுடன் மிகப்பயந் திட்டு
அடியினி ணைமலரைத் தொட்டுக்கும் பிட்டுச்
செய்யப்ர தக்ஷிணஞ்செய் தேபுரப்பட்டுச்
சினந்துகண் டோர்மனம் நடுங்கிடத் திடுக்கிட்டு (அதிர்ந்து)

வெண்பா.

மான மதகரியிவ் வாறுசெயக் குண்டரபி
மானவர சுக்குரைக்க மன்னுமித—மான
மதமழிப்பி னம்மைச்சும் மாவிடமாட் டானெவ்
விதமுங் கடல்வீழ்த்து வீர்.

பதம்-இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டிக்க டலில்வீழ்ப்பீ ரிவனைக் (கட்டிக்)

அநுபல்லவி

ஒட்டி னி லகப்படுஞ் சிட்டிவ னைவிடுத்தால்
மட்டித்த னங்கயிற்றூற் கெட்டியா யிறுக்கிக் (கட்டிக்)

சரணங்கள்

(1) நமதும தம்பிழைக்குமா—யினிமேல் எமதா சுந்தழைக்குமா
கமையுட னிமைபொரு திடுமுனம் பொரும்பெரும்
கல்லி னேடுபிணைத் தொல்லை நீர்முறுக்கிக் (கட்டிக்)

(2) உரையில் மீறமாட்டான்-வாரிதிக் கரைகண் டேற மாட்டான்
திரையிலே நெடுநித் திரைகொள்வான் சமண்சித்
தரையெலா மருவித் தரையிலே வாழ்வோம் (கட்டிக)

(3) இந்தயோ சனைக்கி டோ—நாம்செய்ய கந்தையால் வந்த
பாடோ

சந்தேக மினியில்லைத் தானிவன் பிழைப்பில்லை
நந்தம ரசுந்தொல்லை நாள்விளங் குமேகல்லைக் (கட்டிக்)

கலித்துறை.

நஞ்சனை யானிவை கூறச் சமணர்கள் நாடிமன
வஞ்சனை யாதுமி லாரா வரசை மருவிக்கைக்கொண்
(a) டஞ்சனை யாக்கொடு போய்க்கல் லுறப்பிணித் தோங்குவங்க
மஞ்சனை யாதுவைத் துத்தள்ளக் கல்மிதப் பானுதுவே

பதம்-இராகம் பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

(b) பெருங்கன்மி தந்ததுவே புணையென (c)வருங்கன்மிதந்துவே

அநுபல்லவி.

அருங்கல்வி யாவையு முணரும்வா கீசருக் (d) கந்தரங் கஞ்செயு
(e) மந்த ரங்கமதில் (பெருங்கல்)

சரணங்கள்.

(1) முற்றுஞ்ச மணர்கொடிய—வினைகளெலாம் பற்றறு மெனநெடியச்
சொற்றனை வேதிய னென் னும்ப திகமதி—லுற்றுபஞ்
சாட்சர மோதிட (f) மாதிடப் (பெருங்கல்)

(2) இருவினைப் பாசங்கொண்டு—மும்மலக்கல்லில் மருவுஞ்சீ
வர்களும்விண்டு—பவக்கடலை
பிரியக்க டத்திவைக்கு முரியவைந் தெழுத்தையர் பொரு
வுங் கன்மிதப்பப் புரிவத் ரிதோபையப் (பெருங்கல்)

(a) சனை-ஈனினமாக (b) பெருங்கல்-மிதந்ததுவே (c) வரும்-கன்மி தந்து-அதுவே-வருங்கன்மிகளின் தந்தாமதுவே (d) அந்தரங்கமான விஷயம் (e) அம்-தரங்கம்-அழகிய அலைகள் (f) மாதிட-பெருமையாகத் திடமாயுள்ள.

(3) வருணன்த வத்தினாலே—பழுத்தபொருள்—மருவிய
தென்றன்பாலே—யலக்காரத்தாற்
பரியகற் சிவிகையில் வைத்துத் தாங்கித்திருப்—பாதிரிப்
புலியூருக் கேதெரி யக்கொண்டொரு (பெருங்கல்)

விருத்தம்.

தொண்டரெதிர் கண்டாறு ராவென்றோதித் துதித்துவா கீசரடிப்
போதில்வீழ்ந்து
கொண்டுபசா ரஞ்செய்து துணைக்கை தாங்கிக் குழாங்களொடு
சிவநாம கோஷி தங்கள்
தெண்டிரைபோ லொலிப்பவளஞ் சேர்திருப்பா திருப்புலியூர்
கோயில்புக்குப் பணிந்து போற்றி
வண்டமிழாற் றோத்திரித்தா நந்தக்கண்ணீர் வடித்திட்டா
ரானடிகைப் பிடித்திட்டாரே

பதம்-இராகம்-சென்ஸ்ஜுட்டி தாளம்-ரூபகம்-ரெங்கன்யாதக
பாரனே யென்பதுபோல.

பல்லவி.

ஆண்டருள் புரிமெய்யனே பிழைபொருத் (தாண்டருள்)

அநுபல்லவி.

நீண்டச ராசரம் யாவும்பஞ் சகிருத்யஞ்செய்
நினைவுடை யதுய்யனே யடியவரை (யாண்டருள்)

சரணங்கள்.

(1) வஞ்சச்ச மணர்களோ நெஞ்சிற்று யாமீற
மிஞ்சவே யடித்திரே கைவிடாமல் (ஆண்டருள்)

(2) செய்யாது செய்யடியே னுய்யச்செய் கருணைக்குச்
செய்யுமா றறியேனே முற்றினுமென்னை (யாண்டருள்).

(3) (a) மாதங்க மலைவில்லாய் (b) மாதங்க மலைவில்லாய்
(c) மாதங்க வுரியுடையாய்க் கருணைபொழிந் (தாள்)

கலித்துறை.

என்றானு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றின ராத்
தோன்றாத் துணையா யிருந்தன னென்றிசைச் சொற்பதிகம்
வான்றாவி யபுகழ் வாகீசர் பாடி மகிழ்ச்சியுறத்
தென்றாவுங் கொன்றைவீ ரட்டேச ரைத்தரி சிக்கவென்றே

அபங்கு.

(1) எண்ணி யேமனம் நாடித்—தொண் டினங்களோ டுறவாடி
நண்ணியே வழிகூடி—லோக நாதர்தா ளிணைதேடி

(2) நற்றிரு மாணி குழியுந்—தினை நகரும் நம்பிறை தழீஇயும்
உற்றிருந் தனவென நாடி—யும்பர் கோனை மனத்துறவாடி

(3) சென்றுமே பணிந்தேற்றி—மா தேவ தேவனைப் போற்றி
நன்றுவாய் மலர்சாற்றி—யா னந்தபாஷ்பங்கள் தூற்றி

(4) அப்புறஞ் செலவேண்டிக்—கடி லப்பொன்மா நதிதாண்டி
மைப்பொழி லதிகையே நாடி—வரும் வாகீச ருக்கன்பு கூடி

(5) தொண்டர் நகரையலங் கரித்தார்—எதிர் கொண்டுவ
ணங்கியுப சரித்தார்
மண்டிப் பல்லியங்கள் முழங்கத்—திரு வதிகை புக்கு
வன்பர் விளங்க

(6) கோயிலை வலமுறச் சூழ்ந்து—சுற்றி யேவந் தானடியிற்
றாழ்ந்து
சேயுயர்ந்த நங்கோனைத்-தேவர்-தேவர் தங்கள் பெருமானைப்

(a) மா தங்க மலைவில்லாய்—பெருமை பொருந்திய தங்கமலையான மகாமேருவை வில்லாகவுடையவனே (b) மாது அங்க மலைவில்லாய்—பார்வதியை அங்கத்தில் அலைவில்லாது பொருந்தியவனே (c) மாதங்கம்—யானை.

(7) பணிந்து பணிந்து புகழ்ந்தேற்றி—மனங் கனிந்து
முன்னிகழ்ந்ததைச் சாற்றி
(d) கணிந்திர விகனலி யானே—பக்தர் களினக மறைவழி
தேனே

(8) மேலை விரவுகூ விளநற்—றொங்க லானை யெனத்திருத்தா
ண்டகமே—பாடி.
ஞான நதிபோற் கண்ணீர் பெருக—வெயில் நவநீ தம்போல்ம
னதுருகப்

(9) பாடிப் பணிசெய வோங்கி—மிக வாடிச் சமணர்க ளேங்கி
நாடிப் புறஞ்செலத் தேங்கித்—தனை மூடப் பழவினை நீங்கிப்

(10) பல்லவ னும்பரிதாப—முற்று நல்லவ ரருளுறக்கோபம்—நீக்கி
மல்விடை யோனையே பணிந்தான்—தங்கள் மதமொழித்
துச்சர ணடைந்தான்

கலித்துறை.

வீடறி யாச்சமண் டமமதம் பொய்யென்று மெய்புணர்ந்து
நாடறி யப்பல் லவன்பாழி பள்ளி நகரிலுறுங்
கூடங் களையிடித் தன்ப ரதிகைக்குக் கொண்டுவந்து
நாடன்பு றுங்கு ணதரேச ராமென நாட்டினரே.

ஸ்வாய்.

(1) செய்ய திருப்பணிசெய் துய்ய வுருப்பணித்துத்
தெரிசிக்க வாகீசத் திருமுனியும்
மையில் பெரும்பதிகட் கய்யமில் லாமற்சென்று
வளமை தரும்பதிகம் சொலக்கனியும்
(2) மனத்தி னோடுந்திரு வதிகைப் பதிமருங்கு
வளருந் திருவெண்ணெய் நல் லூருஞ் சென்று
தனத்தி லுயர்திருவா மாத்தூர் கோவலூர்முதற்
றுன்சென்று பாமாலை தொடுத்துநின்று

(d) கண் இந்து பிரவிகனலியானே—சோம சூரியாக்கினி நேத்திர முடையவனே.

(3) a விண்ணாட கம்பணியும் பெண்ணாட கமருவி
விளங்குந்தி ருத்தூங்கானை மாடஞ்சென்று
பண்ணார்மொ ழியுமைதன் பாகரைப் போற்றிப்
பணிந்திது கூறுவர் முன்னி னின்று
(4) பங்கச்ச மணர்கள்தன் சங்கத்து டன்மருவிப்
பாழுகத் திற்கிலேச் சினைமதித்தே
தங்கச்சி லையாவெனத் தமிழ்மா லைசூடித்
தனித்தும னதிரங்கி மிகத்துதித்தே
(5) பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றியெ னப்பதிகம் பாடிடவே
முன்னாகப்பணியா ரேவும்பூ தந்தோன்றி
முத்திரை யிடத்துய ரோடிடவே

விருத்தம்.

வந்துசிவ பூதகணந் தொன்று கையால் வனுத்தரு வமுமிடப மும்பதித்த
லாந்தாஞ்சேர் முத்திரையை யையர்துய்ய தோள்களினிற் பதித்தொருவர் காணாதேகச்
செந்தமிழ்நா வலர்பிழைத்தே னென்றுபோற்றி சிவஸ்தலமும் பாடிவருந்தா சலமுமேற்றிப்
பந்தமொழித் திடும்தில்லைப் பானை யன்பாப் பாடினார் பணிந் தெதிர்கொண்டாடினாரே

பதம்-இராகம்-பைரவி-தாளம்-சாப்பு-சிந்தயமா-யென்ற தீட்சதர வாள் கீர்த்தனம் போல.

பல்லவி.

கண்டிருகண் குளிரக் களித்தாரே லாப்ப காசனை வாகீசருநேரே (கண்டிரு)

அநுபல்லவி.

பண்டயன்மா லறியா ப்பழம் பொருளைப் பக்தி புரிந்து முத்தி
தருந் திருவருளைக் (கண்டிரு)

(a) விண்ணாடகம் பணியும்-தேவலோகத்தை தங்களுக்கு யிருப்பிடமாகக் கொண்ட தேவர்கள் பணியும்.

சரணங்கள்.

(1) நாவுக்கரசு வரும்வழி தனைநாடித்-திருத்தொண்டர்கள்நறும்
பூவிட்டிறைஞ்சி யுபசரித்துக் கொண்டாடி
மேவிப்புகழ்ந்து ப்ரதக்ஷிணஞ் செய்துகூடி—திருக்
கோயிற்புகுந்து மனதுருகியே வாடி—யன்பு
பாவித்த தஞ்சலிபுரியப் பாஷ்பங்களுஞ்சொரியச்
சேவித் தன்பிற்குரியத் திருநடநன் றுய்த்தெரியக்(கண்டிரு)

(2) (a) என்றுவந்தா (b) யென்றுவந்தா யென்ன—வெள்ளி
மன்றுள் நடனம் புரிபவராற் சொன்ன
நன்றுரையைக் கேட்டுமகிழ் துன்னப்—பவம்
வென்றடியேன் தன்யனுனே னின்ன—முத
மென்றுசொலிக் கொண்டாடிக் கன்றியமணர் வாய்மூடிச்
சென்றிடவென் றவர்நாடி நின்றுவிருத்த ம்பாடிக்
(கண்டிரு)

(3) பத்தனுய்ப் பாடமாட்டேனென் றடுத்து
அத்தாவுன் னுடல்காண்பேனென் றடுத்துச்
சித்தங்களிக்கப் பதிகம்பாடித் தொடுத்து
மெத்தவே யுழ வாரத்தொண்டுகைப் படுத்துப்
பத்தியொடு மினமன்னம் பாலிக்கு மெனும்வன்ன
நத்துகுறுந் தொகைபாடி நடராஜர்ப தந்தேடிக் (கண்டிரு)

விருத்தம்.

எங்கள்திரு நடராஜர் பதங்கள்போற்றி யேத்தியே யுழவாரப்
பணிகள்செய்து
துங்கவேட் களங்கழிப்பா லையினைப்பாடித் துதித்துமறுத்
துந்தில்லைக் குவந்து நாடித்
தங்கியே தொண்டுசெய்து பதிகம்பாடித் தழைஞானப் பிள்ளையார்
மகிமைதன்னை

(a) என்று வந்தாய்—எப்பொழுது வந்தனை. (b) என்று உவந்து ஆய் என்ன—என்று சந்தோஷித்துத் தாயார்போல.

யந்துதொண்ட ருரைக்கக்கேட் டானந்திக்கு மகத்தார்சீர்
காழிவர நினைத்தார் தாமே

பதம்-இராகம்-ஸாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சீ காழிக்கு நடந்தார் பெரும்பவமோகாழி யைக்கடந்தார்(சீகாழி)

அநுபல்லவி.

மேகா டவியெனக் கடல்பொங்க மதியிட்ட
வேணிய ரனருளாற் றேணிபோல் மிதந்திட்ட (சீகாழி)

சரணங்கள்.

(1) பூதலங் களைப்பெற்ற மாதா திருமுலைப்பா
லாதர வுடனுண்ட தானபெ ருஞ்செழிப்பால்
மாதயா நடைரயெம் மானிவ னென்றுவப்பால்
ஓதிப்பா டுஞ்சம்பந்த ரூரென்ற கமதிப்பால் (சீகாழி)

(2) நடராஜ ரிணையடி நளினம்போற் றிவிண்டகொண்
டடையாள விடைபெற்றே ரணிவீதி யினிற்புரண்
டுடைய யெல்லையைக்கடந் துறந்திரு நாறையூர்கண்
டிடவே போற்றிப்பாடி யினிக்தும்பே ரின்பமுண்டு (சீகாழி)

(3) செழிக்கத் திருநீறிட்ட திருமேனி யிலழகு
கொழிக்குங்கண் டிகைபூண்டு கொண்டன்பி னுவிளகும்
வழித்தொண்டர் சூழக்கல் வங்கந்த ருங்குழகு
மொழிக்கிள்ளை களுமங்க மோடும றைபழகு (சீகாழி)

விருத்தம்.

ஈசர்பெருஞ் சூலைவிடுத் தாண்டவர செழுந்தருளு மியல்புகேட்டு
நேசரொலா மொருங்குசெலச் சிவநாம கோஷிதரா நிறையுங்காதல்
உளசலிட வாளுடைய பிள்ளையா ருடன்காண வுவந்துகௌரி
வாலமுறுந் திருமுலைப்பால் வாயினரைத் தூயவரும் வணங்கினாரே

இராகம்-செஞ்ஜுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) வந்து தொழுத வாகீ சரைச்சம் பந்தர் கைகளா
லெடுத்தா-ரு
வந்தெ னப்பரோ யென்றி றைஞ்சிட மனதி னிலன்பு
தொடுத்தார்

(2) திரும்பி வணங்கி யடியே னென்ன செப்பி னான்பி னாலே
செழிப்புற் றேனிங்கு தொழப்பெற்றே னென்றார் சிறப்புற்
றவர் மேன் மேலே

(3) உம்மைக் காணப் பெற்றே னென்றொரு வர்கொ
ருவர்கொண் டாட
செம்மை யடியர் ஹரஹ ராசிவ சிவா வெ னவிண் டாட

(4) அன்புக் கடலு மின்பக் கடலும் பம்பிச் சைவந் தழைக்க-
அம்மை யருளு மய்ய ருளு மாக யிருவர் தழைக்க

(5) கோயிற் புகுந்து நாதர் தாளிணை குறுகி வணங்கிப் போற்றி
—யெழில்
மேவு மென்னப்ப ரேயும் மீசரை விளங்கு கவியா லேத்திப்

(6) பாடு மெனவே பாடும் போது கொண்டாடி மகிழும்
போது—சம்
பந்த ரு மெனப் பருக்கு விருந்தி சைந்தி டச்செய்தா
ரோது.

(7) (a) மருந்தை மருந்தை நிகர்செ யுநல்ல விருந்தை
யயின்றார் தோணப்
பொருந்தி யிருவர் மருவி யொன்றுயிர் போல வாழ்ந்தனர்
காணப்

(a) மருந்தை—அமுதத்தை

(8) (b) பாவுக் கரசை நாவுக் கரசர் பார்த்துச் சோழமண்
டலத்தில்
மேவித் தரிசித் தானந் திக்க வேண்டு மென்றாட் சணத்தில்

(9) பந்தம் நீங்கிச்சம் பந்த ருங்கூடப் பயணித் தாருடன்
மருவிச்
சொந்த மாங்கோலக் காவிலரனைத் தொழுதா ரிருகண்
ணருவி

(10) சொரியப் பாடிச்சம் பந்த ருஞ்சென்றார் பழுதி லவென்னப்
பருமே
துலங்குங் கருப்ப றியலூர்க் குச்சென்று தொழுகின்
றார்தொண் டருமே

(11) பிரியா விடைகொள் பெருமானைக்கண்டு பேணிப் பணிந்து
போற்றி
யுரிய திருப்புன் கூருந் திருநீ டூரை யும்புகழ்ந் தேற்றி

(12) திருக்கு றுக்கையும் நின்றி யூரையுந் திருந னிப்பளி யோடு
விரித்து ரைதலங் களைப்ப ணிந்துகா விரிக்க ரைமேலில்
நாடும்

(13) வளருஞ் செம்பொன் பள்ளி நாடு மயிலா டுதுறை
போற்றிக்
கொளவு மகிழ்ச்சீர் துறத்தி வேள்விக் குடியிற் பாடிக்
கொண்டாடி

(14) கோடிக் காவைப் போற்றி யேயா வாடு துறையிற் சென்று
புகழ்
நாடி யதிரு விடைம ருதூரின் னகரைப் போற்றியே
நின்று

(15) நாகேச் சுரம் பழையா றைப்போற்றி நாத னைத்தரி
சனையே—செய்து

(b) பாவுக்கரசு—சம்பந்தமூர்த்தி.

வாகீ சர்சத்தி முத்தங் கூடி மருவி யேவந்த னையே

(16) செய்தே னடியேன் முடியின் மீதுந் திருவ டிகள்வைப் பீரே

வெய்து திருநல் லூர்க்கு வரிற்செய் வேமென் றருள்செய் தாரே

விருத்தம்.

எனவுநல் லூர்க்கு வாவென வுரைக்க வேகியே பணிந்திட முடிமேல்
ஈசர்தாள் சூட்ட மனமகிழ்ந் தின்ப மெய்தியே தாண்டகம் பாடி
நனவிலுந் துயிலார் கனவிலுந் தொண்டு நடத்தியே நீடிருந் தாங்கு
நாதரைப் பிரிய வருந்தியே பின்பு நடத்திட வுயர்கரு காவூர்
சொனமுறுந் திருவா வூர்திருப் பாலைத் துறை திருப் பழனமுஞ் சென்று
தொல்லைநா யகரை யெல்லையிற் பாடித் துதித்திடுந் திங்களூர் மருவி
வினவுமப் பூதி யடியவ ரகத்தின் மேவுற வவரெலாம் வணங்கி
விருப்புற விருந்தாக் கிடவருந் தவர்க்கவ் விருந்தினி னிகழ்ந்ததிவ் வாறே

லாவணி-இராகம்-ஹமீர்கல்யாணி-தாளம்-சாப்பு-பஞ்சசாமர மாகவும் பாடலாம்.

(1) விப்ர துங்க ருங்கனிந்து ஷட்ர ஸாதி வர்க்கமும்
சுப்ர மாய மைக்க வேவா ஸிக்க மேலாஞ் சொர்க்கமும்
(2) வேண்டும் நல்வி ருந்தி னுக்குக் காண்ட மோடு a பத்ரமே
யீண்டு கொடுவா வென்ன மைந்த னேக வேயு b பத்ரமே
(3) செய்யும் நாக நீட ரம்பை யெய்தி யேகை தீண்டவே
வெய்து யிர்த்து மிலையி னோடு நொய்து கூற மீண்டவே
(4) மீண்டு கூறி வீழ்ந்த போது விரைந்தெ டுத்து மூடியே
யாண்டொ ளித்து வைக்க வைய ரமுது செய்ய நாடியே

(a) பத்திரம்-இலை. (b) உபத்திரம்-உபத்திரவம்

(5) கமல நேரு முகம லர்ந்து கடிதில் விப்ர மனையருஞ்
சமய மமுது செய்ய வேணுஞ் சாமி யென்றார் வினையரும்

(6) அய்ய ருங்க் ரகத்தில் மேவ வகமு ணர்ந்து தோணவே
செய்யு மிவர்க ளன்பை நாடி மெய்க்கு ளிர்ந்து பூணவே

(7) தெளியு மைந்த னெங்கே யென்ன வுளது சொலவாகீசரும்
ஒளிகொள் நம்பர் ஸநிதி முன்பு கொணர்வீ ரென்றார்
தேசுறும்

(8) கோவில் முன்பு போட வையர் மேவி யன்பு கூடவே
ஆவை நேரி ரங்கி யொன்றுகொ லாமெ னுங்கவி பாடவே

(9) விடம கன்று துயிலெ ழுந்த தெனவெ ழுந்த சுதனையே
நடையில் மெல்ல வனைகை மேவ நணிவி டுக்க வதனையே

(10) பாக்ய மென்று பெறவு மென்னப்பரும்வி ருந்தில் யோசித்
யோக்ய ரும்ம னந்த ளர்ந்து வாக்கி னாலே பூசித்தார் [தார்

(11) மனதி ரங்கி மனைபு குந்து வாகீ சத்திரு முனிவரும்
கனிவு சேர்வி ருந்த ருந்தி வினவி மகிழ்ந்தா ரிருவரும்

(12) திங்க ளூரில் நின்றெ ழுந்து திரும றையவர் பின்செலப்
பொங்கு காதல் முன் செலச் செம் பொன்னு லாவி வளர்நல

(13) திருப் பழனத் துறைபு மீசர் திருவ டிகளைப் போற்றியே
பொருப்பை நிகரப் பூதி யடிகள் பொறுமை யின்மனத்
தேற்றியே

(14) ஓங்கி டுஞ்சொன் மாலை யென்னும் தேங்கொள் பதிகம்
பாடியே

தேங்கு லாவு சோலை சூழுந் திருப்ப திகளை நாடியே

விருத்தம்.

வரும்வழியிற் றிருச்சோற்றுத் துறைமுதலாத் தலங்கள்பல
மருவிப்பாடிப்

பெரும்பழனத் துறைநண்ணி நீடுநாட் கொண்டுசெய்து பிரியத் தோடும்
விரும்பியிரு தாள்தலைமேல் வைத்தாண்ட சிவபெருமான் மேவும் நல்லூர்க்
கரும்புவகை யோடுசென்றங் கிருந்தாரூர் வரவெழுந்தா ரறிந்தார் தாமே

பதம்-இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரூர்க் கெழுந்தருளினார் என்னப்பர் புகழுந்திரு (வாரூர்க்)

அநுபல்லவி.

நேரூ ரடர்க்குமரு வாரூர் நகையில்வென்ற
பாரூ ரிரதப்பதப் பங்கயங்களை மனங்கனிந்துதொழ (ஆரூர்)

சரணங்கள்.

(1) நல்லூ ரதனைப் போற்றியே—விடைகொண்டு—தண்டலையில்
செல்லூர் பழையாறை யேற்றியே—தமிழ்பாடிவலஞ்சுழியும்
எல்லூர் திருக்குடமூக் கெல்லை யணைந்துநாலூர்
எழில்சே றைப்பதி குடிவா யிற்செலும் வழியா லற்புத
வாளுரைப்பணிந் (தாரூர்)

(2) தேன்செழும்பணை சூழ்ந்திலங்கிவள ஞ்—செழிக்குந்திரு
வாஞ்சியந்தனில் வாஞ்சிதந்தருநம்—பனைப்பணிந்து
காஞ்சனந்திகழ் பெருவேளூர்முதல்—ஆந்தலங்கள்வி
டமரோ டேகியெ
ல்லாம்பணிந்துப னுவலேபாடிவி ளார்ந்திடுஞ்சின காமேவிய
திரு (வாரூர்க்)

(3) ஈசரைத் தொழு நேசர்களும் நாடி—யெல்லோருமகிழ்ந்
தாசையுற்றவா கீசரையுறவாடிப்—பணிவோமென்று
மாசிலற்புத தாசருக்கெதி ரேசெலத்தனி வாசமுற்றிடு
மங்கலங்களுமு றங்கிடப்பாவி யெங்கிலும்பெரும
லங்க்ருதஞ் செய்திரு (வாரூர்)

விருத்தம்.

தொண்டரெல்லர மதிகண்ட (a) பௌவமென்னச் சூழ்ந்தெதிர்
கொண் டிறைஞ்சி யெதி ரிறைஞ்சிப்போற்றிக்
கண்டாக ராவெனக்கை கூப்பியாரூர்க் கனகவீ தியிற்புகக்குக்
குண்டரோடு
மண்டியபுன் பவங்கள்தீர்ந்துய் யப்போந்தே னுவதொன்று புற்
றிடங்கொண் டார் தந்தொண்டர்
தொண்டருடன் மருவிநிதம் வாழப்பெற்றேன் சுகம்பெற்றே
னென்றுமய்ய ரகம்பெற்றாரே

ஆரியா.

(1) ஆரண வீதிகள் சுற்றித்—தோரண வாயில் கடந்தா
ராமுற்றிப்
பூரண மாநிறைபத்தி—புரிந்தார் கண்டுதெ ரிந்தவர் சிவசித்தி
(2) தேவா சிரியர்ப ணிந்து—செயுமா மணிமண் டபநா டியுவந்து
பூவார் கோவில் புகுந்து (க்ருபை) புரி வன் மீ கே சா
டியில் முடிதாழ்ந்து

பதம்-இராகம்-சுருட்டி-தாளம் சாப்பு.

பல்லவி.

போற்றிசெய் தாரே தம்பிறவியை மாற்றினர் நேரே பணிந்
தெழுந்து (போற்றி)

அநுபல்லவி.

(b) ஏற்றின்பெ ருமானைப்பாச் சாற்றிவ ருமான்கண்டு (போற்றி)

சரணங்கள்.

(1) இளகிநெஞ் சுருக—மெய்ரோமங்கள் புளகிதந் தருக
—மனதினில்

(a) பௌவம்—சமுத்திரம்
(b) ஏற்றின பெருமானைப்—பாச் சாற்றி வரு மான்கண்டு—இடபத்தையுடைய பெருமானை ஈசனைப், பா—பாமலரைச் சாற்றி தொண்டு செய்து, வருமான்—வரும்படியான மகான் கண்டு.

அளவிலா மகிழ்ச்சிகொண் டானந்த மும்பெருகப் (போற்றி)

(2) பக்தியின் வழியா—ஆனந்தக்கண்ணீர் தத்தியே வழியச்
சக்திபொரு ந்துவேதந் தமிழா க்கிப் பொழியப் (போற்றி)

(3) திருமூலத் தானர்—கழற்கமல மருவுதேன் பானஞ்
செய்யரியெனச்
சருவும னத்தாற்போற்றித் தாண்டக மாலைசாற்றிப்
(போற்றி)

(4) காண்டலே கருத்தா நினைத்திருந்தேன் ஆண்டவென்
கருத்தா—வெனத்துதித்து
நீண்டப திகம்பாடி யாண்டுமி கக்கொண்டாடிப் (போற்றி)

விருத்தம்.

துதித்தாரூர் திருக்கோயில் வலஞ்செய்து வாயில்வந்து தோன்றி
முன்னம்
மதித்திடுந்தே வாசிரியர் மண்டபத்தி னின்றாரூர் வானைக் கைகள்
பதித்துவணங் காதகள்வன் கனியிருக்கக் காய்தனையுண்
பவன்யா னென்ன
விதிர்த்துமிகும் பதிகங்கள் பாடினார் விமலாடி சூடினாரே.

வெண்பா.

தன்னைமறந் தீசாடி தன்னைநினைந் தேயுருகி
வன்னமுறும் பாடல் வழுத்தியே—பின்னுமெங்கள்
அண்டர் பிரான்களிக்க வன்பிற் குரியதொண்டு
கொண்டிருந்தார் பன்னாளாங் கு.

அபங்கு-

(1) ஆரூ ரினில்வன்மீ கேசர்-தமை யந்தத் தலத்தினில்வா கீசர்
சீர்பொருந் தநிதம் பணிந்தார்-புகழ்செய்யக் கருணைமுத்த
மணிந்தார்

(2) நமிநந்தி யடிகளின் றொண்டு-செயும் நலங்கண்டு பதிகத்தில்
விண்டு

நிமிஷம்வ லிவலத்திற் சென்று—புகழ் நீடுங் கீழ்வெளூர்க்
கன்று

(3) தெரிசித்துக் கன்றாப்பூர் நாடி—யங்கு தேடிப் பணிந்து
கொண் டாடி
மருவும் நாளினிலோர்நாள்—வள மா ரூராதிரைத் திருநாள்

(4) பகரும் வீதிவிடங் கேசர்—திருப் பவனி காணவா கீசர்
அகமகிழ்ந் தாரூர் நாடப்—பணிந் தன்ப ரெலாமெதிர்
கொண்டாட

(5) வந்து வந்து ஸேவைசெய்து—மிக மகிழ்ந்தா னந்தக்கண்
ணீர் பெய்து
சிந்தைக ளித்தனர் நாடி—யெங்கள் தேவர் பெருமானைப்
பாடி

(6) திரும்பிப் புகலூர் நாடி—யெங்கள் தேவே சர் பதங்கள்
தேடி
விரும்பிக் களித்துமகிழ்ந் தூறப்—புகழ் மேவுந் திருப்புகலூர்
சார

(7) திருஞான சம்பந்த ரேத்தித்—திருப் புகலூர்த் தேவையும்
போற்றி
முருகனார் மடத்தில் வாஸ முஞ்செயப் புகழ்வா கீசர்

(8) அங்குவ ருஞ்செய்தி கண்டு—நல வகமும் மகிழ்ந்தெதிர்
கொண்டு
தங்கிவ ரும்வழியை நாடிக்—கண்டு தங்களின் மிகவுற வாடி

(9) இருவருந் தாழ்ந்தெழுந் தாரே—களிந் தென்னப் பரே
வருவீரே
மருவி யெங்குவசித் தீரே—அந்த மகிமையை யுரைத்தாள்
வீரே

(10) புக்குவ ரும்போதா ரூரில்—நடக்கும் புதுமைசொல்
வீரென்றார் நேரில்
அக்கணம் வீதிவிடங்கேசர்—வரு மாதிரைப் பவனியுல்லாசம்

(11) எந்தனாற் சொல்லும் வழியா—திருக் கென்றப திகங்கள்
பொழிய
வந்த நாளிலாசை மீறி—யப்ப ரங் கிருக்க வேகூறி

(12) ஆரூர்க் கேகிவருவே னென்று—மெங்க ளய்யர்சம்
பந்தருஞ் சென்று
நேரேசெல் லப்புக லூ ரேத்தி—யப்பர் நீடுந் தமிழ்மாலை
சாற்றி

(13) திருச்செங்காட் டங்குடிநள் ளூரும்—புகழ் செய்யசாந்
தைவள மீறும்
தருக்கள் சூழுமய வந்தி—ஜலந் தழைத்திடு மறுகல்
பொருந்தி

(14) பூந்தமிழ் மாலைகள் சாற்றிப்—புகலூர்க் குப்பின்னும் வந்
தேற்றி
வாய்ந்திருந் தாரென்னப் பருமே—யங்கு வந்துசேர்ந்தார்
சம்பந் தருமே

(15) சேர்ந்தங்க விருக்கும் போது—மகிழ் சிறுத் தொண்ட
ருமவந்தா ரோது
சார்ந்தநீ லநக்கரும் வந்தார்—கண்டு தங்கள்ம னதினி லு
வந்தார்

(16) தொண்டர்ம கிமைபெறும் பெருமை—பின்னும் சொற்பதி
கங்களி னருமை
விண்டுசி லதுநாட் கழித்தார்—உலக மித்தைவாழ் வுதனைப்
பழித்தார்

விருத்தம்.

தலங்கடொறும் பணிந்தேற்ற வெண்ணியிரு வருங்கூடித்
தழைக்கும் பக்தி
இலங்குசிறுத் தொண்டருக்கு மன்பர்மன முருக்குமயி
விருக்குஞ் செய்ய
குலங்கொள்முரு கருக்குநன்னீலநக்கருக்கும் நயந்துவிடை
கொடுத்துச்சென்று
பலன்கள்தரு மிழலைநா யகரடியைப் பகரடியார் பணிந்தார் தாமே

பதம்-இராகம்-தருபார் தாளம்-ரூபகம்.

பல்லவி

திருவீழி மிழலைநா யகரடி மருவியே சேவித்துக் களித்தாரே

அநுபல்லவி.

மருவார் தடஞ்சூழ்திரு வம்பசைப் போற்றிச்சென்று
வருமென்னப் பருஞ்சம்பந் தருமின்பந் தருமென்று (திரு)

சரணங்கள்.

(1) காலனை யடர்திரு கடவூ ரைத்துதித்து—ஞாலம்பு கழ்கலைய ஞர்மடத்தை மதித்துச்
சாலவ முதுண்டும யானம்போற் றிப்பதித்துப்—பாவினி லும்ருசிக்கும் பதிகம்பாடிக் குதித்துத் (திரு)

(2) (a) வாக்கூருஞ் சொல்லாற்றிரு வாக்கூ ரதனிற்றேற்றி
யேற்கத்தான் றோன்றிமடத் தீசரைப் பணிந்தேற்றி
பாக்கியம் பெற்றதுபோற் பலதலங் கண்டுபோற்றித்
தேக்குமா னந்தக்கண்ணீர்த் திவலைமெய் யெங்குந்தூற்றித் (திரு)

(3) இருவர்வ ரவையறிந் தரியந கரைச்சோடித்
திடும டியவரெலா மருவியெ திர்கொண்டாடிப்
பாவிய மைழக்கவிண்ணின் றிவருங் கோயினுடிப்
பழுத்தபுண் யங்களுறத் தழைத்தசெதன வேகூடித் (திரு)

விருத்தம்.

திருவளருந் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரென்
றருமலர்த்தாண்ட கமாலை புனைந்துபோற்றி யங்குசம்பர் தரும்வாகி சரும்வாழ்நாளில்
பெரியபஞ்ச மொன்றுவர யாருமுண்ணும் பெற்றிபெற யிவர்பெருமை யெவருங்கூறக்
கரியுரி வை யாரிவர்சொற் பனத்துங்கூறிக் களித்திட்டார் தங்கக்கா சளித்திட்டாரே

பதம்-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

(b) ஆசைக் காசைக் கொடுத்தா ரடியவர்பே (c) ராசைக் காசைக் கெடுத்தார்

(a) வாக்கூறும சொல்லால்—வாக்கினில் அமுதமூறும் சொல்லினால் திருவாகூரதனில்—திருவாக்கூரென்னுமூரில்.

(b) ஆசைக்காசை—தங்கக்காசை.

(c) பேராசைக்காசை—பேராசையென்னுங் குற்றத்தை அல்லது பேராசைக்கு ஆசை பேராசைக்கு மூலத்தை.

அநுபல்லவி.

தாசரி லுயர்சம்பந் தருக்குமப் பருக்கும் பொற் (காசை)

சரணங்கள்

(1) அஞ்சியு லகஞ்சிறக்கச் செய்யும்பெரும்—பஞ்சமெல்லாம்
பறக்க—வுயிர் சிறக்க
மிஞ்சும்வ ளஞ்சுறக்க மேன்மைத் தொண்டர்சிறக்க(ஆசைக்)

(2) தினமுந்த ரிசனஞ்செய்து—பனுவல்பாடி மனமுரு
கக்கண்ணீர்பெய்து துயின்
கனவின்ப டிக்கிசைங் காட்டி பே களிப்பெய்து (ஆசைக்)

(3) படிபஞ்ச முமையென்செயு—முங்களைநம்பு மடியரெவ்
விதத்திலுய்யும்—எனவருத்தம்
படியும்வ ரைக்குந்தினப் படிவாயிற் படியில்வைத் (தா)

விருத்தம்.

ஒருமறைமே லொருமறைவைத் தன்னகண்ணு முயர்ந்தமறை
பறித்தர்ச்சித் துவக்குமாலுக்
கரியநய னங்கொடுத்துக் கண்ணனென்றே யழைக்குமணித்
திருவீழி மிழலைநாதர்
உரியபெருந் திருவாயிற் படியிற்பொன்மாத் துயர்ந்தகா
சுகளைவைக்க வெடுத்து நித்தம்
மருவுபெருங் களிப்பொடுதொண் டருக்கும் யார்க்கும்
மருந்திட்டா ரெனச்சிறக்க விருந்திட்டாரே

பதம்-இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி-ஜியாகோ

மேகைலோரே என்ற இந்துஸ்தானி போல.

பல்லவி.

எட்டாவமு தம்போலமு திட்டாரே யார்க்கும (எட்டா)

அநுபல்லவி.

வட்டவுல கமயக்கை விட்டாரே யார்க்கும் (எட்டா)

சரணங்கள்.

(1) வட்டக்காசை மைந்தனுக்களிக்க மனங்களிக்க
வாங்கி விலைசெய் தோங்கும் விண்ணோருக் (கெட்டா)

(2) மாசிலாத்தொண்டி னேசங்கொண்ட—வதனுலும
வாசியிலாதொரு காசினுலுமனத் (தெட்டா)

(3) மலைவுடன்றவித்து வருவோரைக் கவித்து மனதுவைத்து
மலியவாயன்ன மலைபோற்குவித் (தெட்டா)

(4) சுடும்பசி தீர்ப்போம் தொண்டரிற் சேர்ப்போம்
துகில் போற்போம்
நடந்துவருவீரென் றடர்ந்த முரசறைவித் (தெட்டா)

(5) (a) அனம்வெள்ளிவரையே (b) யாடகமும் பொன்
வரையே யதினிரையே
யாக்கிநெய்பாலுடன் தேக்கியுண்ணச் செய் (தெட்டா)

விருத்தம்.

(c) விருப்பதிக மொடுமன்ன மளிக்குநாளில் விண்மாரி
பொழிந்துலகஞ் செழிக்க வின்பத்
(d) திருப்பதிக டொறுஞ்செல்ல வெண்ணியீசர் செழுமலர்த்தா
ளினைப்போற்றிச் சீர்கொண்டேற்றி
(e) மருப்பதிகம் பாடிவிடை கொண்டிலங்கும் வாஞ்சியத்தைப்
பாடிமரைக்காட் டின்மேவிப்
(f) பொருப்பதிலு முயர்தவத்தார் பாட்டால்வேதப்
பூட்டார்க தவந்திறந்தார் சேட்டார்தாமே.

பதம்-இராகம்-சென்ஸ்ஜுருட்டி-தாளம்-சாப்பு.

(a) அனம்—வெள்ளிமலைபோல.
(b) ஆடகம்—பருப்பு.
(c) விருப்பு அதிகமொடு—அதிகமான ஆசையோடு.
(d) திருப்பதிகடொறும்—அழகாயுள்ள நகரங்கள்தோறும்.
(e) மருப்பதிகம்—வாஸனையுள்ள பதிகம்.
(f) பொருப்பதிலும்—பர்வதத்திலும்.

பல்லவி.

(g) கத வினைத் திறந்தார் மனதினிற் (h) கதவினைத் துறந்தார்

அநுபல்லவி.

மத வினைத்துடர் பகல் புகழுனர் மைந்தருக் கெங்கள்சம்
பந்தருஞ் சொல்லிடக் (கதவினை)

சரணங்கள்.

(1) அடி யவருடன் கூடி—யடிக் கடிப்ர தக்ஷிணஞ் சூழ்ந்து—வந்
தடைந்தி ருக்குஞ்சன் னிதிக்குநேரில் வந் தடுத்துப்
புவியிற் றாழ்ந்து
படியுளோ ரயல் வழியிலேசெலும் பரிசேதென மறைபூசனை
செயுநாளினி லதனுவிடுங் (கதவினை)

(2) வாயின் வழிசெல் லாமல் மற்றொரு வழியி னிற்செல்
லாமா—வன்
பாயவென் னப்ப ரே திறந்தி டப் பனுவ லுரைக்க லாமா—
வென
நேய சம்பந்த ருரைத்தி டப்பண்ணி
னேர்மொழி யாளுமைபங்க ரோவெனவே சொலியங்கு
(கதவினை)

(3) வண்ணக் கதவந் திறக்க வேதா மதித்த தால்மனம் வாடி-யும
தெண்ணத் திரக்க மொன்றி லீரொனு மிசைக டையினிற்
பாடி
நண்ணுஞ் சம்பந்தர் மனது மகிழ்ந்தென்
னப்பர்மகிமை தனைநாடிச் செப்புபெருமை யொடுகூடிக்
(கதவினை)

விருத்தம்.

மறைக்கதவந் திறந்திடச்சென் றிருவரும்மெய் மறந்துபுள
கருயபிடத்தம் மிறையைப் போற்றிச்
சிறக்கமன மகிழ்ச்சியொடும் பாடியாடித் திகழானந் தக்கண்ணீர்
நிமையமூடி

(g) கதவினை—கவாடத்தை.
(h) கதவினை—குற்றத்தை.

நிறைத்திடக்கொண் டாடிவலம் வந்துதாமும் நின்றுவிடை
கொண்டுதிரும் பும்போதுற்ற
சிறைக்கதவை யடைத்திடச்செய் வீரென்றப்பர் செப்பினார்
சம்பந்த ரொப்பினாரே

ஆசிரிய விருத்தம்.

சம்பந்த ரும்பதிக முற்றுரைத் திடுமுனமு தற்கவியி னிற்கதவமுந்
தானடைத் திடமுழுவ துங்கூற வப்பருந் தாமுவந் திவர்கவிக்கு
நம்பர்செய லால்விரை வடைத்ததென் றெண்ணியே நாடியிரு
வருமடத்தில்
நண்ணிநித் திரைசெயப் பொடிகொள்மே னியரா நடந்துதிரு
வாமூர்க்குவா
வன்பவென னும்என்கோ லோவெனப் பாடியென் னப்பர்தொட
ரக்கைக்குமெட்
டாமலே சென்றுகண் காட்சிதரு வார்பொலோ ராலயங்
காட்டியேவி
வம்பனில்ம றைந்தவர் தம் மைந்தர்க்கு மெவ்விதம் மறைவாரெ
னக்கூறவும்
வந்தசம் பந்தர்க்கு முன்காட்சி தந்தனர் மகிழ்ந்துமா தேவர்
தாமே

கலித்துறை.

துதித்தார்சம் பந்தரொன் னப்பர்குமவ் விதந் தோன்றிடச்சம்
மதித்தார் பணிந்து குதித்தார் வாய்மூரை மனதினிலே
பதித்தா ரிருவரும் வேதவ னஞ்சென்றப் பாற்சமண்மேல்
கொதித்தார் சப்பந்த ரெழுந்தார் வெல்வேனென்று கூறியுமே

வெண்பா.

அப்பரெதிர் சென்றென்ற னையரே பொய்ச்சமண்முன்
தப்பினேன் போதுந் தலைமுறைக்கு—மெப்படிச்செல்
வீரென்று ரும்மாணை வென்றுவரு வேனென்று
சாரநடந் தார்பம்பந் தர்

ஆரியா.

செலநா கைக்கா ரோணந்—திருமிழ லையுமா வடுதண் டுறைபூணும்
பலநாள் தொண்டொடு பாடி—பழயா றைத்தரி சனைசெய்
திடநேடி

ஸ்வாய்.

(1) கோயிலை நாடினர் வாயில்காணுமற் கொதித்துள மெத்தவும்
வாடினரே
மேயவொருபள்ளி தோணவு மீதேது வென்னச்ச
மணர்கள் மூடினரே

(2) என்றய லோர்சொல நன்றிது வென்ன யிரங்கியென்
னப்பரு மேங்கினரே
கன்றுப வப்பிணி நீக்குங் கருத்தரைக் காணுகினைத்துயிர்
தாங்கினரே

லாவணி-இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

(1) நாத ரேஜகவி ரோதரே யிந்தவன் யாயம் பொருத்தீரே
முழுப்
பாதக வமணர்கள் தோதக மேசெயும் பரிசையுங்
குறித்தீரோ

(2) ஏழையே னையுங்கூடச் சமணை விட்டுக்களை யேற்றிய
வுமக்கரிதா—யிந்தப்
பாழமணரைக்கொல்ல வேளையிலையோபெரும் பாரமோ
யென்னபெரிதா

(3) சமணை யொழித்துப்பள்ளி யிடிக்கும் வரைக்குமிவ்வூர்
தனைவிட்டுப் போவேனோ
கவனம் வையாவிடி லாசை மனதுறு கவலையால் நோவேனோ

(4) அடியவ ரொடுமுமைத் தரிசனம் புரியா தரைக்கண
முயிர்தரியேன்
பிடிசோ ரணமு மருந்தேன் மனதினிற் பிறிதொன்
றையுங்குறியேன்

விருத்தம்

இல்வுழியங் காசிருக்கக் கருணையினுற் றெண்டரகத் தெய்தும்
வண்ணம்
செவ்வுழியா முடிப்பவெண்ணிக் காவல்புரி யரசினுக்குத்
தெரியச்செய்ய
ஒவ்வுமடை யாளமெலாஞ் சொற்பனத்தி லுரைக்க
வுச்சியின்மேற்
பவ்வியமாக் கைகுவித்தங் கிறைஞ்சியபின் னமைச்சருக்குப்
பகருவானே

ஆர்யா.

(1) கண்டிடு கனவினை நேரே—விண்டிடயிருவரு மயங்கி
யொருவாறே
தண்டுத ளங்கொடு போரோ—குண்டரி டஞ்செய மண்டினர்
பறையாரை

(2) வந்தென் னப்பரை நேடி—மலர்நேர் தாளிணை தனையே
முடிசூடி
சிந்தையி னைந்துமெய் வாடி—சிவசந் நிதிமுடி னசங்
கதிநாடி

பதம்-இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

அடல் புரிந் தாரே யமணரி னோரே

அநுபல்லவி.

புடவிகி டுகிடெனப் படபடத்திடக் கோபித் (தடல்)

சரணங்கள்.

(1) கத்திகள் கைக்கொண்டார் மெத்தவும் வெகுண்டார்
சுத்தியிலாப்பெருங் குண்டர்தலை களெலாந்
தத்திவி ழுத்திட மொத்திட வெற்றிகொள் (அடல்)

(2) ஓடிடவி டாமல் நீடுகைதொ டாமல்
கோடிடாத சமுதாடி னுல்வளைத்துக்
குத்தவு யிர்பதைப தைத்து விழவும்வகைத் (தடல்)

(3) எங்குங்குண்ட ரோரா யிரவர்களை நேராப்
பாங்குறு மதகரி களையே விடவது
பற்றியி ழுத்து மி தித்தொழித் திடவிட் (டடல்)

விருத்தம்.

அடல்புரிந்து சமணர்களின் பூடில்லாம லாங்கொழித்துப்
பள்ளியைத்தூ ளாவிடித்துத்
திடமிதந்த திருவாயி றனைத்திறந்து செப்புமென்னப்
பறைவணங்கித் திருத்தாள்போற்றி
யுடனழைத்தங்க மைச்சரொடு மன்னன்போந்தாங் கோவியஞ்
சேர் கோயில்வலம் வந்துட்புக்கு
மடலவிழுங் கொன்றையர்தாள் முடிமேற்சூடி வாழ்த்தினார்
பனுவலுரைத் தேத்தினாரே

பதம்-இராகம்-கபாசு-தாளம்-ஆதி. மிசிரகதி.

பல்லவி.

கண்டார்ப ரஞ்சோதியை யனாதியைக் (கண்டார்)

அனுபல்லவி.

பண்டார ணனுமாலு மறியாத பேரொளியைப்

பாரோர்பு கழும்பழை யாரைவ டதளியைக் (கண்டார்)

சரணங்கள்.

(1) வேந்தன்பொன் மானமமைக்கக்—கற்பூரவாஸஞ்
சேர்ந்தெங்கும் பரிமளிக்கச் சார்ந்தநைவேத்யங்கொள்ளத்
தான்கண்டு பவந்தள்ளக் (கண்டார்)

(2) மோசக்குண் டர்கள்மறைக்க—வவர்கள்சர்வ
நாசம தாகிமறைக்கச்—செயுமன்பினைப்
பேசம றைக்குமரி தாசையு டன்சிறக்கக் (கண்டார்)

(3) பூவஞ்ச லிகளுஞ்செய்தே—யானந்தக்கண்ணீர்
மேவுடம் பெங்கினும்பெய்தே—நனைக்குமன
தாவலுடனேநாடிப் பாவிற்குறுந் தொகைபாடிக் (கண்டார்)

விருத்தம்.

(a) அருவானைக் காட்டுதிரு வுருவானைப் பணிந்துமகிழ்ந்
தானந்தித்து
(b) மருவானைக் காமலர்சேர் பொன்னியிரு கரைத்தலங்கள்
மருவிப்போற்றித்
(c) திருவானைக் காவெறும்பீச் சுரஞ்சிராப் பளிதிகழ்கற்
குடியும்பாடி

(a) ரூபமில்லாதவனை.
(b) மருவால் நைக்கா—வாசனையால் நைக்கப்படும்.
(c) திருவானைக்கா—திருவானைக்காவல்.

(d) இருவானைக் காவுறும்ப ராயலூர் கடந்துறைஞ்சி
க்குற்றாரோ

வெண்பா.

வாக்கரசர் பைஞ்ஞீலி மாதலங்கண் டேத்தவரும்
மார்க்கமதி லீசர் மனமகிழ்ந்து—தேக்கும்
(e) பொதியனஞ் சூழ் தடத்திற் பொன்மொய்ம்பின் மாட்டும்
(f) பொதியனமிட் டாரன்பு பூண்டு

பதம்-இராகம்-வஸந்தா-தாளம்-ஆதி.

பல்லவி

அமு தளித்தாரே வாகீசர்க்குக்கட் (டமுதளி)

அநுபல்லவி.

நிமிஷம தனிற்பைஞ்ஞீ லியில்நிம லருந்தேடி
நேருமப்பர்க் குமகிழ் வூறும்ப டிகொண்டாடி (அமுதளித்)

சரணங்கள்

(1) வரும்வ ழியிற்பெரும் பசிதாக முமுண்டாகி—மயக்கஞ்செய்
வதைப்பாராட் டாமல்வ ரும்விவேகிக்
கருமறை வேதியர்போ லெதிர்கொண்டீ சருமேகி
யங்கோர் டத்திலி ரு வருமமர்ந் துமன்பாகி (அமு)

(2) அருந்தவ வேதியர்போ லிருந்தவ ரையரைப்பார்த்
தன்பரே பசிபிணிப் பாலெநாந்தீர் போலுஞ்சேர்த்
தொருவகை யனமிருக குண்பீ ரெனக் கொடுத்தார்
உற்றது ளத்திலதையுண்டுக ளித்திடநேர்ந் (அமுதளி)

(d) இருவானைக் காவுறும்—பெருமைபொருந்திய ஆகாயத்தளவு சோலைகள் பொருந்தும்.

(e) பொதி அனம்—நெருங்கிய அன்ன பட்சிகள்.

(f) பொதி அனம்—மூட்டையில் சோறு.

(3) நேரும்வே தியரேயெங் கேசெல்கி றீரெனப்பைஞ
ஞீலிக்கெ னவேகூட நான்வரு வேனென்றப்பர்
சாருமய் யருடன் சென் றிட வவ்வூர் தனில்விப்ரார்
தாமறைந் திட்டிடக்கண் டேமயங் கினர்க்கொப்ப(அமுதளி)

சந்த விருத்தம்.

விப்பிரர்ம றைந்திடவெ னப்பரும்றி னைந்துசிவ மெனநாடி
ஒப்புறவி ளங்குமின கர்க்கிறையி லிங்கம தையுளநீடிச்
செப்புகவி கொண்டுதுதி கற்பனையொ டும்புலிசை
திருவாய்கொண்
டற்புதமு டன்சொலிவி யப்பொடுபு கழ்ந்துமகிழ் வானாரே

விருத்தம்,

சார்ந்துதிருத் தொண்டுபுரிந் திருக்குநாளிற் சயிலமுறுந்
தலங்களெலாம் பாடியின்பஞ்
சேர்ந்துவட திசையிலண்ணா மலையைப்போற்றித் தெளிந்தோதி
மாமலரென் றெடுத்துப்பாடி
யார்ந்ததொண்டை நாடதனிற் றிருவோத்தூரை யகமகிழ்ந்து
பணிந்துகவி பாடியன்பு
கூர்ந்தெழுந்து திருக்காஞ்சி மூதூர்தன்னைக் கூடினா
ரிசைப்பனுவல் பாடினாரே

பதம்-இராகம்-ஹமீர் கல்யாணி-தாளம் ஆதி. அமிபிஞ்சி

பாஸீநரியென்ற இந்துஸ்தானி வர்ணமெட்டுப்போல.

பல்லவி.

பணிந்தார்வா கீசரைப் பண்புறுமே காம்ரேசரைப் (பணிந்தார்)

அநுபல்லவி.

அணிகொளும்பர காசரை யம்மையுமை நேசரை
மணிதிகழ்சர் வேசரை மகிழுங்காஞ்சி வாசரைப் (பணிந்தார்)

சரணங்கள்.

(1) பந்தர்கொடி யோங்கவே பக்தர்கள்கை தாங்கவே
சிந்தைமகிழ் கோயில்வலம் வந்துபவம் நீங்கவே (பணிந்தார்)

(2) கம்பைவெள்ள மீறவே கண்டுபய மூறவே
அம்பிகைத ழுவவனைக் கும்பவடுப் பூணுருவைப் (பணிந்தார்)

(3) காவாடு வன்னெஞ்சர்க் கரியானை யென் றோதியே
விரைவாய்ப்ப திகம்பாடி மெய்த்திடும ணுதியைப் (பணிந்தார்)

விருத்தம்.

துதித்துத்தொண் டியற்றிச்சீர் மயானம்போற்றித்
துலங்குறுமேற் றளிமாற்பே றுசென்று தாழ்ந்து
மதித்துக்காஞ் சியிற்பின்னும் வந்துபாடி
வளர்கழுக்குன் றமுமான்மி யூரும்போற்றிப்
பதிக்குளுயர் மயிலாப்பூ ரொற்றியூரும்
பாசூருந் திருவாலங் காடும்பாடி
யதிற்காரிக் கரைத்திருக்கா ளத்திநோக்கி
யப்பருங்கண் ணப்பரைக்கொண் டாடினாரே.

வெண்பா

(a) கொண்டாடி யெண்குணத்தான் கோலத்தைப் பார்த்து
கொண்டாடி நீள்கயிலைக் குஞ்சென் று—தண்டா [(b) மனம்
மறையாறுங் காணு வானுருவைப் போற்றிப்
பரிவாகச் சென்றாரப் பர்.

பதம். இராகம்-முகாரி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

வான்கயி லையை நாடினார் தலங்கள்தோறுந் தேன்கொள்ப திகம்
பாடினார் (வான்)

(a) கொண்டாடி—கொண்டாடிக்கொண்டென்றும்.
(b) மனம் கொண்டு ஆடியென்றும் பிரித்துக்கொள்க.

அனுபல்லவி.

கான்கொளுங் காளத்திக் கடுக்கைய ணைப்பணிந்து
தான்கொண்ட குறிப்பினால் ஸந்ததமுமெய்மகிழ்ந்தகந் துணிந்து

சரணங்கள்.

(1) ஏனமா யெகினமா யிடந்துமே லெழுந்துமுன்
பானவ டிமுடியைப் பார்க்கவெட் டாதவின்
ஞானப தத்தை யடியில் வணங்கியும்பின்
பானதெ லுங்கதேச மதையுங்கடந்துதுன் பதையுங்
கடந்திட (வான்)

(2) நீடுங்கன் னடதேயங் காடுமலையுந்தாண்டி
நிதிகொழித் திடுமலை நதிபடிந் தேகியீண்டி
நாடும்ப லதேசங்கள் கடந்தாசை மிகத்தூண்டி
நடத்தமா ளவதேசம் நடந்துபின்புறக் கடந்துசெலவேண்டி
(வான்)

(3) வளம்பொருந் தியலாட தேசமும பின்னதாக
உளங்களிந் துமத்திம முளநாடுஞ் சென்றன்பாகக்
களங்கந்த விர்க்குங்காசி பணிந்ததி கமாமோகம்
கடந்தெதாண் டைநிற்கக் கருதியுரைசெய்து பரிதிநிகராக
(வான்)

வெண்பா

மங்கைதனைப் பாகம்வைத்த வானவனை யுன்னியெழிற்
கங்கைகடந் தார்பவமோ கங்கடந்தார்—எங்கள்
(a) பெருமான் கையிலபயம் பெற்றுவர நாடி
(b) வருமான் கையிலைக்கம் மான்

பதம்-இராகம்-ஹமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்தார் வாகீசரே நாதர்க்கிருபா நேசரே

(a) பெருமான்-ஈசன், கையில் அபயம் கையின்கண் உள்ள அபயப்பிரதானமடைந்திட (b) வருமான்-வரும்மிருகம், கையிலைக்கு-அம்மான்-கையிலையங்கிரிக்கு-அழகிய மகானுனவாகீசர்.

அநுபல்லவி.

கடங்களு மாநதி களுங்கடந் தேகதி
காட்டியேசை வத் தைநிலை நாட்டியத யாநிதி (நடந்தார்)

சரணங்கள்.

(1) அற்பரிடம் பாடிமுந் தப்பரிசை நாடியங்
கலைவர்மனம் போற்கொதிக்கு முலையகற்பா லைப்பதிக்கும் (நடந்தார்)

(2) வெய்யம்ருகம் நாடவே யய்யமைக்கண் டோடவே
செய்யகனி காய்கிழங்கு தின்றுசைது ணைகூடவே (நடந்தார்

(3) (c) பணிபணிமின்னவே-மணிவிளக் கென்னவே
பார்க்குமிட மெல்லாம்பெரு மார்க்கமெனத் துன்னவே (நடந்தார்)

(4) கால்கைகள் குறைந்திடக் கண்டுற நடந்திடக்
கோலிவிலா வால்நகரக் குருதிகளு றைந்திட (நடந்தார்)

விருத்தம்.

அங்கமெலாங் குறையபின தாவலொன்றே நிறையவசை வதற் கெட்டாமல்
துங்கமுறுங் கைலைவரை காணுநசை யாலுமிருந் தோங்கிநிற்கத்
தங்குமுடம் பணுவேனு மசைவதற்கங் கிடமின்றித் தயங்கித் தேர்ந்தும்
எங்களுடை நாயகரை மனத்திருத்தி வழிதேடி யிருந்திட்டாரே

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(1) அன்பருங்கைலை யின்கண் வந்திடி லனேகதலப் பதிக
மின்பமுறுங் கேழ்விக்கரிதெனவரு ளிசையா றிவாதிகப்

(2) பக்தியறிந்தோர் குளத்தை யமைத்துப் பண்புறுமுனி வேஷம்
நத்தியமைந்திட யிருவரும்நோக்கி நாடினர் ஸந்தோஷம்

(3) அவயவமெல்லாங் குறைந்தொழியக்கா னகத்தில் வந்த தென்னத்

(c) ஸர்ப்பங்களினழகு.

தவநிறை முனிவர் வந்தகருத்தைத் தானுரை செயவன்ன
(4) முயர்முப்புரிநூ லுஞ்சடைமுடிமா வுரியுமிலக வீசர்
நயமுற்றிடுதரி சனைதரவுணர்வொடு நவில்வார் வாகீசர்
(5) கையிலையிலுமையொடு பரசிவமிருக்குங் காட்சி காணவந்
வந்தேன்
செயலிது வரையிலிருந்தது விநிமேற் செய்வதென்னென
நொந்தேன்
(6) என்னவுங்கையிலைக் கேகிடநார்கட் கெளிதோ முனிவரே
சொன்மொழிகேளுந் திரும்புமென் றுரைத்தார் சோமகலா
தரே
(7) இனையவுரைக்க க்கையிலையைக்காணு திறக்குமிவ்வுடல்
கொண்டு
கனவிலுந்திரும் பேனெனநாவுக் கரசுரையிதுவிண்டு
(8) இவருறுதியைக்கண் டிறையவர்வான்மறைந் திறையே
யெழுமினெனத்
தவருமெழுந்தொளி பாவுதேகியாத் தானங்கெதிர் நின்றார்

விருத்தம்.

மாதுமையோ டுமதுதிருக் கோலம்வெள்ளி மலையினிற்கண்
டிடவருள்வீ ரெனவுமன்பர்க்
கேதுமைய மின்றியிந்தக் குளத்தில்மூழ்கி லெமது திருக்
கைலைநங்கோ லமுமையாற்றின்
ஓதுமையிற் றரிசனைதந் திடுவோமிந்த வுயர்தடத்தில் முழுகிலென
முழுகமெய்ப்
போதுமையல் தரித்திடுமை யாற்றில்மேவும் புனற்றடத்தி
லெழுந்தனரற் புதமாத்தானே

ஆர்யா.

கார்நிறை நிறைகடன் மேலே—கதிர்நிறை யமுதகு மிருந
மதிபோலே
பார்நிறை தடமதின் மேலே—பண்பூ தியழிந் திடாதே முதலாலே

விருத்தம்.

தனித்து முழுகி யெழுந்து கண்ணீர் தாரைபோலே மெய்நனையத்
தொனித்து மறைவே தியர்மிகுத்துத் துலங்கை யாற்றின்
கோயிலுமின்

புனிற்ற நகருங் கைலையும்போற் பொருந்தச் சிவமுஞ்
சத்தியுமாக்
கனித்துத் தோன்றும் பொருளினைகக ன் கண்டார்
மொழிகற் கண்டாரே

பதம்-இராகம்-மத்தியமாவதி-தாளம்-சாப்பு

பல்லவி.

தெரிசித்து வந்தார் தடாகத்திற் பரிசித்துவந்தார் (தெரிசித்து)

அநுபல்லவி.

வரு வதிக்கு மலர்ச்சோலை வளருமை யாற்றினில்
மருவுஞ்சினகரங் கைலைபோலவு மானுஞ்சிவையுமங் கமரச்
சாலவும் (தரிசித்து)

சரணங்கள்.

(1) திருமா லயனிந்த்ரன் திருவடி களைப்புல்ல
வொருநான் குமறைக ளுவந்து திகள் சொல்ல
அருளு டியஸித்த ரமரர்கஞ் சையர்செல்லப்
பெருமா லோ சனைசெய்து பேசாமல் மெல்ல மெல்லத்

முடுகு.

தருமலர்கள்கொடு மழைகள்சிலர்பொழிய—வரம்பையமே
நகைநடனயிசை யமுதுமிகவழியப்—பல்லியமொலி
பெருகுகடலொலி யவியயதிர்தரப் பெரியபகிரத
நதிவிண்ணிழிதர
வுருவபொடுநதி மார்கள்துதிதர வுயருங்கணங்கள்கொண்
டாடக்கதிதரத் (தெரிசித்து)

(2) பெருங்கையி லையிரண்டின் பெற்றிபோ லதிராக
வருங்கவின் விடைமுன்னின் றிடவுமே சதிராகத்
தெருங்கல்வி நிறைநந்தி தேவர்ம கிழ்ந்தன்பாக
நெருங்கிவந்த வர்களை நின்பினென் றெதிராக

முடுகு.

வுரைபகரவொரு ரஜதகிரிமேலே—யெழுந்தபச்சை
மரகதலதைப ரவியவொளிபோலே—படர்பவள
வரையையிகரி யணையிலிமையொடு பருவமுகிலென
வருளின்மழைகொடு

மருவுமுலகுள வுயிர்கள்செழிவொடு திருவைகிடவரு
ளருவைமகிழ்வொடு (தெரிசித்து)

(3) வணங்கிய டிக்கடிவீழ்ந் தெழுந்தஞ்ச லி புரிந்து
மணங்கொள்ம லரடியை மலர்க்கண்க ளாற்சொரிந்து
யிணங்கிம னமுருக யிடைவிடா நீர்சொரிந்து
மேகமாம்பேரின்பக்-கடலில்மூழ் கிப்பரிந்து

ழநிது.

பிரிந்திடாவுமை வாமமதிலோங்கச்—சிவபெருமான்
பொருந்தியேஸர்வஜகங் களையுந்தாங்கக்—கருணைசெய்தங்
கிருந்திடுங்கொலும் நாடியுடம்பெங்கு மேபுளகமுற
வோடிநடித்தங்கு
பாவசமுமூறத் தாண்டகங்களிங்கு படிப்போர்பிழைத்திடப்
பகர்ந்துமகிழ்ந்தங்கு (தெரிசி)

வெண்பா.

கொண்ட திருக்கையிலைக் கோலத் தினைச்சிவையை
யண்டர்பெரு மானைக்கண் டாங்குபணி—தொண்டரும்பின்
பூந்துருத்தி நாடியங்கு போற்றிப் பணிவிடைசெய்
தார்ந்தார் மயல்பொருந்தா தார்

யதம்-இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பூந்துருத்தி மேவினார் ஆய்ந்த சக்தி நாவினார் (பூந்துருத்தி)

அநுபல்லவி.

வாய்ந்தசெல்வம் நிறைபெரு மகிமைபொருந்துதிரு (பூந்துருத்தி)

சரணங்கள்.

(1) நெய்த்தானத்தை நாடியே நேருமழ பாடியே
மெய்த்திடவே சென்றுபாடி மெய்மகிழ்ந்து பின்புகூடிப்
(பூந்து)

(2) கோபுரத்தின் வாயிலைக் கூடியணிந் தேநிலை
(a) மாபுரத்தை யட்டார்களுசு மலரடிவீழ்ந் தன்புமிஞ்சப்
(பூந்து)

(a) மாபுரத்தை யட்டார்—பெருமைபொருந்திய, திருபுரானைப்பகைத்தவ

(௩) நிகழ்ஸன்னிதி முன்னின்று நெடியபவத் தைவென்று
புகழும்திருப் பூந்துருத்திப் பொய்யிலியைக்
கண்டேனென்று (பூந்து)

(4) திருத்தொண்டு நோக்கியே செய்துகளி தேக்கியே
பொருத்துமட மொன்ற மைத்துப் புனைதமிழ்மா
லையாக்கியே (பூந்து)

விருத்தம்.

செழித்திடும்பூந் துருத்திதனிற் பொருந்துநாளில்
திருக்கூடல் பாண்டியன்கூ னிமிர்க்குபூதி
கொழித்திடுமே னியனுகைச் செய்துபாவங்
கொடியவமண் பூடிறவே வென்றுமின்பம்
பழுத்திடுஞா னச்செல்வர் சிவிகையுற்றுப்
பண்பமர்பூந் துருத்தியிலப் பரைக்கண்டெல்லாம்
வழுத்திடவந் தவர்வரவை நோக்கியின்ப
மாகினா ரய்யரெதி ராக்கினாரே

இராகம்-எதுகுல காம்போதி-தாளம்-ஜம்பை

கண்ணிகள்

(1) ஞானஸம் பந்தர்தமைக்காண (b) மைய லானஸம் பந்த
மொழிந் தவர்விரைவிற் றோணக்
காணடைய தாகியெதிர் கொண்டார்—கூட்டங் களிலொருவ
ராகிச்சென் றவர்சிவிகை கண்டார்

(2) கண்டுபணிந் தேற்றிமறைந் தடுத்தார்-முத்துக் கவின்சிவிகை
கொம்புபொறுத் திடமொய்ம்பு கொடுத்தார்
எண்டிசையும் புகழப்பரெங் கென்றா—ரடியே னிங்கிருக்கின்
றேனடிதாங் கினனெனவெனந வின்றார்

(3) தணித்தவுடன் கேட்டவுடன் குதித்தார்—பதறித்
தான்பணியு முனமப்பர் தாம்பணிந்து துதித்தார்
அணிகொளிரு வரும்பணிந்து நாடத்—தொண்டாரஹரா
சிவசிவா வெனவுங் கொண்டாட

(4) இருவரறி யாவொருவர்க் கன்ப—ரெனச்சொல்—லிருவருங்
கோயிலெய்தி யேபணிய நம்பர்

(b) மைய லான ஸம்பந்த மொழிந்து—பெண்ணிடமுற்ற, காத லென்ற சம்பந்தம் நீங்கி.

அருள்பெருகிப் பாடிமடம் புக்கார்—அருக ரற்றதும்
பாண்டியன்கூ னிமிர்ந்ததையு மிக்கார்
(5) மகிமைபெறும் பாசிவத்தைப் போற்றி—யதையும்
வளர்பாண்டி மாதேவி யன்பையுங்கண் டேற்றித்
தகைமைபெறு குலச்சிறைபக் தியையும்—தொண்டர்
சாற்றமது ரைக்கேய தோற்றமுற மியையும்
(6) சம்பந்த ரிடந்தொண்டை நாட்டின்—வளருந் தலங்கள்மகி
மையைக்கூற வுளங்கனிந்து கேட்டும்
இன்பமுட னத்தலங்கள் போற்றச்—சென்று ரினியசம்
பந்தர்தம திருவிளையு மாற்ற
(7) பூந்துருத்தி சென்றானைப் பணிந்தா—ரப்பர் புகழ்திருப்புத்
தூர்பாடிப் புரிமகிமை யணிந்தார்
வாய்ந்தமது ரையிலீசனைப் பாட—ஆளு மன்னன்குலச்
சிறைவேண்டி மகிழ்ந்துகொண் டாட
(8) பூவணமா மேச்சுரநெல் வேலி—கானை போற்றியே தமிழ்
மாலை சாற்றினர்கு ணுலி
தான்புகழ் சோளநாட்டில் வந்தார்—புகலூர் தனில்மேவித்
தொண்டுசெய்து மனமிகவு வந்தார்

விருத்தம்.

தொண்டுசெய்தங் குறுநாளி லவருறுதி யாவருக்குந் துலக்க
வெண்ணிக்
கொண்டுசெய்யு முழவாரப் படைசெதுக்கு மிடமெல்லாங்
குழுமிப் பொன்னும்
மண்டுமணி களுமின்னப் பாசிவஞ்செய் திடவோடும்
வன்கல்லும்போற்
கண்டுகுளத் தெறிபவரம் பையரைவிட வவர்கள் செயல்
காட்டினாரே

பதம்-இராகம்-பிலகரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வானரம் பையர்கூடினார் வாகீசர்முன் (வான)

அநுபல்லவி.

மானரம் பிசைகாட்டித் தானவின்றி டும்பாட்டின்
மயக்கஞ்செய் திடவெண்ணிச் செயிக்கலா மென்று நண்ணி(வான)

சரணங்கள்.

(1) சில்லுங் கல்லும்போல வெல்லும்பொன் மணிசால
எல்லையில் குளமேகக் கெல்லியெறி வார்க்காக (வான)

(2) ஆடைநெகிழ்ந்ததுபோல் (a) வாடையினின் றுருக்க
(b)வாடைபரிமளிக்க நாடிவரைமயக்க (வான)

(3) வண்டுகள் ச்ருதிகூடக் கண்டுமிசைகள் பாட
மண்டிநடனமாட வண்டர்களுங்கொண்டாட (வான)

(4) மந்தஹாஸப்புரிந்து கந்தமலர்திமிர்ந்து
விந்தையெல்லாய்ப்புரிந்துஞ் சிந்தைதனைத்தெரிந்து (வான)

லாவணி-இராகம்-ஹமீர் கல்யாணி-தாளம்-ஆதி.

(1) திருப்புகலூரில் மருப்படாத் தொண்டுசெய்திருந் தார்களி
கொண்டு
துருப்பெனப் பொன்னையு மருக்குழலாரையுந் துறந்ததை
யுங்கண்டு

(2) யாவருமதிசயித் திடவாசீர்மா தேவரடியைச்சார
மேவுநாளடுக்க வொருதினந் தனிலன்பு மெய்யெங்கும்
புளகூர

(3) மேவுமடைக்கலம் புகுமெனைப் புகலூர் மிளிருஞ்
செழுங்கமலச்
சேவடிக் கீழ்த்தங்க வைப்பீரென் றினிய திருத்தாண்டக
மமல

(4) மூர்த்தமானதிரு நாவுக்காசரு மொழியின்
னிசைமொழிந்தார்
போத்தமாயைபறந் திடவுந்தொன்றுதொட்டுப் பொருந்திய
டவமொழிந்தார்

விருத்தம்.

எண்ணுகேனெனச்சொல்லி யெண்ணுகேனெனவெடுத்துப்
புண்ணியனே யுன்னடிக்கே போதுகின்றேனெனக்கூற

(a) வாடை—வாடைக்காற்று. (b) வாடை—வாசனை.

வண்ணமுறுந் தாண்டகப்பா மலர்மாலை சூட்டியபின்
எண்ணுருவார் திருவடிக்கீ ழினிதமர்ந்தார் வாகீசர்

பதம்-இராகம்-மத்தியமாவதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

திரு வடி நிழலமர்ந்தார் வாகீச ரீசர் (திரு)

அநுபல்லவி.

மருவுமெய்ஞ் ஞானவடி வாகி யுமைதன்பாகி (திரு)

சரணங்கள்.

(1) மண்டலத் தோருமறியப்—பொன்மலர்மாரி—விண்டலத்
தோருஞ்சொரிய
மண்டும் புகழ்விரியத் தொண்டர்ம றைக்கரிய (திருவடி)

(2) தேவதுந் துமிகோஷிக்க—விண்முனிவரர்—யாவர்க
ளுஞ்சந்தோஷிக்க
மேவும்ப வஞ்சோஷிக்கத் தேவதே வர்போஷிக்கத் (திரு)

(3) சித்திரத் திங்கள்சேரவே—சதயநட்சத்—திரமுமி னிதாரவே
சித்தங்க ளிகூரவே ஜன்மவி டாய்தீரவே (திருவடி)

பலசுருதி விருத்தம்.

இன்னயஞ்சேர் வாகீசர் சரிதந்தன்னை நிகழ்த்திடுேனர் விருப்புற்றுப்
படிப்போர் கேட்போர்
நன்னயஞ்சேர் மார்க்கண்ட னெனநீடூழி நாளாயுள் மைந்தர்பெருஞ்
செல்வமோங்கிச்
சொன்னயஞ்சேர் கல்வி யினிற் சிறந்தோராகிச் சுத்தமுறுஞ்
சிவபக்தி பழுத்தானந்தத்
தின்னயஞ்சே ரிகவாழ்வும் பரத்திலீச ரிணையடிநீ ழலும்பொருந்தி
யிருப்பார்மாதோ

பதம்-மங்களம்-இராகம்-சௌராஷ்டிரம்-தாளம் ஆதி. நின்னுவா ரூபமுலகு யென்ற தியாகய்யரவாள் வர்ணமெட்டுப்போல.

பல்லவி.

எந்நாளு மீசரடி யிணைகளுக்கு மங்களம்

அநுபல்லவி

மின்னார்சை வநெறிக்கும் வேதியர் தஞ்சரிக்கும் (எந்நாளு)

சரணங்கள்.

(1) வாகீசர் (a) பேரிசைக்கும் மான்கள்தம் (b) பேரிசைக்கும் (எந்நா)

(2) தொண்டர்கள் பெருமைக்குஞ் சொல்வோர்க ளருமைக்கும் (எந்நா)

(3) மழவைச்சி தம்பரஞ்சொல் வளரும்பெ ருங்கவிக்கும் (எந்நா)

திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம்
முற்றிற்று.

ஆ வெண்பா	15	சந்த விருத்தம்	3
லாவணி	3	கட்கா	2
ஆர்யா	6	ஸவாய்	4
பதம்	38	கலிப்பா	1
கண்ணிகள்	8	அபங்கு	2
விருத்தம்	42	ஆசிரியவிருத்தம்	1
கலித்துறை	7		

ஆ மொத்தம் உருப்படிகள் 132

ஆ சரித்திரங்கள் 22-க்கு உருப்படிகள் 612.

(a) பெயரைச்சொல்லும் (b) பெரியகீர்த்தி.

உ

கணபதி துணை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

(23) † குலச்சிறை நாயனார் சரித்திரம்.

ஆர்யா.

சீருயர்பாண்டியநாடு—தென்னாடதனுட் டிகழும்மகிழ் வோடும்
வாரிதியரு குறுபதியாம்—மணமேற்குடியிற் குலவிடுமதிபதியாம்

பதம்-இராகம்-பிலகரி-தாளம்-ஆதி.

பல்லவி.

குலச்சிறையா ருத்தார் குணத்தின் மிக்க (குலச்)

அநுபல்லவி.

நலத்துறை சிவனடி நண்ணிப் பணியுமபடி (குலச்)

சரணங்கள்.

(1) குலத்திலோங்கின ரேனும் குலத்தில் நீங்கனரேனும்
நிலத்துட் சிவனை நோற்று நினைப்பவர்களைப் போற்றும்
(குலச்)

(2) நலத்தையுடையரேனும் நலத்திற்கடையரேனும்
பலிக்கையாடியிணை பரவுவோர் தொண்டிற்கிணை (குலச்)

(3) பலர்வரினுமன்பரிற் பரிந்தொருவர்வரினும்
குலவுஞ் சோறமைத்துண்ணக் கொடுக்குந்தொண்டினிற்
றிண்ணக் (குலச்)

(4) பூதிமுதற்சாதனம் பொருந்திடுந்தபோதனர்
பாதமிறைஞ்சுந் தொண்டும் பரிவுடனணிந்தண்டும் (குலச்)

வெண்பா

இந்தவிதந்தொண்டுசெய்து மேல்லையினில் நல்லொழுக்கத்
துந்தினமே மேவிவருந்தொண்டருயர்—விந்தையுறும்

டாமதுரைத் தென்னவர்க்குள் மந்திரிக்கு முன்னவராப்
பான்மையுற்று வந்தனரன்பாய்

ஸவாய்.

மந்திரிமார்க்குத் தலைமையாகியும் வானதியின் சடையார்க்
கழலன்பு
மூந்துமனத்துடன் பாண்டி மாதேவி முதிர்தொண்டிற்குத்
தொண்டராகினர்முன்பு

பதம்-இராகம்-நாதநாமகிரியை-தாளம்-அடதாள சாப்பு.
செலியாத்ஸா லூனே யென்ற வர்ணமெட்டுப்போல.

பல்லவி

தொண்டி யற்றினார்

அநுபல்லவி.

அண்டர்கள்பணியய னன்னசம்பந்தர் (தொண்)

சரணங்கள்.

(1) கூடற்றென்னவனுடன் கூடவமணர்கள்செய்
பாடுகளைவிலக்கும் பரமனுதால் (தொண்)

(2) பொய்ம்மையாம மண்மதம் போக்கியாருங்களித்து
மெய்ம்மை யாம்திருநீறு மேவச்செய்ததால் (தொண்)

(3) மன்னன்வழுதிசிவ மதத்தை மருவச்செய்து
தென்னன் மந்திரிகுலச்சிறையார் மறையோர் (தொண்)

விருத்தம்

ஆளுடைய பிள்ளையாரருட் சிரமேற்கொண்டருக ரகந்தைநீக்கி
நீளுயருங்கழுமரங்கள் தனிலேற்றிப் பெற்றிபெறும் நீற்றில்யாரும்
கேளுறச்செய் தாசுரிமைக் குறுமதியோ டெந்தையரன்
கிளருஞ்சீதத்
தாளிணை யென்னுளமன முறுந்தொண்ட ரிவர்க்கிணையார்
ஜகத்துள் மாதோ

குலச்சிறை நாயனார் சரித்திரம்
முற்றிற்று.

ஆக ஆர்யா	1	ஸவாய்	1
பதம்	2	விருத்தம்	1
வெண்பா	1		ஆ. 6

ஆக சரித்திரங்கள் 23-க்கு உருப்படிகள் 618.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

24 † பெருமிழலைக்குறும்ப நாயனார் சரித்திரம்.

ஸாகீ

(1) சூதம் நெருங்குதலைத் தெங்குபலவு பூகம்
சூழ்ந்தவைகளும் வானுலாவும்
வீதிதொறும் நீற்றொளி விரியமேவிவிளங்கி விண்ணுலகிற்கு
மேலா

(2) நீதிநெறியின் மிகுங் குடிகள் நெருங்கிவளர் நிலங்களுயர்
மிழலைநாடு
மீதின் விளங்குந் தொன்மைப் பதியாயிலங்கும்பெரு
மிழலையென்றோர் நகரும் நாடும்

(3) அன்னதொன்மைத் திருப்பதிகணதிபராக வமர்மிழலைக்
குறும்பனாரே
என்னவுயருப நாம மேற்றவராக யீசனிணையடித்தொண்டர்
கட்குநேரே

(4) நின்றுபணிந்தவர்கள் வேண்டும் பொருளெவையும்
நினைக்குமுன மளித்துத் தாங்கும்
வென்றிபெருங் குணத்தின் குறுநில மன்னவரா விளங்குஞ்
சீர்த்தியால் மிகவோங்கும்

பதம்-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம். தன்யோஹ
மென்றதுபோல

பல்லவி

தொண்டுசெய்தார் மிழலைக்குறும்பனார்—ஈசர் துணையடிமலர்களே
துணையென விரும்பினார் (தொண்டு)

அநுபல்லவி.

கண்டுமொழியுமையாள் கர்த்தன்பணியேயென்றும்—எண்டிசைக்
குமுயர்வா யேற்குந்தொழிலாமென்றும் (தொண்டு

சரணங்கள்

(1) தொண்டர்கள்பலரும் வந்தீண்டி—யுண்ணத்தொலையாவ
முதூட்டிடவேண்டி—யவர்
துண்டரீகமலரத் துதித்திருநிதிதந்து அண்டவர்தாண்மலரை
யவர்சிரம்வைத்து கந்து (தொண்டு)

(2) உலகிலடியார் திருத்தொண்டத்—தொகை யுரிமையுட
னுரைத்து விண்ட—நம்பி
யலகில்தொண்டின்மகிமை—யகத்திலுற்று மதித்துத்
தொலையாப்பவப்பிணியின் துன்பமதில் விதிர்த்து (தொ)

(3) பரவையார் மணவாளன்பாதம்—பணிந்தாற்—பரசிவத்தினிற்
குமாமோதம்—உண்டெனக்
கரமலரெடுத்தவர் கழல்கள் சாற்றித்துதித்துப்—பரவிநினைப்
பதே நற்பக்தியெனமதித்துத் (தொண்டு)

மத்தகோகிலம்.

(1) நம்பியாரூரர் நாமம்நாளும் நவின்றதாலணி மாதியாம்
இன்புறும் ஸித்திபெற்றதன் பிணிருக்கு மேதுதி ஜோதியாம்

(2) ஈசனைந் தெழுத்தின் பமார்த்துணை யெப்பொருட்கு
முயர்ந்ததே
மாசகற்பொருள் நல்லுணர்ச்சியு மாகுமென்று துயர்ந்ததே

(3) சிந்தையிற் றெளிவோடுணர்ந்து நினைந்தினஞ்சொல்
விவேகமும்
ஸந்ததம் பெறுமன்பர் மேவினர் தத்துவத்துறுயோகமும்

வெண்பா.

இத்தகைமையாக யிவரிருககயிசர்கனிந்
தத்தினத்திலுந்தடுத் தாட்கொண்ட—பக்தர்நம்பி
யங்கயிலை சார்வதற்கு மஞ்சைக்களமமர
விமகிதர்தன் செய்கை சொல்லுவேன்

பதம்-இராகம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மிழலைக் குறும்பர் நண்ணினார் ஈசர்கழல்கள் மேவும் யோகத்தின்
கண்ணினார் (மிழலை)

அநுபல்லவி

சுழலுமனந் தன்னையொரு வழியினுற விடுத்துச்
சுந்தரனுருவமே தானெனவே யடுத்து (மிழலைக்)

சரணங்கள்

(1) வன்றொண்டர் கைலையை மருவினமே வநானே
யின்றிங்கமர்வதினி யிருகண்களினுட்டானே
யொன்றுமணியிலாத வுரிமையர் போல்வாழேனே
யென்றெண்ணி யோகத்தினா னெட்டுவே னென்று
தானே (மிழலைக்)

(2) நாலுகரண மொத்து நல்லறிவு மேற்கொண்டு
காலும் பிரமநாடி வழிக்கருத்துச் செல்லுண்டுப்
பாலநடுவேயல முன் பயின்ற வறபிலண்டு
மூலந்திறப்பமூல முதல்வர் பாதத்தைத் தண்டு (மிழலைக்)

பலசுருதி விருத்தம்.

நம்பியாரின் கழலிணைகள் நம்பித் தொண்டு புரிந்தான்றாள்
பம்புமிழலைக்கு றும்பர்கதை பரிவோடுரைக்கக் கேட்பாதை
யன்பின் படிப்பாரநுதினமும ஆலகில்மக்கட் பேறுநிதி
யின்பம் பெருக வடைந்தான்றளினிற் காளாக யிருப்பான்றே.

பெருமிழலைக் குறும்ப நாயனார் சரித்திரம் முற்றிற்று

ஆக ஸாகீ 1. பதம் 2. மத்தகோகிலம் 1.
வெண்பா 1. விருத்தம் 1. ஆ 6.
ஆ சரித்திரங்கள் 24-க்கு உருப்படிகள் 624.

உ
கணபதி துணை.
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

25 † காரைக்காலம்மையார் சரித்திரம்.

லாவணி. இராகம். இந்துஸ்தானிகாபி. தாளம்-ஆதி.
ஸாகியாகவும் பாடலாம்.

(1) சீர்பெருந் தோங்கி நல்லறத்தின் வழியில்நிதம் திகழும்
வணிகர்குடியும்

ஏர்வை யொடுயர்ந்திடுங் காரைக்காலதனில் இனிதுடன்
வந்துபடியும்
(2) மயில்கள் குயில்க ளனங்களும் விளங்கிடும் பொழில்
மலர்கள் வகைகள் பலவும்
நயன நகைமுகம் தனமெனவி ணைசொல நங்கைகளெனுங்
குலவும்.
(3) கடலொலி திரைகள் சுமந்தவளைகளக் கடிபொழிலதி
லுறையும்
இடைவிடாது வாணிப முறையது செய்வணிகர்குல
மிகநிறையும்
(4) அந்நகரினிலவ் வணிகர் குலதிலக ரானவரொன்றும் புகழத்
தன்னிகரில்தன தத்தனார்தவம் தான்பழுத்த தாத்திகழ.

பதம். இராகம்-முகாரி. தாளம்-ஆதி.

பல்லவி.

அவத ரித்தாளம்மை யடியவர் மகிழ்ந்திடப் படிமிசை (வந்தவ)

அநுபல்லவி.

பவமதை விலக்கிடும் படிவமாத் தனதத்தன்
தவமகிமையை நாட்டத் தழைக்கு மின்பம் பாராட்ட மழைக்
கருணையைக் காட்டவந் (தவதரித்)

சரணங்கள்.

(1) பூவுலகத்தவரும் தேவர்களுங் கொண்டாடக்—கின்னரர்பாட
ஓவிய மெனக் கண்டபேர்கள் மனமும்நாடக்—கலியுமோடப்
பூவிற் பொருந்துந்திரு மகளாம் வடிவையுற்றுப்
புனிதவதி யாரென வினிதாம் பெயரும் பெற்றுவந் (தவ)

(2) வாஸமலரிலுறு மாசறுமணம்போலே—ஒளியினாலே
தேசுறுகதிருயர் ஆசறுமென் றின்மேலே-குணம் பொருந்தித்
தாசரெல்லாங் களித்துத் தரணியில் மகிழ்ந்திடத்
தவமுனிவர்கள் மிகு முவகையிற் புகழ்ந்திடவந் (தவ)

(3) பங்கஜமலர்ச்சர ணங்கரமுயர் நகமும்—விதுமுகமும்
சங்கரர் பதமதி லுங்குலவியவகமும்—பொருந்திவாத்
தங்கு மிருவினையின் பங்கமுங் குலைத்திடத் தரணி
மூன்றிலுஞ் சைவத் தறநெறி நிலைத்திடவந் (தவ)

வெண்பா.

வந்தவதரித்து மகிழ்ந்தபின் பெம்மம்மைக்குச்
சந்தக் குதலைமொழி தானிருந்தச்—சிந்தையினி
லெந்தைபிரான் சேவடியி லேமனது மேமகிழச்
சந்ததமும் தொண்டுபுரிந்தார்.

பதம். இராகம்-ஸாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

மண்டலம் புகழக் கண்டுமொழியம்மை தொண்டுபுரிந்துவந்தார்
துன்பம் பொருந்தார் (மண்ட)

அநுபல்லவி.

எண்டிசையுந்திகழத் தொண்டர் மனம் புகழ
மண்டுபவமகற்றக் கொண்டுபேரின்பமுற்ற (மண்ட)

சரணங்கள்.

1\. சீர்பொருந்தியமணிக் காரைக்கால் வணிகர் செல்வம் நிறைந்து
மிகச் செழித்தோங்க—வெந்தப்
பார்புகழு மிசையை யாருநந்தனதத்தன் நேர்குலம் நின்று
துயர்கவிநீங்கப்—பக்திமிகுந்து
மார்வமுமென்றும் பெருக—வெந்தையிடத்தி லன்பினால்
மனதுருகக்—கவலையின்றிச்
சாருங்குதலை மொழி நேரும்போதெல்லாம் விழிக
கனலுடையான் பெயரும் தினமும் சொல்லிப்புயநும் (மண்ட)

2\. ஜனனமரணபவ ஜலதியிலுழலிந்த ஜன்மமும் நிலையலவென
மதித்துக்
கனகமலைவில்லுயர்க் கரன் சரணகமலக்கதிநிலையென
மதியதிற்பதித்துப்
பனககங்கணமணியுங்- -காமதையும் புனையுபாகருமணியும்
பொருந்துமவர்

வனஜபதமுஞ்சிர சினில்மதியமும்பர வனகனுருவமுன்னிப்
புனிதவதியுமின்னி (மண்ட)

3. ஆலமுண்டோர்க்குக் கைச்சிற்றாலயங்கோபுர மணிவிமான
மும் லிங்கமமையமைத்தே
கோலமுறுமலர்களாலேயர்ச்சனை செய்து குலவுமாற்று
நிவேதனஞ் சமைத்தே—தம்முடன்
வாலைகளையுஞ் சேர்த்துப்—பக்தியில்மனம் மன்னியுமின்பம்
வார்த்துச்—செய்திடுமிதே
பாலைப்பருவமின்னக் கோலவிளையாட்டென்னச் சாலச்செய்
திடச்சொன்னத் தாமாஞ்சரீரமுன்ன (மண்ட)

இராகம்-ஆனந்த பைரவி. தாளம்-ரூபகம்.

(முத்துபேட்ட என்ற க்ஷேத்திரியன் பதம் போல)

கண்ணிகள்.

1. குதலைநீங்கு பருவமீறக் குலவுமசையும் நடையுந்தேற
மதலைமொழியைக கண்டன்பூர வளர்தனைதத்தன்
மகிழ்ச்சியார

2. மாணின்விழிக்குமையுமிட்டு மான்மதங்கலந்துயர்ந்த
பொட்டும்
ஞானவடிவினுதலில்மட்டும் நாடிடச்சேர்த்து
மணியிற்றொட்டு

3. பாதமதிற்கிங்கிணியுஞ் சேர்த்துப் பரிவுடனதிற் சதங்கை
கோர்த்து
மாசினுக்கின்பம் குழையவார்த்து மகிழ்ச்சியோடதை
யிட்டுப்பார்த்து

4. குழையினிற் கற்றண்டலங்காடக் குலவுங்கரத்திற்
கங்கணம் நாட
விழையபட நெற்றியிற்சுட்டிகூட வியவிளைய யெவரளுங்
கொண்டாட

மகாராஷ்டக தாடியிற் பத யென்னும் தாடி

இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி

1. ஸௌந்தரமுறுமணி யுந்துலங் கிடப்பணி செந்திருவினுமணி
சேர்ந்திலங்க—வெங்கள்
ஸௌந்தரன்மீதுபணி சிந்தையுஞ் சேருமணி யுந்திகழ்ந்திடக்
யமுந்துலங்க—வென்றும் [கணி
ஸௌகமதிலிருந்தாரே—துயர் அகமொன்றும் பொருந்தாரே

2. அடியவர்களைக்கண்டு மகத்தில் மகிழ்வுகொண்டுங்
கடிமலரப் பாதம்வைத்துக் கதித்தாரே
கொடியவினைகள் தண்டும் நெடியபவத்தை விண்டும
குணமாய்ச் சிவமாய்க் கொண்டுமதித்தாரே—இந்தக்
குவலயத்தினிற்சிறந்தார்—சைவசமயக் கொடியை நாட்டப்
பிறந்தார்.

3. சம்போ சங்கர ஸாம்பஸதாசிவ ஸத்வகுணநிலய மகாதேவ
கும்போத்பவநுத கோடி மன்மதஜித கோமளரூபக
ஸதாமாமவ—வென்றநு
தினமுந்துதித்தாரே யவ்வுலகையும் சிவமென்று மதித்தாரே.

விருத்தம்.

‡ புனிதவதி யாரிந்த விதமபுகன்று புகழ்ந்திடவம புவியாளுநம்
பனிதவதி யார்சுற்றத் தவர்க்கின்பம் பயக்கவெண்ணிப பகரக்
கேண்மின்
மனிதவதியாரொன்று கேழ்க்கிலெலாம் மகியளித்த மாதே
வன்று
னினிதவதியாரிங்கே யுறுவரவர் பதந்துதிப்பீ ரினியென்றாரே.

---

‡ புனிதவதியார்—நம்பன் இதவதியார்—ஈசனுக்கிதமானவள், மன் இது அது யாரென்று—சொல்லத்தக்க இந்தப்பொருள் அந்தப்பொருள் எவரென்று. இனிது, அவதியாரிங்கேயுறுவர்—இனியது, அவதியை யாரிவிடம் பெறுட் என்று பிரித்தர்த்தம் கொள்க.

ஸவாய்

1. இந்தவிதம்பக்தி யும்பொருந்தின்ப மிணங்கிப் பணியணி
வார்க்கழலன்பு
மூந்திடவய்மை மூலைபருத்துமண முஞ்செய்பருவ
மமைந்திடப்பம்பும்

2. ஸாமுத்ரிகை லட்சணத்திற்குமேலாந் தாமுயரிக்கன்னி
கைக்குச்சமான
மாமருகனெங்கி ருப்பனெனச் சொல மாமகிழ் நாகைக்
கதிபதியான

3. நிதிபதி மைந்தன் பரமதத்தற்குத்தம் நேத்திரமாங்கன்னி
நீரளிப்பீரே
அதிபதியே யென்றறைந்திட நல்ல ததுவென்று
பத்ரிகை யும்விடுத்தாரே.

4. பத்ரிகை சேர்ந்திடப்பார்த்து நிதிபதி பாலகனோடுங்
காரைக்காலமர்ந்தார்
சுத்துமுறும் நாளில் மன்றலின்பந்தர் துலக்கிடவே நன்மண
மும் புரிந்தார்

பதம். இராகம்-வஸந்தா. தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்களம் பொருந்து மிங்கிதமணஞ் செய்தார் தனதத்தன்
மகட்கும் நிதிபதி மகற்கு மகிழ்வுறச் சகத்திலனைவரு
மிகத்தினிதுபெற (மங்களம்)

அநுபல்லவி

புங்கவர்களெவர்களுங் கொண்டாடவும் புனிதவதி பரமதத்தன்
கூடவும் (மங்களம்)

சரணங்கள்.

1. வாழைகமுகுதோரணங்களையுந்நாட்டி—மிகுமழகு
ஜ்வலித்திட
வண்மை பொருந்தும் நற்கூந்தல்களுமாட்டி—மேற்கட்டி
களுங்கட்டித்
தாழ்வுயர்திரு மணையமைத்துவரத்—தங்கும் ரஸக்குண்டு
தொங்கிடவும் சரத்
தாழுமதியொளியெனவும் ப்ரபைபெற அழகுறும் பந்தரைச்
சமைக்க மகிழ்வுற (மங்களம்)

2. கின்னர் தும்புரு நாரதரும்நாணச்—செய்துயர்ந்து
முழங்கிடும்
நன்னயமங்கல வாத்தியமுந் தோணச்—செய்திடவுமதிர்ந்திட
மின்னு மங்கையர் சோபனங்கள் பாட விளங்கிடுமுயர்
சங்கீதங்களுங்கூடப்
பண்ணுமரம்பையெனவும் நடனமாடப் பார்ப்பவருக்கெல்லா
மேற்குங்களிகோட (மங்களம்)

3. வேதியர்களோமம் வளர்த்து மிகஜ்வலிக்க—மஞ்சளுமமையு
நூலாற்
கோதிற்கங்கணந் தரித்து மந்திரமொலிக்க—மங்கிலிய
தாரணம்
கோதையர் கழுத்திற் குணமுடனே பூட்டக்
கூறும் தட்சிணைகள் கொடுத்திட வேதவிட
மாதர்கள் பாலிகை தெளித்திடவும் வாட்ட மன்னியெவரு
மன்போடு கண்களும் நாட்ட (மங்களம்)

விருத்தம்.

திருக்கல்யாணஞ்செய்து சிறந்தபின்பெம் மம்மைக்குச் சீதனங்கள்
பெருக்கவளித்திடமகளைப் பிரியமனம் வருந்திபவர்ப் பிரிபாதங்கே
யிருக்கவொரு மாடமாளிகையொன்றைத் தனதத்த ரிலங்கச்
செய்யத்

தருக்குலவு நாகைக்கு நிதிபதியெல் லோருமொன்றாய்ச் சார்ந்தார் தாமே.

தோடையம்.

1. புனிதவதியாரன்புபூண-அவர் புருடருக்கான செய்து தோண
இனியவடியவரைக் கண்டு—அவர்க் கேற்கச் செய்தனர் மிகுந்தொண்டு

2. தொண்டரை யீசரென்று நாடி—அவரைத் தொழுதிருந்தன ரன்புகூடி—அன்பு
கொண்டவர்க்கமுதையளித்தார்—யின்பங் குலவிட மனதெக் களித்தார்

வெண்பா.

சந்ததமுந் தொண்டுசெயித் தையல்கணவர்கையிற்
சந்தவிரு மாங்கனியோர் சற்புருடர்—தந்திருக்க
வம்மை புனிதவதி யாரிடத்திலே கொடுக்கத்
தம்மகத்துள் வைத்துமகிழ்ந் தார்.

ஆரியா.

1. புனிதவதியன்பு தெரியப்-புனையார் செஞ்சடையினார் மகிழ்வு விரியப்
பனகமணிந்தவர் நேரே-பகரோ ரதிதி வடிவாய் வருவர்சீரே

2. அடியவரடியெமை வீழ்ந்தார்—அறுநின மறமது செயவக மினிதாழ்ந்தார்
கடிமலர் கொடுமடி பெய்தார்—கடுமாவினைகளினையே பெரிது கொய்தார்.

பதம். இராகம்—ரீதிகௌளை. தாளம்—சாப்பு.

பல்லவி,

அமுதூட்டினாரே யெங்களம்மை நேரே

அநுபல்லவி.

இமையாசல குமாரிக் கினியவருக்குப் பூரித் (தமுதூட்டினரே)

சரணங்கள்.

1. ஆனந்தக்கண்ணீராட்டி யடிகள் விளக்கிக்கூட்டி
மோனமாயெய்ப்பிராட்டி முக்திவழியைநாட்டி (அமுதூட்டி)

2. கண்டவர்கட்குக்கூடுங் கடிய வினைகளோடும்
அண்டர்நாதனென நாடும் அரியபக்தியினோடும் (அமு)

3. கறிசமைக்கவுமந்தக் கணமுடியாதிருந்த
நெறியாற் கணவன்தந்த நிமலமாங்க னிபொருந்த (அமு)

4. மாங்கனியிரண்டிலொன்று மல்குபோன்பினோடன்று
பாங்குடன் கொணர்ந்தேனின்று பண்புடன் புசிப்பீரென்று
(மமுதூட்டி)

விருத்தம்.

அறுசுவைகளொடுமமுதை யருத்தியீச ரன்புறுபு னிதவதியாரில் விட்டேகப்
பெருமையுறு பரமதத்தன் வெளிச்சென்றில்லிற் போந்திடப்பு னிதவதியாருபசரித்துச்
சிறுமை துறந்த முதளித்துக் கனிமற்றொன்றைத் தேரவுண்ணுச் மெனவளிக்க வவருமுண்ண
செறியருசி மிகுத்ததினுல் மற்றொன்றீயச் செல்லெனவுள்ளேனி யம்மைசெப்புவாரே.

பதம். இராகம்-நாட்டைக்குறிஞ்சி. தாளம்-சாப்பு

பல்லவி.

ஒருமாங்கனி தருவா யுய்யவருவாய் (ஒரு)

அநுபல்லவி.

பெருமாதவஞ் செய்யுங் குருமாதவர்க்குந்தன்
பெருகுங் கருணைகாட்டி வருமன்பனே சீராட்டி (ஒரு)

சரணங்கள்.

1. ஸாரஸதளநயனஸூக ஜிதமதனபாஸ தரஹாஸ பரமதாஸ
ஹ்ருதயவாஸ ஹாஸூகுணஸ தயவாஸ கலமுநிஸா
தகஹித — ஸாதர
மொடுனை யேதுணையென்றெண்ணி யேதழுவுமெனை
யாதரித்து—மதித்து (வொருமாங்கனி)

2. நம்புமடியவர்க் கின்பமுதவியுன் றன்பதமுதவும் நண்பனே
அவர்ப் பம்புமிருவினைத் துன்புமகன்றிட வன்புமிகுந்தரு
ளும்பரனே சம்போ (ஒரு மாங்கனி)

3. காதல் புகட்டுமென் னுதர்கணவரு மேதகுகனிதாதாவென
வோதிட நலது வேதருவனென வோதுமொழிபொய்யா
காதபடி யென்றன் னுத நீத (வொருமாங்கனி)

மத்தகோகிலம்.

1. என்று மம்மைவ ருந்திடக்கையி லீசரோர்கனியீந்திட
வன்றெடுத்ததை நன்றுநன்கண வன்றனுக்கீந்து தாழ்ந்திட

2. அந்தமாங்கனி முந்தியீந்ததி னுந்திதிப்பினையார்ந்ததே
எந்தவாறிது வந்ததேந்திழை யேயுரைப்பை நீசார்ந்ததே

3. என்றுதன்கண வன்பகிர்ந்திட வேந்திழையுரை செய்யுமே
நன்றுநம்பெரு மான்கருணையி னல்வந்ததாற்றின் றுய்யுமே

4. என்னவோதிட வன்னவன் பொய்யென் றெண்ணி நீநிசம்
விள்ளுவாய்
அன்னமே சொன்ன வார்த்தையும்நிச மாகில்மற்றொன்று
கொள்ளுவாய்.

விருத்தம்.

எனக்கணவ னுரைக்கவம்மை யினிதாய்மற் றொன் றீவீரென்றரனை
நினைத்திடவுங் கையில்
வனப்புடனோர் கனிவரவுங் கணவர்கையில் வாங்கவது காணாமற்
சென்றதாலே
தனத்துயரும் பரமதத்தனிதனைக் கண்டிக் தையலரும் தெய்வ
மென்று தானுட்கொண்டு
கனத்ததிர வியந்தேடக் கப்பலேறிக் காரைக்காலம்மையை
விட்டுக் கடந்தார்தாமே.

கலித்துறை.

இந்தவிதஞ்செல வமையார்கணவ ரிலேயதினாற்
சந்த தமுமடி யாரிடத்தன்பு தரித்து நின்றும்
எந்தைபி ரானடி தாழ்ந்துவணங்கி யிலங்கிடவே
பந்தமுறுபவம் நீங்கக் கருத்திற் பதித்தனரே.

அபங்கு.

1. இந்தவிதமிங்கிருந்திடவே-அங் கேகும்வணிகர் துலங்கிடவே
சிந்துயர் பணங்களுந்தேடிப் பாண்டி—தேசத்தி லோரூர்நாடி

2. பரமதத்தன் வேறோர்மணமே—செய்து பாங்குடனிருக்கவுங்
குணமே—பொருந்தித்
தாமுயர் பெண்குழவிபெத்தான்—புனி—தவதியா ரெனும்
நாமம் வைத்தான்

3. இவ்வணமிங்கிருக்குஞ்சேதி-தன தத்த னிடமும் பந்துவிடமு
மோதி—நிற்கச்
செவ்விபெறும்புனிதவதியா-ரினைப்பாண்டி தேசப்பதியிலவர்
பதியார்ந்—திட

4. வெண்ணியம்மையினைச்சிவிகை—யினி லேற்றிவரவு முத்துக்
கவிகை—யுடன்

வண்ணமுறுமப்பதிவந்தார்—அம்மைகண வருக்குச்
சொல்லிடவுவந்தார்

விருத்தம்.

பரமதத்த னிந்தமொழி கேட்கவுமப்பதியே
பகர்மணஞ்செய் பத்தினியு மதன்குழவியொடுமா
விரையமைமயி டம்வந்து மவர்விரைந்து வணங்க
விந்தையீ தெனவுறவோர் வினவிடமுன்னிகழ்ந்த
தாழுயர்சங்கதியையவர்க் குரைத்திடவித்தையல்
தகைப்பூதச் சாட்சியாய்ச் சரியாந்தெய்வமெனப்
பரவிடச்சுற் றத்தவரும் பயந்துமதி சயிக்கப்
பார்புகழ்பு னிதவதியார் பறந்திதுபகர்வரே.

வெண்பா

தன்கணவன் றன்னைத் தலைவணங்கத் தான்விதியோ
வென்குறையோ வென்செயலோ வென்செய்வேன்—புன்கணமா
நிச்சென்ம போக்கியென்றற் கீசாநற்பேய்வடிவம்
நச்சரவா தாவெனச் சொன்னார்.

பதம். இராகம்-கௌளிபந்து. தாளம்-ஆதி.

பல்லவி.

பேய்வடிவந்தாருமென்றார் பவப்பிணியைத் தீர்க்கத் தீர்க்கப்
(பேய்)

அநுபல்லவி.

தாய்முலைப்பாலயின் று தரணியெலாஞ் சுழன் று
நாயேன் றிரிந்தென்றென் றும் நடித்தது போதுமின் று (பேய்)

சரணங்கள்.

1. கணவன் வணங்கப்பெறும் கடுந்துயர் நீங்கச்சுரும்
பணவுயர் கொன்றையுறு மானேசேவித்தேன் வெறும் (பே)

2. சடுத்தங்கள் பலபேசிச் சகத்துளோரெனையேசி
விடுக்காமலே யான்யாசித் தடுக்கும் புதியவாசிப் (பேய்)

3. காலன்றனையடர்த்த சீலவுனையடுத்தங்
கேலவெனைவிடுத்த தாலேவுயர்கடுத்த (பேய்)

4. ஹரனே திரிபுரசங் கரனே மனோபவ
ஹரனேயெனையாளுந்தற் பரனேசங்கரனே வரனே (பேய்)

பத்தியம்.

புனிதவதியாரினிது வேண்டுமப்பேய்வடிவு
புரமெறித்தவ ரருளி னாலமாமே
மனிதாருகுளவருக் கீதநிசயமென மனம்
மன்னியும்மயங்கியும் விலகிவரவே
வனிதையர்க் குறவுதாய் தந்தையர்கள் கண்டுபய
மருவியே மனம்விட்டு நீங்கியுறவே
பனகபணியீசருள் பரிவுடன் பெற்றுமவர்
பணிவிடை இடைத்ததாய மைபகரவே
முனிவரர்கள் தபஸியர்கள் முதலோர்புகழ
முப்புர மெறித்தவரி னகமுமகிழக்
கனிவுடன் சுரர்மலர் பொழிந்து திகழக்
கமலைநிகர் புனிதவதி வாழிதாமே.

விருத்தம்.

பிறந்தமொழி யென்றெடுத்துப் பின்னுரையாலெனவடுத்துப்
பேசுகின்ற
சிறந்தவற்பு தத்திருவந் தாதியம்மை பேய்வடிவிற் றெரியச்
சொல்லி
மறந்துதனையன்புற்றுக் கிளர்ந்தென்ற துறையுத்த மரென
வோதும்
அறந்திகழ்வெண் பாவடங்கு மிரட்டைமணி மாலையுமே
யறைந்தார் மன்னோ.

வெண்பா.

அம்மைத் திருவுருவிங் கார்தானறிந்திடிலென்
றம்மையாற் குத்தெரிவித் தாற்போதும்—மெய்ம்மையிதென்
றங்கவுடம் புங்குலுங்க வங்கயிலை யங்கமர்ந்து
சங்கரி ணங்கநடந் தார்.

பதம். இராகம்-கானடா. தாளம்-ஆதி.

பல்லவி.

சென்றார் அம்மை கைலைமலையை நோக்கிச் (சென்றார்)

அநுபல்லவி.

கன்றிமனதுருகிக் கருணைவிழிநீர் பெருகிப்
புன்றயாமுந்தறகிப் போக்கிடவானருகிற் (சென்றார்)

சரணங்கள்.

1. வடதிசைத் தேசமெல்லா மனத்ததிகவேகம் சொல்லத்
திடமுடனடந்து செல்லத் தீயபவந்தனை வெல்லச் (சென்றார்)

2. சங்கரர்தனையடுக்கத் தலையதினு லேநடக்கப்
பங்கவினையுங்கெடுக்கப் பரிவுடனின்பங்கொடுக்கச் (சென்)

3. சங்கரிபேயுருக்கண்டு சம்போயிதென்னென விண்டு
தங்கவரன் நம்பன் தொண்டு தனிசெய்யிவளெனப் பெண்டு
(சென்றார்)

விருத்தம்.

கைலைமலைதனையடையக் கங்கைவேணிக் கர்த்தனம்மைவாவென்று
கழறக்கேட்க
வெயில்மூன்று மடர்த்தவப்பா யேழைவந்தேன் எனவம்மை
யுரைத்துநிற்க யெந்தையீசர்
குயில்மொழியைப் பார்த்துனக்குக் குறித்தயாவுங் கொள்கவெனக்
கேட்டுநிற்கக் குவியக்கைகள்

அயிலெடுத்தகந்தனுக்கு மப்பனேயென் றடிமலரைத் தொழு
தம்மையறைகுவாளே

கலித்துறை.

இறவாதவின்பவன் பெற்குத் தரவேண்டு மெப்பொழுதும்
பிறவாமைவேண்டு மடியாள் பிறந்திடிற் பேசுமுன்னை
மறவாமை வேண்டுநீ யாடுமோர் நர்த்தன மன்னிடப்பின்
உறவோடருகினிற் பார்த்திடவேண்டுமென் றோதினளே.

வெண்பா.

ஓதிடவுமம்மை யுமக்களித்து மேகளித்தோம்
மாதிருவா லங்காடுமன் னுகென்ற—நாதிசொலத்
தந்தையடிவீழ்ந் தமையுந் தன்றலையாலேநடந்து
தந்துணிவோடப்பதி வந்—தாள்.

ஆர்யா.

அமையுமகிழ்ந்தங் கமர—வரனார்திருவடியின்மீதுமனமுமுற
இமையாசலஸுதைநேசன்—இனிதாய்நர்த்தன முமேசெய்
தனரீசன்

பதம். இராகம்-தோடி. தாளம்-சாப்பு.

பல்லவி.

நடனமாடினார் அபி நயவிதரண நயமுறவரன் (நடன)

அனுபல்லவி.

புடவியிலுயராலங்காட்டில் போற்றுமமைக்குத்தன்கோ
லங்காட்டித்
தா ததிமிதகிட தகஜணுததிம்தா தகததிமிதகிட தா (ததிமிதகிட
தகஜணுததிம்தா) தக ததிமி திமிதகிட ஜணுதக
தா தா திம்தா திமிகிட தாதிமிதக தாஜணுதக

தத்தளங்கு தத்திமிதக தகதிகதக ததிங்கிணத்தோம்
தளங்குதகததிங்கிணத்தோம் தகததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம் என்று (நட)

சரணங்கள்.

1. நந்திமத்தளமடிக்கத் தும்புரு நாரதரிசைபாட—அதின்
நயங்கண்டருகி லரியும்மதிப்பை நாடியுந் தாளம்போடக்
கந்துகநடையெனவுந் தாக்கிக் கடும்விசையொடும் ஜதியுண்டாகச்
சிந்துநயனத் தளியுந்தேக்கிச் சிலம்பொலிமிகும் பாதந்
தூக்கி (நட)

2. கொடுங்கைதிரங்கி நரம்பெழுந்தெனக் கூறும்பதிகத்தாலே
—அம்மை
குணமுடன் பாவியுமருகுறக் குஞ்சிதபாதமேலே—நிற்கச்
சங்கார்வெகு விநோதங்காட்டித் தாமரைமுகந் துலங்கநாட்டி
யங்குலவிடக் கதியும்நாட்டி யகமகிழ்ந் தருளும்பரமேட்டி
(நட)

3. எட்டியிலவ மீகை சூரை யெனும்பதிகமும்கூட—அம்மை
யியப்பியென்றைக்கு மருகினிலுற விலங்குமின்பமுநாட
மட்டில்லா முனிவாருங்கூடி மகிமையினுங் காணுமல்வாடிக்
கிட்டரும்பதம் தந்தோமென்றுபாடிக் கேளுறுமம்மைக்குச்
சொல்லிக்கொண்டாடி (நட)

பலசுருதி விருத்தம்.

நிருத்தனம் பார்த்துமென்றும் நேத்திரானந்தம் பொங்குந்
திருத்தமாங் காரைக்காலின் திகழ்வுறுமமையின் காதை
யருத்தியாய்க் கேட்போரத்தை யநிசமும படிப்போர்க்
கெல்லாம்
பொருத்தமாய் நினைக்கும்பேறெப் போதுமே கிடைக்குமாதோ.

காரைக்காலம்மையார் சரித்திரம் முற்றிற்று.

லாவணி	1	கண்ணிகள்	1	ஸவாய்	1	மத்தகோகிலம்	1
பதம்	8	பத	1	தெண்டை	1	கலித்துறை	2
வெண்பா	5	விருத்தம்	9	அர்பா	2	அபங்க	1
பத்தியம்	1						

ஆக உருப்படிகள் 34.

ஆக சரித்திரங்கள் 25-க்கு உருப்படிகள் 658.

ADIGAL LIBRARY MADRAS-1